# நாள் நல்ல நாள்



ரமணிசந்திரன்

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூல் தலைப்பு | : நாள் நல்ல நாள் |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| மொழி | : தமிழ் |
| முதற் பதிப்பு | : செப்டம்பர், 1992 |
| இரண்டாம் பதிப்பு | : மார்ச், 1994 |
| மூன்றாம் பதிப்பு | : ஆகஸ்ட், 1995 |
| நான்காம் பதிப்பு | : செப்டம்பர், 1996 |
| ஐந்தாம் பதிப்பு | : டிசம்பர், 1998 |
| ஆறாம் பதிப்பு | : செப்டம்பர், 2000 |
| ஏழாம் பதிப்பு | : ஏப்ரல், 2002 |
| எட்டாம் பதிப்பு | : ஜனவரி, 2004 |
| ஒன்பதாம் பதிப்பு | : ஜூலை, 2005 |
| பத்தாம் பதிப்பு | : டிசம்பர், 2006 |
| பதினொன்றாம் பதிப்பு | : ஏப்ரல், 2008 |
| பனிரெண்டாம் பதிப்பு | : டிசம்பர், 2009 |
| பதின்மூன்றாம் பதிப்பு | : மே, 2011 |
| பதினான்காம் பதிப்பு | : செப்டம்பர், 2012 |
| பதினைந்தாம் பதிப்பு | : செப்டம்பர், 2014 |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | : 11.6 Kg. வெள்ளைத் தாள் |
| பக்கங்கள் | : 248 |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 10 புள்ளி |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை-14. |

**விலை: ரூ.100.00**

| | |
|---|---|
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ், சென்னை-14. |

# பதிப்புரை

திருமதி. ரமணிசந்திரன் எழுத்துக்களை மிகுந்த ஈடுபாட்டோடு படிக்கும் வாசகர்கள், வாசகிகள் தமிழ் பேசும் உலகெல்லாம் பல்லாயிரக் கணக்கிலே பெருகி வருகிறார்கள்.

தினமும் ஏராளமான பாராட்டுக் கடிதங்கள் வந்து குவிகின்றன.

அதிலே மலேசியாவில் உள்ள மதிப்பிற்குரிய வாசகி ஒருவரின் கடிதத்தை கீழே தருகிறோம்.

"நம் வாழ்க்கையில் மிக அவசியமானது அமைதி, மகிழ்ச்சி. இவை இரண்டும் உங்கள் புத்தகங்களில் எனக்கு கிடைக்கின்றன. என்னிடம் நீங்கள் எழுதிய 26 புத்தகங்கள் உள்ளன. ஒவ்வொரு புத்தகத்தையும் குறைந்தது 100 தடவையாவது படித்திருப்பேன். படித்து முடிந்ததும் மனதிற்கு ஒரு உற்சாகம் மகிழ்ச்சி பொங்கி வழியும்.

என் கணவர் கேட்பார் "அப்படி என்னதான் இந்தப் புத்தகத்தில் இருக்கு; இப்படி சிரிச்சுகிட்டே படிக்கிறியே" என்று. பதில் கூறினால் அவருக்குப் புரியாது. திரும்பத் திரும்பப் படிக்க போர் அடிக்கலியானு கேட்பார். எனக்கு ஒரு தரம்கூட போர் அடித்தது இல்லை. இது நிஜம்.

இவ்வளவு அருமையான புத்தகங்களைத் தரும் உங்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள், நன்றியும் கூட".

இப்படிப்பட்ட எண்ணற்ற வாசகிகள், வாசகர்களின் பாராட்டுகளுக்கு எங்கள் நன்றி.

வாசகர்களின் பாராட்டை மேலும் பெறும் வகையில் "**நாள் நல்ல நாள்**" என்ற அருமையான நாவலை திருமதி. ரமணிசந்திரன் அவர்கள் தந்துள்ளார்கள்.

படித்து மகிழுங்கள், கருத்தை எழுதுங்கள்.

***அருணோதயம் அருணன்***

# நாள் நல்ல நாள்

## 1

அருகில் அமர்ந்திருந்தவனின் தோல் வண்ண உறையிட்டிருந்த கையினுள் தன்கை முழுக்க மறைவதைக் காண்கையில் அபிராமிக்கு உள்ளூர ஒரு குளிர் பரவியது. மிகுந்த பிரயாசைப்பட்டு முகம் மாறிவிடாமல், முக்கியமாகக் கை நடுங்கிவிடாமல் சமாளித்தாள்.

"நானே பார்த்தேனம்மா, தழும்பு தவிர ஒன்றும் இல்லை. மாப்பிள்ளை, அவருடைய நண்பர்களோடு உல்லாசப் பயணம் போனபோது இந்த விபத்து நேர்ந்த தாம். சினேகிதனின் தலை நேரே போய்க் கல்லில் மோதி மண்டை உடைந்திருக்க வேண்டியது. அவனைக் காப்பாற்றி விட வேண்டும் என்கிற வேகத்தில் இரண்டு கைகளாலும் அந்தப் பையனின் தலையைப் பிடித்திருக் கிறார். விழுந்த வேகத்தில் இவருடைய கைகள் அந்தப் பையனின் தலைக்கும், தரைக்கும் இடையே மாட்டிக் கொண்டன. கீழே சரளைக்கல்லாம். மோதிய வேகத் தில் கைகள் நசுங்கி விட்டன. இரண்டுகைகளிலுமாக எட்டு இடத்தில் எலும்பு முறிந்து விட்டதாம்.

" ம்... காலம் கலிகாலம் என்பது நன்றாகத் தெரிகி றது. இல்லையானால் உதவிக்குப் போனவருக்கு இப்படி ஆகுமா? ஆனால்.... அந்த சினேகிதன் உயிரைக் காத்த

புண்ணியம்தான் இவருக்கும் கைமீண்டதோ என்னமோ? பணம் காசு இருந்ததால் பெரிய பெரிய டாக்டர்களை வைத்துப் பார்த்து எலும்புகளை ஒட்ட வைத்து, பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் சதையும் தோலும் இணைத்துத் தைத்து ஒருவாறு கைகளை உருப்படி ஆக்கி யிருக்கிறார்கள்.

"தழும்பு தெரிவது பிடிக்காமல் உறைபோடுகிறா ராம். மற்றபடி சந்தேகமே வேண்டாம் என்று சிகிச்சை ஃபைலையே காட்டினார் உன் மாமனார். கையுறையைக் கழற்றி என்னிடம் கையைக்கூடக் காட்டினார் மாப் பிள்ளை. அந்த பிரம்மா மாதிரி, புதியதாக ஒரு கையையே உருவாக்கி இருக்கிறார்கள். வலதுகை வரு மென்று முதலில் டாக்டர்களுக்கே நம்பிக்கையில்லை யாம். இடதுகையில் ஒன்றிரண்டு சிறுதழும்புகள்தான். வலதுகைகூட இப்போது எவ்வளவோ தேவலையாம். எதற்கும் நமக்கு நம்பிக்கையான வேறு டாக்டரிடம் வேண்டுமானாலும் கையைக் காட்டுகிறேன், பரிசோ தித்துப் பார்க்கச் சொல்லுங்கள் என்றாரம்மா. அவ்வ ளவு பணத்துக்கு என்னமாதிரிக் குணம் பார்" என்று வெகுவாக சிலாகித்து தந்தை பேசியது அவளுக்கு அப்போது நினைவு வந்தது.

கூடவே உள்ளூர அவளுக்கு இருந்த கலக்கமும் தந் தையிடம் அன்று தன் பயத்தை வெளியிட்டதும் தான். "அவ்வளவு பணம், பணம் என்கிறீர்களே, அப்பா. அதுதான் கொஞ்சம் பயமாக இருக்கிறது. இந்த இடம் நமக்கு எதற்கப்பா.....?" என்று தயக்கத்துடன் இழுத்தாள்.

"ஏன் பாப்பா, பணத்தைப் பார்த்து மயக்கத்தில் உன்னை யாராவது நோயாளியிடம் தள்ளிவிடு வேனோ என்று பயப்படுகிறாயா?" என்று தந்தை நேரடி யாகக் கேட்கவும் அவளுக்கு ஒரு மாதிரியாகிப் போயிற்று.

"அப்படியெல்லாம் நான் நினைக்கவில்லையப்பா. நம்மைப் போல மனிதர்கள் என்றால் இங்கே மாதிரியே

இயல்பாக . . எப்போதும் போலவே இருந்து கொள்ள லாம் . . அங்கே பழக்கவழக்கம் எல்லாம் புதிதாக . . . ஒன்றும் புரியாமல் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டமா திரி இருக்குமே என்றுதான் . . மனதில் கலக்கமாக இருக் கிறது. அதைவிட 'ஏழைக்கு ஏற்ற எள்ளுருண்டை' என்பது போல நம்மைப் போலவே பார்த்தால் என் னப்பா?" தகப்பனாரிடம் வாதம் புரிந்து பழக்கமில்லாத தால் உண்டான தயக்கத்தை மீறிக் கொண்டு தன் மனதை வெளிப்படையாகக் கூறி முடித்தாள் அபிராமி.

மகளின் கவலை புரிந்தாற்போல அவள் தலையை மெல்ல ஒருதரம் வருடினார் சுதர்சனம். "நம் போல என்றால் என்னவென்று உனக்குத் தெரியாது, பாப்பா. ஆசையாய் ஒரு பட்டுச்சேலை வாங்க வேண்டும் என்றால் ஆறுமாதம் சேமிக்க வேண்டும். ஒரு நகை வேண்டுமானால் ஒருவருடம் வயிற்றைக் கட்டவேண் டும். அதெல்லாம் எங்களோடு போகட்டும். ஏதோ, தெய் வமாகப் பார்த்து உன்னை அந்த மாதிரிக் கவலை ஏதும் பட வேண்டாதபடி ஒரு நல்ல வாழ்வைத் தருகிறபோது, வேண்டாததை நினைத்து உதறிவிடக் கூடாது, அபிக் கண்ணு."

"ஆனாலும் என்னவோ, எங்கேயோ உதைக்கிறது, அப்பா. இவர்கள் என்னைப் போய் எதற்காகத் தேர்ந்து எடுக்க வெண்டும்?" என்றாள் மகள் யோசனையுட னேயே.

பெருமையாகச் சிரித்தார் சுதர்சனம். "நம் வீட்டில் ஆள் உயரக் கண்ணாடி இல்லை. இருந்து அதில் உன்னை நீயே பார்த்திருந்தால் இந்தக் கேள்வி கேட்க மாட்டாய்" என்றார் கர்வத்துடன்.

தாயின் முகத்திலும் அதே கர்வம் பிரதிபலிக்கவும் அபிராமிக்குச் சிரிப்பு வந்தது. அம்மா அப்பா என்றாலே என்னவோ அவர்கள் மகள் தான் ஊர் உல கத்தில் காணக்கிடைக்காத பேரழகி என்று நினைப்பு. அவளைவிட அழகான பெண்கள் ஊரில் எத்தனை

பேர் இருக்கிறார்கள்! ஒருவேளை ஒரு காலத்தில் அவளும் அப்படித் தான் – அதுதான் ஏன் மகள்தான் உலகப் பேரழகி, என்று தான் எண்ணிப் பேசுகிறாளோ? என்று நினைப்பு ஓட அவளுக்கு மேலும் சிரிப்பு விரிந்தது.

"ம். இப்படித்தான் இந்த ஆனால் கீனால் எல்லாவற்றையும் மூட்டைகட்டிப் போட்டுவிட்டு சிரித்தமுகமாய் புன்னகையும் மென்னடையுமாகக் கல்யாணப் பெண்ணாய் லட்சணமாய் வளைய வரவேண்டும்" என்று திருப்தியுடன் கூறிய சுதர்சனம் மனைவியிடம் திரும்பினார்.

"காந்தி, அவர்கள் அன்று பூ வைக்க வந்த போது போட்ட வைரமாலையைப் பத்திரமாக வைத்திருக்கிறாயில்லையா? ஜாக்கிரதை. அதை எங்கே . . . என்று தொடங்கிய உதட்டில் விரல் வைத்து உரக்கப் பேசாதீர்கள் என்று ஜாடைகாட்டி அடக்கினாள் காந்திமதி.

உதட்டில் வைத்த விரலை அகற்றாமலே, கணவரின் கையைப்பற்றி, அந்த விலை உயர்ந்த நகையைத் தான் மறைத்து வைத்திருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்று காட்டினாள் அபிராமியுடைய அன்னை.

அபிராமியின் கலக்கத்தை முதலில் தூண்டியது அந்த வைரமாலைதான்.

சும்மா பெண்ணைப் பார்த்து விட்டுப் போக வந்திருக்கிறார்கள் என்று தான் அவள் முதலில் நினைத்திருந்தாள். 'ஆடுமாடு பார்த்துப் பிடிப்பதுபோல இந்தக்காலத்தில் இது என்னம்மா அசிங்கமாய்? எங்கானும் போகிற வருகிற வழியில் பார்த்துக் கொள்ளச் சொல்லுவது தானே' என்று சிணுங்கிவிட்டு வேறு வழியில்லை என்றுதான் பெற்றோரின் உத்திரவுக்குப் பணிந்து அமர்ந்திருந்தாள். உள்ளூர இருந்த எரிச்சலில் தரையைவிட்டுப் பார்வையை நிமிர்த்தவே இல்லை.

ஆனால் வந்த அம்மாள் அவள் தலையில் பூவைத்து விட்டு வைர மாலை ஒன்றை அணிவிக்கவும் திடுக்கிட்

டுப் போனாள். கன்னத்தை லேசாக வருடி, வருடிய விரல்களில் முத்தமிட்டு, "எப்போது நீ நம் வீட்டுக்கு வருவாய் என்று இருக்கிறதம்மா" என்று வேறு கூறவும் அவளுக்கு ஒரே திகைப்பாகிப் போயிற்று.

விழிகளை உயர்த்தி வேகமாகச் சுழற்றிப் பார்த்ததில் அங்கே கல்யாணப் பையன் வரவே இல்லை என்று தெரிந்தது. ஏன்?

மகளின் மனதில் எத்தனையோ கேள்விகள் குழப்பிய போதும் தந்தைக்கு அப்படி எதுவுமே தோன்றவே இல்லை. அவர் ஏழாவது சொர்க்கத்தில் ஆனந்த மேகத்தில் மிதந்து கொண்டு இருந்தார்.

ஆனால் அவரையும் குற்றம் சொல்வதற்கு இல்லைதான்.

பத்திரமாய் இருந்த நகையைப் பார்த்து, திருப்தியுடன் பெற்றோர் திரும்பிவருவதைக் கவனித்தாள் அபிராமி. அந்த வைரங்களின் ஒளி இருவர் முகத்திலும் தான் படிந்து விட்டதோ? அந்தப் பூரிப்பைப் பார்க்கையில் அவளாலும் சந்தோஷப்படாமல் இருக்கமுடியவில்லை.

"அப்பாடி, இந்த ஒரு நகைக்கு நாம் இந்தப் பயம் பயப்படுகிறோம். நம் தங்கம் இதுபோல எத்தனையைக் காப்பாற்ற வேண்டும், பாவம்!" என்று பெருமிதமாய்ப் பயப்பட்டாள் காந்திமதி.

"அட பைத்தியமே, அங்கே அதற்கெல்லாம் வேறே ஏற்பாடு இருக்குமடி. இங்கே நம்மைப் போலவா! அந்த வீட்டில் .. வீடா அது? அரண்மனை! அந்த அரண்மனையில் காவலுக்கே என் கண்ணால் ஆறு பேர் நிற்கப் பார்த்தேன். நாலு நாய்கள்வேறு ஆள் உயரத்தில் நிற்கின்றன. என்னமோ, இதெல்லாம் கிடைக்க நம் தங்கம் கொடுத்து வைத்திருக்கிறாள்!" என்று மகிழ்ச்சியோடு பேசிய கணவரை ஆச்சரியமாய் நோக்கினாள் காந்திமதி.

சுதர்சனம் என்றைக்குமே தன்னை யாருக்கும் தாழ்வாக நினைத்தவரில்லை. படித்து முடித்து, வேலையில் அமர்ந்து, படிப்படியாக உயர்ந்து மாதம் மூவாயிரம் ரூபாய்ச் சம்பளத்தைச் சுளையாக வாங்கும் தனக்கு உலகத்தில் யாரும் நிகர் இல்லை என்பது சில நாட்கள் முன்பு வரையிலாக அவரது அபிப்பிராயம்.

ஆசைக்கும், ஆஸ்திக்கும் கூடவே கொசுறுமாக மூன்று மக்கள். மூத்தவள் அபிராமி பி.ஏ., அடுத்து இஞ்சினியரிங் காலேஜில் சரவணனும், ப்ளஸ் டூவில் சிவகாமியும் படித்தனர். கண்ணுக்கு லட்சணமான புத்திசாலிப் பிள்ளைகள். அடக்கமும் பிரியமும் உடைய மனைவி காந்திமதி. முறையாகச் சேமித்துக் கட்டிக் கொண்ட சிறுவீடு. இதற்குமேல் என்ன என்று நிமிர்வோடு நடப்பவர் அவர்.

ஆனால் கண்டசா கார் ஒன்றில் வழுக்கி வந்து நின்று, "வாருங்கள்" என்று அழைத்துப் போய், முந்திரி பக்கோடாவும் பாதாம்கீரும் அளித்து உபசரித்துப் பெண் கேட்கவும், அசந்து போனார்.

பனிரண்டு மனையளவுப் பரப்பில் தோட்டமும் வீடும்!

கையில் டென்னிஸ் மட்டையுடன் வாட்ட சாட்டமாக வந்தவன் பையன் எனவும் மயக்கம் போடாத குறைதான். கையுறையை அப்போதிருந்த நிலையில் அவர் கவனிக்கவே இல்லை.

அடுத்து அதையும் அவர்களாகவே விவரிக்கவும் பிரமித்துப் போனார்.

அப்படியும் அவர் ஒன்றும் அடியோடு மயங்கிவிடவில்லை. பெண்ணைப் பெற்றவர் ஆயிற்றே! பெரும்பணம் இருந்தால் ஏதேனும் துப்பறியும் நிறுவனத்திடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டுத் தன் வேலையைப் பார்த்துக் கொண்டு இருந்திருக்கலாம்—முதல் தடவையாக, அதிகப்படி பணம் இல்லாத குறையை உணர்ந்தவராக, வேலைக்கு லீவு போட்டுவிட்டுப் பையனின்

பின்னாலேயே அவன் அறியாமல் அலைந்து உளவு பார்த்தார்.

காலையில் அலுவலகம் செல்வதும் மாலையில் டென்னிசும் அல்லது நண்பர்களோடு பீச்சில் பேசிக் கொண்டு உட்கார்ந்திருப்பதும், வீடுதிரும்புவதும் தினம் தினம் பார்க்கப் பார்க்க மனம் குளிர்ந்தார்.

அத்தோடு நில்லாமல் அறிந்தவர் தெரிந்தவரிடம் விசாரித்தார். எல்லோருமே ஒரு வாயாய், "அவ்வளவு பணத்துக்கு ஒரே வாரிசு என்று பார்க்கும் போது பையன் தங்கம் தான்" என்றார்கள். "சிநேகிதப் பையன்களோடு சுற்றுகிறது உண்டுதான். ஆனால் கெட்ட பழக்கம் என்று ஒன்றும் இல்லை. ரேஸ், சீட்டு, பெண்கள் சகவாசம் . . ஊஹூம். அப்படி எதுவும் கிடையாது. முன்னெல்லாம் சிநேகிதர்கள் சேர்ந்தால் கொஞ்சம் தண்ணி போடுகிற பழக்கம் உண்டுதானாம், காந்தி. ஆனால் இந்த விபத்தில் கை நசுங்கிய பிறகு தொடுவதே இல்லையாம். ஒரு வேளை குடி போதையில் தான் இந்த விபத்துக் கூட நேர்ந்திருக்குமோ என்னவோ? கிட்டத்தட்ட ஓர் ஆண்டாகப் பிள்ளை தங்க கம்பிதானாம். இன்றைக்குப் பையன் உத்தமன். பழைய கதையை நாம் கிளறுவானேன். பணக்காரப் பையன் கொஞ்சம் அப்படி இப்படி இருப்பது சகஜம் தான் . . . அதுதான், நோகாமல் உண்ணலாம் என்று வசதி உள்ள வர்களைக் கெடுப்பதற்கு என்றே அலைகிறார்களே, அந்த சகவாசம் இருந்திருக்கலாம். தாடி, மீசை, கிருதா .... எப்படியோ, இந்த விபத்து ஒன்று கண்டம் போல வந்து, அழுக்கு நீக்கி அவரைப் புடம் போட்ட பொன்னாக்கி இருக்கிறது. இதையெல்லாம் போய் அபியிடம் சொல்லிக் கொண்டிராதே.." என்று மனைவியிடம் எச் சரித்தார்.

"இன்றைக்குப் பையன் உத்தமன், இனிவரும் வாழ் வுதான் மகளுடையது" என்று தாயும் ஒப்பினாள்.

சம்மதம் என்று சொல்லிவிட்ட பிறகு சுதர்சனம் திகைத்தார். இவர்களுக்குச் சரியாகத் திருமணத்தை அவரால் நடத்த முடியுமா?

மகள்களின் திருமணத்திற்கு என்று பெற்றவர்கள் திட்டமிட்டுச் சேர்த்தார்கள்தான். அபிராமியின் திரும ணத்துக்கென்று போட்டிருந்த ஒரு லட்ச ரூபாய்ச் சீட்டு முடிகிற நிலைதான். அவ்வப்போது போனசில் வாங்கி வைத்திருந்த நகைகள் ஒரு முப்பது பவுன் தேறும். ஆனால் சம்பந்தி அம்மாளின் காதிலும் விரலிலும் சுடர் விட்ட வைரங்களின் விலை அவை பெறுமா?

பெரியவர் – பிள்ளையின் தந்தை சிவநாதன் கெட் டிக்காரர். உண்மையிலேயே பெரியவராகவும் இருந் தார்.

சுதர்சனத்தை ஒரு பார்வையால் அளந்து, "எங்கள் பக்கம் ஆட்கள் அதிகம். அதற்குச் சரியாகச் சத்திரம், சாப்பாடு எல்லாம் நானே பார்த்துக் கொள்ளுகிறேனே. எனக்கும் தான் வேறு யார்? செலவு செய்யவும், செய்து பார்க்கவும் இருந்திருந்து ஒரே ஒரு பையன். அவனது திரு மணத்தை என் ஆசைப்படி நடத்த நீங்கள் சம்மதிக்க வேண்டும்" என்று வந்தவர் மனம் நோகாமல் நாசுக்கா கப் பேசிப் பொறுப்பைத் தானே ஏற்றுக் கொண்டார்.

பெண்ணைப் பார்ப்பது பற்றிப் பேசியபோது தான் இந்தத் திருமணம் எப்படிக் கூடியது என்று சுதர்ச னத்துக்குத் தெரிய வந்தது.

சுமார் ஒரு மாதத்துக்கு முன் அபிராமியின் வகுப்புத் தோழி அர்ச்சனாவின் திருமணம் நடந்தது. அதே திரும ணத்துக்குத் தனஞ்சயனும் – அது தான் சுதர்சனத்துடைய வருங்கால மருமகனின் பெயர். அவனும் சென்றிருக்கி றான்; அபிராமியைக் கண்டிருக்கிறான். ஒரே பார்வை யில் இவள் தான் மனைவி என்று தீர்மானித்து விட்டான்.

பெரிய இடத்துப்பிள்ளை, தீர்மானம் செய்துவிட் டால் மேலே கேட்க வேண்டுமா? யார் என்னவென்று

விசாரித்துத் தாயாரிடம் பக்குவமாய்ச் சொல்லி, தந்தை காதுக்கு எட்ட வைத்து விட்டான்.

பெற்றவர்களும் உண்மையான பெரிய மனிதர்கள். பெண்ணைப்பற்றி விசாரித்துப் பார்த்தார்கள். பணம் இல்லாவிட்டாலும் மற்றவகையில் சிறப்பாகத் தெரியவே மகனது விருப்பந்துக்குப் பச்சைக் கொடி காட்டி விட்டார்கள். மேலே திருமண ஏற்பாடுகளையும் முனைந்து செய்தார்கள்.

இந்த விவரங்களை அறிந்ததும் சுதர்சனம் தம்பதிக்கு மேலும் சந்தோஷம். அவர்களுடைய தங்கமகளுக்கு உயர்ந்த வாழ்வு கிடைக்க கடவுளே ஏற்பாடு செய்திருக்கிறார் என்று எண்ணி மகிழ்ந்தார்கள்.

ஆசைப்பட்ட பையன் என்றாலும் 'நானும்' 'நானும்' என்று முந்திரிக் கொட்டையாய் வந்து நிற்கவில்லை. "நான்தான் பார்த்தாயிற்றே. இனி அம்மா அப்பா மட்டும் போகட்டும் . . என் ஃபோட்டோவை வேணுமானால் பெண்ணிடம் காட்டுங்கள்" என்று கூறிப் பெற்றோரை அனுப்பி விட்டுப் பின்தங்கி விட்டான்.

வந்து பார்த்த அன்றே வரப்போகிற மருமகளுக்குப் பூவைத்து விட்டுத் தான் புறப்பட்டாள் புவனேசுவரி.

பூவைப்பது என்பது பெயர்தான். பூவோடு ஒரு வைர மாலையும், ஒத்ததாக வளையல்கள், தோடு, மோதிரம் என்று ஒரு செட் வைர நகைகள்.

முதலில் சிரிப்பும் சிலிர்ப்புமாகத் தலையாட்டிய அபிராமி இந்த நகைகளைக் கண்டதும் மிரண்டு போனாள்.

"நன்றாக விசாரித்தீர்களா, அப்பா? இவ்வளவு பணக்காரர்கள் நம்வீட்டில் ஏன் ...?" என்று அஞ்சினாள்.

சுதர்சனத்துக்கு ஓரளவு அந்தப் பயம் இருந்தது தான் என்றாலும் மகளின் எழிலில் அபார நம்பிக்கையும் இருந்தது.

எதற்கும் மீண்டும் ஒரு சுற்று விசாரித்து விட்டுத் திருப்தியுற்றவர் மகளையும் அமைதிப்படுத்தினார்.

மையல் கொண்டு மணப்பவன் என்றாலும் பையனும் அச்சுப் பிச்சு என்று நடந்து கொள்ளாமல், பணத்திமிர் காட்டாமல் கவுரமாக நடந்து கொண்டது வேறு இருவருக்கும் நிம்மதி அளித்தது.

திருமண நகை, துணிமணிகள் வாங்கிய போது தாயாருடன் கூட வந்தபோது கூட சிறு புன்னகையோடு ஒதுங்கிக் கொண்ட விதத்தால் சுதர்சனத்தின் மதிப்பில் வெகுவாக ஏறினான். கூடவே ஒரு பெரிய பிளஸ் பாயிண்டாக அவனுடைய் தாயார் இருந்தாள். அவளது கனிவான பார்வையும் முகமும் பெற்றவரின் கவலை யைப் பறக்கடித்தது.

முகமெல்லாம் புன்னகையோடு கை வீசிக் கொண்டு வந்து திருமண நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, இதோ, தன் பங்காக மகளைக் கைபிடித்தும் மருமகன் கையில் கொடுத்தும் விட்டார்!

கையுறை வழுக்கி விடக்கூடாது என்றோ என்னவோ, தனஞ்சயனும் மனைவியின் கையை இறுகவே பற்றியிருந்தான்.

முதலில் இதமாகத் தோன்றிய அவனது கைப்பிடி, மேலும் இறுகவே அபிராமியின் கை கன்றிப் போயிற்று.

மெல்லப் பிறர் அறியாமல் கையை லேசாகத் தளர்த் திக் கொள்ள முயன்றவள், அதற்கு இடம் கொடாதபடி கணவரின் பிடி அழுத்தமாக இருக்கவே, அதற்குப் பணிந்து உதடுகளில் புன்முறுவல் மாறாது காத்தபடி கை வலியைப் பொறுத்துக் கொள்ளும்படி ஆயிற்று.

# 2

நன்றாக 'கிரீஸ்' தடவிய இயந்திரம் தங்கு தடையின்றி சுழல்வது போலத் திருமண வைபவம் சிறப்பாக நடந்தேறியது.

பிள்ளை வீட்டு உறவு, நட்பு, தொழில் துறைத் தொடர்பு என்று வந்திருந்த கூட்டம் அபிராமியைச் சற்று மிரட்டிய போதும், அருகிலேயே நின்று கனிவான குரலில் தேவையான விளக்கங்களையும், அவ்வப் போது ஏதாவது பானங்களையும் தந்து உபசரித்த மாமி யாரைக் காண்கையில் அவளுக்குத் தெம்பும் உண்டாயிற்று.

வருகிறவர்கள் கூட்டம் சற்றுக் குறைகிற நேரம் பார்த்து, "இரண்டு பேரும் கிடைக்கிற நேரத்தில் உட் கார்ந்து கால்களுக்கு ஓய்வு கொடுங்கள்" என்று மகனோடு மருமகளையும் புவனேசுவரி அமர வைத்த விதம், புகுந்த வீட்டில் தனக்கு எந்த விதத் துன்பமும் நேரா விடாமல் மாமியார் காப்பாள் என்ற நம்பிக்கையை அபிராமிக்கு உண்டாக்கியது.

அந்த மாதிரிக் கிடைத்த நேரங்களில் அருகே ஒரு சோபாவில் தானும் அமர்ந்து, "இத்தனை பேரையும் ஒரே நேரத்தில் நினைவு வைத்துக் கொள்ள முயற்சி பண்ணாதேம்மா. தலை சுற்றத் தொடங்கிவிடும். நெருங் கியவர்கள் என்றால் அடுத்தடுத்து ஏதாவது விசேஷங்க ளில் சந்திக்க நேரும். அப்போது நான் ரகசியமாய் இன்னாரென்று சொல்லித் தந்தேன் என்றால் உனக்கு நினைவு வைத்துக் கொள்ள எளிதாக இருக்கும்" என்று மென் குரலில் மாமியார் கூறவும் மருமகளுக்கு அப்பாடா என்றிருந்தது. ஏனெனில் வந்தவர்கள் எல் லோரையும் நன்றாக அறிந்தவனாய்க் கணவன் பேசக் காணவும் அவளுக்கு உள்ளூரக் கொஞ்சம் பயம் தான். மறுமுறை பார்க்கும்போது அடையாளம் புரியாமல் விழித்தால் அசிங்கமாய்ப் போய்விடுமோ, கணவன்

ஆத்திரப்படுவானோ என்றெல்லாம் மனதுக்குள் பயந்து கொண்டிருந்தவளுக்கு அது புரிந்தாற் போலான மாமி யாரின் பேச்சு பெரும் ஆறுதலை அளித்தது.

எவ்வளவு இதமாக நடந்து கொள்கிறார்கள் என்று சிறு வியப்பும் மகிழ்ச்சியுமாகப் புவனேசுவரிக்கு நன்றி சொன்னாள் அபிராமி.

"எல்லாம் 'அனுபவம் பேசுகிறது' தான். முப்பத் தைந்து ஆண்டுகளுக்கு முன்பு நான்பட்ட பாடு எனக்கு இன்னமும் மறக்கவில்லை" என்று சிரித்தாள் புவனேசு வரி.

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு பயின்ற பாடத்தை நினைவு வைத்திருந்து மருமகளுக்குக் கற்றுத் தருவது என்றால் மாமியார் மிகமிக நல்ல மாமியார் தான் என்று உள்ளம் மகிழ்ந்தாள் அபிராமி.

கூடவே இன்னொன்றையும் அவள் கவனித்தாள். தனஞ்சயனின் மறுபுறம் நின்று வந்தவர்களை வரவேற் றுக் கொண்டு இருந்த சிவநாதன் சின்னஞ்சிறு இடை வெளிகளிலும் மனைவியிடம் வந்து 'அசதியாக இருக்கிறதா', ' கால்வலித்தால் பேசாமல் உட்கார்ந்து கொள்ளேன்', 'முதலில் மாத்திரையைப் போட்டுக் கொள்' என்று கண்ணில் கவலையோடு கரிசனம் காட் டியவாறே இருந்தார்.

அபிராமிக்கு அதுவும் ஆச்சரியமாய்த் தான் இருந் தது. அவளுடைய தந்தையும் தாயும்கூட ஒருவர்மீது ஒருவர் மிகுந்த அன்புடையவர்கள்தான். ஆனால் தந்தை இந்தமாதிரி அக்கறை காட்டி அவள் பார்த்தது இல்லை. சொல்லப் போனால், அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்றால் அப்பாவுக்கு எரிச்சல் தான் வரும். உடம்பைப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கூடத் தெரியாதா? இப்போது நான் ஆஃபீசுக்கு எப்படிப் போவது? என்று ஆத்திரப்படுவார். அம்மா வேண்டுமென்றா இழுத்துக் கொண்டார்கள் என்று அபிராமி தந்தையிடம் கேட்டது கூட உண்டு.

அவளுக்கு இந்த உருக்கம் ஆச்சரியமாய் இருந்தது.

மருமகள் கவனித்து விட்டதை உணர்ந்து லேசாக அசடு வழிந்து விட்டு, "உன் அத்தை அவளது ஆரோக்கியம் பற்றிய விஷயத்தில் பச்சைக் குழந்தை, அம்மா" என்று விளக்கம் உரைத்தார் சிவநாதன்.

அடுத்த கூட்டத்தை வரவேற்க அவர் அப்பால் செல்லவும், "உன் மாமாவுக்கு அந்தப் பேச்சை எடுக்கவே பயம். முன்பு ஒருதரம் உடம்பைக் கவனியாமல் விட்டு கட்டையாய் நீட்டி விட்டேனாம். அதிலிருந்து இப்படித்தான் .." என்று சிரித்தாள் புவனேசுவரி.

தனஞ்சயனின் நண்பர்கள் சிலர் ஓடியாடி வெகுவாக வேலை பார்த்தார்கள்.

ரகுராம், விசுவம், ப்ரீதம், சுதிர் என்று சிலர் அவ்வப்போது வந்து அங்கங்கே நின்றவர்களைக் கூட்டத்தில் கலந்து உட்கார வைப்பதும், உணவருந்த அழைப்பதுமாக உபசாரம் செய்தார்கள்.

"என்ன மாதிரி அழகான பெயர்கள் பார், அபி. இதைப் போய் ரம், விஸ்கி, பீர், சாராயம் என்று அழைத்துக் கொண்டு கும்மாளம் அடிப்பார்கள். என்னவோ, கொஞ்ச காலமாக அழகாக முழுப் பெயர் சொல்லி அழைத்துக் கொள்கிறார்கள்" என்று ஒரு வாஞ்சையான பார்வையுடன் புவனேசுவரி உரைக்க, அபிராமிக்கு எங்கோ, ஏதோ நெருடியது.

விஸ்கி, ரம் . . . . . யோசித்தும் சரிவரப் புரிபடாமல், நின்றவள் மேலே அது பற்றிச் சிந்திக்க வழியின்றி மாலைமறைவில் தனஞ்சயன் கை அழுந்தியது. 'என்ன மாமியாரிடமே கிசுகிசுப்பு? பக்கத்தில் இருப்பவன் தெரியவில்லை?' என்றான். தொடர்ந்து அவளது உறவுக்காரர்கள் கூட்டம் ஒன்று வந்து சேர்ந்தது. அருகில் நின்ற கணவனுக்கும் மாமியாருக்கும் அனைவரையும் அறிமுகம் செய்து முடித்து, தம்பியை அழைத்து வந்தவர்களுக்கு உணவு அளித்து உட்கார வைக்கும் பொறுப்பை ஒப்ப

டைத்து முடித்தபோது அதற்கு முன் யோசித்த விஷயம் அடியோடு மறந்து போயிற்று.

வரவேற்பு முடிந்து விருந்தினர்கள் விடை பெற்றுச் செல்லத் தொடங்கிய போது மணி ஒன்பதாகி விட்டது.

முதல் விடை பெறல் தொடங்கியதுமே, "இனிப் புதிதாக வருவதற்கு யாரும் இல்லை என்று நினைக்கிறேன். நான் சற்று முன்னே வீடு சென்று உன்னை நம் வீட்டுக்குள் வரவேற்பதற்கான வேலைகளைப் பார்க்கப் போகிறேன். நினைவு வைத்துக் கொள், வீட்டுக்குள் அடியெடுத்து வைக்கும்போது வலது காலை எடுத்து வைக்க வேண்டும். இங்கே மற்றது தனா சொல்வான். கேட்டுக் கொள். இனிமேல் பெரிதாக ஒன்றும் இல்லை. விடை கொடுக்கிற விஷயம் தானே, அவ்வப்போது சாப்பிட்டாயிற்றா என்று ஒரு கேள்வி கேட்டுவை. அது போதும். தனா, அபியைப் பார்த்துக் கொள்" என்று கூறிக் கணவருடன் புவனேசுவரி கிளம்பிய பிறகு அபிராமிக்குக் கொஞ்சம் மனம் தளர்ந்து தான் போயிற்று.

"நான் சொன்னது நினைவிருக்கிறதா, சந்தேகம் இல்லையே, தனா இருந்தால் இப்போதே கேட்டுக் கொள். பிறகு ஃபோன் ஏதும் செய்ய வழியில்லை" என்று கூறி, அவன் சந்தேகம் இல்லை என்றதும் கிளம்பிச் சென்றார் சிவநாதன்.

அதன்பின் அதிக நேரம் தாமதியாமல் சரியாகப் பத்து மணிக்கு, காரியஸ்தரிடம் மற்ற வேலைகளைக் கவனித்துக் கொள்ளுமாறு பணித்து விட்டு, கண்ணில் பட்டவர்களிடம் புன்னகையோடு விடை பெற்றபடி தனஞ்சயன் மனைவியை அழைத்துக் கொண்டு கிளம்பிவிட்டான்.

தாய் வீட்டினரை விட்டுவிட்டுத் தனியாகக் கணவனின் பின்னே காரில் ஏறும்போது அபிராமிக்குக் கொஞ்சம் கலக்கம் தான். ஆனால் அவனது கையைப் பற்றி, "என்ன, இறங்கி அவர்களிடம் ஓடிவிடலாம் போல இருக்கிறதா? ஆனால் நான் விடமாட்டேனே"

என்று கூறிப் பற்கள் மின்ன அவன் சிரித்தபோது பெற்றோரின் முகம் மறந்து போயிற்று அவளுக்கு.

வேறு ஏதாவது பேசுவானோ என்று காத்திருந்தாள். ஆனால் அவளது கையை விட்டுவிடவில்லையே தவிர, எதையோ தீவிரமாக யோசித்திருந்த அவன் வேறு அதிகம் பேசவும் இல்லை.

ஒரு தரம் மட்டும், "களைப்பாய் இருப்பாய்" என்றான்.

பதிலாக லேசாக முறுவலித்துவிட்டு, "நீங்கள்?" என்றாள் அவள்.

லேசாகத் தோளைக் குலுக்கினான் அவன். "எனக்கும் தான். அப்பாடா, ஒரு வழியாய் எல்லாம் முடிந்தது என்று இருக்கிறது. எல்லோரையும் விட்டுவிட்டு ஒரு வழியாய் உன்னை ஊட்டிக்கு அழைத்துப் போய் விட்டால் அப்புறம் தான் எனக்கு நிம்மதி" என்றான்.

அவர்களது தேனிலவை அங்கே தொடங்குவதாகத் தான் ஏற்பாடு. ஆனால் என்னவோ அதைப் பற்றி அவன் குறிப்பிட்டும் புதுப் பொண்ணுக்குரிய வெட்கம் அவளுக்குத் தோன்றவில்லை. ஒரு வேளை வேறு மாதிரி வேட்கையை வெளிக்காட்டாமல் அவன் சாதாரணமாகவே பேசியதாலோ?

ஒரு மாதிரி இதுவே அவளுக்கும் பிடித்தமாக இருந்தது. நாணம், நடுக்கம் ஏதும் இல்லாமல் அவளாலும் பேச முடிந்ததே!

ஷூவிலிருந்து காலை உருவி நீட்டி முறித்துக் கொண்டான் தனஞ்சயன்.

நாலு மணி நேரம் நின்றிருந்தார்களே! எத்தனை ஜனங்கள்!

வியப்புடன் கணவன் புறம் திரும்பி, "இவ் .. வளவு பேரையும் தெரிந்து வைத்திருக்கிறீர்களே!" என்று அபிராமி விழிகள் விரியப் பேசவும் அவன் சட்டெனச் சிரித்துவிட்டுத், "தெரியாதே" என்று உதட்டைப் பிதுக்கவும் குழம்பிப் போனாள்.

"பின்னே . . . பின்னே உங்கள் அப்பா அறிமுகம் செய்த போதெல்லாம் நினைவிருக்கின்றதே, சவுக்கியமா . . . என்றெல்லாம் தெரிந்த பாவனையில் கையைப் பிடித்துப் பேசினீர்களே?" என்று அவள் வினவவும், "பாவனையில் தானே!" என்று மீண்டும் தோளைக குலுக்கினான் தனஞ்சயன். "இதைக் கேள், அபிராமி. அப்பா முப்பது ஆண்டுகளாகத் தொழில் நடத்துகிறார். எல்லோரையும் தெரிந்திருப்பது இயல்பு. நான் சில மாதங்களாகத் தான் இந்த அலுவலகத்துக்குச் செல்வதே. உறவு, கிறவு என்று எங்கும் நான் போவதும் இல்லை. எப்படித் தெரிந்து கொள்ள முடியும்?"

"பின்னே?"

"அப்பாதான் சொன்னார்கள். யார் என்ன என்பதை அருகில் நின்று நான் சொல்லுவேன். நீ நன்றாக அறிந்தவன் போல நடந்து கொள். வருகிறவர்களுக்கும் சந்தோஷமாக இருக்கும். அதேசமயம் உனக்காக ஒன்று செய்யச் சொன்னால் உயிரை விட்டுக் கொண்டு செய்வார்கள் என்று அவர் சொன்னதை அப்படியே பின்பற்றினேன். அவ்வளவுதான்"

"ஒகோ!"

இதை ஏமாற்று வேலை என்பதா, ராஜ தந்திரம் என்பதா?

'பொன்னியின் செல்வனில்' வந்தியத்தேவனின் பேச்சு ஒன்று நினைவு வர அவளுக்குச் சிரிப்புதான் வந்தது.

எப்படியோ . . இதுவரை எல்லாம் நல்லபடியாக நடந்தது. இனி . . .

அதற்கு மேல் எதுவும் நினைவு வரவில்லை. அவள் கையில் தட்டி எழுப்பி, "நம் வீடு வர இன்னமும் ஒரு மணி நேரம் ஆகும். பின்னே சாய்ந்து தூங்கு" என்று தனஞ்சயன் கூறவும் அவள் பூரித்துப் போனாள். எவ்வளவு கரிசனம்!

ஆயினும் புத்தம் புதியவனான கணவன் பார்க்கத் தூங்கி விழுந்தோமே என்ற கூச்சத்துடன் நிமிர்ந்து அமர்ந்தாள்.

"பரவாயில்லை. கொஞ்சம் தூங்கு" என்று கூறி முறுவலித்துவிட்டு, கைகளை மார்பின் குறுக்கே கட்டித் தானும் பின்புறம் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டான் தனஞ்சயன்.

பூசனிக்காய், தேங்காய் என்று என்னென்னமோ கொண்டு சுற்றிப் போட்டு விட்டு, ஆலம் கரைத்து, வெற்றிலையில் கற்பூரம் ஏற்றி சுற்றிக் கொட்டிவிட்டு மருமகளை உள்ளே அழைத்துக் கொண்டாள் புவனேசுவரி.

பூசையறையில் வணங்கி எழுந்தபின் தன்னோடு மருமகளை அழைத்துச் சென்று அருகே அமர்த்திக் கொண்டவளுக்குச் சற்று நேரம் பேச்சு எழும்பவில்லை.

மருமகளின் கையை மெல்ல வருடியவள், "குருசுவாமி குறித்துக் கொடுத்த நேரம். ஆனால் என்ன சொன்னாலும் தனம் கேட்பதாக இல்லை நீ மிகவும் களைத்துப் போய் இருப்பாயாம். ம் . . . மற்றது ஊட்டியில் பார்த்துக் கொள்ளலாம் என்று விட்டான். உனக்கு வருத்தம் இல்லையே, கண்ணு? இன்று இந்த அத்தை அறையிலேயே உறங்குகிறாயா? என்று வருத்தமும் பரிவுமாகப் பேசவும் அபிராமிக்குச் சிரிப்புதான் வந்தது.

இதற்குப் போய் இவ்வளவு கவலையா? இன்னமும் தான் வாழ் நாள் முழுவதும் இருக்கிறதே!

ஆனால் வெளிப்படையாகப் பேசமாட்டாமல் லேசான புன்னகையுடன் தலையாட்டினாள்.

உறவுகளை விட்டு வந்து மாமியார் காட்டிய இலவம் பஞ்சுமெத்தையில் படுத்தவள்தான். எவ்வளவு பெருந்தன்மை மிக்க குடும்பம், இந்தக் குடும்பத்தில் ஒருத்தியாவதற்கு என்ன புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்று எண்ணத் தொடங்கியவளுக்கு அதற்கு மேல் ஒன்றும் தெரியாது. அப்படி ஓர் அயர்ந்த உறக்கம்.

காலையில் புவனேசுவரி அந்த வீட்டுப் பழக்க வழக்கங்களை மருமகளுக்கு எடுத்துச் சொன்னாள்.

"காலையில் குளித்துவிடும்மா. எழுந்ததும் காஃபி குடிக்கிற பழக்கம் என்றால் குடித்து விட்டுக் குளி. குளித்ததும் பூஜை அறைக்குப் போய்க் கும்பிட்டு ஒரு கீற்று திருநீறு பூசிக் கொள். மற்றது உன் விருப்பம் போல இருக்கலாம். சாப்பாட்டு அறை காட்டினேன் இல்லையா? இடையில் ஏதாவது கொறிக்க, குடிக்க வேண்டும் போல இருந்தால் டெலிஃபோனை எடுத்து மூன்றாவது பட்டனை அழுத்தி சமையல் அறையில் கூப்பிட்டு சொல்லு. கொண்டு வருவார்கள் ...."

அன்று அவளது வீட்டில் அவளுடைய பிறந்த வீட்டினருக்கு விருந்து வைத்தார்கள்.

விருந்துண்ண வரும்போது பெற்றோர் கொண்டு வநத பெரிய பாதாம் அல்வா பாக்கெட்டையும், ஆப்பிள் பழக் கூடையையும் பார்த்ததும் அபிராமியின் முகம் வாடியது.

என்ன விலையிருக்கும்!

குறுக்கே குறுக்கே வந்து விழாமல், அபிராமியை அவள் பெற்றோருடன் பேசவிட்டு விட்டு நாகரீகமாக ஒதுங்கிக் கொண்டாள் புவனேசுவரி.

தம்பி தங்கை தோட்டம் பார்க்க ஓடிவிட, சம்பந்தியோடு தந்தை பேசிக் கொண்டிருக்க, இடையே கிடைத்த சிறுதனிமையில் "ஏன் அம்மா?" என்று கடிந்தாள் மகள்.

புரிந்து கொண்டு, "ஷ் சும்மா இரு அபி. இதற்குக் குறைத்துச் செய்தால் உனக்கு இங்கே மதிப்பு குறைந்து போகும். அப்படி என்ன, நம்மால் முடியாததா?" என்று புன்னகைத்தாள் தாயார்.

ஆயினும் அபிக்கு உள்ளூர வருத்தம் தான்.

இந்த மாதிரிச் செலவு இதுமட்டும் என்று இல்லையே! அங்கே கட்டுவதற்குச் சரியாக இருக்க வேண்டும். குறைவாகத் தெரிந்து விடக் கூடாது என்று

புதிதாக ஆறு மைசூர் கிரேப் ஒவ்வொன்றும் ஆயிரத்தி ஐநூறு ரூபாய் விலை. ஏதோ வைரம் முடியாவிட்டாலும், முத்தில், கார்னட்டில் என்று இரண்டு செட் நகைகள்.

சேமிப்பு என்று இருந்ததெல்லாம் தீர்ந்து விடக் கடனும் வாங்கிப் பெற்றவர்கள் செலவு செய்யச் செய்ய மகளுக்கு உள்ளூர வாட்டம் தான்.

ஏதாவது ஆட்சேபனை செய்தால், 'நீ பெரிய இடத்தில் மகாராணி போல மதிப்பு குறையாமல் வாழ்ந்தால் எங்களுக்கு அது போதும்' என்று இருவருமே அடக்கி விடுவார்கள்.

தன்னால் எவ்வளவு செலவு என்று நினைக்கையில் அபிராமியின் விழிகளில் நீர்மல்க, "சீ ச்சி, அசடு கண்ணைத் துடை. உள்ளே வரும் போது உன் மாமியார் பக்கத்தில் நீயும் மாப்பிள்ளையும் சிரித்த முகமாய் நின்றதைப் பார்த்ததும் எங்களுக்கு எவ்வளவு ஆனந்தமாக இருந்தது தெரியுமா? இன்னமும் சிறப்பாகச் செய்வதற்குப் பணம் இல்லையே என்கிற ஒரு வருத்தம் தான் .... அப்புறம் .. கண்ணு ... வந்து ... நேற்று நேற்று ..." என்று லேசாக முகம் கன்றத் தடுமாறினாள் காந்திமதி.

தாயார் படும்பாடு கண்டு அபிராமிக்குச் சிரிப்பு வந்தது. "ஊட்டியில் தான் என்கிறாரம்மா உங்கள் மாப்பிள்ளை. வெளி நாடு போய்ப் படித்திருக்கிறாரல்லவா? வெள்ளைக்காரர்களின் பழக்கம் அனுசரிக்கிறார். தேனிலவு .. அது இது என்று .." என்று கூறிக் கன்னம் குழியச் சிரித்தாள் மகள்.

கூடச் சேர்ந்து முறுவலித்து விட்டு, "வெள்ளைக்காரர் வழக்கமோ, பண்டைத் தமிழ்ப் பழக்கமோ, அன்பும் ஆதரவுமாக இருந்தால் சரி. உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும் தங்கம், மாப்பிள்ளை வீட்டில் - இனி உன் வீடு தானே, இங்கே இவர்கள் பெரிய பணக்காரர்கள். வீட்டிற்கு ஒரே பிள்ளை. செல்லமாக வளர்த்திருப்பார் .. ஏதோ கொஞ்சம் முன்னேபின்னே இருந்தாலும் நான் விட்டுக் கொடுத்து அனுசரித்துப் போக

வேண்டும், அம்மா. நான் என்ன குறைவு என்று ரோஷ மாய்ப்பதிலுக்குப் பதில் என்று நின்று விடக்கூடாது, கண்ணம்மா." நீ அப்படிப்பட்ட பெண் இல்லைதான், செல்லம். ஆனால் பொறாமைப்பட்டவர்கள் நாக்கில் நரம்பில்லாமல் என்னென்ன பேசுகிறார்கள் தெரியுமா? காலையில் இந்தப் பழம், அல்வா எல்லாம் வாங்கி வருவ தற்காக அப்பா வெளியே போயிருந்தார். அப்போது ... உன் அத்தை சாபமே கொடுக்கிறார்கள் அபி. நாளே நாளில் உதவாது என்று உன்னைத் திருப்பி அனுப்பி விடுவார்களாம். எல்லாவற்றையும் வழித்து எடுத்துச் செலவு செய்து விட்டதால் இனி ஒன்றும் வராது என்று கல்தா கொடுத்து விடுவார்களாம். நாம் குடும்பத்தோடு திருவோடு ஏந்தப் போகிறோமாம்.

"அவர்களாவது நாத்தனார். அவர்கள் பிள்ளைக்கு உன்னைத் தரவில்லை என்கிற கோபம் என்று கூட வைத்துக் கொள்ளலாம். உன் பெரியம்மா – என் கூடப் பிறந்த அக்கா சொல்கிறார்கள், ஏதோ குறையை மறைத் துச் செய்கிறார்கள். சுவரில் அடித்த பந்து போல இரண் டாம் நாளே அழுது கொண்டு வந்து நிற்பாள் என்கிறார்கள். அவர்கள் மகள் உன்னைவிட ஐந்து வயது பெரியவள், இன்னமும் திருமணம் ஆகாமல் நிற்கி றாளில்லையா, அந்த வயிற்றெரிச்சல். இந்தத் தீக்கண் ணெல்லாம் உன்னை என்ன செய்து விடுமோ என்று பயமாய் இருக்கிறது தங்கம்" என்று முடிக்கும்போது கண்ணீரே வழியத் தொடங்கிவிட்டது.

"அச்சோ! என்னம்மா இது. அவரவர்கள் பொறா மையில் புலம்புகிறார்கள். அது புரிந்தும் இந்தப் பேச்சைப் பெரிதுபடுத்திக் கொண்டு அழலாமா? இவர் கள் பேச்சு எல்லாம் பொய்த்துப் போய், நான் இங்கே, நீங்கள் முதலில் சொன்னதுபோல ஒரு ராணியாகவே வாழப் போகிறேன் பாருங்கள். நீங்கள் முதலில் எங்கள் அத்தையை நன்றாகக் கவனித்துப் பாருங்கள் அம்மா, அவர்களின் நிழலில் நின்றவர்களுக்குக் கூடத் தப்பு செய்ய வராது. அப்படியிருக்க அவர்களின் வயிற்றில்

பிறந்த பிள்ளை வேறு மாதிரி இருக்க முடியுமா? ஊகூம், நீங்கள் கவலையே படக்கூடாது. சந்தோஷமாய்ச் சிரிக்க வேண்டும். ம், சிரியுங்கள் அம்மா" என்று கொஞ்சிப் பேசிப் பெற்றவளைத் தேற்றினாள் மகள்.

விமானத்துக்கு 'ரிப்போர்ட்டிங் டைம்' பனிரண்டே முக்கால் என்பதால் தங்கள் வரவைச் சீக்கிரமாகவே முடித்துக் கொண்டு கிளம்பி விட்டனர் தனஞ்சயன் தம்பதியினர்.

விருந்தினரை விட்டுவிட்டு முன்னே சாப்பிட்ட தற்கு மன்னிப்புக் கோரிவிட்டு, "ஏர்போர்ட்டுக்கு நீங்க ளும் வந்து அலைய வேண்டாம். நாங்கள் என்ன வெளிநாடா போகிறோம்? நீங்கள் நிதானமாய் இருந்து சாப்பிட்டுவிட்டு இளைப்பாறி விட்டுப் போங்கள். நாங்கள் வரட்டுமா?" என்று பிரியமும் மரியாதையுமா கப் பேசிய மருமகனை மிகவும் பிடித்துப் போயிற்று சுதர்சனத்துக்கு. தன் மகள் கொடுத்து வைத்தவள் என்கிற நிம்மதியோடு இருவரையும் வழியனுப்பி வைத்தார்.

முதல் தடவையாக வானில் பறப்பது உள்ளூர ஒரு பரபரப்பை ஊட்டியது அபிராமிக்கு. சன்னல்பக்க சீட்டில் அமர்ந்து சென்னை மாநகரம் மறைவதை வியப் புடன் வேடிக்கை பார்த்தவளுக்கு, என்னவோ வீட்டில் சோபாவில் அமர்ந்து பத்திரிக்கை படிப்பது போல கையிலிருந்த வாரப் பத்திரிக்கையைப் புரட்டிக் கொண் டிருந்த கணவனைப் பார்க்கையில் ஆச்சரியமாக இருந் தது.

முன்தினம் காலை ஒன்பது மணிவரை அவன் யாரோ அவள் யாரோ. இன்று அவளது சுகம், பாது காப்பு எல்லாம் அவன் பொறுப்பென்று நம்பி, அவனோடு தனியே கிளம்பி வந்து விட்டாளே! அவ னோடுகூட வருவதற்கு ஒரு சிறு தயக்கம் கூடத் தோன்றா ததை எண்ணி உள்ளூர வியந்தபடி ஓரக் கண்ணால் கணவனைக் கவனித்தாள்.

வசதியான வாழ்வின் செழுமையை ஒதுக்கிப் பார்த்தாலும் வலிவும் வனப்புமான அவனது தோற்றம் அவளுக்குப் பெருமிதம் ஊட்டியது. இந்தத் தனஞ்சயன் இப்போது அவளுடைய கணவன்!

பார்த்துக் கொண்டே இருந்தவளுக்கு இன்னொன்று புரிந்தது. இயல்பாக இருப்பதுபோலக் காட்டிக் கொண்டாலும், அவனுக்குள்ளும் ஒரு பரபரப்பு இருக்கத் தான் செய்தது. பார்வை பத்திரிக்கையில் இருந்தபோதும் அவன் அதில் ஒரு வார்த்தையைக் கூடப் படிக்கவில்லை. ஓரளவு இடைவெளி விட்டு, பக்கங்களைப் புரட்டிய விரல்கள் அவ்வப்போது இரண்டு தாள்களைப் புரட்டிவிடுவதை அவன் கவனிக்கவே இல்லை.

ஒரு விஷமத்தனம் தலைதூக்க, அவன் காதருகில் நெருங்கி, "புத்தகம் தலைகீழாக இருக்கிறது" என்றாள் அபிராமி.

திடுக்குற்று, புத்தகத்தைத் திருப்பி நேராக்கத் தொடங்கியவன், உண்மை புரிந்து, புத்தகத்தைப் பழைய படி வைத்துக் கொண்டு 'என்னது இது' என்பது போலப் பார்த்தான்.

அவள் எதிர் பார்த்தது போல, அவளது விளையாட்டைத் தனஞ்சயன் ரசிக்கவில்லை என்பதோடு, அவனது பார்வையில் சினம் இருப்பதையும் காணவும் அவளுக்கு உள்ளூர மனம் பதறிவிட்டது. "இ..இல்லை... அதில் ஒரு வார்த்தை கூடப் படித்தாற் போலத் தெரியவில்லை.... அதனால்தான்..." என்று சிறு பயத்துடன் இழுத்தாள்.

இமை இடுங்க அவளை நோக்கியவன் சட்டெனச் சிரித்தான். "கண்டு பிடித்து விட்டாயே! பரவாயில்லை. நீ கெட்டிக்காரிதான்..." என்றான். ஒரு கணம் பொறுத்து "நீ எப்போதும் கெட்டிக்காரிதான். அப்படித்தானே?" என்று மீண்டும் அவனே கேட்டான்.

அவன் பேச்சை வார்த்தை அளவில் எடுத்து, "ம். ஓரளவு அப்படித்தான். எப்போதுமே ஸ்கூலில் முதல் ஐந்து ராங்க்குக்குள்தான் இருப்பேன். காலேஜிலும் தங்க

மெடல் கிடைத்ததா, அம்மா அப்பாவுக்கு ஒரே பெருமை ....." என்று சிரித்தாள் மனைவி.

"ம் . . . . வேறு ஒன்றும் . . . அதுதான் இந்த இந்தப் பாட்டு, டான்ஸ், நீச்சல், கராத்தே . . . மல்யுத்தம் . ."

"மல்யுத்தமா!" என்று மேலும் நகைத்துவிட்டு, "பாட்டு கொஞ்சம் தெரியும். சாஸ்திரப்படி தெரியாது. ஆனால் கேட்பதைப் பாடிவிடுவேன். . அப்புறம், நாட்டியம் ஒரு நாட்டியப் பள்ளியில் பத்து பேரோடு படித்தேன். நீச்சல் உடை எல்லாம் வெளியே அணிந்தேன் என்றால் எங்கள் அம்மா மயக்கம் போட்டு விழுந்து விடுவார்கள். கராத்தே கற்றுக் கொள்ள ஆசைதான். ஆனால் அம்மாவுக்கு இஷ்டமில்லை. ஆண்பிள்ளைத்தனமாகத் தெரிகிறதாம். ஸ்கூலில் 'டெமான்ஸ்ட்ரேஷனு'க்காக ஒருதரம் வந்தவர்கள் சும்மா நாலு கிளாஸ் எடுத்தார்கள். அதில் சிலது படித்தேன் அவ்வளவுதான் . . ." என்று முடித்தாள் அபி.

"நாலே வகுப்புதானா? சே, ஏமாற்றிவிட்டாயே. குறைந்தபட்சம் பிரவுன் பெல்ட்டாவது வாங்கியிருப்பாய் என்று நினைத்தேன் . . . . அது தான் . . படிப்பில் கோல்டு மெடல் வாங்கவில்லையா? அது போல இதிலும் முன்னணியில் இருந்திருப்பாயோ என்று நினைத்தேன். . நல்ல வேளை, பிழைத்தேன்" என்று தோளைக் குலுக்கினான் தனஞ்சயன்.

"ஏன்? ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?"

"ஏதாவது நான் சொல்வது பிடிக்காமல் போய், நாலு சாத்து என்னைச் சாத்திவிட்டாயானால் அப்புறம் நான் புத்தூருக்கல்லவா காவடி எடுக்க வேண்டியிருக்கும்!" என்று பயந்த பாவனையுடன் அவன் கூற அபிராமிக்கு மேலும் சிரிப்பு பொங்கியது.

பங்களூரைத் தொட்டுப் பார்த்து விட்டு விமானம் கோவையை அடைந்தது.

இறங்கி வெளியே வந்தால் அங்கே அவர்களுக் காக ஒரு கார் தயாராக இருந்தது.

ஆச்சரியமாய்ப் பார்த்தவளிடம், "இங்கே எங்கள் எஸ்.என். இன்டஸ்ட்ரீசுக்கு ஒரு கிளை இருக்கிறது. இங்கே என் நண்பன் ஒருவன் மூலம் தகவல் அனுப்பி காருக்கு ஏற்பாடு செய்திருந்தேன். ஏறிக் கொள்" என்று மனைவியிடம் பணித்து விட்டு, சாவியை தந்தவனிடம் திரும்பி, "நான் சொன்னது தயாராக இருக்கிறதா?" என்று வினவினான்.

"ஆமாங்கோ. க்ளவ் கம்பார்ட்மென்டிலே வைத்தி ருக்கிறேனு ங்கோ. ரகு சார் சொன்னாப்போலே தயாரா . ." என்று சொல்லிக் கொண்டே போனவனை இடை மறி ந்து, " ஒகே நீ போகலாம்" என்று கூறிக் காரில் ஏறி னான் தனஞ்சயன்.

"வேறே என்னமாச்சும் தேவைப்படுமான்னு மேனேஜரய்யா கேட்கச் சொன்னாங்கோய்யா . . . ஊட் டியிலே . ." என்று தொடங்கிய பணியாளை மீண்டும் இடைமறித்து, "ஒன் . . றும் தேவையில்லை இ[illegible] மாதிரியே அங்கேயும் யாரும் என்னைத் தொல்லை செய்யக் கூடாது. அவ்வளவுதான்" என்று பொறுமையி ழந்த குரலில் கூறிக் காரை எடுத்தான்.

கார் சீறிக் கொண்டு கிளம்பவும் அவசரமாகப் பின்னே எட்டு எடுத்து வைத்த பணியாளைப் பார்க்கை யில் அபிராமிக்குப் பாவமாக இருந்தது. ஆனால் அறி முகமற்ற புதியவனான கணவனுக்குத் திடீரென்று என்ன கோபம் என்று தெரியாமல் பேசவும் பயமாயி ருக்கவே மவுனமாக இருந்துவிட்டாள்.

தூரத்துக் குன்றுகளின் வரிவடிவம் மெல்ல நெருங்கி மலையாகி, வளைந்து நெளிந்து சென்ற மலைப்பாதையில் கார் ஏறத் தொடங்கவும் சூழ இருந்த இயற்கை எழில் அவளது நெஞ்சைக் கவர்ந்தது.

நகையையும வியபபுமாக அவளது வார்த்தைகளுக்கு அந்த ரிதர்ஸிரெர்லியும் அவனிடம் இல்லாது போகவே ராமின் பேச்சும் நின்று போனது.

பாதையிலேயே பார்வையைப் பதித்திருந்த அவனது இறுகிய முகத்தை ஓரக்கண்ணால் பார்த்தவள், மலைப்பாதை என்பதால் மிகவும் கவனமாக ஒட்டுகிறான் போல; இடைஞ்சல் செய்யக்கூடாது என்று எண்ணி, தன்மட்டிலும் சுற்றுமுற்றும் பார்த்து ரசிக்கலானாள்.

ஆனால் விரைவிலேயே அது அலுத்துப் போய்விட, ஏதேனும் புத்தகம் இருந்தால் படிக்கலாம் என்று எண்ணி க்ளவ் கம்பார்ட்மென்டைத் திறந்து பாத்தவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"அய்யோ!" என்று அவள் மூச்சிழுக்கவும், பிரேக் போட்டுக் காரை நிறுத்தியவன், கைநீட்டி க்ளவ் கம்பார்ட்மென்டை அறைந்து மூடினான்.

அவளது முகத்தில் இருந்த மிரட்சி அவனுக்கு வேடிக்கையாக இருந்ததோ, "என்ன, பயந்து விட்டாயா?" என்று கேலியாக வினவினான்.

இவ்வளவு நேரம் இருந்த இறுக்கம் மாறி அவன் இளகியது நிம்மதியூட்ட, "துப்பாக்கி எல்லாம் தேனிலவுக்கு எதற்கு?" என்று மென்குரலில் கேட்டாள்.

"உன்னை மிரட்டத்தான்" என்றான் தனஞ்சயன் தயக்கமின்றி. "நீ ஏதாவது முரண்டு பிடித்தால் என்ன செய்வது? ஏதோ, கொஞ்சம் தான் என்றாலும் காரத்தே வேறு கற்று வைத்திருக்கிறாயே! அதற்காகத்தான் எதற்கும் இருக்கட்டும் என்று தயாராக வைத்திருக்கிறேன். விமானத்தில் கொண்டுவரமுடியாது என்பதால் இங்கே ரெடி பண்ணச் சொன்னேன். இந்தத் துப்பாக்கி பயத்தில் சொல்வதைக் கேட்பாயில்லையா?" என்று வெகு இலகுவான குரலில் அவன் பேசவும் அவளுக்குச் சிரிப்பு வந்தது. என்னமாய் கேலி பேசுகிறான்!

அவனிடம் அவள் எதற்காக முரண்டப் போகிறா ளாம்?

கன்னங்களில் செம்மையும், செவ்விதழ்களில் மென் சிரிப்புமாக, "துப்பாக்கி இல்லாமலேயே நீங்கள் சொல்வதைக் கேட்பேன்" என்று மென் குரலில் இயம்பி, அவன் தோளில் சந்தோஷமாகச் சாய்ந்து கொண்டாள் அபிராமி.

ஒரு சின்ன சந்தேகம் கூட இல்லாமல்.

# 3

காரைத் தனஞ்சயன் சற்று மெள்ளவே நிதானமாகவே ஓட்டுவதுபோல அபிராமிக்குத் தோன்றியது.

இருள் கவிந்துவரும் வேளையில் வேகமாக ஓட்டப் போய் ஒன்றுகிடக்க ஒன்று ஆகிவிடக் கூடாது என்கிற கவனத்துடன் ஓட்டுகிறான் போலும். பரவாயில்லை, இவன் வாழ்விலும் எதையும் அவசரப்பட்டு அரைகுறை யாய்ச் செய்துவிடாமல் கவனத்துடன் செயல்பட்டு வெற்றி பெறுவான் என்று அகமகிழ்ந்தாள் அவள்.

ஏதேனும் பேசி அவனது கவனத்தைக் கலைக்கக் கூடாது என்று எண்ணி வெளியே வேடிக்கை பார்க்கத் திரும்பியவளுக்கு உள்ளூரக் குளிர் பிறந்தது.

மாலை வெளிச்சத்தில் பச்சை வண்ண ஆடை உடுத்தினாற் போலப் பசுமையாயிருந்த செடி கொடி மரங்களும், பல நிறங்களில் பூத்திருந்த மலர்களும், இடையே வெள்ளிக் கம்பிகள் போலக் கசிந்த நீருமாய் அழகுகாட்டிய மலைத் தொடர்கள் கவிந்துவந்த இருளில் மறைந்து, வெறும் இருட்டு வரிவடிவமாய் உயர்ந்து விழுங்குவது போல மிரட்டின.

அச்சத்துடன் கணவனை ஒண்டி அமரவும், அவன் நகைத்தான். "கராத்தே வீராங்கனை இவ்வளவுதானா?

பரவாயில்லை. எனக்கு வேலை சுலபம்" என்றான் கேலியாக.

இந்தக் கேலியை ரசிக்க முடியாமல் குளிரும் இருளும் அவளை நடுக்கின. கடைசியாக ஊட்டியின் வெளிச்சம் தெரிந்த பிறகுதான் அவளுக்கு ஒருவாறு நிம்மதி உண்டாயிற்று.

நேரே வீட்டுக்குப் போகாமல் ஓர் ஓட்டலின் முன்னே காரை நிறுத்தினான் தனஞ்சயன்.

உள்ளே சென்று அமர்ந்ததும், "இங்கே சாப்பிட்டு விட்டுப் போகலாம். வீட்டில் வேலையாட்களுக்கு லீவு கொடுத்து விட்டதால் அங்கே சாப்பிட ஒன்றுமிராது" என்று ஏதோ ஆர்டர் செய்தான் அவன்.

சுவைபடத் தயாரித்திருந்த போதும் அபிராமிக்கு உள்ளே எதுவும் இறங்கவில்லை. என்னவோ மனதில் மீண்டும் உறுத்தத் தொடங்கியது.

'அங்கே சமையலுக்கும், வீட்டு வேலைக்கும், காவலுக்கும் என்று மூன்றுபேர் இருக்கிறார்கள் அபிராமி. எல்லோரும் நம்மிடம் நிறைய ஆண்டுகளாக இருப்பவர்கள். அதனால் உனக்கு ஒரு சிரமமும் இராது' என்று புவனேசுவரி கூறியிருக்க இவன் அந்த வேலையாட்களுக்கு லீவு கொடுத்து அனுப்பிவிட்டதாக ஏன் சொல்லுகிறான்? இந்தச் சமயத்தில் தான் அவாகளுக்கு லீவு கொடுக்க வேண்டுமா? ஒருவாரமோ, பத்து நாட்களோ இந்தத் தேனிலவு காலம் முடிந்த பிறகு அனுப்பக் கூடாதா?

ஆனால் இதுபற்றித் தனஞ்சயனிடம் எதுவும் கேட்கவும் அவளுக்கு மனம் வரவில்லை. 'என்னம்மா, பெரிய ராஜபரம்பரை, வீட்டுவேலை செய்ய முடியாதா? என்று கேட்டு விட்டால்.' ஒரு வேளை கேட்டுவிட்டால் மனதுக்குக் கஷ்டமாகி விடாதா? அப்புறம் அவன் முகத்தைப் பார்த்து இப்போது போலப் பேச முடியுமா, என்ன? அதைவிட வீட்டு வேலைகள் முழுவதையும் தன்னந்தனியாகவே செய்வது மேல்.

ஆனால் அப்படி ஒரு நிலையை இவன் ஏன் உண் டாக்க வேண்டும்? இதுதான் அவளைக் குடைந்தது.

வாய்விட்டுக் கேளாவிடினும், கேள்வியை விழிக ளில் தேக்கிக் கணவனை நோக்கினாள் அபிராமி. ஆனால் அவன் அந்தப் பார்வையைச் சந்தித்தால் அல்லவா?

ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த அவனது பார்வை அவன் கையிலிருந்த சிகரட்டின் முனையில் இருந்து கனன்ற தீக்கங்கின் மேல் இருந்தது.

". . . . ஒரு கெட்ட பழக்கம் கிடையாதும்மா. இந்தக் காலத்தில் நம் தரத்துப் பிள்ளைகள் கூட சர்வசாதாரண மாக "பீர்" அடிக்கிறதைப் பார்த்தால் மாப்பிள்ளை ஓர் அபூர்வ ரத்தினமாக்கும். நண்பர்கள் எல்லாரும் சேர்ந் தால் அதிசயமாய், அத்திபூத்ததுபோல ஒரு சிகரெட். மற் றபடி ஒரு சின்னதப்பு தண்டா கிடையாது ..."

தந்தை பெருமையடித்தது நினைவு வர, இங்கே எந்த நண்பர்கள் இருக்கிறார்களாம் என்று தன்னையே கேட்டுக் கொண்டாள் அபிராமி. ஒரு வேளை அவளையே சினேகிதியாக எண்ணிவிட்டானோ கணவன்? தாயாய், தாதியாய் இருப்பதோடு சினேகிதி யாக இருப்பதும் மனைவியின் பொறுப்புகளில் ஒன்று தானே. ஆக, பிடிப்பது சிகரெட் என்றாலும் நல்ல பாதையில் தானே அடியெடுத்து வைக்கிறான் என்று சந் தோஷமாக எண்ணமிட்டாள்.

ஒருவாறு உணவு முடிந்து கிளம்பிச் சென்று வீட்டை அடைந்தபோது மணி எட்டரை தாண்டி விட்டது. மிகவும் குளிரவும் தொடங்கி விட்டது. புவனே சுவரியின் அறிவுரைப்படி கையோடு கொணர்ந்து அணிந்து கொண்டிருந்த ஸ்வெட்டரால் கூடக் குளிரைக் குறைக்க முடியவில்லை.

போர்டிகோவில் காரை நிறுத்தி, துப்பாக்கியை மட்டும் எடுத்து அவன் அணிந்திருந்த ஸ்வெட்டருக்குள் செருகிக் கொண்ட தனஞ்சயன், "மற்றதை நாளை . . .

துக் கொள்ளலாம் " என்று அவளைக் கைப்பிடியாக உள்ளே அழைத்துச் சென்றான்.

உள்ளே சென்றதும் அதே சாவி கொண்டு கதவை உட்புறமாகப் பூட்டிவிட்டு, "மாடிக்கு" என்று சுருக்கமாகக் கூறி, அவளது கையை மீண்டும் பற்றி அழைத்துச் சென்றான்.

ஆங்காங்கே ஓரிரு சிறு விளக்குகள் தவிர கிட்டத் தட்ட இருளில் மூழ்கியிருந்த வீட்டில், பழக்கத்தின் காரணமாக அவன் வேகமாக முன் செல்ல, தடுமாறியபடியே பின் தொடர்ந்தாள் அபிராமி. அசதி, வேண்டாம் என்று முன் தினம் விட்டுக் கொடுத்தவனுக்கு இன்றைக்கு இவ்வளவு அவசரமா என்று வெட்கம் வேறு அவளது கால்களை பின்ன வைத்தது.

பழைய காலத்தில் யாரோ வெள்ளைக்காரன் கட்டிய வீடு போலும், கீழே இருந்த பெரியஹால் அப்போது பால் ரூமாகப் பயன்பட்டிருக்கலாம். ஹாலைச் சுற்றிலுமாக மேல் தளத்தில் ஓடிய வராந்தவோடு மாடிப்படி முடிந்தது. வராந்தாப் பக்கமாகத் தெரிந்த ஒவ்வொரு கதவுகளும் ஒவ்வொர் அறைகள் என்பது தெரிந்தது.

பலகதவுகளைக் கடந்து ஓரளவு வீட்டின் பின்புறமாக அமைந்திருந்த ஒரு கதவைத் தள்ளித் திறந்தான் தனஞ்சயன்.

சற்றும் எதிர்பாராத விதமாக ஜெகஜ்ஜோதியாக உள்ளிருந்து பரவிய வெளிச்சத்தில் முதலில் அபிராமியின் கண்கள் கூசிப் போயின.

கூசிய கண்களை இருதரம் இருக மூடித் திறந்து, ஒருவாறு வெளிச்சத்துக்குப் பழக்கப்பட்டபின் அவளது கண்களில் பட்ட காட்சியும் அவள் எதிர்பாராததாகத் தான் இருந்தது.

அந்த அறையை சுற்றிலும் குழல்விளக்குகளோடு, நடுவில் சரவிளக்குகள் வேறு ஒளியை உமிழ்ந்தது.

அந்தச் சரவிளக்கின் அடியில் ஒருவட்ட மேசையின் மீது ஒரு பெரிய பாட்டில் சில படங்களில் பார்த்திருந்த தால் அது ஏதோ வெளிநாட்டு விஸ்கி என்பதை அபிரா மியால் புரிந்து கொள்ள முடிந்தது. பாட்டிலின் அருகே அழகிய கண்ணாடி தம்பளர்கள் ஐந்து இருந்தன.

யாருக்கு இந்த மது என்று அவளுள் இருந்த கேள் விக்குப் பதில் தருவது போல அறையின் இருபுறத்திலி ருந்துமாக நாலு இளைஞர்கள் – ரொம்பப் புதியவர்கள் என்று சொல்ல முடியாது திருமண வரவேற்பின்போது பார்த்த முகங்கள்தான் வந்தார்கள்.

இவர்கள் தனஞ்சயனுடைய நண்பர்களாக இருக்கலாம். ஆனால் அவனது படுக்கை அறைக்குள் இவர்களுக்கு என்ன வேலை?

"ஹலோ தனா" என்று அவர்கள் நால்வரும் முறுவ லிக்க பதிலுக்குப் புன்னகை செய்து, "சொன்னது போலவே ஏற்பாடு செய்து விட்டீர்களே, வெரிகுட்" என்று தனஞ்சயன் கூறவும் இதுமுன்னேற்பாடாகச் செய்தது என்பது அபிராமிக்குப் புரிந்தது.

திகைப்புடன் கணவனை நோக்கி, "எ . . என்ன இது.." என்று குரல் நடுங்கக் கேட்டவளுக்கு நெஞ்சுபடப டத்தது.

"என்னவா?" என்று உரக்க நகைத்து, ஏற்கனவே படபடத்த நெஞ்சுக்குள் பந்தயக் குதிரையையே ஓட வைத்தான் அவளுடைய கணவன்.

அவளை மீண்டும் கரம் பற்றி உள்ளே இழுத்துக் கொணர்ந்து நிறுத்தியவன், காலால் கதவைத் தள்ளிச் சாத்தினான்.

திடுமென அவனிடம் தென்பட்ட முரட்டுத் தனத் தில் மேலும் திடுக்குற்று நின்றவளிடம் தன் சிரிப்பை நிறுத்திவிட்டுச் சொன்னான். "என் பெயர் தனஞ்சயன். தெரியுமில்லையா? அர்சுனனின் மற்றொரு பெயர். மகா பாரதக் கதை படித்திருக்கிறாயா? அதில் சுயம்வரப் போட்டியில் வென்று பாஞ்சாலியைக் கொணர்ந்த

அர்ச்சுனன் என்ன செய்தான்? அவளைத் தன்னுடைய மற்ற நான்கு சகோதரர்களுடன் பங்கிட்டுக் கொண்டான். அப்படித் தானே? இதோ பார், இந்த நாலு பேரும் எனக்கும் சகோதரர்கள் மாதிரிதான். சகோதரர் களைவிட உயர்ந்தவர்கள். அந்த அர்ச்சுனன் செய்ததுபோலவே நானும் என் உடன்பிறவாச் சகோத ரர்களாகிய இவர்களோடு உன்னைப் பகிர்ந்து கொள்ளப் போகிறேன். ஹா ஹா . . ஹா . . . " என்று விழிகள் பளபளக்க, அழுத்தமான குரலில் தெளிவாக உரைத்து உரக்கச் சிரித்தான்.

மின்னாமல் முழங்காமல் தலையில் வீழ்ந்த இடி தந்த அதிர்ச்சியில் கண்ணிமைக்கவும் மறந்து விழித்த கண் விழித்தபடி விக்கித்து நின்றாள் அபிராமி.

# 4

கண்முன்னே யாரோ சொடக்குப் போடவும் தன்னுணர்வு திரும்பினாற்போல அபிராமியின் புலன்கள் ஒருவாறு செயல்பெற்றன.

சொடக்கு போட்டது வேறுயாரோ இல்லை; கணவன் தான் என்பதை முதலில் உணர்த்திய விழிக ளால் நிமிர்ந்து அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள்.

"அப்பாடி!" என்று பெரிதாகத் தோளைக் குலுக்கி னான் தனஞ்சயன். "உயிருடன்தான் இருக்கிறாயா? இமைகூடத் தட்டவில்லை என்றதும், திடீர் ஷாக்கில் நான் பழி வாங்கி முடிக்குமுன்பே பரலோகம் போய் விட்டாயோ என்று ஒரேயடியாகப் பயந்து போனேன். நல்லவேளை!" என்றான் எகத்தாளமாக.

அபிராமி முட்டாள் அல்ல.

வாழ்நாள் முழுவதும் துணையாக இருந்து காப்பாற் றப் போகிறவன் அன்று எண்ணி உற்றார் உறவினரை விட்டுப் பிரிந்து தன்னந்தனியாக யாரை நம்பி

வந்தாளோ, அந்தக் கணவன் சற்றுமுன் வெடித்த அணு குண்டு உண்மைதான் என்று நன்றாகவே உணர்ந்து கொண்டாள்.

ஆனால் வாழ்வின் கடைசி வினாடி வரை நிலைத்திருக்கும் நம்பிக்கை அப்போதும் உந்த, அவனது எகத்தாளத்தைக் கேலியாக எடுத்து, "வ . . வந்து இது. இதெல்லாம் சும்மா வி . . விளையாட்டுதான் . ." என்று புன்னகை புரிய வெகுவாக முயன்று தோற்றவாறு கேட்டாள்.

தலையசைத்து உதட்டைப் பிதுக்கி மறுத்தான் நனஞ்சயன் "இல்லை. நான் கூறியது எதுவும் விளையாட்டில்லை" என்று தெளிவாகக் கூறினான். நான் சொன்னது அவ்வளவும் நூற்றுக்கு நூறு உண்மை. இதில் நீயாக நான் சொல்வது போல நடந்து கொண்டாயென்றால் . . உனக்கு எவ்வளவோ கஷ்டம் குறைவு. முரண்டு பிடித்தாய் என்றால் என்று ஸ்வெட்டருக்குள் கையை விட்டுத் துப்பாக்கியை எடுத்துக் காட்டி மேலும் சொன்னான், "கைகால் ஒவ்வொன்றும் சிதறிவிடும். சிதறினாலும் விட்டுவிடுவேன் என்று நினைக்காதே. நான் முதலில் சொன்னது நடந்தே தீரும்" என்று இரும்புக் குரலில் கூறி முடித்தான்.

இது . . இந்தக் குரல் பொய்யோ வேடமோ அல்ல. முரண்டினால் மிரட்ட என்றானே, என்ன மாதிரி இனிய கற்பனையில் ஏமாந்து போனாள்! அவன் மெய்யாகவே அவளை மிரட்டத்தான் துப்பாக்கியைக் கொணர்ந்திருக்கிறான்.

நட்பு, சுற்றம், அறிந்தவர், தெரிந்தவர் அத்தனை பேரிடமும் இருந்து அவளைப் பிரித்து தனிமைப்படுத்தி அழைத்து வந்து என்ன கொடுமை செய்ய நினைக்கிறான்!

ஆனால் இது எப்படி முடியும்? தொட்டுத் தாலி கட்டிய மனைவி! இன்னொருவன் ஏறிட்டுப் பார்த்தால் அவனைச் சுட்டுப் பொசுக்கக் கடமைப்பட்டவன். அவனே வில்லனாவது என்றால் அது வெறும் திமிர்

பிடித்தவனின் விளையாட்டாக மட்டும் இருக்க முடியாது. ஏதோ, ஏதோ ஒரு பெரிய காரணம் இருக்க வேண்டும். அது தெரிந்தால் ஒருவேளை ...

"ஏன்? ஏன் இப்படி?" என்று அவசரமாகக் கேட்டாள்.

"ஏன் என்றால்? பின்னே என் வார்த்தைக்குப் பணியா விட்டால் உன்னைச் சும்மா விட்டுவிடுவேன் என்றா நினைத்தாய்? முதலில் உன் இருகைகளையும் சிதறடித்து விட்டு ..."

"இல்லை. அதல்ல என்னை இப்படி, இந்தமாதிரி அவமானப்படுத்த முயற்சிக்கிறீர்களே, அது ஏன் என்று கேட்டேன்."

"ஆ! இது அர்த்தமுள்ள கேள்வி!" என்று சிலாகித்த வண்ணம் துப்பாக்கியை மீண்டும் ஸ்வெட்டருக்குள் திணித்தான் தனஞ்சயன்.

நிதானமாக இரு கைகளிலும் அணிந்திருந்த கையுறைகளை உருவி எடுத்து அருகில் கிடந்த சோபாவில் வீசினான். இருகைகளையும் அவள் கண்ணெதிரே நீட்டி விரல்களை நன்றாக விரித்து முன்னும் பின்னு் காட்டினான்.

கை முழுமையாகத் தோன்றிய போதும், அங்கங்கே மெல்லிய கோடுகளாகத் தடிப்பும், நிறம் வெளிறிய திட்டுகளும் தெரிந்தன. உடம்பின் மற்றபகுதியில் இருந்து எடுத்து, கையில் ஒட்ட வைத்துத் தைத்த இடங்களாக இருக்க வேண்டும். இன்னமும் இயல்பான தோலின் நிறம் வரவில்லை. ஆனால் இதற்கும்...

"கையில் ஒரு சிறுகறை, அழுக்குபட்டால் எனக்குப் பிடிக்காது. இப்போது... ஒரு வருஷம், முழுமையாக ஓர் ஆண்டு முடிந்து விட்டது. இன்னமும் என் கையைப் பழைய மாதிரிப் பயன்படுத்த முடியவில்லை. முதலில் எப்படி என்கிறாய்? முதல் ஆறுமாதங்களுக்கு இந்த நண்பர்கள்தான் இந்தக் கைகளாக இருந்தார்கள். இருபத்தி

நாலுமணிநேரமும். விளைவு தெரியுமா? இருவருக்கு வேலை போயிற்று. ரகுராமனுக்குப் பிரமோஷன் போயிற்று, சுதிருக்குச் சம்பளம் கட்டாயிற்று. இதற்கெல் லாம் காரணமான உனக்கு ஒரு தண்டனை வேண்டாமா? இவர்களுக்கு – இவர்கள் பட்டபாட்டுக்கு ஒரு விருந்து வேண்டாமா? அதற்காகத்தான்" என்று முடித்த போது உள்ளிருந்த வேகத்தின் அறிகுறியாக அவனுக்கு மூச்சிரைத்தது.

ஆனால் இவனது கைகள் இப்படி ஆனதற்கும் அவ ளுக்கும் என்ன சம்மந்தம்? எங்கோ விபத்தில் நண்ப னைக் காப்பாற்றப் போய்த்தானே...

"விபத்தாவது மண்ணாங்கட்டியாவது? எல்லாம் மற்றவர்களுக்காகக் கட்டிவிட்ட கதை. உண்மை அறிந்து நீயோ, உன்னைச் சார்ந்தவர்களோ உஷாராகி விடக் கூடாது என்பதற்காக இட்டுக்கட்டிய கதை."

"இன்னமும் இதற்கும் எனக்கும் என்ன தொடர்பு என்றே எனக்குப் புரியவில்லையே?"

"புரியவைக்கிறேன் பெண்ணே, நன்றாகப் புரிய வைக்கிறேன். ஒரு பிறவியில் செய்த பிழைக்கு ஏனென்று புரியாமலே இன்னொரு பிறவியில் தண்ட னையை அனுபவிக்க வைக்கிற கடவுள் அல்ல நான். உன் குற்றத்தை விளக்கமாகச் சொல்லிவிட்டுத்தான் உனக்கு தண்டனை தரப் போகிறேன். இப்படி ஒரு பிழையைச் செய்யாமல் இருந்தேனில்லையே என்று எண்ணி எண்ணி மறுகி நீ வாழ்நாள் முழுவதும் துடிக்க வேண்டாமா? கட்டாயம் சொல்கிறேன் என்ற போது தனஞ்சயனின் குரலில் இருந்த வஞ்சினம் அவளை இன் னமும் பதறச் செய்தது.

இந்த அளவு பழி வெறி வரும் அளவுக்கு அவள் என்ன செய்திருக்கக்கூடும்? என்ன யோசித்தும் இந்த இருபத்தி ஓர் ஆண்டு வாழ்க்கையில் பெரும் பிழை யென்று யாருக்கும் – ஏன் குற்றமென்று கூறி இகழ்ந்து

ஒதுக்கத் தகுந்த எதையும் செய்ததாக அவளுக்கு நினைவே வரவில்லை.

அவன் நினைவு படுத்தினான்.

மீண்டும் கைகளை அவள் முன்னே நீட்டி, இந்தக் கைகளை மீண்டும் ஒரு தரம் நன்றாகப்பார். இதில் இந்தத் தழும்பு, ஒட்டு எதுவும் இல்லாமல், மாசுமறுவற்று, சீராக வெட்டிய நகங்களுடன், நக இடுக்குகளில் கூட ஒரு சிறு அழுக்கு இல்லாமல் சுத்தமாகக் கற்பனை செய்துபார். அந்தக் கைகளேனும் நினைவு வருகிறதா?" என்று கேட்டான்.

இருந்த பதட்டத்திலும் பயத்திலும் கற்பனை செய்வது கடினமாக இருந்தது அவளுக்கு. ஆயினும் வெகுவாக முயன்று பார்த்து விட்டு, இல்லையேன்று அவள் கூறவும் அவனது விழிகளில் கோபச் சிவப்பு ஏறியது.

"உனக்கு ஏண்டி நினைவு வரப்போகிறது. அவ்வ ளவு அலட்சியம்! வினாடிக்குள் அழிப்பதில்தானே நீ குறியாய் இருந்தாய்! அத்தனைக்கும் படப்போகிறாய் பார்" என்று மிரட்டினான் அவன். "அது நினைவு வர வில்லை என்றால், இவர்களையாவது ஞாபகம் வருகி றதா? ஒரு சின்ன உதவிக் குறிப்பு தரட்டுமா? இதோ இவன் பெயர் ரம், இவன் விஸ்கி, அடுத்தவன் பீர், அவன் சாராயம்."

இந்தப் பெயர்கள். . . இவை நினைவு வந்திருக்க வேண்டியவைகளே. குறைந்த பட்சம் சாராயம் என்கிற அதிகப்படி வினோதமான பெயர் மட்டுமேனும். அவ ளுக்குச் சென்னையிலேயே நினைவு வந்திருக்க வேண்டும். ஏன், ஏன் வரவில்லை? புவனேசுவரி அது பற்றிப் பேசியதும் ஏதோ பொறி தட்டினாற்போல யோசிக்கக் கூடச் செய்தாளே, அப்போது ஏன். . . . கடவுளே, அப்போதே ஏன் அவளது மனது அதைக் கண்டு கொள்ளவில்லை?

ஏன். . கண்டு கொள்ளவில்லை என்பது நினைவு வரவும் அபிராமி மிகவும் சோர்ந்து போனாள். அவன்– அவளுடைய கணவன் அந்த வழியில் அவளை யோசிக்க விடாமல் சரசமாகப் பேசி அவளைத் திசை திருப்பிவிட்டான். அந்த சரசத்தை உண்மை என்று எண்ணி மகிழ்ந்ததை நினைக்கையில் இப்போது நெஞ்சு துடித்தது அவளுக்கு.

தொண்டையில் பந்தாய் அடைத்த துயரத்தை விழுங்கி விட முயன்றபடி கஷ்டப்பட்டு மேலும் யோசித்தாள் அபிராமி.

அன்று கூட அவள் தப்பென்று எதையும் செய்யவில்லையே. ரத்த வெறி கொண்ட புலிபோலக் கண்கள் பளபளக்க நிற்கும் அவளுடைய கணவன் அவளது நியாயத்தை ஒப்புக் கொள்ளுவானா?

ஒப்புக் கொள்ள வைத்தே ஆக வேண்டும். மற்றபடி அவன் சொன்னது போல ஏதேனும் நடக்குமாறு நேர்ந்தால் அப்புறம் உயிருடன் இருப்பது முடியாத காரியம். இல்லை, நடக்குமுன்பே உயிர் போய் விட வேண்டும்.

இரண்டு பெரிய மூச்சுக்களை எடுத்து, முடிந்த அளவு தன்னை நிதானப்படுத்திக் கொண்டு "கி. . . கிட்டத்தட்ட ஓர் ஆண்டுக்குமுன் கு. . . குற்றாலத்தில். . ." என்று மெதுவாகத் தொடங்கினாள்.

"கரெக்ட்" என்று தொடையில் தட்டிக் கொண்டான் தனஞ்சயன் உற்சாக வெறியுடன், "ஒரு வழியாய் நினைவு வந்து விட்டதா? ஆனால் மறக்கக்கூடிய விஷயமா? ஓர் ஆண் பிள்ளையை அடித்து வீழ்த்திய பெருமை மறக்குமா என்ன? எத்தனை பேரிடம் பெருமையடித்தாய்? "எனும் போதே குரல் மீண்டும் சீறத் தொடங்கிவிட்டது.

தன்னுடைய அவமானம் இன்னும் எத்தனை பேருக்குப் பறைசாற்றப்பட்டு விட்டதோ என்கிற குன்றலும் அதில் பிறந்த கொதிப்பும் இந்தச் சீறல் என்று புரியவே, "ஒருவரிடமும் இல்லை" என்றாள் அவசரமாக.

"இதை என்னை நம்பச் சொல்கிறாயா? ஹூம்!"

"நிஜமாகத்தான் சொல்லுகிறேன். அதைப் பற்றிப் பிறகு பேசவே வாய்ப்பில்லை. அன்று என்னோடு வந்தவர்களில் மூன்று 'பேர் மலேசியப் பெண்கள். அது கடைசி ஆண்டு. இந்தப் பயணம் முடிந்து மலேசியா சென்றால் இந்தியாவுக்குத் திரும்ப வரவே வாய்ப்பில்லை என்று அவர்கள் கெஞ்சிப் பிடிவாதம் செய்ததால் மேடத்திடம் 'ஷாப்பிங்' போவதாகச் சொல்லிவிட்டு மலைமேல் வந்தோம்.. கூட வந்த இன்னொருத்தி ஆஸ்திரேலியப் பெண். அன்றே சென்னை திரும்பி, மறுநாளே எல்லோரும் அவரவர் திசைக்குப் பிரிந்து விட்டதால் மெய்யாகவே யாரிடமும் சொல்லவே இல்லை. நம்புங்கள்" எப்படியாவது அவனது ஆத்திரத்தைத் தணித்தாக வேண்டிய அவசியமும் அவசரமுமாக அவளுக்கு குரல் நடுங்கித் திக்கியது.

"பாருங்கள், நான் மெய்யாகவே யாரிடமும் இதைப் பற்றிப் பேசவே இல்லை. காட்பிராமிஸ். நான் அதை மறந்தே போய் விட்டேனே. ப்ளிஸ் . . . தயவுசெய்து நீங்களும் அப்படியே மறந்து விடுங்கள் ப்ளிஸ்" என்று மன்றாடினாள்.

ஆனால் அவனது சினம் தணிவதாகவே தெரியவில்லை சொல்லப்போனால் அதிகமாயிற்று என்றுதான் கூற வேண்டும். "ஆகாகா! எவ்வளவு எளிதாகச் சொல்லுகிறாய்க் மறந்து விட வேண்டுமா? மறந்து விட்டால் உனக்கு நன்றாகத்தான் இருக்கும். படித்தவளாயிற்றே. ஆனால் நான் அடிபட்டவனடி இதோ இதற்கு என்னடி சொல்கிறாய்?ங் என்றான் தனஞ்சயன் கொதிப்புடன்.

தர்ம நியாயப்படி அபிராமியின் மீது எந்தக் குற்றமும் இல்லைதான். ஆனால் அடிபட்ட நாகமாய்ப் பழிவெறி கண்களில் மின்னச் சீறி நிற்கும் இவனிடம் எப்படி என்னவென்று விளக்கி அவனது சீற்றத்தைத் தணிப்பது என்று அறியாமல் அபிராமி திகைத்து நின்றாள்.

# 5

கல்லூரியில் கடைசி ஆண்டு மாணவிகள் தேர்வு முடிந்ததும் அந்த ஆண்டு உல்லாசப்பயணமாகக் குற்றாலம் சென்றிருந்தார்கள்.

ஹாஸ்டலில் தங்கிப் படித்த மூன்று மலேசியப் பெண்களில் மாலி அபிராமியின் சினேகிதி. அடுத்தவள் லின். அவளுடைய பெற்றோர் ஆஸ்திரேலியாவில் வசித்தார்கள். மகளை இங்கே படிக்கவைத்தார்கள். பெரும்பாலும் அவளும் அவர்களோடு சேர்ந்து கொள்ளுவாள்.

அது கடைசி ஆண்டு மறுநாள் சென்னை திரும்பி அவரவர் வீடு சென்றால் மீண்டும் சந்திப்பது கூட அபூர்வம் என்கிற நிலை.

கீழேயே இவ்வளவு அழகாக இருக்கும் குற்றாலம் மலையின் அழகை இன்னமும் சற்று உயரே ஏறி ரசிக்க வேண்டும் என்று மாலியும் மற்றவர்களும் மிகவும் ஆசைப்பட்டார்கள்.

முதல் இரண்டு நாட்களில் தென்காசி, ஆரியங்காவு, என்று சுற்றிப் பார்த்தாயிற்று.

தென்காசிவரை சென்று 'ஷாப்பிங்' செய்யவும், அருவியில் குளிக்கவும் ஆசிரியையின் அனுமதி இருந்தது. கடைக்குப் போவதற்குப் பதிலாக மலைக்குப் போகிறோம், அழகான இயற்கை எழிலை மேலே ஏறி ரசிப்பதில் என்ன தப்பு என்று எண்ணி, மற்றவர்கள் ஆசைக்கு இணங்கி உடன் சென்றாள் அபிராமி.

மலையழகும் இளவயதுத் துள்ளலுமாக வெகுதூரம் வரை ஏறிவிட்டார்கள் மூவரும்.

இனி வேகமாக இறங்கி விட்டால் நல்லது; ரயிலுக்குக் கிளம்புகிற பரபரப்பு தொடங்கிவிட்டால் மாட்டிக் கொள்ளநேரும் என்று மடமடவென்று இறங்கத் தொடங்கினார்கள்.

சற்றதூரத்தில் இரண்டாகப் பிரிந்த இரட்டையடிப் பாதையின் மறு கிளையிலிருந்து சில ஹிப்பிகள் வந்து சேர்ந்தார்கள். தாடியும், மீசையுமாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு விசித்திரம்தான். இவர்களிடம் அனாவசிய மாக வைத்துக் கொள்ளக் கூடாது என்று அவர்களை வேகமாக தாண்டிச் செல்ல முயன்றனர் பெண்கள்.

ஆனால் "டேய் விஸ்கி எண்ணிப்பார் ஐந்து பேருக்கு ஐந்து பெண்கள் என்று கரெக்டாக வந்திருக்கி றார்கள். அவரவர் உயரத்துக்குச் சரியாக... ரம், உனக்கு அவள், விஸ்கிக்கு நீலச் சுரிதார், பீர் உனக்கு அந்தப் பச்சைக் கோடு, சாராயத்துக்கு அந்தக் குண்டு. ம். . ஜமா யுங்கடா. எனக்கு.. இ. .வள்.." என்று தனஞ்சயனின் குரல் – லேசாகப் போதை வசப்பட்டிருந்த குரல் ஏவியது.

இப்படி ஒரு நேரடித் தாக்குதலை எதிர்பார்த்திராத பெண்கள் மிரண்டு பின்னடையவும் தனஞ்சயன் கோஷ்டிக்கு உற்சாகம் அதிகமாயிற்று.

"விடாதீர்கள், பசங்களா. ." என்று மற்றவர்களை ஊக்குவித்தபடி ஒரு பெரிய எட்டில் ஓரமாக நின்றிருந்த அபிராமியைப் பற்றி, "ஹாய், பியுட்டி, ஹெ அபௌட் எ கிஸ்?" என்று அவளை முத்தமிட முயன்றான் தனஞ்ச யன்.

அந்த ஆண்டுதான், சொல்லப்போனால் கடைசி 'டெர்ம்' துவக்கத்தில்தான், குற்றங்கள்மலிந்து வரும் இந்தக் காலத்திற்குச் சரியாகப் பெண்கள் தன்னைத் தானே காத்துக் கொள்ளக் கராத்தே கற்க வேண்டும் என்று 'கல்லூரியில் கராத்தே டெமான்ஸ்ட்ரேஷன்' ஒன்று நடத்தியிருந்தார்கள். நாலு இலவச வகுப்புகளும் நடத்தியிருந்தார்கள். ஏன் வள்ளுவர் கூடத் தற்காத்துத் தற்கொண்டாள் பேணி... என்று முதலில் பெண் தன்னைக் காத்துக் கொள்ளவேண்டும் என்று தானே சொல்கிறார் ! அதற்கேற்ப தனியே செல்லும் பெண் ணிடம் அத்து மீறும் ஆண்களைச் சமாளிப்பது பற்றி அந்த வகுப்பில் கற்றது நினைவுவர, மின்னல்

விரைவுடன் தனஞ்சயனின் பிடியிலிருந்து நழுவி விடு பட்டதோடு, அவனையும் தோள்களில் தூக்கித் தரையில் விசிறி அடித்து விட்டாள்.

இதை எதிர்பார்த்திராததோடு, சற்றுமுன் ஒரு குடிசையில் அருந்தியிருந்த 'லோக்கல்' மதுவினால் புலன்கள் நிதானமிழந்திருந்ததும் சேர்ந்து கொள்ள, எதிர்க்கவோ, குறைந்த பட்சம் சமாளிக்கவோ கூடத் தோன்றாமல், பாதை ஓரமாய் பக்கவாட்டில் இருந்த பாறை மேல் மோதி, தொப்பென கீழே விழுந்தான் தனஞ்சயன்.

அதிர்ஷ்டவசமாக – அப்போது அதிர்ஷ்டம் என்று தான் அவளுக்குத் தோன்றியது – ஒரு பெரிய பாறாங்கல்லுக்கு அண்டை கொடுத்தாற்போல இருந்த ஒரு சிறு கல். தனஞ்சயன் மோதிய அதிர்ச்சியில் அசைந்து கொடுக்க, அந்தப் பெரிய கல் உருண்டுவந்து கீழே விழுந்த அதிர்ச்சியில் செயலற்றுக் கிடந்த தனஞ்சயனின் வலது கைமேல் நச்சென்று விழுந்தது.

அதற்குள்ளாகத் தன்கையில் ஒரு பெரிய கல்லைத் தூக்கிவிட்டிருந்த அபிராமி, அவனது மறு கைமேல் செருப்புக் காலைத் தன் பலம் முழுமையும் வைத்து அழுத்திய படி ஊன்றி நின்றாள். "மரியாதையாக எல்லோரும் விலகி நில்லுங்கள். அல்லது இந்தக் கல்லை இவன் தலையில் போட்டு இவன் மண்டையை உடைத்து விடுவேன்" என்று மிரட்டினாள்.

தனஞ்சயனின் அபாயகரமான நிலைமையை உணர்ந்த மற்ற நால்வரும் வினாடியில் விலகினர். "நீ என்ன சொன்னாலும் கேட்கிறோம் தனாவை ஒன்றும் செய்துவிடாதே" என்றனர் அவசரமாக.

கீழேகிடப்பவன் தலைவன் என்பதையும், அவனுக்காக மற்றவர்கள் எதையும் செய்வார்கள் என்பதையும் உணர்ந்த அபிராமி, மற்ற நால்வரையும் வரிசையாக நிற்கச் செய்தாள். தன் தோழியரைக் கொண்டு, காட்டுக் கொடிகளால் அவர்களின் கைகளைக் கட்டச் செய்தாள்.

காலின் கீழே கிடந்தவன் சுய உணர்வோடுதான் இருக்கிறான் என்பதை உணர்ந்திருந்த படியால் அவனிடம் ஒரு கண்ணை வைத்தபடியேதான் மற்றவர் களை ஏவிக் கொண்டிருந்தாள் அபிராமி.

ஆனால் ரத்தம் வரும் அளவுக்குக் கை நசுங்கியிருந்த போதும் அவன் முக்கி முனகாதது அவளுக்கு ஆச்சரி யமாக இருந்தது. ஒரு வேளை உதட்டை அழுத்தி, வலியைச் சகித்தானோ என்னவோ, அவனது தாடி மீசைக்கு இடையே இது வெளியே தெரியவில்லை. வலி யினாலோ அல்லது அவ்வளவு பேர் நடுவில் ஒரு பெண்ணின் காலடியில் கிடந்த அவமானத்தினாலோ இடுங்கிய கண்கள்தளர அவனிடம் அசைவே இல்லை.

ஒரு வேளை அசைந்தால் அவள் கையிலிருந்த கல்லை மெய்யாகவே தலையில் போட்டு விடுவாளோ என்கிற பயத்தினாலும் அவன் சும்மா இருந்திருக்கலாம். என்று எண்ணினாள் அவள்.

ஆனால் தனஞ்சயனின் கைகள் இந்த அளவு காயப் பட்டிருக்கக் கூடும் என்று அவள் நினைக்கவில்லை, கூடவே அவனது காயம் பட்ட மனம் பழிவாங்குவதற் கான திட்டங்களை அப்போதே தீட்டத் தொடங்கிவிட் டது என்பதையும் அவள் அறியவில்லை.

மற்ற நால்வரின் கைகளைக் கட்டிவிட்டாயிற்று என்பதை அறிந்ததும் சற்றுவிலகி நின்று கையிலிருந்த கல்லைத் தூரப் போட்டுவிட்டு கைகளைத் தூசி தட்டி னாள். இகழ்ச்சியுடன் தனஞ்சயனைக்காட்டி, "இது இப்ப டியே கிடந்து விட்டுப் போகட்டும். எனென்றால் இந்த ஆளால் இப்போதைக்கு ஒன்றும் முடியாது" என்று கூறித் தோழிகளை அழைத்துக் கொண்டு கிளம்பிவிட் டாள்.

சற்றுதூரம் சென்றதும், லின், "நீ அடித்துப் போட்டாயே அபிராமி, அந்த ஆள் நல்ல பேம்லி ஃபெல்லோ. தாடி மீசையை எடுத்துவிட்டால் பார்க்க நன்றாகவே இருப்பான் போலத் தோன்றுகிறது" என்று ரசனையோடு கூறவும் அவளுக்கு எரிச்சல் வந்தது.

"கண்ணராவி. நீ அந்தக் காலிப் பயலின் முகத்தை வேறு பார்த்து வைத்தாயாக்கும். போனதும் கண்ணை நன்றாகக் கழுவு. முதலில் சீக்கிரமாய் வாங்கப்பா. மிஸ் கண்டுகொள்ளுமுன் விடுதிக்குப் போய் சேர வேண்டும்."

வேகவேகமாக ஐவரும் போய்ச் சேரவும், கிளம்பு மாறு ஆசிரியை தொடங்கவும் சரியாக இருந்தது. மறுநாள் மற்ற நால்வரும் அவரவர் திக்கை நாடிப் பறந்து விட. அபிராமிக்கு இந்த மலைச்சம்பவம் மறந்தே போய் விட்டது.

எந்த வகையிலும் பெரிதாக எண்ணப் பட வேண்டிய விஷயம் என்று அவளுக்கு இது தோன்றவும் இல்லை. ஒரு மட்டைக்குச் சேலையைச் சுற்றிவிட்டாலே பின் தொடர்கிற ஆண்கள் பெருகி விட்ட இந்த நாளில், ஒரளவு அழகு இருந்த காரணத்தினால் அவள் பலமுறை கை ஓங்க நேர்ந்திருக்கிறது. செருப்புக் குதிகாலால் ஓங்கி மிதித்திருக்கிறாள், நகங்களால் ரத்தம் வரக்கீறியதும் உண்டு. எனவே தனஞ்சயனின் கையில் ரத்தம் கசிந்ததைக்கூட அவள் பெரிதாக நினைக்கவில்லை.

சும்மா போகிற பெண்களிடம் வாலாட்டுபவர்கள் இம்மாதிரி வாங்கிக் கட்டிக் கொள்ளவும் வேண்டும் தான் என்பது அவளது கொள்கை. ஆனால் இது பின் நாளில் ஒரு மகாபாரதமாய் அவள் தலையில் வந்து விழக்கூடும் என்று கற்பனை கூடச் செய்யவில்லை.

அத்தோடு தனஞ்சயனுக்குப் பெரிதாக எதும் நேர்ந்துவிடும் என்றும் அவள் கருதவில்லை.

தோழிகளோடு அபிராமி அகன்றதும் கட்டுப்பட்டவர்கள் ஒருவருக்கு ஒருவர் கட்டவிழ்த்துக் கொண்டு கிழே கிடந்த அந்த தனாவை யாராவது டாக்டரிடம் அழைத்துப் போய் காயத்தைக் கழுவி மருந்து போட்டிருப்பார்கள். காயம் குணமானதோடு அந்தக் கதை மறந்து வேறு கலர் தேடிப் போயிருப்பான் என்று அலட்சியமாக ஒரு தரம் எண்ணியதன் பிறகு அவள் அன்றையக் கதையை நினைத்துப் பார்த்தது கூட இல்லை.

ஆனால் தனஞ்சயன் அப்படி இருக்கவில்லை.

அவன் அடிபட்ட கருநாகமாகி இருந்தான்.

அபிராமி ஊகித்ததுபோலவே மற்ற நால்வரும் அவசர அவசரமாக ஒருவருக்கொருவர் கட்டவிழ்த்துக் கொண்டு தனஞ்சயனிடம் ஓடி வந்தனர். பாறையை அகற்றி நண்பனின் கையைப் பார்த்த ரகுராமன் மயக்கம் போட்டு விழாத குறைதான். வலது கைக்கு இடது கை எவ்வளவோ பரவாயில்லை என்றபோதும் அதையும் தனஞ்சயனால் அசைக்க முடியவில்லை. அறிந்த அளவில் ஒருவன் சட்டையைக் கிழித்தக் கட்டுப் போட்டு, பாதி தூக்கி வந்து, கிடைத்த முதல் டாக்டரிடம் காட்டினார்கள்.

கையை எடுத்து விடுவது மேல் என்ற அவரிடம் வாதாடி, முடிந்த அளவு சுத்தம் செய்து மருந்திட்டு கட்டி சென்னைக்கு அழைத்து வந்தார்கள்.

பணம் இருக்கையில் எதிலும் மிகச் சிறந்தது கிடைப்பது கடின மில்லையே. பல நுண்ணிய சர்ஜரிகள், எப்படியோ எலும்புகளைச் சே[illegible]கள். தசைகளைத் தைத்தார்கள், தொடை[illegible] தோலை ஒட்டவைத்தார்கள். ஒரு வாறு இருகைக[illegible]யும் உருவாக்கினார்கள்.

அப்படி உருவாக்கிய கைகளைக் கூட அவன் முழுமையாகப் பயன்படுத்துவது நாலுமாத காலமாகத்தான்.

விபத்து நடந்த விதம் பற்றி யாரும் யாரிடமும் மூச்சு விடவில்லை. துருவித்துருவி கேட்ட சிவநாதரிடம் ஏற்காட்டில் சுற்றிவிட்டுத்திரும்பும் போது, கால் தடுமாறி விழப்போன விசுவத்தின் தலை அடிபட்டுவிடாமல் கைகளை அவன் தலை மோதக்கூடிய இடத்தில் வைத்ததாகவும், எதிர் பாராதவிதமாகப் கை சிதைந்ததாகவும் அளந்து நம்பவைத்தார்கள்.

தாடிமீசைகளை நீக்கினார்கள். சாயம் போன அழுக்கு ஜீன்சைக் கழற்றி எறிந்தார்கள். நீளமான தலை முடி வெட்டப்பட்டது.

சுத்தமான ஆடைகள், திருத்தமான தோற்றம், ஒழுங்கான அமைப்புகள். தனஞ்சயன் தந்தையோடு அலுவலைப் பகிர்ந்து கொள்ளத் தொடங்கினான். எல்லாமாகப் பெற்றோரின் மனம் குளிர்ந்தது.

இத்தனைக்கும் நடுவில் தனஞ்சயன் அபிராமியை மறக்கவே இல்லை, யாரும் – தந்தைகூட அறியாமல் ரகசியமாகத் தேடினான். அந்த ஆண்டு குற்றாலத்துக்கு உல்லாசப்பயணம் போன கல்லூரியைக் கண்டு பிடிப்பதிலோ, அப்படிச் சென்ற மாணவிகளுள் அபிராமியைக் கண்டு பிடிப்பதோ அரிய காரியமாய் இருக்கவில்லை. அவளது குடும்பம், சூழ்நிலை எல்லாவற்றையும் அறிந்து கொண்டான்.

பேசியதற்கு மேல் ஓர் ஆயிரம் ரூபாயைக் கொடுத்து அந்த துப்பறியும் நிபுணரை மகிழ்ச்சியோடு அனுப்பி வைத்தான்.

அபிராமிக்குரிய தண்டனையை அவன் ஏற்கனவே தீர்மானித்திருந்தான். அதை நிறைவேற்றுவது மிகவும் சிரமம்தான். எனவே நின்று நிதானித்து திட்டமிட்டு, உறவு, நட்பு அத்தனையிடமிருந்தும் அவளைப் பிரித்து நிராதரவான நிலையில் அவன் முன்னே நிற்க வைத்தான். அவளது திகைப்பையும், தவிப்பையையும் அணு அணுவாக ரசித்தான்.

அன்று ஓர் ஆண்பிள்ளையைக் கிழே தள்ளிக் காலால் மிதித்த போது ஆனந்தமாக இருந்ததில்லையா? இன்னும்.. இன்னும் எத்தனை வித வேதனைகள்! அத்தனைக்கும் அவளும் பட வேண்டாமா?

அந்த வைரமாலையை கண்டதிலிருந்து மனதை உறுத்திய கேள்விக்கு விடை – ஒரு கொடூரமான விடை கிடைத்தது அபிராமிக்கு. ஆனால் விடை கண்டுவிட்ட நிம்மதிக்கு பதிலாக இதிலிருந்து விடுபடுவது எப்படி என்ற கலக்கம்தான் பெரிதாய் பூதாகாரமாய் வளர்ந்தது.

அன்றைக்கு ஒண்டிக்கு ஒண்டி என்ற கணக்கில் பெண்களிலும் ஐந்து பேர் இருந்தபோதே, முதலில் பின்

னடையத்தான் தோன்றியது. இப்போதோ இங்கே இவள் ஒருத்தியை மடக்க ஐந்து பேர்; தனஞ்சயனிடம் துப்பாக்கி வேறு.

இந்த இக்கட்டிலிருந்து நல்ல படியாக தப்பிப்பது சாத்தியமல்ல என்கிற எண்ணம் வினாடிக்குள்ளாக உறுதிப்பட்டது அவளுக்கு. அன்று கராத்தேயை முழுமையாகக் கற்றிருந்தால் கூட ஏதோ முயற்சி செய்தேனும் பார்க்கலாம், அதற்கும் வழியில்லையே! அழகான பெண்களுக்கு ஆண்பிள்ளைத் தனமான பயிற்சிகளெல்லாம் வேண்டவே வேண்டாம் என்று தடுத்த தந்தையை நினைத்து இன்று வேதனையாக இருந்தது.

இந்தத் துன்பத்திலிருந்து மீண்டு என்றேனும் அவரை அவள் பார்க்கப் போகிறாளா? நம்பிக்கை குறைந்து கொண்டே வந்தது அவளுக்கு.

இவ்வளவு பெரிதாகத் திட்டமிட்டு ஓர் ஆண்டு காலமாய் வேடமிட்டு அதை நிறைவேற்றியவன் அவ்வளவு எளிதில் அவளை விட்டு விட மாட்டான். ஆனாலும் கடைசிவரை முயன்று பார்த்து விட வேண்டியதுதான். முடிவு கடவுளிடம்.

மிகவும் கெஞ்சுதலான குரலில் "தயவு செய்து யோசியுங்கள். நீங்கள் அன்று செய்தது தப்பில்லையா?" என்று மெதுவாகக் கேட்டாள் அபிராமி.

"என்ன தப்பு?"

"தன் வழியே போகிற ஒரு பெண்ணிடம் கி. . கிஸ் என்றேல்லாம் பேசி தொடுவது தப்பில்லையா?" என்றாள் பழைய கெஞ்சும் குரலிலேயே. "ப்ளீஸ், நன்றாக யோசித்துப் பாருங்கள். உங்கள் அக்கா தங்கையிடம் யாராவது இப்படி நடந்து கொண்டால் ஒப்புவீர்களா?"

"ரொம்பக் கஷ்டமான கேள்வி" என்றான் தனஞ்சயன் யோசனையோடு.

சிறு நம்பிக்கை ஒன்று உதயமாக, "பார்த்தீர்களா? அக்கா தங்கை என்றதும் கஷ்டமாக இருக்கிறதில்லையா? அதே மாதிரிதானே மற்ற பெண்களுக்கும்? எல்லாப் பெண்களுக்கும்மான அவமானம் ஒன்றுதான் இல்லையா?" என்று வேகமாகப் பேசி வாதாடினாள் அபிராமி.

ஆனால் அசுவாரசியமாக அவன், "ச்சு, கஷ்டம் என்றது அதை இல்லை பெண்ணே. எங்கள் யாருக்கும் அக்கா தங்கைகளே இல்லை என்பதால் அந்த மாதிரி அக்கா தங்கையிடம் மற்றவர்கள் நடந்து கொள்ளும் விதம் பற்றி யோசித்துச் சொல்லுவது கஷ்டம் என்றேன்" என்று கிண்டலாக இயம்பி மற்றவர்களைப் பார்த்துக் கண்சிமிட்டி சிரிக்கவும், மற்றவர்களும் உடன் சேர்ந்து நகைத்தார்கள்.

பாறையில் முட்டுவது போல எப்படிப் பார்த்தாலும் இது என்ன இப்படி ஒரு தலைவிதி? என்று சோர்ந்தாள். ஊஹூம். சோர்ந்து ஓயவோ சுய வருத்தம் பாராட்டவோ இப்போது நேரம் இல்லை. எப்படியாவது அவனை உணர வைத்தாக வேண்டும்.

அவன் போக்கிலேயே போய் "சரி, அக்கா தங்கை பேச்சு வேண்டாம் ஆனால் உங்கள் அம்மாவும் ஒரு பெண்தானே அவர்களுக்கு இப். . . " என்று மேலே பேசுமுன் "ஏய்" என்று சீறிக் கொண்டு அவள் முன்னே வந்து நின்றான் தனஞ்சயன். "அம்மா பேச்சை எடுத்தாய், உன்னை அறைந்தே கொன்று விடுவேன். ராஸ்கல், யார் பேச்சை யார் எடுத்துப் பேசுவது? அதற்கு ஒருதகுதி வேண்டாம்?" என்று உருமவும் அவளுக்கு மேனி நடுங்கியது.

"அன்பே உருவான என் அம்மா எங்கே, தலை முதல் கால் வரை திமிர் பிடித்த நீ எங்கே? அவர்கள் பேச்சை எடுத்தாயோ. . . போ. அனாவசியமாய் அம்மாவை இதில் இழுத்து உன் துன்பத்தைப் பெருக்கிக்

கொள்ளாதே" என்று எச்சரித்து விட்டு மீண்டும் நண்பர்களிடம் திரும்பினான்.

உள்ளே நடுங்கிய போதும் அவள் திரும்பவும் மன்றாடினாள். "எப்படியும் ஒரு குடும்பப் பெண்ணிடம் போய்க் கிஸ்மி என்பது தப்பில்லையா? சற்று அமைதியாகச் சிந்தித்துப் பாருங்கள், ப்ளீஸ், நீங்கள் யாராவதேனும் கொஞ்சம் யோசித்துப் பாருங்களேன் தயவு செய்து..."

"ம். . ஆக மூளைக்கு வேலை கொடு என்கிறாய், என்ன தம்பிகளா, இவ்வளவு கெஞ்சுகிறாளே அவள் திருப்திக்காகவும்தான் அந்த ஒருகாரியம் செய்து விடுவோமே" என்று உரைத்து, தலையைத்தட்டி, "ஏ, தூங்குமூஞ்சி மூளையே, விழித்து இருந்து வேலை செய்கிறாயா?" என்று நாடகபாவனையில் பேசவும் ஏற்கனவே அடிமட்டத்தில் இருந்த அபிராமியின் நம்பிக்கை அதல பாதாளத்துக்கே போயிற்று.

"ம். . மூளை வேலை செய்யத் தொடங்கி விட்டது, ஓகோ, அப்படியா விஷயம்? இதைக் கேள். அபிராமியில்லை உன் பேர், அபிராமி, என்மூளை கேட்கிறது, நீ குடும்பப் பெண் என்பது எங்களுக்கு எப்படித் தெரியமுடியும் என்று.அப்படி ஒரு முக்கியமான விஷயத்தை நீ நெற்றியில் பச்சை குத்தியிருந்தாயா, அல்லது அட்டையில் எழுதி கழுத்தில் தான் மாட்டிக் கொண்டு வந்தாயா? அதில் எதையும் செய்யாதது உன் குற்றம். அந்தக் குற்றத்திற்காக வேறு அதிகப்படியாக தண்டனை கொடுக்கவேண்டும். ஏதோ நாங்கள் நல்லவர்களாக இருக்கிற காரணத்தினாலே, பெருந்தன்மையாக அந்தக் குற்றத்தையும் உன் ஆட்சேபனை மனுவோடு சேர்த்து தள்ளுபடி செய்து விடுகிறோம். சரிதானே?" என்று கூறி ஒற்றைப் புருவத்தை உயர்த்தி அவன் ஏளனமாகச் சிரிக்க மற்றவர்கள் முகத்திலும் அது எதிரொலித்தது.

என்ன எகத்தாளம்!

அனாதரவாக ஒரு பெண் மாட்டிக் கொண்டிருக்கிறாள் என்பதாலா? கட்டிப்போட்டு அடிப்பது போல இது கேவலம் என்று இவர்களில் ஒருவருக்குக்கூடத் தோன்றவில்லையே!

உடனேயே அவளுக்கு இன்னொன்று தோன்றியது. தனஞ்சயன் தவிர மற்ற நால்வரும் அந்த அறையின் நடுப்பகுதியில் நின்றனர். தனஞ்சயனும் சற்று உட்புறமாகத்தான் இருந்தான். அறையில் இருந்த ஆறுபேரில் கதவிற்கு ஓரளவு அருகில் இருந்தது அபிராமிதான். வேகமாகக் கதவைத் திறந்து கொண்டு விரைவாகப் படியிறங்கி வெளியே ஓடி விட்டால்?

விழிகளால் தூரத்தைக் கணக்கிடும் போதே தனஞ்சயன் பேசினான், " கதவுக்குப் பக்கத்தில் இருக்கிறோம், ஓடி விடலாம் என்று நினைத்து அனாவசிய முயற்சி செய்யாதே. வெளிக்கதவு பூட்டியிருக்கிறது. சாவி என்னிடம். அத்தோடு என் துப்பாக்கி முதலில் உன் காலைச் சுடும்."

அபிராமியின் உள்ளச் சோர்வு உடலில் பிரதிபலிப்பதைக் காணவும் திருப்தியோடு நண்பர்களிடம் திரும்பினான் தனஞ்சயன் " ரகுராம், ஒரு ரவுண்டு போடலாமா?.. அடேயப்பா! எவ்வளவு காலம் ஆயிற்று, இதைத் தொட்டு. ஒன்று தெரியுமாம்மா, இவள் அப்பன் என் பின்னாலேயே வந்து உளவு பார்த்தான். குடிக்கிறேனா, கூத்தி வைத்திருக்கிறேனா என்று. நான் ஒருவருஷமாய் உத்தமன் போல அப்பாவையே ஏமாற்றிக் கொண்டு வந்திருக்கிறேன், இந்த அற்பம் என்னைக் கண்டு பிடிக்கப் போகிறதாம்." என்று அவன் இடி இடி என்று நகைக்க மற்றவர்களும் உடன் சிரித்தார்கள்.

மாப்பிள்ளை தங்கமம்மா. பத்தரை மாற்றுத்தங்கம். மட்டு மரியாதை அவரிடம் படிக்க வேண்டும். பிரியமும் மரியாதையுமாக அவர் பேசுவதைக் கேட்கையில் உன்னைப் பற்றிய கவலை அடியோடு போய்விட்டது. நீ தெரியாமல் தப்புத்தவறு செய்தால் கூட மாப்பிள்ளை

அனுசரித்துப் போவார். . .' என்று அகமகிழ்ந்த தந்தையை எண்ணிப் பரிதாபப் பட்டாள் அபிராமி. ஆனால் அவள் நிலை அதைவிடப் பரிதாபமாக அல்லவா இருக்கிறது!

ஒன்று தோன்ற, " உங்களை எல்லோரும் எவ்வளவு உயர்வாக எண்ணிக் கோண்டு இருக்கிறார்கள். . " என்றாள்.

"தாராளமாக எண்ணிக் கொள்ளட்டும்."

" இது தெரிந்தால் என்ன ஆகும்? என்று கேட்டாள் அவள். மற்றவர்களின் மதிப்பிலிருந்து விழுந்து விடுவோம் என்கிற எண்ணமாவது அவனைத் தடுக்கட்டுமே என்ற நினைப்பு அவளுக்கு.

ஆனால் "நீ சொல்வாயா, என்ன?" என்று அவன் அலட்சியமாகக் கூறி "இது மிகவும் பெருமைக்குரிய விஷயம் என்று மற்றவர்களிடம் பறை சாற்றுவது என்றால் அது உன் இஷ்டம், அதை நம்புவதும் நம்பாமல உன்னையே இகழ்வதும் அதைக் கேட்பவர்கள் இஷ்டம். அதைப்பற்றி எனக்கு அக்கறை இல்லை," என்று தனஞ்சயன் தோளைக் குலுக்கவும் அவள் அடியோடு இடிந்து போனாள்.

# 6

மது இருந்த மேசையை நாடித் தனஞ்சயன் திரும்பவும் அபிராமியின் மனம் மேலும் பதறியது.

சும்மாவே கோணல் நியாயம் பேசுகிறவன், மது போதைவேறு சேர்ந்தால், கொஞ்ச நஞ்சம் இருக்கிற புத்தியும் போய்விடுமே என்கிற பயத்தில் "வேண்டாம், வேண்டாம் நில்லுங்கள்" என்றாள் அவசரமாக.

லேசான புருவச் சுளிப்புடன் அவள்புறம் திரும்பினான் தனஞ்சயன். "என்னாங்கடா, இது? யாரோ தகுதி

அறியாமல் உத்திரவு போடுகிறாற்போலத் தெரிகிறது. பிடரியில் இரண்டு தட்டு தட்டி உள்ள நிலைமையைப் புரியவைப்போமா?" என்று அவளை விழி இடுங்க நோக்கினான்.

அந்தப் பார்வையில் அபிராமியின் அடிவயிறு வரை கலங்கத்தான் செய்தது. ஆயினும் அஞ்சி நடுங்கக் கூட வழியில்லை என்பதை உணர்ந்து துணிவை எல்லாம் கூட்டி, " பாருங்கள், நான் உங்கள் மனைவி," என்று தொடங்கினாள்.

"யார் சொன்னது?"

ஒருகணம் மருண்டுவிழித்து விட்டு, "இரண்டாயிரம் பேர் முன்னிலையில் மனைவி என்று ஏற்றிருக்கிறீர் கள்" என்றாள் அபிராமி.

"எப்படி?"

அவனது கிண்டல் குரல் உசுப்ப, " வானம் பூமி அக்கினியோடு முப்பத்துமுக்கோடி தேவர்கள் சாட்சி யாக இவள் என் மனைவி, எந்த நிலையிலும் கைவிட மாட்டேன், கவுரவம் காப்பேன் என்று அத்தனை மந்தி ரங்கள் சொன்னீர்களே" என்றாள் ஆத்திரமாக.

"இல்லையே!" என்று அவன் பழைய குரலிலேயே கூறவும் மேலே என்ன சொல்வது என்று புரியாமல் திகைத்துப் போனாள் அவள். அத்தனைபேர் நடுவில் சாஸ்திரப்படி தாலி கட்டித்திருமணம் செய்தவன் இல்லை என்று பச்சையாய்ப் புளுகும் போது வேறு என்ன பேசுவது என்று அவளுக்குத் தெரியவில்லை.

என்னநினைத்தானோ, அவனாகவே, " இந்த ஒரு தரம் ஒரேதரமாக நன்றாகக் கவனித்துக் கேள், அபிராமி. அந்த வைதீகர் ஏதேதோ சொன்னார் ஒரு வார்த்தை கூட நான் திரும்பிச் சொல்லவில்லை. முதலி லேயே அவரிடம் சொல்லி இருந்தேன், வடமொழி உச்ச ரிப்பு கஷ்டம். நீங்கள் எல்லாவற்றையும் சொல்லி 'அட்ஜஸ்ட்' செய்து கொள்ளுங்கள் என்று. அவரும்

எதையும் என்னைத் திருப்பிச் சொல்லும்படி கூறவே இல்லை. வெறும் ஓர் இருநூறு உபயம் " என்று விவரித் தான்.

வயிறு எரிய "உடையவள் என்று நெற்றியில் குங்கு மம் வைத்தீர்களே" என்று விடாமல் கேட்டாள் அபிராமி.

"ச்சு. இதேதடா ஒரே விளக்கும் படலமாய் இருக்கி றது. "க்ளீனிங் பவுடர்" இல்லாதது ஒன்று தான் குறை போகட்டும். இப்போது நன்றாகக் கவனியம்மா, அபிராமி நேற்று நான் உன் நெற்றியில் பொட்டு வைக்கவே இல்லை. ஒரு சினிமாவில் வருமே, அது என்ன படம். . . ஆங், 'இந்திரன் சந்திரன்' படம் அதில் போல முதல் இரண்டு விரலால் குங்குமத்தை எடுத்துக் கொண்டு நடுவிரலால் நெற்றியில் தொட்டு விட்டுக் குங் குமத்தை நைசாக உதறிவிட்டேன்" என்று பெருமை யடித்தான் அவன்.

தாழ்த்தியிருந்த பார்வையில், புதிய தங்கத் தாலி மீது குங்குமம் விழுவதைக் கண்டது நினைவு வந்தது அபிராமிக்கு. கூடவே மங்களகரமாய் நிறையக் குங்கு மம் எடுத்துவிட்டார், நெற்றியில் ஒட்டியது போக மீதி சுப சகுனமாய் மாங்கல்யத்தின் மீது விழுகிறது என்று குதூகலித்தது கூட ஓர் இரக்கமற்ற அரக்கத்தனத்துடன் என்ற நினைவு வந்து நெஞ்சில் ரத்தம் கசியச் செய்தது.

வேதனையோடு நிமிர்கையில் அவன் மேலும் சொல்லிக் கொண்டே போனான், "முதலில் தாலியைக் கூட நான் கட்டவில்லை தெரியுமா? தாலிக் கயிற்றை உன் கழுத்தில் வைத்து விட்டுத் தடுமாறுவது போல நடித் தேனா, யாரோ முந்திரிக் கொட்டை பின்னிலிருந்து அவசரமாகக் கட்டி முடித்து விட்டது..." என்று சிரித்தான் தனஞ்சயன்.

"ப்ளிஸ். அப்படிச் சொல்லாதீர்கள். என்ன இருந்தா லும் நான் உங்கள் மனைவி.."

வேதனையோடு முனகியவளை இடைமறித்து, "தேவுடா, அதுதானே இல்லை என்று இவ்வளவு நேர மாய்த் தெளிவு படுத்திக் கொண்டு இருக்கிறேன். பார்த்துப் பார்த்து ஒவ்வொரு சடங்கையும் தளர்த்தி யிருக்கிறேன், தெரியுமா? கையைப் பற்றி ஓமம் சுற்றும் போது கூட ஏழு அடி வைக்குமுன்பே கையை விலக்கிக் கொண்டு விட்டேனே. நினைவு வருகிறதா, கையில் சொறிகிற மாதிரி. . ? இதையெல்லாம் ஒழுங்காகவே செய்துவிட்டு சும்மா நடிப்பு என்று சொல்வதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. ஏனென்றால் இந்தச் சடங்குகளில் எல்லாம் எனக்கு நம்பிக்கையே கிடையாது. ஆனால் அம்மாவுக்கு இதிலெல்லாம் அபார நம்பிக்கை. அவர்களுக்காகத்தான் இவ்வளவு சிரமம். ஒரு வழியாய் மனைவியில்லை என்பது உனக்கும் விளங்கியிருக்கும். அதனால் இனிப் பேச்சை முடித்து விடலாம்" என்றான் அவன்.

"இல்லை. .இல்லை நீங்கள் என்ன சொன்னாலும் சட்டப்படி நான் உங்கள் மனைவி. நீங்கள். . இந்த. இதனால் ஒரு குழந்தை கூட உருவாகலாம். அதை நீங்கள் நினைத்துப் பார்த்தீர்களா?" என்று தொண்டை அடைக்கத் திணறியபடியே கேட்டாள் அவள்.

"அபார்ஷன் செய்வது இந்தக் காலத்தில் வெகு எளிது," என்று அயராமல் பதில் சொல்லி அவளை அயர வைத்தான் அவன்.

முயலுக்கு மூன்றே கால் என்று ஒற்றைக் காலில் நிற்கும் இவனிடம் என்னதான் சொல்வது? ஒன்றும் பய னில்லை. ஆனால் "உலகம் இன்றோடு முடிந்து விடப் போவதில்லை. நாளைய எதிர்காலத்தை எண்ணிப் பார்த்தீர்களா?"

"என்னைப் பொறுத்த வரையில் இன்றிரவோடு நம் உறவு, என் கணக்கு தீர்கிறது. அதற்கு மேல் உயிரோடு இருப்பதோ அன்றி தற்கொலை செய்து கொள்வதோ உன் விருப்பம்."

"உயிருடன் இருந்தால்?"

அவன் கூறுவது நடந்து விட்டால் பிறகு உயிருடன் இருக்கப் போவது இல்லை என்பது அபிராமிக்கு உறுதி தான். ஆனால் சர்வ நிச்சயத்துடன் பேசும் இவனைச் சற்றேனும் கலங்க வைத்துவிடும் வேகத்தில் அவனிடம் கேட்டாள் அவள்.

"இருந்தால் எனக்கென்ன? தாராளமாய் உயிருடனேயே இரு. இந்தக் காலப் பெண் நீ. அப்படி செத்து விடுவாய் என்று நானும் எண்ணவில்லை. கொஞ்ச காலம் கழித்து ஒத்துப் போகவில்லை என்று விவாக ரத்து செய்து விலக்கி விடுவதோடு விஷயம் முடியும்" என்றான் அவன் சற்றும் கலக்கமின்றி.

மஞ்சள் அரளிப் பழம் போல வெளியே அழகாகத் தோன்றும் இவனுள் இப்படி ஓர் அரக்கத்தனமா என்று எண்ணம் ஓடும் போதே இன்னொன்று உறைத்தது.

இதுவரை பேசியதெல்லாம் தனஞ்சயன்தான். அவன் மட்டுமேதான். மற்றவர்கள் மறுத்துப் பேச வில்லை, ஒப்பினாற்போலக் காட்டிக் கொண்டார்கள் என்றாலும் அவர்களில் யாரும் இதுவரை அவளை நெருங்கவே இல்லை. ஜாடையால் கூட அவளை வாட்ட வில்லை. ஒருவேளை அவர்களில் யாராவது ஒருவரை... யாராவது ஒருவருக்கேனும் இது எவ்வளவு பெரிய பிசகு என்பதைப் புரிய வைக்க முடியுமானால்...

நினைத்ததுமே நண்பர்கள் நாலுபேரும் நின்ற இடத்துக்கு ஓடினாள். ஐவரின் பார்வையும் சட்டென ஒரு கவனத்துடன் அவள் மேல் படிந்தது. அபிராமியின் கண்ணில்படவில்லை. ஓடிச் சென்று வலப் புற ஓரமாய் நின்று கொண்டிருந்த சுதிரை அணுகி, அவசரமாகப் பேசத் தொடங்கினாள். "மிஸ்டர் சுதிர், ஒருவர் தவறு செய்யாமல் காக்கவேண்டியது அவருடைய நண்பர்களின் கடமையல்லவா? இது...இவர் மாதிரிப் பழி வாங்க எண்ணுவது எவ்வளவு பெரிய பிழை என்று உங்கள் நண்பருக்கு எடுத்துச் சொல்ல வேண்டாமா? அது. .

அப்படி ஒரு பெண்ணின் வாழ்வை அழிப்பது தப்பு என்பது உங்களுக்குப் புரிகிறதில்லையா? ப்ளீஸ், மிஸ்டர் சுதிர், அன்பாகச் சொல்லியோ அதட்டிப் பேசியோ உங்கள் நண்பரைத் திருத்துங்களேன். . . ப்ளீஸ், மிஸ்டர் சுதிர்" என்று கெஞ்சினாள்; யாசகம்தான்.

உதட்டோரம் ஓர் ஏளன வளைவுடன், அலட்சிய பாவனையுடன் தனஞ்சயன் பார்த்துக் கொண்டு நிற்க, "இதைச் சற்றுப் பாருங்கள், அபிராமி." என்று குனிந்து தன் தலையைக் காட்டினான் சுதிர்.

சீராக வெட்டப் பட்டிருந்த தலைமயிரை அவன் கைகளால் விலக்கி விட அங்கங்கே சொட்டை தெரிந்தது.

அவள் தன் வாழ்வா சாவா பிரச்சினையைச் சொல்லி மன்றாடும் போது இவன் தலைச் சொட்டையை ஏன் காட்டுகிறான் என்று புரியாமல் அபிராமி வெறித்த போது அவன் விளக்கம் கொடுத்தான். "இவை வெறும் தலைச் சொட்டைகள் அல்ல. என் பெற்றோரைச் சிறு வயதிலேயே இழந்து விட்ட நான் சித்தப்பா வீட்டில் வளர்ந்தேன். அவருக்கு அடிக்கடி கோபம் வரும். கோபம் வந்தால் மோதிரக்கையால்தான் என்தலையில் குட்டுவார். தலையில் தோல் கிழிந்து, புண்ணாகி, சீழ்பிடித்து, அதைச் சுத்தம் செய்யக்கூட வழியில்லாமல் மேலும் மேலும் அங்கேயே குட்டுப்பட்டு எப்படியோ ஆறி இருந்த தழும்புகள். அந்த நிலையிலிருந்து என்னைக் காத்து, கல்வி அறிவும், சுத்தமான உடையும், எல்லாவற்றுக்கும் மேலாக வயிறு நிறைய உணவும் தந்து என்னை ஒரு மனிதனாக உலகோர் நடுவே தலைநிமிர்ந்து உலவ விட்டவன் இந்தத் தனஞ்சயன். இவன் சொல் எனக்கு வேதம்" என்று பட்டென முடித்து தன் நிலையைத் தெளிவாக விளக்கி விட்டான் அவன்.

அடுத்தவன் ப்ரீத்தை நாடி அவள் பார்வையைத் திருப்பும் போதே அவன் தன் சட்டைக்கைப் பித்தானைத் திருகிக் கொண்டிருந்தான்.

சட்டைக்கையை உயரே இழுத்து கையைத் திருப்பிக் காட்டினான். திக் கென்றது அவளுக்கு. அவ்வளவு நீளமாய் மணிக்கட்டிலிருந்து முழங்கை வரை ஒட்டியிருந்தது தழும்பு.

"என் சிற்றன்னையின் கைவண்ணம். மெல்லியலாள் அல்லவா? புண்ணாகும் அளவு வலுவாகக் குட்ட முடியாது என்று சூட்டுக் கோலை பயன் படுத்துவாள். இதே மாதிரி கால்களிலும் உண்டு. சூட்டுப் புண்களோடு நடக்கமுடியாமல் போய்க் கொண்டிருந்தவனை மீட்டு சுதிர் சொன்னமாதிரி உணவு, உடை, கல்வி தந்ததோடு மருத்துவமும் பார்த்து எலைனை ஆளாக்கியவன் தனஞ்சயன். அவன் வார்த்தை எனக்கு மந்திரம்" என்று உரைத்தான் ப்ரீதம்.

"நாள் முழுவதும் குப்பை பொறுக்கி முதலாளியிடம் கொடுத்துவிட்டு அரை வயிற்றுக் கஞ்சியில் உயிர் வாழ்ந்து கொண்டிருந்தோம். ஒரு நாள் குப்பைத் தொட்டியில் விழுந்த எச்சில் இலைக்காக நாயோடு போராடிக் கடிப்பட்டுக் கிழே விழுந்து கிடந்த எங்களைக் காப்பாற்றி நல்லபடியாக வாழவைத்தவன் தனஞ்சயன். அவனுக்காக உலகத்தையும் பகைப்போம்" என்றனர் மற்ற இருவரும்.

தனஞ்சயனின் உதட்டோர வளைவுக்கு அர்த்தம் புரிபட அவள் மேலும் கலங்கினாள்.

துயர்துடைத்தவனின் வார்த்தை மந்திரம், வேதம் என்கிறார்களே, கிணற்றில் விழு என்றால் விழுவார்களா? இதுவும் அப்படித்தானா?

நிச்சயமாகக் குதித்து விடுவோம் என்றார்கள் அவர்கள் ஒரே குரலாக. "எங்களிடம் வாதாடுவதை விட உங்கள் பிரார்த்தனைகளைத் தனஞ்சயனிடமே செலுத்துவது உத்தமம்."

பெரிய "உங்கள்" களைப்புடன் மீண்டும் கணவன் புறம் திரும்பினாள் அபிராமி. ஆனால். . . ஆனால் அவன்தான் கணவனே இல்லை என்கிறானே. கருங் கல்லை மனந்திருக்கும் இடத்தில் வைத்துக்கொண்டு அப் படியும் சொல்வதற்கு இல்லை. இந்த நாலு பேரின் துயர்கண்டு இரங்கியிருக்கிறான். எனவே நிச்சயமாக அவன் மனம் ஈரப்பசையற்ற பாலைநிலம் அல்ல. இந்த சாட்சிக்காரர்கள் காலில் விழுந்து பயனில்லை எனும் போது, சுதீரன் சொல்வதுபோலத் தனஞ்சயனிடமே மேலும் வேண்டிப் பார்க்க வேண்டியதுதான். அவலப்பட டாமல் தப்புவதற்கு ஒரே வழி அதுதான்; அவன் மனம் இளகச் செய்வதுதான். அதில் வெற்றி கிடைக்காவிட் டால். . .? அதற்கு மேல் நினைத்துப் பார்க்கக் கூட அவளால் முடியவில்லை.

நெஞ்சில் நிறைந்திருந்த பயமும் துயரமும் கண்க ளில் பிரதிபலிக்க அபிராமி மீண்டும் தனஞ்சயன பக்கம் திரும்பினாள்.

வாயைத் திறந்து அவள் பேசு முன்பே அவன் கையை உயர்த்தி அதைத் தடுத்தான், "ஐந்து கோர்ட் அப் பீலும் நிராகரிக்கப் பட்டுவிட்ட படியால் இனித் தாமதம் செய்யாமல் தண்டனையை நிறைவேற்ற வேண்டியது தான்."

"இல்லை. . இல்லை நீங்கள் கொடியவரில்லை, உங்க ளிடம் மனிதத்தன்மை இருக்கிறது, இரக்கம் இருக்கிறது. இவர்களுடைய வேதனை கண்டு இளகியிருக்கிறீர்கள் இப்போது தயவு செய்து எனக்கும்."

"அவர்கள் கஷ்டப்பட்டவர்களடி. நீ அப்படியா? எங்கள் அளவு பணம் உன் வீட்டில் இல்லாமல் இருக்க லாம். ஆனால் தேவைக்கு மிகுதிதானே. அதற்கு மேல் கண்ணு தங்கம். .பாப்பா. . என்ற கொஞ்சல் வேறு. அதில் தான் அவ்வளவு திமிர் ஏறிப் போயிருந்தாய். முதலில் அந்தத் திமிர் அணுவளவுகூட மிஞ்சாமல் அடியோடு அழிய வேண்டாம்? அந்தத் திமிர்பிடித்த செய்கையை

நினைத்து நீ வாழ்நாள். முழுவதும் கதற வேண்டாம்? அதற்கு இதைவிடச் சிறந்த வழி வேறு ஏது? நான் எவ்வளவோ யோசித்துக் கண்டு பிடித்த மிகச் சிறந்த வழி... இன்றைக்கு, இப்போது.... பேசியபடியே தனஞ்சயன் ஓர்எட்டு எடுத்து வைக்கவும், "நோ" என்ற கதறலுடன் பின்னடைந்தாள் அபிராமி.

அவளையும் அறியாமல் கண்களில் நீர் பொங்கி வழிய "ப்ளீஸ், இப்படியெல்லாம் தயவு பண்ணிப் பேசாதீர்கள் என்னால் தாங்கமுடியவில்லையே, கடவுளே, இது பெ..பெரிய அநியாயம் என்று தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள் வேண்டாம்..." என்று விம்மினாள்.

"கண்ணீர்" என்றான் அவன் சப்பிட்ட குரலில். "இந்தக் கண்ணீரை நீ அன்றைக்கு கொட்டிக் கெஞ்சியிருக்க வேண்டும். அப்படிக் கெஞ்சியிருந்தால் பாவம் என்று இளகி நாங்களும் விலகிப் போயிருப்போம். ஏனென்றால் நாங்கள் யாரும் பொல்லாதவர்கள் அல்ல. ஆனால் நீ என்ன செய்தாய்? என்னைக் கீழே தள்ளிக் கை நசுங்கச் செய்தாய், காலால் மிதித்தாய், அதற்கு மேல் கல்லைத் தலையில் போட்டுக் கொல்லுவேன் என்று மிரட்டினாயில்லையா? வெல். இருந்திருந்து இந்தப் பூனைக்கே ஒருகாலம வந்தபோது, இந்த யானைக்கு மட்டும் அது வராமலாபோகும்? இப்போது என்முறை. நான் மிரட்டுகிறேன் பார், இது குண்டுபோட்ட நிஜமான துப்பாக்கி. நீ என் விருப்பம் போல நடக்காவிட்டால், நானும் இதைக்கொண்டு உன்னைக் கொன்று விடத்தான் போகிறேன். ம், சீக்கிரம் பத்து எண்ணுமுன் ஒவ்வொன்றாக கழற்று ஒன்று. . இரண்டு. . எண்ணத் தொடங்கிவிட்டான் அவன். அவளது வாழ்விலும் கடைசி பத்து வினாடிகள் ஒவ்வொன்றாக மறையத் தொடங்கி விட்டன. இப்போது யாரை நினைப்பது? அம்மா, அப்பா, சிவா, தம்பி. . . புவனேசுவரியின் கனிவான முகமும் முன்னே வந்தது. அத்தை, உங்கள் பிள்ளை என்னைக் கொல்லப்போகிறாரே...

எட்டு, ஒன்பது.. பத்து என்ற வார்த்தையோடு குண்டு வெடிக்கும் சத்தத்தை, நிராசையும் பயமுமாக அபிராமி எதிர் பார்த்து நின்றபோது, சொர்க்கவாசல் கதவுபோல அந்த அறையின் கதவு திறந்தது.

# 7

அன்று விருந்து முடிந்து, சற்று நேரம் இளைப்பாறிவிட்டு, சுதர்சனத்துடைய குடும்பம் சம்பந்தி வீட்டிலிருந்து கிளம்பிய போது மணி நாலு.

வயிறு ஃபுல் என்று கூறி, சிற்றுண்டியை மறுத்து, காபியை மட்டும் அருந்திவிட்டு, இன்னும் சற்று நேரம் இருந்து இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு கிளம்பலாம் என்ற புவனேசுவரியின் உபசாரத்தை மீறிக் கொண்டு, சம்பந்தி வீட்டில் அதிகம் தங்கக் கூடாது, அதுவும் மகள் இல்லாத போது உட்காருவது தவறு என்று எண்ணிக் கிளம்பி விட்டார்கள்.

கிளம்பும் போது, மஞ்சள் குங்குமத்தோடு வெள்ளித் தட்டில் அவளுக்கும், அவளுடைய சின்ன மகளுக்குமாக இருபட்டுச் சேலைகளைக் காணவும் காந்திமதிக்குப் பெருமையோடு கூச்சமாகவும் இருந்தது.

"இந்தச் சின்னத் தங்கத்தைப் பார்த்ததுமே; இந்த நிறம் இவளுக்குப் பொருந்தும் என்று வாங்கி வைத்தேன்" என்று பிரியமாய் பேசிச் சேலைகளைக் கொடுத்து அனுப்பி வைத்தார் புவனேசுவரி. தன் மகளை எண்ணி மிகவும் மகிழ்ச்சியுற்றாள் காந்திமதி. இப்படிப்பட்ட மாமியார் கிடைக்க அவள் என்னதவம் செய்தாளோ!

விருந்தாளிகளைக் கொண்டு போய்விடுமாறு டிரைவரைப் பணித்து, காரில் ஏற்றி அனுப்பிவிட்டு, உள்ளே சென்று ஒரு மகிழ்ச்சிப் பெருமூச்சுடன் சோஃபாவில் அமர்ந்தார், புவனேசுவரி.

கூடவே வந்து, "உடம்பு ஒன்றும் அசதியாக இல்லையா, புவனி?" என்று குரலைச் சாதாரணமாக வைத்துக் கொண்டு கேட்ட கணவரை நோக்கி முறுவல் செய்து "இதே கேள்வியைக் கேட்டுக் கேட்டு மனப் பாடம் ஆகிப் போய், என்னைப் பார்த்துமே உங்கள் வாய் தானாக இந்தக் கேள்வியைக் கேட்டுவிடுகிறது போல்," என்று சிரிக்கவும் அவருக்கும் சிரிப்பு வந்து விட்டது.

மேலே அவராக எதுவும் கேளாத போதும், அவரது மனதை உணர்ந்தவளாக, "கல்யாணத்தில் அதிகப் படியாக அலைந்து விட்டேனோ என்று பயமா? தனாதான் அவன் சினேகிதர்களில் யாராவது ஒருவனை எப்போதும் என் பக்கத்திலேயே நிறுத்தி வைத்து விட்டானே, அவன் என்னை இங்கே அங்கே நகர விட்டால்தானே! என்ன வேணுமானாலும் என்னி டம் சொல்லுங்கம்மா நான் செய்கிறேன் என்று ஒருவன் மாற்றி ஒருவன் வந்து நின்று என்னை அசையவே விட வில்லையே. ரொம்பவும் நல்ல பிள்ளைகள் இல்லை?" என்று கேட்க அவரும் தலையாட்டினார்.

"இவர்கள் எல்லோரும் இந்த அளவு உருப்படுவார் கள் என்று நான் நினைக்கவே இல்லை, புவனி. கொஞ்ச காலம் பட்ட கவலை முழுமையாகத் தீர்ந்து இப்போது தான் அப்பாடா என்று நிம்மதியாக இருக்கிறது." என்று சோஃபாவில் நன்றாக சாய்ந்து கொண்டார்.

இருவருமாக இதே ரீதியில் பேசிக் கொண்டு இருந்த போது வெளியே ஒருகார் வந்து நிற்கும் ஓசை கேட்டது.

மனைவி அலைந்து அலுப்புப் படுத்திக் கொள்வாளோ என்கிற பயத்தில் நெருங்கிய உறவின ரைக்கூட சிவநாதன் வீட்டில் தங்க விடவில்லை. வந்த வர்களுக்கும் திருப்தி ஏற்படும் வண்ணம் உயர்ந்த ஓட்டல்களில் தங்கவைத்து, திருமண மண்டபத்திலிருந்து விடைபெற்றுக் கொண்டு அவரவர் ஓட்டல்களுக்கே சென்று அப்படியே ஊர் திரும்பவும் ஏற்பாடு செய்திருந் தார்.

அந்த ஏற்பாட்டை மீறி யார் வந்திருக்கக் கூடும் என்ற யோசனையோடு திரும்புகையில், உள்ளே ஓடி வந்த ஒரு பணியாளர் "குருசுவாமி" வந்திருக்கிறார்கள் என்று கூறவும் கணவன் மனைவி இருவர் முகத்திலும் புன்னகை மலர்ந்தது.

புவனேசுவரி பரபரப்புடன் எழ, 'மெள்ள மெள் ளம்மா' என்று அவளை அமைதிப் படுத்தியபடியே அவரும் எழுந்து வந்தவரை வரவேற்றார்.

"வாருங்கள் சிற்றம்பலம்சார் உட்காருங்கள். நேற்றே வந்திருந்தீர்களானால் இன்னமும் சந்தோஷமாய் இருந்திருக்கும்." என்று வந்தவரை உபசரித்தார்.

கைகுவித்த புவனேசுவரிக்குப் பதில் வணக்கம் கூறி அமர்ந்தார் வந்தவர். "சுவாமி எனக்கு நேற்று நீங்கள் வரமுடியாமல் போனதில் கொஞ்சம் வருத்தம் தான். பரவாயில்லை இப்போதேனும் வந்தீர்களே. இதோ கொஞ்சம் பாலும் பழமும் கொண்டுவருகிறேன் என்று உள்ளே செல்லத்திரும்பிய புவனேசுவரியை வந்தவர் தடுத்தார்.

"நான் வேளை கெட்டவேளை எதுவும் உட் கொள்ளுவதில்லை என்பது உங்களுக்குத் தெரியாதா, அம்மா? இனி இந்தக் கட்டைக்கு இரவு ஆகாரம்தான் என்றார். வரமுடியாமல் போனதற்குக் காரணம் சொன்னார். எனக்கும் உங்கள் வீட்டுத் திருமணத்துக்கு வரமுடியாமல் போனதில் வருத்தம் தான் அம்மா. ஆனால் மதுரைக் கல்யாணமும் அதே முகூர்த்தத்தில் அமைந்து விட்டது. அவர்கள் முன்னாலேயே அழைத்து, வருவதா வாக்கும் கொடுத்து விட்டேன். முந்திப் பார்த்தவனுக்கு முதல் வரம் என்று கூறி பாரதத்தில் கண்ணன் நமக்கு ஏற்கனவே வழிகாட்டி வைத்ததன்படி முதலில வாக்கு கொடுத்த திருமணத்திற்குப் போய்விட்டேன். "அது போகட்டும். மகனும், மருமகளும் எங்கே சார்? என்று வினவினார் சிற்றம்பல சுவாமிகள்.

"இரண்டு பேரும் ஊட்டிக்குப் போயிருக்கிறார்கள். நீங்கள் இன்று வருவது தெரிந்திருந்தால் உங்கள் ஆசீர்

வாதம் பெற அவர்களை நிறுத்தி வைத்து நாளைக்கு அனுப்பியிருப்போமே" என்றார் சிவநாதன் சிறு வருத் தத்துடன்.

என் ஆசீர்வாதம் என்ன அய்யா பெரிய விஷயம். அவர்கள் இரண்டு பேருக்குமே நல்ல யோக ஜாதகம். அதிர்ஷ்டக்காரப் பிள்ளைகள். இருவரின் நட்சத்திரங்க ளுக்கும் நேற்றைய லக்னத்துக்கும் எப்பேர்ப்பட்ட யோகம்! நேற்று இருவருக்கும் ஒரு குழந்தை ஜனித்துப் பிறந்தால். . ஆகா! அதற்கு பெறும் ராஜயோகம் மட்டு மில்லை, சக்கரவர்த்தியாகிறயோகம். இந்த அளவுக்குத் தொழிலில், வாழ்வில். . எல்லாவற்றிலுமே அந்தக் குழந்தை உயர்ந்துவிடும். சாலிவாகனன் தெரியுமா, அம்மா, விக்கிரமாதித்த மகா ராஜாவையே ஜெயித்த வன். அவனதுபலமும், புத்தியும் உடையவனாய் உங்கள் பேரன் இருப்பான்" என்றார் அவர்.

புவனேசுவரி முகம் வாடத் தரையைப் பார்த்தாள். சரி போகிறது அந்த அதிர்ஷ்டம் நமக்கு இல்லை சிற்றம் பலம் சார். நேற்று ஒன்றும் வேண்டாம் என்றுவிட்டான். தனா தேனிலவை இன்று ஊட்டியில் தொடங்கிக் கொள்கிறோம் என்று சொல்லிவிட்டான் என்று சிவநா தன் கூறவும் சிற்றம்பல சுவாமியின் முகம் கறுத்தது.

இன்றா? இன்றைக்கா? இன்று மிகவும் மோசமான நாளாயிற்றே. இன்றா வாழ்வைத் தொடங்குவது? தடுத்து விடுங்கள் சார். நான் வேறு நல்ல நாள் பார்த்துத் தருகி றேன். . . . இன்றைக்கு நேரம் இல்லை. ஓர் அவசரகாரியமாய்ச் செட்டிநாடு போகிறேன். நாளன்று வருவேன். அன்றே ஸ்டேட்சுக்கு கிளம்புகி றேன். போகுமுன் எப்படியாவது உங்களுக்குச் சொல்லி விடுகிறேன். டெலிஃபோனில். . . அடடா இந்த டெலிஃபோன்காரர்கள் வேலை நிறுத்தம் செய்து கொண்டு இருக்கிறார்களே, டெலிஃபோனில் ஒன்றும் முடியாதே. . . என்று தயங்கியவர் மீண்டும் தொடர்ந்து சார் நீங்களே சற்று வந்து கேட்டுக் கொண்டீர்கள் என்றால். எனக்கு வசதி" என்று கூறினார்.

மனைவியின் முகத்தை ஒருதரம் பார்த்து விட்டு, "கட்டாயம் வருகிறேன். நீங்கள் சரியாக எத்தனை மணிக்குத் திரும்புவீர்கள்? என்று முறுவலுடன் வினவினார் சிவநாதன்.

அவர் திரும்பி வரும் நேரம், இங்கே தங்கப் போகும் இடம் பற்றிய விவரங்களைச் சொல்லச் சொல்ல அருகில் நின்ற காரியக்காரரிடம் குறித்துக் கொள்ளும் படி பணித்தார்.

உள்ளே சென்று, தட்டில் வெற்றிலைபாக்குடன் பணம் வைத்த உறையோடு புவனேசுவரி திரும்பவும், "என்னம்மா நீங்கள்? இந்த மாதிரி தருவதற்கு எனக்கு உலகம் முழுவதும் ஆட்கள் இருக்கிறார்கள். ஆனால் இந்த வீடு எனக்கு ஒரு சகோதரி வீடு போல. இங்கே நான் காசுக்கு வேலை செய்வதற்கு இல்லை" என்று கூறி வெற்றிலை பாக்கை மட்டும் கையில் எடுத்துக் கொண்டார்.

"வருகிறேன்" என்று கிளம்பியவர் சற்று நின்று, "மறவாதீர்கள், அம்மா. இன்று உங்கள் மகன் வாழ்வைத் தொடங்கக் கூடாது. எப்படியாவது தடுத்து விடுங்கள்" என்று மீண்டும் ஒருதரம் கூறிச் சென்றார் அவர்.

உதட்டைக் கடித்தவாறு கையிலிருந்த பைப்பை வெறித்தபடி நின்றவரை உசுப்பினாள் புவனேசுவரி. "என்ன நீங்கள், சும்மா நின்று கொண்டு இருக்கிறீர்களே, தனம் தங்கம். சொல்பேச்சு மீறுகிற பிள்ளையில்லை. உடனே கூப்பிட்டு இன்று வேண்டாம் என்று சொல்லி விடுங்கள் . . . அனேகமாய் இப்போது கோவையில் தானே இருப்பான் . . . அங்கே கூப்பிட்டுச் சொல்லி விடுங்கள்" என்றாள் பரபரப்புடன்.

அவளைக் கனிவுடன் நோக்கி, "எப்படிச் சொல்லுவது என்று தான் யோசித்துக் கொண்டு இருந்தேன்" என்றார் அவர் மெதுவாக.

"ஏன்? அப்பாவாக இருந்து கொண்டு இதைப் பற்றி மகனிடம் எப்படிப் பேசுவது என்று இருக்கிறதா? பரபா

யில்லை. தனா உங்களை ஒருநாளும் தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டான். அவன் ஒரு மாதிரிப் பிள்ளை என்றால் ஆசைப்பட்டு மணந்த பிறகும் அவளுக்கு அசதியாய் இருக்கும் என்று நேற்று ஒதுங்கிப் போவானா? அவன் நல்ல பையன். ஒரு வார்த்தை சொன்னால் உடனே கேட்டுக் கொள்வான். சீக்கிரம் பிறகு, அவர்கள் கோவையிலிருந்து கிளம்பிவிடப் போகிறார்கள் .." என்று அவசரப்பட்டாள் புவனேசுவரி.

"புவனி ... அவனிடம் எப்படியம்மா பேசுவது?"

"என்ன கேள்வி இது சின்னப்பிள்ளை மாதிரி? கோயம்புத்தூருக்கு ஒரு 'லைட்னிங் கால்' போட்டு டெலிஃபோனில்...டெலிஃபோனில்...டெலிஃபோன் இல்லையே! அவன் அப்போதே கிளம்பிவிட்டானே!, எப்படி அவனுக்குத் தெரிவிப்பது? ஒன்றும் தெரியாமல் என்பிள்ளை கெட்ட நேரத்தில் போய் . . ." மூச்சிரைக்க அவள் சோஃபாவில் தொப்பென விழவும், பதறிப் போய் மனைவியிடம் ஓடிவந்தார் சிவநாதன்.

"என்னம்மா, இது? தனஞ்சயனிடம் சொல்லி இன்றைய ஏற்பாட்டைத் தவிர்க்க வேண்டும். அவ்வளவு தானே. செய்கிறேன். இதற்குப் போய் இப்படி அலட்டிக் கொள்வானேன்? ம்? வசதியாய்ச் சாய்ந்து கொள். மாத்திரை வேண்டுமா?" பதட்டத்தை அடக்கிக் கொண்டு இயல்பாகப் பேச முயன்றார் அவர்.

ஈராண்டுகளுக்கு முன்பாக ஒருதரம் நெஞ்சுவலியென்று கட்டையாக விழுந்து, உறுதி சொல்ல இருபத்து நாலு மணி நேரம் தவணை வேண்டும் என்று டாக்டர் கூறி, அதுபோல மூன்று இருபத்தி நாலுமணி நேரத் தவணையை 'இன்டென்சிவ் கேரில்' கழித்து விட்டு புவனேசுவரி ஒருவாறு பிழைத்து எழுந்ததில் இருந்தே அவருக்கு எப்போதும் பயம் தான்.

இரண்டுநாள் சேர்ந்தாற்போல வீட்டில் தங்காமல், தொழில் தொழில் என்று பறந்து விமானமே வீடாகப் பழகிப் போயிருந்தவர் இப்போதெல்லாம் மாதத்தில்

நாலுநாள் வெளியூர் சென்றார் என்றால் அதிகம் நான். அதுவும் தீராது என்கிற போதுதான். கொஞ்சம் லாபம் குறைந்தாலும் பரவாயில்லை என்று மற்றவர்களி டம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, சென்னையில் இருந்தபடியே டெலிஃபோன் மூலம் தொழிலை நடத்திக் கொண்டிருந்தார்.

சிலகாலமாக மனம்திருந்திய மகன் தொழிலில் இறங்கவும் அந்த வகையிலும் அவர் ஓரளவு நிம்மதி யாக இருந்தார்.

இப்போது மனைவியின் முகம் வாடியது சகியாமல் தேற்ற முயன்றார்.

மாத்திரையை மறுத்து, "உங்களால் எப்படி முடியும்?' என்று கண்ணீர் விட்டாள் அவருடைய மனைவி.. அவ ருக்கு தாங்கவில்லை.

நிமிர்ந்து நின்று, "முயன்றால் முடியாதது என்று ஒன்று உண்டா, புவனி? கடவுள் புண்ணியத்தில் நம் மிடம் பணத்துக்குக் குறைவா? இப்போதே ஒரு விமானம் 'சார்ட்டர்' பண்ணுகிறேன். நேரே கோவை சென்று அங்கிருந்து அவர்கள் பின்னாலேயே காரில் ஊட்டிக் குப் போகிறேன். ஊட்டி போன கையோடு இரண்டு பேரையும் கைப்பிடியாக இங்கே அழைத்து வந்து விடுகி றேன். சரிதானா? எப்படியும் அவர்கள் ஊட்டியை அடைந்து ஒரு மணி நேரத்துக்குள் நானும் போய்விடு வேன். அதற்குள் ஒன்றும் பயம் இல்லையே?" என்று அவர் கண் சிமிட்டிக் கேட்கவும், முகம் தெளிந்து, "போங்கள்" என்று முறுவலித்தாள் மனைவி.

பெரிதாக அப்போது சொல்லி விட்டாரே தவிர, உள்ளூர அவருக்குக் கவலைதான். சென்னையில் ப்ளேன் சார்ட்டர் பண்ண முடியாது என்று அவருக்கு ஞாபகம். ஆனால் அதிர்ஷ்டவசமாக பெங்களூரில் இருந்து அப்படி வந்த விமானம் ஒன்று அப்போது சென்னை விமான நிலையத்தில் நின்று கொண்டி ருந்தது. அதை ஏற்பாடு செய்து கொண்டு கோவை

அடைந்தார். மிகவும் வேகமாகச் சென்றால் இரட்டிப்பு பணம் தருவதாகச் சொல்லி டாக்சி பிடித்தார்.

சென்னையை விட்டுக் கிளம்பிய போதிலிருந்து அவர் மனதில் இருந்த தயக்கம் ஊட்டி நெருங்க நெருங்க அவருக்கு அதிகமாயிற்று.

அவரது குறுக்கிடலை மகனும் மருமகளும் எப்படி எடுத்துக் கொள்ளக்கூடும்.

நாளாம், கிழமையாம்! படித்து என்ன பயன்? இதிலெல்லாம் தலையிடுவது என்றால் சரியான பட்டிக் காட்டு அநாகரீகங்கள் என்பாளா அபிராமி.

மரியாதை கருதி வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும் மனதில் நினைப்பது உறுதி அப்படி நினைத்தால் அவளைக் குற்றம் சொல்வதற்கும் இல்லை.

சொல்லப போனால் சிவநாதனுக்கே இது மாதிரி விஷயங்களில் அதிக நம்பிக்கை உண்டு என்பதற் கில்லை. ஆனால் புவனேசுவரி மிகவும் விரும்பும் எதுவும் அவருக்கும் ஒகேதான். சிற்றம்பல சுவாமிகள் பணத்திற்காகப் பேசுகிறவர் இல்லை என்பதால் அவரி டமும் ஒரு மரியாதை.

டாக்சிக்குப் பணம் கொடுத்து அனுப்பிவிட்டு, கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே வந்தவர் நேரே வீட்டின்புறம் செல்லாமல் பக்கவாட்டில் சற்று உட்புற மாய் அமைந்திருந்த தோட்ட வீட்டை நோக்கி நடந்தார்.

முதலில் தாமஸ் தம்பதியிடம் மகனும் மருமகளும் பற்றிச் சில விவரம் - எப்போது வந்தார்கள் என்பது போன்றவை கேட்டு அறிந்து கொண்டு உள்ளே போகலாம் என்று எண்ணிச் சென்றவருக்கு அந்தச் சிறுவீடு பூட்டிக்கிடப்பதைக் காணவும் சற்று வியப்பாயி ருந்தது. வீட்டைப் பார்த்துக் கொள்ளும் தாமசும் அவனு டைய மனைவியும் வசிப்பது இங்கேதான். அவர்கள் எங்கே போயிருக்கக் கூடும்? அதுவும் எசமான் வீட்டார் வந்திருக்கும் சமயத்தில்?

மாடியில் மகன் அறையில் விளக்கு வெளிச்சம் கண்ணாடி சன்னல் விழியே மங்கித் தெரிந்தது. யோசனையோடு வீட்டை நோக்கி நடந்தார் அவர்.

அழைப்பு மணியை அழுத்தி அலறவிட – அவருக்கு விருப்பம் இல்லை. உள்ளே அவருடைய மகனும் மருமகளும் என்ன மாதிரி இருக்கிறார்களோ என்று உள்ளூரக் கூசியபடியே மெல்லக் குரல் கொடுத்து மகனை அழைத்துப் பார்த்தார்.

பதில் இல்லை எனவும் அவருக்கு மனம் சற்றுத் தளர்ந்தது.

சென்னையிலிருந்து கையோடு கொண்டு வந்திருந்த சாவியால் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றால் ஆள் அரவமே இல்லை. தலையை அசைத்தபடி மெல்லப் படியேறினார்.

சென்னையில் இருந்து கிளம்புபோதே அவருக்குள் ஒரு தீர்மானம். ஒருகால் அவர் வந்து சேரும்போது அதிகத் தாமதமாகி விட்டிருந்தால் வந்த சுவடு தெரியாமல் அவரது அறைக்குள் போய்த் தங்கிக் கொள்ள வேண்டும். காலையில் பிள்ளைகளிடம் விவரம் சொல்லி, அவர் வந்த காரியம் நிறைவேறினாற்போலப் புவனேசுவரியிடம் நடிக்கச் சொல்லி, இருவரையும் அழைத்துக் கொண்டு கிளம்ப வேண்டும் என்ற முடிவோடு தான் வந்திருந்தார். அதற்காகவே சென்னையிலிருந்தே ஊட்டி வீட்டுச் சாவியையும் கையோடு கொண்டுவந்திருந்தார்.

தயங்கியபடியே ஓசையற்று மாடிப்படி ஏறியவர் காதில் ஒரு விம்மல் ஓசை – மிக மெல்லிய ஒலி விழுந்தது.

ஒருகணம் நின்றவர், இராது என்று எண்ணி மேலே சென்று மகன் அறையை அணுகினார்.

அங்கே கேட்ட சத்தம் அவர் எதிர்பாராததாக – எண்ணி வந்ததற்கு மாறுபாடாக இருக்கவே யோசனையோடு கதவின் மேல் கையை வைத்தார்.

கதவு உட்புறமாய்த் திறந்து கொள்ள, அங்கே தென் பட்ட காட்சி அவருக்குத் திகைப்பூட்டியது.

கதவு திறப்பதை உணர்ந்து திரும்பிய அபிராமி, மாமனாரைக் கண்டதும் கண்மூடித் திறப்பதற்குள் மின் னலாய் ஓடி அவர் காலடியில் விழுந்து விட்டாள், "என் னைக் காப்பாற்றுங்கள்" என்ற கதறலோடு.

மேலும் பிரமித்தவராய் நிமிர்ந்து மகனை நோக்கி னார் சிவநாதர்.

அவன் கல்லாய் இறுகியிருந்தான்.

காதல் கொண்டு மணந்த கணவன்! அவன் கையில் துப்பாக்கி ஏன்?

புதுமணத் தம்பதிகள் தேனிலவு அனுபவிக்க வந்த அறைக்குள், இந்த இரவு நேரத்தில் புருஷனுடைய நாலு நண்பர்களுக்கு என்ன வேலை?

மேசை மேல் இருந்த பாட்டிலும் ஐந்து கிண்ணங் களும் கூட அவரது கூரிய பார்வைக்குத் தப்பவில்லை.

அவரது வலது கை தானாக மருமகளின் தலையில் அபயகரமாய்ப் படிந்தது.

# 8

மின்சாரக் கணப்பு இதமான கதகதப்பை வீசிக் கொண்டு இருந்தபோதும் சோஃபாவின் ஒரு மூலையில் சுருட்டி மடக்கிக் கொண்டு உட்கார்ந் திருந்த அபிராமியைப் பார்க்கையில் சிவநாதனுக்குப் பரிதாபமாக இருந்தது.

குளிர் வெளியே இருந்து வந்தால் அதைக் கணப்பு போக்கி விடக்கூடும். ஆனால் அச்சம் நெஞ்சுக்குள்ளே குளிர் பரப்புகையில் அடுப்பின் மேலேயே உட்கார்ந் தால் கூட அந்தக் குளிர் மறைவது இல்லை.

அடுத்து என்ன செய்வது என்று அவருக்குப் புரிய வில்லை.

அவருடையது வசதியான குடும்பம் தான். ஆனாலும் அந்த அளவில் திருப்தி அடையாது, தந்தை தந்தைப் பலமடங்கு பெருக்கியவர் அவர். கோவையில் ஒரு மில், ஆந்திராவில் ஒரு சர்க்கரை ஆலை, திருச்சியில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை என்று புதுப்புதுத் துறை களில் நுழைந்து பெரிய வெற்றியும் பெற்றவர். மற்ற டைரக்டர்களாகட்டும், தொழிலாளிகளாகட்டும், அரசாங்க அதிகாரிகளாகட்டும், எல்லோரையும் வாய் சாலகத்தி னாலேயே வளைத்து விடுகிற அவரை இந்தச் சிறு பெண்ணின் முன்னே வாயடைத்து நிற்க வைத்து விட்டானே மகன்!

காலடியில் கிடந்தவளை எழுப்பி அழைத்து வந்து சோபாவில் அமரவைத்ததிலிருந்து அவள் அப்படியே தான் கிடக்கிறாள்.

மிகவும் சிரமப்பட்டு அவளைப் பேசவைதது மெல்ல மெல்ல அவர் கிரகித்து அறிந்த உண்மை சற்று நேரம் அவரையும் ஊமையாக்கிவிட்டது. சிறிது நேரத் தில் அவர் தன்னைச் சமாளித்துக் கொண்டார் என்றா லும், அபிராமியைத் தேற்றும் விதம் அவருக்குப் புரியவில்லை.

ஒரு நாள் கோபுரத்தில் ஏற்றி வைத்து விட்டு மறுநாளே தலைகுப்புறத் தள்ளிவிடுவது என்றால், அதுவும் சாக்கடைக்குள் தள்ள முயல்வது என்றால் இந்தப் பச்சை மண்ணால் எப்படித் தாங்க முடியும்? இந்த அதிர்ச்சியில் அவளுக்குப் பைத்தியம் பிடிக்காமல் இருப்பது கூட அதிசயம்தான்.

இனி புகுந்த வீடு என்கிற பேச்சுக்கூட அவளுக்குக் கசப்பாகத்தான் இருக்கும். பருந்து விரட்டிய கோழிக் குஞ்சு போல ஓடிப்போய் தாய் மடிக்குள் புகுந்து கொள்வதே பாதுகாப்பாகத் தோன்றும்.

ஆனால் புவனேசுவரி?

அவள் இதை எப்படித் தாங்குவாள்?

மகன் அறையில் காணக் கூடாத காட்சியைக் கண்ட வினாடியிலிருந்து அவரது பெரும் கவலை அதுதான். அபிராமியிடமிருந்து கிடைத்த விவரம் அந்தக் கவலையைப் பல மடங்கு பெருக்கிவிட்டது.

மகன் குடிக்கிறான் என்று அறிந்ததுமே கட்டையாக நீட்டி விட்டவள் இந்தப் பாதகம் தெரிந்தால் என்ன ஆவாள்?

அபிராமியின் அவலம் பெரிதுதான் என்றாலும் இளவயதின் ஆரோக்கியமும் வலிமையும் அவளுக்கு இருந்தன. இப்போது மலையெனத் தோன்றும் இந்தத் துயரம் காலப் போக்கில் மறந்து வேறு ஒரு நல்ல வாழ்வைக் கூட அமைத்துத் தர முடியும்.

ஆனால் அவருடைய அருமை மனைவிக்கு அந்த மாதிரி வரங்கள் எதுவும் இல்லையே. இளமை தாண்டி விட்ட வயது. ஏற்கனவே பலவீனமுற்றிருக்கும் இதயம். இது தெரிய நேர்ந்தால் அந்த உயிர் நிலைப்பது கூட சந்தேகமே.

இந்தச் சிறுமியின் காலில் விழுந்தாவது ...சுய நலம் என்று தெரிந்தும் வேறு வழி தோன்றாமல், "அம்மா, அபிராமி," என்று மருமகளை அழைத்தார்.

ஆனால் தூக்கிவாரிப் போட்டாற்போல அவள் மருண்டு விழிக்கவும் அவருக்கு மற்றது மறந்தது.

"படுத்துக் கொஞ்சம் தூங்கிப் பாரம்மா" என்றார் கனிவாக.

ஆனால் அவர் பேச்சில் அவளது கவனம் பதிய வில்லை. வேறு ஏதோ நினைவில் அவளது மெல்லுடல் குலுங்கியது.

ஒரு முடிவுக்கு வந்தாற்போல சிவநாதன் எழுந்தார் "பாரம்மா ஏதாவது சூடாகக் குடித்தால் தான் இந்தக் குளிர் குறையும். சமையல் அறையில் 'மில்க் மெய்ட் டப்பா இருக்கும். வென்னீர் கலந்து கொண்டு வருகி

றேன். உனக்குப் பால் வேண்டுமா, காஃபி வேண்டுமா?" என்று கேட்டவரிடம், "ஒ . ஒன்றும் வே . வேண்டா . . ம்" என்றாள் அவள் குரல் நடுங்க.

அவருக்குப் புரிந்து போயிற்று. "நான் சமையல றைக்குப் போகிறபோது அவன் வந்து விடுவான் என்று பயமா?" என்று கேட்டார்.

நடுங்கிய உதட்டின்மீது பற்களால் அழுத்திக் கொண்டு அவள் பேசாதிருக்கவும், " எழுந்திரும்மா" என்றார் சற்று அழுத்தமான குரலில்.

கதவு வரை அவளை நடத்திச் சென்றவர், "இனி இங்கே என்னை மீறி எதுவும் நடக்காது. ஆனால் அதை நம்புவது உனக்குக் கஷ்டம் தான்" என்று கூறி அறைக் கதவின் சாவியை உட்புற சாவித் துவாரத்தில் பொருத் தினார். "நான் வெளியே போனதும் உள்புறமாகப் பூட்டிக் கொள். சாவியை லேசாகத் திருப்பி, கதவி லேயே வைத்துவிட்டால் வேறு சாவியை நுழைக்கவும் முடியாது; இதை மறுபுறமிருந்து வெளியே தள்ளவும் முடியாது. நான் திரும்பி வந்து, 'மில்க்மெய்ட் பால்' என்று குரல் கொடுத்தால் மட்டும் திற. சரிதானா?" என்று அறையை விட்டு வெளியேறி, அவள் உள்ளே பூட்டிக் கொண்டதும் நடந்தார்.

சொன்னது போலவே வந்து சேர்ந்தார், சற்று விரைவாகவே.

ஒரு தரத்துக்கு இருமுறையாக அவர் அழைத்த பின்தான் அபிராமி கதவை லேசாகத் திறந்தாள். அவளது மிரண்ட விழிகள் அச்சத்துடன் வெளிப் புறத்தை அலசுவதைக் காணாதவர் போல உள்ளே வந்து கதவைப் பூட்டினார். அதட்டி மிரட்டி முழு கப் பாலையும் அவள் விழுங்கச் செய்தார். "ஒரு சோபாவில் படுத்து உறங்கு" என்று பணித்தார்.

இனித் தூங்கவே இயலாது என்று எண்ணியிருந்த வள், பாலில் தூக்க மாத்திரை கலந்திருப்பதை அறியா

மல், தனக்கு தூக்கம் வருவதை எண்ணி அதிசயித்த படியே உறங்கிப் போனாள்.

பைப்பைப் புகைத்தபடி சற்று நேரம் அமர்ந்திருந் தார், சிவநாதன். சுற்றி வரும் செக்குமாடு போல மனதில் ஒன்றையே போட்டுக் குழப்பிக் கொள்வதில் லாபம் இல்லை என்று உணர்ந்தவராக, தனது கைக்கடிகாரத் தில் 'அலாரம் செட்' செய்து கொண்டு, தானும் ஒரு தூக் கமாத்திரையின் உதவியோடு உட்கார்ந்திருந்த சோபாவிலேயே சாய்ந்து தூங்கினார்.

கைக்கடிகாரம் சரியாகக் காலை ஆறுமணிக்கு அவரை எழுப்பி விட்டது.

மருமகளின் அயர்ந்த தூக்கத்தைக் கண்டு திருப்தி யுற்றவராக சத்தமின்றிக் கதவை வெளியே பூட்டிக் கொண்டு சென்று சமையல் அறையில் சிலது தயாரித் தார். முன்னே நின்ற காரிலிருந்து அபிராமியின் பெட்டியை எடுத்து வந்தார். காலைக்காபி, ரொட்டி ஆம் லெட்டை உள்ளே கொணர்ந்து வைத்து விட்டு அசையத் தொடங்கியிருந்த அபிராமியை எழுப்பினார்.

எழுந்ததுமே முன்நாள் நினைவில் கலங்கத் தொடங்கியவளை, விரட்டிப் பல்துலக்கி வரவைத்தார். ஜக்கிலிருந்த சூடான காபியை அருந்த வைத்து, முட்டை யையும் ரொட்டியையும் உண்ண வைத்தார்.

முதலில் தன்னால் எதையும் விழுங்க முடியாது என்று மறுத்து விட்டு, மாமனாரின் வற்புறுத்தலுக்காக இரண்டு வாய் உண்ணலாம் என்று தொடங்கியவளுக்கு அப்போது தான் பசி தெரிந்தது. முன்தினமும் சரியாக உண்ணவில்லையே மடமடவென்று தட்டு காலி ஆயிற்று.

பசி, தூக்கம் இரண்டையும் எந்த நிலையிலும் தவிர்க்க முடியாது போலும்!

உணவு முடிந்தது. இனி?

மீண்டும் திகைப்பும் வேதனையுமாக நெஞ்சின் மீது இரும்பு குண்டு அழுத்தத் தொடங்கியது.

இனி என்ன செய்வது?

புகுந்த வீட்டில் இனி இருக்க முடியாது என்பது நிச்சயம்.

கனிவோடு காப்பாற்றிய மாமனார் மகனுக்குப் புத்தி கூறித் திருத்த முயற்சி செய்யக் கூடும். செய்வார் தான். ஆனால் அந்த மகன் பெற்றவரின் அறிவுரையை ஏற்றுத் திருந்துவான் என்று அபிராமிக்குத் தோன்றவில்லை.

அத்தோடு அவனை இனி எப்படி நம்புவது?

தகப்பனாரை நம்ப வைப்பதற்காக ஓர் ஆண்டு காலம் வேடம் போட்டதாகச் சொன்னானே, இப்போதும் பழிவாங்கும் வாய்ப்பு மீண்டும் கிடைப்பதற்காகத் திருந்திவிட்டாற் போல நடித்து இருவரையுமே அவன் ஏமாற்றலாம் இல்லையா?

ஓர் ஆண்டுகாலம் – பன்னிரண்டு நெடிய மாதங்கள், நெஞ்சினுள் கரம் வைத்து, வஞ்சினத்தை மறைத்து வேடமிட்டுப் பழிவாங்க முயன்றவன், பெற்றவரின் ஓரிரு வார்த்தைகளில் அந்த வன்மத்தை விட்டுவிடுவான் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனம். எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவில் தனஞ்சயனின் பார்வை படாத தூரத்துக்கு ஒதுங்கி ஓடிவிடுவதுதான் நல்லது. அவளைப் போலப் பிறவிகளுக்காகத் தானே, "வம்பு செறி தீங்கினார் தம் கண்ணில் படாத தூரத்தே நீங்குதல் நலம்' என்று அன்றே எழுதி வைத்திருக்கிறார்கள் . . .

தமிழில் எப்போதும் முதல் மார்க்கு வாங்குவது சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் நினைவு வந்தது. இந்தப் பாடலைப் படித்து என்ன செய்ய? தீங்கினார் யார் என்று தெரிந்து கொள்ளவே புத்தியில்லையே. அவனைக் கணவனாகக் கொண்ட பிறகல்லவா தீங்கு செய்வான் என்று தெரியவருகிறது. இனி ஓடுவதில் என்ன பெரிய சாமர்த்தியம்?

சாமர்த்தியம் இருக்கிறதோ இல்லையோ நெருப்பு என்று அறிந்தபின் அதிலும் அவளைப் பொசுக்கத் துடிக்கும் நெருப்பு என்பதை தெரிந்த பிறகு, விலகித் தான் ஆக வேண்டும். அப்படி ஓடிவிட இருக்கும் ஒரே இடம் அவளுடைய அப்பாவிப் பெற்றோரின் இல்லம் தான். தாயாரின் மடியில் முகம் புதைத்து ஒரு மூச்சு அழுதால் இந்த வலி குறையக் கூடும்.

ஆனால் இந்த விவரம் தெரியும் போது, பாவம், அவர்கள் என்னமாய் அதிர்ந்து போவார்கள்!

சட்டென ஒன்று நினைவு வந்தது. கண்ணில் நீர் வழிய முன்தினம் – முன்தினம் தானா, அது? – அன்னை சொன்னாளே, இந்த வயிற்றெரிச்சல், தீக்கண் என்று, அந்த அத்தை, பெரியம்மா இவர்களுக்கெல்லாம் இப்போது என்ன ஒரு கொண்டாட்டமாகி விடும்? அவர்களை நிமிர்ந்து பார்க்க முடியாமல் அம்மா அப்பா இருவரும் எப்படிக் குன்றிப் போவார்கள்!

தன் சொந்தத் துயரம் ஒருபுறம் இருக்க, பெற்றோரை எண்ணி மேலும் மனம் கசங்கினாள் அபிராமி.

அடுத்தது காட்டும் பளிங்குபோல உள்ளே நடப்பதை மறையாது காட்டிய மருமகளின் முகத்தையே கவனித்தவாறு இருந்த சிவநாதனும் மிகவும் குன்றித்தான் போயிருந்தார். தன் மனதில் இருப்பதை அநியாயத்துக்கு ஆளான இந்தச் சிறுபெண்ணிடம் வாய்விட்டுச் சொல்ல அவருக்கு அவமானமாகத் தான் இருந்தது. ஆனால் அதற்காக அவர் சும்மா இருந்து விட முடியாதே.

லேசாகத் தொண்டையைச் செருமி, தான் இருப்பதைக் காட்டிக் கொண்டார்.

அபிராமி திடுக்கிட்டு நிமிரவும், "என்னம்மா, இந்த மாமன் வீட்டார் இருக்கும் திசைக்கே ஒரு கும்பிடு போட்டுவிட்டு கண்காணாமல் ஓடிவிடத் தோன்றுகிறதா?" என்று வேடிக்கை போலப் பேசினார்.

பதில் சொல்லமாட்டாமல் அவளது பார்வை ...ம் தாழவும், "ஒன்று தெரியுமா, அம்மா? எனக்...

நினைவு தெரிந்ததில் இருந்து முதல் தடவையாக இப்போதுதான் எனக்குக் கடவுளிடம் முழு நம்பிக்கை வந்திருக்கிறது" என்று மீண்டும் தொடங்கினார் அவர்.

மீண்டும் அவளது கவனத்தை ஈர்க்க முடியவில்லை என்று அறிந்து, குரலைத் தணித்து, " நான் நேற்று இங்கே எப்படி வந்து சேர்ந்தேன் என்று நீ கேட்கவே இல்லையே, மருமகளே" என்று கேட்டார்.

மருமகளா? அவருடைய மகன்தான் அதை இல்லை என்கிறானே!

"சொல்லுங்கள்" என்றாள் மரியாதைக்காக, ஆனால் சோர்ந்த குரலில்.

"நேற்று மாலை வரை சென்னையில் இருந்தவன், இரவில், சரியாக அந்த நேரத்துக்கு இங்கே எப்படி வந்து சேர்ந்தேன் பார்! நான் வந்தேனா? கடவுள் என்னைக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறாரம்மா?" என்று வெகுவாக அதிசயித்தார் சிவநாதன்.

மெய்யாகவே அதிசயம்தான். அபிராமியும் தனஞ்சயனும் சென்னையை விட்டுக் கிளம்பியபோது வீட்டில் அவளுடைய பெற்றோருக்கு விருந்து உபசாரம் செய்து கொண்டு இருந்தார் அவர். அவர்களோடு விமானத்தில் வரவும் இல்லை. மாலை வரை சென்னையில் இருந்ததாகச் சொல்லுகிறவர் அவ்வளவு விரைவாக எப்படி இங்கே வந்து சேர முடியும்?

தன் பேச்சில் மருமகளுக்கு ஈடுபாடு வந்து விட்டதை உணர்ந்து, அவர் விவரம் சொன்னார். " சிற்றம்பலம் சுவாமிதானம்மா உங்கள் திருமணத்துக்கு நாள் குறித்துத் தந்தவர். அன்றைய தினத்தில் வேறு ஒரு திருமணத்தில் கலந்து கொள்வதாக வாக்கு கொடுத்து விட்டதாகவும், ஆனாலும் அந்த முகூர்த்தம் உங்கள் இருவரின் நட்சத்திரத்துக்கும் மிகவும் பொருத்தமான நாள் என்பதால் அன்றே திருமணத்தையும் மற்ற சடங்குகளையும் நடத்தி விடுமாறு சொல்லிவிட்டுச் சென்றார். சடங்கு என்றரே தவிர, 'சாந்தி முகூர்த்தம்' என்று குறிப்பிட்டுச் சொல்ல

வில்லை. அந்த வினாடியில் இருந்தே கடவுள் தன் வேலையைத் தொடங்கி விட்டாரம்மா".

இன்னமும் பேசத் தோன்றாத போதும் எப்படி என்று பார்வையால் கேட்டாள் அபிராமி.

"பாரம்மா, ஒருவேளை சாமியாராக இருந்து கொண்டு 'சாந்தி' பற்றி எப்படிப் பேசுவது என்று நாகரீகம் கருதியும் சிற்றம்பல சுவாமி அந்த வார்த்தையை விட்டுப் பேசியிருக்கலாம். ஆனால் அந்த வார்த்தையை அவர் சொல்லியிருந்தால் நாங்களும் அதற்கும் சேர்த்து ஏற்பாடு செய்திருப்போம். இந்தப் பயல் மறுநாள் உன்னோடு இங்கு வந்து என்ன செய்திருந்தாலும் தடுப்பதற்கு யாரும் வந்திருக்க முடியாது. ஆனால் அந்த ஒரு வார்த்தை விடுபட்டு விட்டதோடு, அவர் திருமணத்திலும் கலந்து கொள்ள முடியாமல் கடவுள் செய்ததால் தானே மறுநாள் உங்களை ஆசீர்வதிப்பதற்காக என்று மெனக்கெட்டு வந்திருக்கிறார்! அவர் வந்து, இப்படி விஷயம் என்று சொன்னதுகூட எவ்வளவு 'பர்ஃபக்ட் டைமிங்' பார்.

"நீங்கள் இருவரும் கிளம்புமுன் அவர் வந்திருந்தாலும் நமக்கு இந்த ஆபத்து பற்றி சமயத்தில் தெரியவராமலே போயிருக்குமே!

"மற்ற எல்லா பங்களாச் சாவிகளும் ஒரு செட் சென்னை வீட்டில் இருப்பதுதான. ஒருபோதும் அதை எடுத்து வந்தது இல்லை. இப்போது இந்த பங்களாச் சாவியை எடுத்துவரத் தோன்றியது பார்! கீழேயிருந்து நான் என்ன கத்தினாலும் பூட்டிய கண்ணாடி சன்னல் வழியே கேட்பதற்கு எவ்வளவு நேரம் ஆகுமோ! அதற்குள் என்ன ஆகியிருக்கும்!

"அந்தச் சார்ட்டர் விமானம்! அது கிடைத்தது லட்சத்தில் ஒரு வாய்ப்பல்லவா?!

"இங்கேகூட என்னைக் கொஞ்சநேரம் முன்னாகவோ பின்னாலேயே கொண்டுவந்து சேர்த்தாரா அந்தக் கடவுள்? சரியான நேரத்தில் – நேரம் என்பது

கூடச் சரியில்லை – சரியான வினாடியில், அந்த முட்டாள் தன் மட்டித்தனமான திட்டத்தை விலாவரியாக விளக்கிய பிறகு – விபரீதம் எதுவும் நடக்குமுன்பாக என்று கணக்காக அந்த வினாடியில் கொண்டு வந்து சேர்த்திருக்கிறாரே!"

அபிராமி சட்டென நிமிர்ந்தாள். அதுவரை, தன் இழப்பு, தன் பெற்றோர் அவமானம், தன் அவமானம் என்று தன்னிரக்கத்தில் மூழ்கி வருந்திக் கொண்டு இருந்தாளே தவிர, என்ன மாதிரி அவமானத்திலிருந்து எப்படித் தப்பினோம் என்று அவள் எண்ணிப் பார்க்கவே இல்லை! ஆனாலும் ...

அபிராமி நல்லவிதமாக சிந்திக்கத் தொடங்கிவிட்டாள் என்று எண்ணிய சிவநாதன், "இதிலிருந்து என்ன தெரிகிறது அபிராமி?" என்று கேட்டார்.

"எ .. என்னது மாமா?" என்றாள் அவள் தடைப்பட்ட ...லில்.

"கடவுள் உன்பக்கம் இருக்கிறார் என்பதுதான்" என்றார் அவர் உற்சாகமாக.

ஒரு துயரம் தோய்ந்த முறுவலுடன், "என் பக்கமா?" என்று நம்பிக்கையற்று கேட்டாள் மருமகள்.

"ஆமாம் அம்மா" என்றார் அவர் உறுதியோடு. "உலகத்தில் எத்தனையோ அநியாயங்கள் நடக்கின்றன. அவர்களில் எத்தனை நல்லவர்கள் காப்பாற்றப்பட்டு இருக்கிறார்கள் என்று நினைக்கிறாய்? உன்னைக் கடவுள் காத்திருக்கிறாரே! அத்தோடு அவர் உன் அத்தைக்கும் துணையிருக்கிறார்" என்று வாழைப் பழத்தில் ஊசி நுழைத்தார் சிவநாதன்.

அத்தைக்கு என்ன கஷ்டம் வந்து அதிலிருந்து கடவுள் காப்பாற்றி இருக்கக் கூடும்?

ஒரு வினாடி யோசித்துவிட்டுப், "புரியவில்லை" எனறாள் அபிராமி.

ஒரு பெருமூச்சுடன் பெரியவர் தொடங்கினார். "உன் அத்தை இருக்கிறாளேம்மா, அவள் மிகவும் மானஸ்தி. ஒரு வார்த்தை பொறுக்கமாட்டாள். எங்களுக்குத் திருமணமாகி பத்து ஆண்டுகள் கழித்துதான் தனா பிறந்தான் ... பிறக்காமலேயே இருந்திருக்கலாம். என்ன செய்வது. பிறந்துவிட்டான். அவன் பிறக்குமுன் யாரோ என்னவோ சொன்னார்கள் என்று தூக்க மாத்திரையை அள்ளி விழுங்கிவிட்டாள். கடவுளே! அப்பா, என்ன பாடுபட்டு பிழைக்க வைத்தோம் தெரியுமா? "இரண்டு ஆண்டுகளுக்க முன்பு ஒருதரம் கட்டையாக நீட்டிவிட்டாள். பிழைப்பாள் என்கிற வார்த்தை சொல்ல டாக்டர்கள் மூன்றுநாட்கள் எடுத்துக் கொண்டார்கள். ஏன், என்னவென்று எவ்வளவோ கேட்டும் என்னிடம் கூடச் சொல்லவில்லை. ஆனால் விசாரித்து நான் அறிந்து கொண்ட வரையில், மகன் குடிக்கிறான் என்பது அன்று அவளுக்குத் தெரிய வந்திருக்கிறது. மற்றவர்கள் மகனைப் பற்றி ஒரு சொல் சொன்னால் தாங்க முடியவில்லை என்று மட்டும் சொன்னாள் ..."

"உங்கள் மகனுக்குத் தாயாரிடம் மிகுந்த அன்பு உண்டு. இதை எடுத்துச் சொல்லி அவரை குடிப் பழக்கத்தை விடவைத்திருக்கலாமே நீங்கள்" என்று மனதில் தோன்றியதை மறையாமல் கேட்டாள் அபிராமி.

மீண்டும் பெருமூச்சு விட்டார் பெரியவர். "இன்னும் கொஞ்ச நாளில் தனத்தைப் புரிந்து கொள்வாயம்மா. அதன் பிறகு இந்தக் கேள்வி கேட்க மாட்டாய். தனஞ்சயன் அடுத்தவர் சொல்லுகிறார்கள் என்பதற்காக எதையும் ஏற்பதில்லை. அவனுக்காக அதில் நம்பிக்கை வந்தாக வேண்டும். அதுவரை மற்றவர் பேச்சு அவனை எட்டுவதே இல்லை" என்றார் மீண்டும் ஒரு பெருமூச்சுடன்.

இதைத் தெரிந்து கொள்ள இன்னும் கொஞ்சநாள் எதற்கு? நேற்று அவள் என்ன சொல்லியும் அவன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லையே!

மருமகள் சோர்வதன் காரணம் சிவநாதனுக்குப் புரியாமல் இல்லை. எனவே அதுபற்றிப் பேசாமல், "உன் அத்தைகூட அதனால்தான் மகனிடம் எதுவும் சொல்லுவது இல்லை, சொல்லித் தட்டுகிற அவமானம் நேர்ந்துவிடக் கூடாது என்று பார்ப்பாள்" என்று அத்தை பேச்சின் தொடர்பு அறுந்து விடாமல் பார்த்துக் கொண்டார்.

தொடர்ந்து அவரே, "மகனிடமே இவ்வளவு கவுரவம் பார்க்கிறவள் மற்றவர்களிடம் எவ்வளவு பார்ப்பாள்? யோசித்துப் பார் ... நேற்று மட்டும் தனா ஏதாவது ஏடாகூடம் செய்து விட்டிருந்தான் என்றால் அப்புறம், ஒன்று நீ உயிரை விட்டிருப்பாய்; குறைந்த பட்சம் இனிப் புகுந்த வீட்டில் ஒரு கணம் கூட இருக்கமாட்டேன் என்று உன் பெற்றோர் வீட்டிற்காவது போயிருப்பாய். இதில் எது நடந்தாலும் – அதன் மூல காரணம் தெரியாவிட்டாலும் கூட, மருமகளை வைத்துவாழத் தெரியவில்லை என்று நாலுபேர் சொல்வார்களே என்ற அவமானத்திலேயே ஏற்கனவே பலவீனமான அவளது நெஞ்சு நின்று விட்டிருக்கும்.."

மருமகளின் முகத்தைக் கூர்மையோடு கவனித்தபடியே சிவநாதன் சொல்லிக் கொண்டே போனார். "அப்படியெல்லாம் நேராமல் அவள் உயிரையும் கடவுள் காப்பாற்றி இருக்கிறாரே!"

கடவுள் தன் மனைவிக்கும் துணையிருக்கும் விதத்தை அவர் தெளிவு படுத்திவிட்டார். ஆனால் அபிராமி குழம்பிப் போனாள்.

அவர் சொன்ன விதமாக அவள் நினைக்கவில்லையே.

அவமானம் நேர்வதை விட உயிர் போய்விடுவது மேல் என்று மட்டும்தான் நினைத்திருந்தாள். வியத்தகு விதமாகத் தப்பிவிட்ட பிறகு பிறந்த வீட்டு நினைப்பு வந்தது. அப்போதுகூட அத்தையும் பெரியம்மாவும்

கெக்கலி கொட்டுவார்களே என்ற வேதனையோடு தான்.

ஆனால் மானம் காத்த மாமனார் சொல்வதைப் பார்த்தால், அவள் அம்மா வீடு சென்றால் அவளுடைய அத்தை காட்டுக்குப் போய்விடுவாள் போல் தெரிகிறதே! ஆனால் அதற்காகக் கூட ..

அபிராமி பேச வாயெடுப்பதைக் கவனியாதவர் போல "இப்போது பார், நீ ஆபத்திலிருந்து தப்பிவிட்டதால் அந்த நடவடிக்கைகள் எதற்கும் அவசியம் இல்லை; புவனிக்கும் ஆபத்தில்லை" என்று முடித்தார் அவர்.

அபிராமி முட்டாளல்ல, எதையும் ஆமாம் ஆமாம் என்று கேட்டுக் கொண்டிருக்க. அன்று கூட அந்த வைர மாலையைக் கண்டு உச்சி குளிர்ந்து போகாமல் சஞ்சலம் தான் கொண்டாள் – அப்பாவிடம் சொன்னதோடு நில்லாமல் அவளே விசாரித்திருந்தால் . . . ச்சு. அது பழைய கதை.

இன்று மாமனார் கோவையாக இயம்பியதில் இருந்த ஓட்டைகள் அவள் புத்தியில் படாமலில்லை. இன்றைய ஒருநாள் முயற்சி தோல்வியுற்றதாலேயே அவருடைய மகன் பசுப் போல சாதுவாகிவிடுவானா? அதனுடைய குகைக்குள்ளேயே வசிக்கத் தொடங்கிவிட்டால் அப்புறம் அந்தப்புலி தாக்காது என்று எப்படிச் சொல்கிறார்?

சிவநாதனை வெறித்துப் பார்த்தாள். சாதாரணமாக இருப்பது போலக் காட்டிக் கொண்டாலும் அவரது கண்களில் கவனமும் . . . கூடவே கவலையும் இருப்பதைக் கண்டாள்.

வினாடியில் அவளுக்குப் புரிந்து விட்டது. சிவநாதர் தன் மனைவிக்காகப் பார்க்கிறார். அவளது உயிருக்காக அஞ்சுகிறார். மனைவியிடம் எவ்வளவு பிரியம் இருந்தால் இந்த மாதிரிக் கொடூரத்தைக் கூடப் பூசி மெழுக முயற்சிப்பார்!

சட்டென மனம் இளகியது அவளுக்கு. "அது சாத்தியமில்லையே மாமா" என்றாள் மிருதுவான குரலில்.

'எது' என்று கேட்கவில்லை சிவநாதன். மருமகள் தன்னை இனம் கண்டு கொண்டாள் என்பது அவமானமாக இருந்தபோதும் கூடவே பெருமையாகவும் இருந்தது. அவள் அவருடைய மருமகள் அல்லவா!

"ஏனம்மா? பள்ளம் இருப்பது தெரியாதபோது விழுந்து விடுவது நடப்புதான். ஆனால் இப்படி ஓர் அபாயம் இருப்பது நமக்குத் தெரிந்து விட்டதால் நாம் சதா எச்சரிக்கையுடன் இருந்து உன்னைக் காப்பாற்றிக் கொள்ளலாமே" என்று வாதித்தார்.

தலையசைத்து மறுத்தாள் அபிராமி. "உங்கள் வீட்டில் இருந்து கொண்டு அது சாத்தியமல்ல மாமா. அத்தை . . அத்தைக்கு . ." என்றவள் மேலே எதுவும் சொல்லாதிருந்தாள்.

அந்த வீட்டில் இருந்து கொண்டு தனஞ்சயனைப் பிரிந்து இருந்தால் புவனேசுவரி கண்டு கொள்ள மாட்டாளா? பகலில்கூட சமாளிக்கலாம். இரவுகள்?

புரிந்து கொண்டு, "அதற்கு ஒரு வழி இருக்கிறது" என்றார் பெரியவர்." கேள் அபிராமி. சிற்றம்பல சுவாமிகள் நல்ல நாள் பற்றி அவரிடம் கேட்டுக் கொள்ள நேரில் வருமாறு என்னிடம் சொல்லியிருக்கிறார். நாளை போக வேண்டும். அவரைப் போய்ப் பார்ப்பது போலப் பார்த்துவிட்டு, சமீபத்தில் நல்ல நாளே இல்லையாம் - குறிப்பாக இவர்கள் இருவரின் நட்சத்திரத்துக்கும் ஜாதகத்துக்கும் பொருத்தமாக மாதக் கணக்கில் நல்ல நாட்களே கிடையாதாம். அவர் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம். அதுவரை ஜாக்கிரதையாக அவர்களைப் பிரிந்தே வாழச் சொல்லுங்கள்" என்று அவர் கூறியதாகப் புவனியிடம் சொல்லி விடுகிறேன் "... ஏனம்மா? பொய்யென்று அப்படிப் பார்க்கிறாயா? 'பொய்மையும் வாய்மை இடத்த

புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்' என்று வள்ளுவரே சொல்லவில்லையா?"

"இந்தப் பொய் எத்தனை நாள் தாங்கும், மாமா?"

"பலமாதங்கள். சிற்றம்பலம் வெளிநாடு சென்றால் திரும்புவதற்குப் பலமாதங்கள் பிடிக்கும்."

ஓர் இரவின் முதிர்ச்சியில் மாமனார் சிறுபிள்ளைத் தனமாகப் பேசுவது போல அபிராமிக்குத் தோன்றியது. முறுவலின் சாயலில் உதடு நெளிய, "அதன்பிறகு?" என்று கேட்டாள் அவள். அந்தப் பலமாதங்களுக்குப் பிறகும் இதே கதை தானே!

ஆனால் சிவநாதனுக்கு மிகுந்த நம்பிக்கை இருந்தது. "ஏழெட்டு மாதங்களில் எவ்வளவோ நடக்கலாம். அம்மா. இரண்டே நாட்களில் தலைகீழான வாழ்வு ஆறேழு மாதங்களில் நேராகி விடலாமே. இன்று உனக்கு நம்புவது கடினமாக இருந்தாலும் தனஞ்சயன் சுபாவமாகக் கெட்டவன் அல்ல மகளே. ரோஷக்காரன், உண்மை. கட்டுப்பாட்டுடன் இருக்கவேண்டிய வயதில் கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலை ஒன்று ஏற்பட்டு விட்டது. பலனாகக் குடிப்பழக்கம் . . அதைத் தொடர்ந்த நிதானமற்ற போக்கு உருவாகி விட்டது. ஒன்றைச் சிந்தித்துப் பார். என்னை நம்பவைக்க என்று வேடம் போட்டாலும் இந்த ஓர் ஆண்டுகாலம் மதுவைத் தொடாமல் இருக்கும் திடமும் அவனிடம் இருக்கிறது, பார் . . ."

அந்தத் திடம் தனஞ்சயனுக்கு வந்ததற்கான மூல காரணம் என்ன என்பதும் புரிந்ததால் அபிராமியின் மனம் மேலும் வாடிப் போயிற்று.

"இல்லை மகளே, நம்பிக்கையற்றுப் போகாதே. பெரிய கஷ்டம் தந்தாலும் காப்பாற்றவும் செய்ததால் கடவுள் அருள் இருக்கிறது என்பது நிச்சயம். அதற்கு மேல் நம்முயற்சியாக, இந்தப் பழிவாங்கு படலம் எவ்வளவு அருவருப்பானது என்பதை அவனுக்குப் புரிய வைத்து விட்டால் . . . ஏதோ ஒரு வகையில் அதைப்

புரிந்து கொள்ளும் வாய்ப்பு அவனுக்குக் கிட்டலாம். அப்படி அவன் திருந்திவிட்டால் அப்புறம் என்னம்மா?"

இவர் தன் மனைவிக்காக – மனைவியின் உயிருக்காக இங்கே போகாத ஊருக்கு வழி தேடுகிறார் என்று அபிராமிக்குத் தோன்றியது. ஆனால் அதற்காக அவரைக் குறைவாக எண்ணவில்லை; மாறாக, மனைவிமேல் இவ்வளவு அன்பு வைத்திருக்கிறாரே என்று உயர்வாகவே மதித்தாள்.

சற்றுநேரம் யோசித்துவிட்டு, "உங்கள் பிள்ளை திருந்துவார் என்று எனக்குத் தோன்றவில்லை. திருந்திவிட்டது போல நடிக்கக் கூடும் . ." என்றவளை இடைமறித்து, " இனி அவனை அவ்வளவு எளிதில் நான் நம்பிவிடுவேன் என்றா அம்மா, நினைத்தாய்? இனி தகுந்த முன்னெச்சரிக்கையும் பாதுகாப்பும் இல்லாமல உன்னை அவனோடு தனித்திருக்க விடுவேனா? அம்மா, அபிராமி, நான் உன் அத்தை உயிருக்காக அஞ்சுகிறேன் என்பது உண்மைதான். ஆனால் அதற்காக ஓர் அறியாப் பெண்ணைக் களப்பலி கொடுக்கும் அளவுக்கு நான் கயவனில்லை, மகளே. இனி நம் வீட்டில் எப்போதும் என் காவல் உனக்கு இருக்கும். அதை நம்பி நீ உன் வீட்டுக்கு வருவதானால் வரலாம். இல்லை என்று உன் பெற்றோர் வீட்டுக்குப் போவதாக முடிவு எடுத்தாலும் உன்னை நானே அங்கு கொண்டு விடுகிறேன் . . . ஆனால் . . . பாரம்மா, நான் உன்னை 'பிளாக்மெயில்' செய்வதாக எண்ணக் கூடாது. பெரிய இடத்தில் பெண்ணைக் கட்டிக் கொடுத்தோம் என்று உன் பெற்றோர் பெருமைப்பட்டுக் கொண்டு இருப்பார்கள். இந்த அவலத்தை எல்லாம் சொல்லி அவர்களை வேறு வருத்த வேண்டுமா? அதையும் யோசித்து முடிவு செய்" என்றார் சிவநாதன்.

என்ன சாதுர்யமாகப் பேசுகிறார்! இது நம் வீடாம், உன் வீடாம். அது உன் பெற்றோர் வீடாம். 'பிளாக்மெயில்' என்கிற பெரிய வார்த்தை வேண்டாம்தான். ஆனால் அவர்கள் மனநிலை பற்றி இவர் சொல்லித்

தான் ஆகவேண்டுமா? தன்னை மீறி உள்ளூரச் சிரிப்பு வந்தது அபிராமிக்கு.

"நானும் அங்கே போவதாகச் சொல்லவில்லை, மாமா. உங்கள் மகன் திருந்துவார் என்கிற நம்பிக்கை இல்லாவிட்டாலும், அத்தைக்காகவும் அவர்களிடம் நீங்கள் வைத்திருக்கும் அளவில்லாத அன்புக்காகவும் உங்கள் . . . நம் வீட்டுக்கே வருவதாகத் தான் சொல்ல இருந்தேன் .. அங்கே இருக்கப் போகும் சில மாதங்களில் உண்மைக் காரணத்தை வெளியிடாமலே எங்கள் பிரிவுக்கு மெள்ள அவர்களைத் தயார் செய்துவிட்டு அப்புறம் . . . அப்புறமாய் என் பெற்றோரிடம் போகிறேன்" என்றாள் ஒருவித அமைதியோடு.

சில வினாடிகள் சிவநாதர் எதுவும் பேசவில்லை. பிறகு, "நன்றி, அபிராமி. இந்த முடிவுக்காக நீ ஒரு நாளும் வருந்தும்படி நேராது. இது சத்தியம்" என்று உறுதி கூறிய போது அவரது குரல் தழுத்தழுத்தது.

# 9

"இனி நாம் கிளம்புகிற வேலையைப் பார்க்க வேண்டும், அபிராமி. அங்கே உன் அத்தை கவலைப்பட்டுக் கொண்டு இருப்பாள் . . ." என்று சிவநாதன் சொல்லிக் கொண்டு இருந்தபோதே கதவு தட்டப்பட்டது.

அப்படியே உறைந்து உடல் விறைத்தாள் அபிராமி.

எழுந்து அவள் அருகில் வந்து நின்று, அவள் தலையில் ஒருகையை ஆதரவாக வைத்து, " வரலாம்" என்று குரல் கொடுத்தார் பெரியவர்.

இருவரும் எதிர் பார்த்தது போல வந்தவன் தனஞ்சயன் தான். செக்கச் சிவந்திருந்த விழிகள் உள்ளே தென் பட்ட காட்சியில் மேலும் கடுத்தன. "அப்பா, இது

இவளுக்கும் எனக்கும் உள்ள விவகாரம். இதில் தலையிடுவது நல்லதல்ல" என்று ஆத்திரத்துடன் எச்சரித்தான்.

"யாருக்கு?" என்று நிதானமாகக் கேட்டுவிட்டு, சோஃபாவில் மருமகளின் அருகிலேயே அமர்ந்து கொண்டார் சிவநாதன்.

'பான்ட்' பாக்கெட்டில் விரல்களை நுழைத்துக் கொண்டு பெற்றவரை வெறித்துப் பார்த்தான் தனஞ்சயன்.

இரவு முழுவதும் அவன் ஒரு நிமிடம் கூட உறங்கவில்லை.

எத்தனை மாதங்களாக, எவ்வளவு புத்திசாலித்தனமாக, சின்னச் சின்ன விஷயங்கள் வரை யோசித்து அவன் உருவாக்கிய திட்டம்! வெண்ணெய் திரளும் போது தாழி உடைகிற மாதிரி, அவனது பழி வெற்றிகரமாகத் தீருகிற கடைசி வினாடியில் எல்லாம் தவிடு பொடியாவதா?

அவளை எப்படியெல்லாம் கதறடிப்பதாக இருந்தான்! பத்து எண்ணியதும் சுட்டுவிடுவதாகவே இல்லை. அவள் பாட்டில் சுலபமாகச் செத்து ஒழிந்துவிட்டால் அவன் பழி எப்படித் தீரும்? மரண பயம் முழுமையாக அவளைத் தாக்கி அவளது மனவலுவை அடியோடு அடித்தபிறகு அவளை ஓட ஓட விரட்டி, காலில் விழுந்து கெஞ்ச வைத்து, கடைசிக் காலம் வரை மறக்க முடியாதபடி ... ச்சு. என்னவெல்லாம் திட்டமிட்டு எல்லாம் ஒன்றுமில்லாமல் போவதா?

அவனால் தாங்க முடியவில்லை.

முதலில், எந்த விதத்திலும் எதிர்பாராத வண்ணம் தகப்பனாரை அங்கே கண்ட அதிர்ச்சியில் பிரமித்து நின்றுவிட்டான். அபிராமியை எழுப்பி அவர் தன்னோடு அழைத்துச் செல்வதைப் பிரமை பிடித்தவன் போலச் செயலற்றுப் பார்த்துக் கொண்டு நின்றான்.

ஆனால் உள்ளம் உலைக்களமாய்ப் பற்றி எரிந்தது.

பின்னோடு போய் அவரைப் பிடித்து அப்பால் தள்ளிவிட்டு, அந்த ராட்சசியை – அபிராமியைத் தரதரவென்று இழுத்துவந்து தன் உத்தேசத்தை நிறைவேற்றினால் என்ன என்று கூட ஒருதரம் அவனுக்குத் தோன்றியது.

ஆனால் அவரிடம் அந்த அளவுக்கு நேரடியாக மோதி அவனுக்குப் பழக்கம் இல்லை. விஷயத்தைச் சொல்வது என்றாலும் ஏது பழைய தலைமுறைப் புத்திக்கு – முப்பத்தைந்து வயது மூத்த புத்திக்கு இது புரிவது கூடக் கஷ்டம்.

நிதானமாக எடுத்துச் சொல்லிப் புரியவைக்கும் அளவுக்கு அவனுக்கு அப்போதும் பொறுமையில்லை. அவன் தான் சும்மாவே இரையை இழந்த புலியாய்த் துடித்துக் கொண்டு இருந்தானே, இதில் அமைதியாக நிதானமாகப் பேசுவது எப்படி சாத்தியம்?

அவனை ஆறுதல் படுத்த முயன்று, முடியாமல் ஒதுங்கிய நண்பர்கள் அவரவர் இருந்த நிலையிலேயே உறங்க தனஞ்சயன் மட்டும் கூண்டுப் புலியாய்க் குறுக்கும் நெடுக்கும் அலைந்து கொண்டிருந்தான் இரவு முழுவதும்.

விடிகாலையில் தான் சற்று அமர்ந்து யோசிக்க முடிந்தது. யோசித்து எடுத்த முடிவைச் செயலாற்றப் பெற்றவரிடம் வந்தால் அவர், அவள் தலையில் கைவைத்து 'அபயம்' போஸ் கொடுக்கிறார்!

ஆக, இந்த அம்மாள் தனக்குச் சாதகமாகத் தோன்றும்படி கதையைத் திரித்துக் கூறிமுடித்து விட்டாளாக்கும். இரண்டு சொட்டுக் கண்ணீரும் வடித்திருப்பாள். இந்த அப்பா அதை நம்பி, ஆதிமூலமே என்ற யானையைக் காக்க வந்த மகாவிஷ்ணு அவதாரம் எடுத்து விட்டார்!

ஒருதரம் - ஒரே ஒரு தடவை என்ன நடந்ததப்பா என்று மகனிடம் கேட்டாரா? அவன் பக்கத்து நியாயத்தைத் தெரிந்து கொள்ள ஒரு சின்னமுயற்சியேனும் செய்தாரா? அதுகூட இல்லாமல் ஒதுக்கிவிடத் தனஞ்சயன் என்ன பேட்டை ரவுடியா?

ஆனால் என்றைக்குமே தான் இந்த அப்பா அவனிடம் நியாயமாக நடந்து கொண்டதில்லையே. ஒரு கோடீசுவரரின் பிள்ளையாகவா அவனை வளர்த்தார்? மகனின் நல்ல செயல்களைக்கூட அவர் நல்லவிதமாய் ஏற்றதில்லையே. இன்று மட்டும் அந்த புத்தி எப்படி மாறும்?

அன்று குற்றாலத்தில் நடந்தது பற்றி அவரிடம் அமைதியாக விளக்க வேண்டும். எப்படி ஒரு கிஸ் - ஒரு சாதாரண முத்தம் - இந்தக் காலத்தில் ஒரு முத்தத்தில் என்ன இருக்கிறது? வெறும் கை குலுக்கல் மாதிரி, அவள் அழகாக இருப்பதைப் பாராட்டுவது போல ஒரு கிஸ் கேட்டதற்கு எப்படி அவனை அவள் கிட்டத்தட்ட மூடமாக்கினாள். அதனால் அவன் எவ்வளவு கஷ்டப்பட்டான்; அவள் எவ்வளவு திமிர் பிடித்தவள் என்பதை எல்லாம் நிதானமாக அவருக்குப் புரியும் படியாக எடுத்துச் சொல்ல வேண்டும் என்று எண்ணிச் சென்றவனுக்குப் பெற்றவர் கொடுத்த 'போசி'லேயே ஜிவ்வென்று சினம் தலைக்கேறியது.

அதற்கு மேல் நக்கல் வேறு.

"இந்தப் பெண்ணுக்கும் உங்களுக்கும் என்னை வைத்துத் தான் சம்பந்தம், அப்பா நினைவிருக்கட்டும்."

"அதெப்படி?"

சிவநாதன் வேண்டும் என்றே மகனைச் சீண்டுவது போல அபிராமிக்குத் தோன்றியது.

அவனிடம் துப்பாக்கி இருக்கிறது. நன்மை தீமை யோசிக்க முடியாத அளவு வெறி இருக்கிறது. மனைவி, அவள் ஒரு பெண் என்று பாராத மூர்க்கம் தந்தையிடம் மட்டும் தணியக் கூடுமா? அவளுக்கு நம்பிக்கை இல்லை.

ஆனால் சிவநாதனுக்கு அப்படித் தோன்றவில்லை போலும். ஏதோ பள்ளிச் சிறுவனை விசாரிப்பது போலக் கேட்டுக் கொண்டிருந்தார் அவர்.

"இவள் என் மனைவி" என்றான் அவன் சினம் மறையாத குரலில்.

"எப்படிச் சொல்லுகிறாய்? இவள் கழுத்துத் தாலியை நீ கட்டவில்லை; குங்குமம் இடவில்லை; ஓமத் தீயைக் கூட இவள் கையைப் பிடித்துக் கொண்டு சுற்ற வில்லையாமே! பிறகு எப்படியப்பா இவள் உன் மனைவியாவாள்?

வார்த்தை பிசகாமல் கொட்டிவிட வேண்டுமா? அபிராமியைப் பார்வையாலேயே சுட்டெரித்தான் தனஞ்சயன்.

"அப்பா, இவள் எனக்கு மிகப் பெரிய தீமை செய்தி ருக்கிறாள். படுகாயப்படுத்தியிருக்கிறாள். என் கை கிட் டத்தட்ட முடமாக இவள்தான் காரணம், அப்பா" என்று இழுத்துப் பிடித்த அமைதியுடன் தன்னிலை விளக்கத் தைத் தொடங்கினான் தனஞ்சயன்.

"தெரியும் அதையும் சொன்னாள்" என்றார் தந்தை சுருக்கமாக.

"தெரிந்துமா . .? அப்பா, இவள் என்னைக் கீழே தள்ளிக் கேவலப்படுத்தி இருக்கிறாள். என்னை அவமா னப்படுத்தியிருக்கிறாள் அப்பா." அவருக்குப் புரிய வைத்துவிடும் வேகத்தோடு பேசினான் மகன். ஆனால், "எனக்கு அப்படித் தோன்றவில்லையே" என்றார் தந்தை நிதானமாக. "உன்னை அதே நிலையில் வைத்தி ருந்து, யாரையாவது அனுப்பி போலீசையோ, மற்றவர்க ளையோ அழைத்து வரச் செய்து விஷயத்தை அம்பலப்படுத்தியிருந்தாள் என்று வை, அது அவ்மா னம் எனலாம். என்னைப் பொறுத்த வரையில் அபிராமி உனக்கு அறிவு புகட்ட முயன்றதாகவே தோன்றுகிறது. உனக்கும் ஓர் அக்கா தங்கை இருந்திருந் தால் இது உனக்கு முன்பே புரிந்திருக்கும். இந்த மாதிரி

ஒரு பிழைக்குத் துணிந்திருக்கவும் மாட்டாய். ஆனால் உனக்குத் தான் அந்தக் கொடுப்பினை இல்லையே. அதுவே அபிராமியின் துரதிர்ஷ்டமாகவும் ஆயிற்று" என்றார் பெரியவர் வரண்ட குரலில்.

இவரிடம் உபதேசம் கேட்கவா தனஞ்சயன் வந்தான்? "அப்பா!" என்றான் ஆத்திரத்துடன். "இந்தக் கையைப் பாருங்கள். தண்ணீராகச் செலவு செய்ய நம் பணம் இல்லை என்றால் இந்தக் கைகளே போயிருக்கும். அப்புறம் என் நிலைமை என்ன ஆகியிருக்கும்? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். நாமெல்லாம் ஏசுபிரா னில்லை. உங்களை ஒருவன் அடித்தால் திருப்பிக் கொடுக்காமல் இருப்பீர்களா?" என்ன வேண்டுமானா லும் செய் என்று அபிராமியை அவனிடம் அவர் ஒப்படைக்கும் வரை அவன் விடுவதாக இல்லை.

"திருப்பிக் கொடுப்பேன் தம்பி. நிச்சயமாகத் திருப் பிக் கொடுப்பேன். ஆனால் நேருக்கு நேராகச் சம சண் டையில். இப்படி அனாதரவாய்ப் பிரித்துவந்து ஐந்து நடிக்கழுதைகளாய்ச் சேர்ந்து ஒரு சின்னப்பெண்ணை அவமானப்படுத்த முற்படமாட்டேன் என்கிறபோது" என்றார் அவர் இகழ்ச்சியாக.

எண்ணெயில் போட்ட அப்பம் மீண்டும் குதித்தது. "எனக்கும் மூளை இருக்கிறது அப்பா. எவ்வளவு யோசித்து, எப்படித் திட்டம் போட்டேன் தெரியுமா?" என்று மகன் பேசவும் அவர் பொங்கிவிட்டார்.

"என்ன யோசித்து என்ன திட்டம் போட்டாயடா? இடியட், மானங்கெட்ட திட்டம். மூளை வேறு இருக்கிற தாமா? இந்த லட்சணத்தில் உனக்கு வால் பிடிக்க நாலு மடையர்கள் வேறு. நேற்று அந்த நேரத்தில் நான் இங்கே எப்படி வந்தேன், தெரியுமாடா உனக்கு? உங்கள் இருவ ரின் பிறந்த நேரத்துக்கும் நேற்று இணைவது நல்லது இல்லை என்று சிற்றம்பலம் வந்து சொல்லவும் உன் அம்மா ஒரேயடியாகப் பதறத் தொடங்கிவிட்டாள். அதைத் தடுக்க, 'சார்ட்டர்ப்ளேன்' வைத்துக் கொண்டு

பறந்து வந்தேன். வந்த பலன் குடும்ப மானம் கப்பலேறா மல் தடுக்க முடிந்தது. இந்தத் தங்கத்தையும் காப்பாற்ற முடிந்தது.

"தங்கமா? இவளா? ஒரேயடியாக உருகாதீர்கள். அந்த அளவு தகுதி இவளுக்கு இல்லை" என்றான் தனஞ் சயன்.

மகனை வெறித்து விட்டு, "முந்தாநாள் திருமணத் துக்கு எத்தனை பேர் வந்தார்கள் தெரியுமாடா? இரண்டு வேளையும் சேர்த்து சுமார் ஐயாயிரம் பேர். இந்த ஐயா யிரம் பேருக்கும் இவள் என் மருமகள். உன் மனைவி. இவளுடைய கவுரவம் காப்பது நம் கடமை" என்றார் சிவ நாதன்.

"என்னைப் பொறுத்தவரையில் அது திருமணமே இல்லை. ஐயாயிரம் பேர் முன்னிலையில் என் வெற்றிக் காகப் போடப்பட்ட நாடகம். அவ்வளவுதான்" என்றான் மகன் அலட்சியமாக.

"உன் நண்பர்கள்?"

"அவர்களுக்கும் அப்படித்தான்"

"ஓகோ!" என்ற சிவநாதனின் பார்வையில் வெறுப்பும் கோபமும் மிகுந்திருந்தன. "இதை நன்றாகக் கேட்டுக் கொள். உன்னிடமோ, உன் நண்பர்களிடமோ முகம் கொடுத்துப் பேச எனக்கு விருப்பம் இல்லை. என் வீட்டுக்குள் நுழையாதே என்று கூடச் சொல்லி விடுவேன். ஆனால் அங்கே ஒரு ஜீவன் இருக்கிறதே. தன் மகன் உலகமகா உத்தமன் என்று எண்ணி மகிழ்ந்து கொண்டு நண்பர்களோடு சேர்ந்து பஞ்ச பாண்டவர் கள் போல ஐந்து ரத்தினங்கள் என்று நம்பி ஏமாந்து கொண்டு இருக்கிறாளே உன் அம்மா. அவளுடைய உயிர் உடலில் ஒட்டிக் கொண்டு இருக்க வேண்டும் என் பதற்காக உன்னைச் சும்மா விடுகிறேன். வா. வழக்கம் போல வீட்டில் இரு. ஆனால் அபிராமியிடம் ஏதாவது ...ப்பு தண்டாவுக்குப் போனாய் என்றால் மகன் என்று

பார்க்க மாட்டேன். ஜாக்கிரதை" என்று கடுமையான குரலில் மகனை எச்சரித்தார் அவர்.

"எவளோ ஒருத்திக்காக என்னை ஒதுக்குகிறீர்கள், அப்பா."

"எவளோ ஒருத்தி அல்ல, என் மகள். திருமணத்தினால் வந்த மருமகளோ, மனத்தினால் வந்த மறுமகளோ, எப்படியும் அவள் எனக்கு மகள்தான். தத்து புத்திரி. என் மகளுக்குத் தகுதியான அத்தனை அதிகாரமும் அந்தஸ்தும் என் வீட்டில் அபிராமிக்கு உண்டு. அதை மதித்துத் தான் அங்கே நடந்தாக வேண்டும். இல்லாவிட்டால் . . ." என்றார் அவர் மிரட்டலாக.

அவன் அதை மதித்தால் அல்லவோ? "இல்லாவிட்டால் என்ன, அப்பா? என்னை வீட்டை விட்டுத் துரத்தி விடுவீர்களா? அப்புறம் அம்மாவிடம் என்ன சமாதானம் சொல்லுவீர்கள்?" என்று அவரது உயிர்நிலையைப் பிடித்தான் தனஞ்சயன்.

அவர் சற்று அயர்ந்து நிற்கவும், "முதலும் முடிவுமாகச் சொல்லுகிறேன் அப்பா. அபிராமி என் சொந்த விஷயம். இதில் தலையிடாமல் ஒதுங்கிக் கொள்வது உங்களுக்கு நல்லது" என்று தன் பங்குக்கு எச்சரித்தான் மகன்.

மகனை வெறித்துப் பார்த்துவிட்டு, "போடா சீ. நல்லது கெட்டது, மான அவமானம், மதிப்பு, மரியாதை எதுவும் தெரியாத முட்டாள்" என்று வெறுப்புடன் திரும்பினார்.

முகம் கறுத்தது தனஞ்சயனுக்கு "அப்படியானால் நீங்கள் கவுரவமாக ஒதுங்கிக் கொள்ளப் போவதில்லை!"

"அர்த்தம் தெரியாவிட்டாலும் கவுரவம்' என்கிற ஒரு வார்த்தை இருப்பதையாவது தெரிந்து வைத்திருக்கிறாயே. அந்த மட்டில் சந்தோஷம்" என்று சிவநாதன்

மேலும் வெறுப்பேற்ற, தனஞ்சயனின் கைமுற்றி இறுகு வதை அச்சத்துடன் கவனித்தாள் அபிராமி.

இவன் தந்தையிடம் கை ஓங்கிவிடுவானோ? மாட்டான் என்று என்ன நிச்சயம்! முந்தின இரவுக்குப் பிறகு இவனுக்குச் செய்யத் தகாதது என்று ஒன்றுமே இராது என்றுதான் அபிராமிக்குத் தோன்றியது.

ஆனால் சிவநாதனுக்கு அப்படிப் பயம் ஒன்றும் தோன்றவில்லை போலும். தொடர்ந்து அலட்சியம் காட்டியே பேசினார். "காரில் சாவி இருந்தது. உன் சாமான்களை வெளியே எடுத்து வைத்திருக்கிறேன். அபிராமியும் நானும் இப்போதே காரில் கிளம்புகி றோம். இந்த ஏமாற்றத்தில் மகனுக்கு மிகுந்த மனவருத் தம். நண்பர்களை வரவழைத்து அவர்களோடு ஒரு வாரம் பத்து நாள் சுற்றி அலைந்து மனம் சரியான பிறகு தான் வருவான் என்று உன் அம்மாவிடம் சொல்லப் போகிறேன். மற்றதை அந்தப் பூஞ்சை மனம் தாங்காது. அவளிடமேனும் கொஞ்சம் அன்பிருந்தால் நீயும் அதற்கு ஏற்ப நடந்து கொள்வாய் என்று நினைக்கி றேன். அபி, நீ கிளம்பம்மா." என்று அவள்புறம் திரும்பி யவர், அதற்குமேல் மகன் அந்த அறையில் இல்லாதது போலவே நடந்து கொண்டார்.

மனதை அடிப்பதில் இவரும் சூரர்தான் என்று எண்ணிக் கொண்டாள் அபிராமி. என்ன மாதிரி அலட் சியம் காட்டுகிறார்!

கதவு நிலையை முட்டுவது போல உயரமாகத் தனஞ் சயன் அறையினுள் வந்தபோது அவன் முகத்தைப் பார்த்ததோடு சரி, அதன்பின் அபிராமி தன் பார்வையை அவனது முகத்தளவுக்கு உயர்த்தவே இல்லை.

இப்போது, "அதை என்னிடம் கொடம்மா" என்று சூட்கேசை மாமனார் வாங்கிக் கொண்டு நடக்க, 'கிட்பா' குடன் அவரை ஒட்டியவாறே நடந்த அவளுக்குக் கதவரு

கில் நின்ற கணவனை நெருங்க நெருங்க ஒரே திகில் தான்.

தப்பு சரி தெரியாத அவன் இப்படி இப்படி நடந்து கொள்ளக் கூடும் என்கிற வரை முறையே இல்லையே!

அவனோ பலசாலி. அவளை அருகில் கண்டதும் ஆத்திர வெறியில் பெற்றவரையே பிடித்துத் தள்ளி விட்டு அவளை இழுத்துச் சென்று ஏதாவது செய்துவிட்டால்..?

நெஞ்சுக்குள் ரயில் ஓட ஒருவாறு கடந்து சென்று காரில் ஏறிய பிறகு தான் அவளுக்குச் சீராக மூச்சு விட முடிந்தது.

சீராக மட்டும் தான். சந்தோஷமாக அல்ல.

# 10

கார் கிளம்பி, காம்பவுண்டைத் தாண்டும்போது லேசாகத் திரும்பி வீட்டைப் பார்த்தாள் அபிராமி.

அங்கிருந்து துப்பாக்கியை நீட்டி, கார்டயரைக் சுட்டு ஓடி வந்து அவளது பயணத்தை யாரும் தடுத்து நிறுத்த வில்லை. வீட்டில் ஆள் இருக்கும் அடையாளம் கூடத் தெரியவில்லை.

அப்படியானால் மெய்யாகவே எந்தவித அவமான மும் நேராமல் அவள் தப்பிவிட்டாள்!

உடம்பில் இருந்த சக்தியெல்லாம் வடிந்து விட்டாற் போலச் சற்று நேரம் ஓய்ந்து கிடந்தாள், அவள். அலட்டிக்கொள்ளாமல் காரோட்டிய மாமனார் பெரிய ஹீரோ போலத் தோன்றியது. இளைஞர்கள் ஐந்து பேர். தைரியமாக எதிர்த்து நின்று அவளை மீட்டுச் செல்கிறாரே!

காரில் மலையிலிருந்து இறங்கும் போதும் உணவை முடித்துக் கொண்டு விமானத்துக்காக் காத்தி

முக்கியம் என்று அவர் படித்துப் படித்துச் சொன்னது. புவனேசுவரிக்கு இங்கு நடந்த எதுவும் தெரியலாகாது என்பதுதான். "ரொம்பவும் பூஞ்சை மனம்" அம்மா. ஒரு சொல் - அதுவும் பிள்ளையைப் பற்றி என்றால் தாங்கவே மாட்டாள். இதற்காகவே நான் சொந்த பந்தங்கள் என்று யாரும் வீட்டில் வந்து தங்கி டேரா போடுவதை ஊக்குவிப்பதில்லை. வருகிறவர்கள் சும்மா சாப்பிட்டு விட்டுப் போகாமல் இச்சகம் பேசுவதும், தங்களை வேண்டியவர்களாகக் காட்டிக் கொள்ள மற்றவர்களைப் பற்றி அவள் உன்னை இப்படிச் சொன்னாள், இவன் உன் மகனை அப்படிச் சொன்னான் என்று வம்பு பேசுவதுமாய் புவனியின் நிம்மதியைக் கெடுத்துவிடுவார்கள். இவளுக்கோ, யார் என்ன சொன்னால் என்ன வந்தது என்று விடத் தெரியாமல் மனதோடு உடம்பையும் கெடுத்துக் கொள்வாள். அதனாலேயே நான் எங்கும் செல்வதும் இல்லை. முடிந்த அளவு வீட்டிற்கு வரவிடுவதும் இல்லை. அதனால் உறவினர், விருந்தாளிகள் பிரச்சினை என்று ஒன்றும் இராது.

"தனஞ்சயன் வந்த பிறகு விருந்துக்கு அழைப்புகள் வரக்கூடும். அப்படி எதற்கும் அவனும் நீயுமாகச் செல்லும்படி வராமல் நானே தடுத்து நிறுத்தி விடுகிறேன்.

"இந்தப் பழி வாங்கல் விஷயம் அவ்வளவையும் முடிந்தவரை மறந்து விட்டு ஒரு சாதாரண மருமகள் மாமியாரிடம் எப்படி நடந்து கொள்வாளோ, அதுபோல நடந்து கொள். புவனி உன்னிடம் அன்பாக இருப்பாள் என்பதில் சந்தேகம் இல்லை. பாம்பு தேளிடம் கூடப் பரிவு காட்டுகிறவள் அவள். "கொல்லாதீர்கள். பிடித்து எங்காவது கொண்டுபோய் விட்டு விடுங்கள்" என்பாள். உன் குணத்துக்கு உன்னிடம் உயிராகி விடுவாள் என்பது நிச்சயம். உனக்கும் அவளைப் பிடித்துப் போய் விடும் அம்மா.

"தனஞ்சயன் திரும்பிவரும் வரை . பிரச்சினை இல்லை. அதன் பிறகும் அவனோடு நீ தனித்து இருக்கும் சூழ்நிலை நேராமல் நான் பார்த்துக் கொள்கிறேன். கூடவே. . ஒரு சாவி வளையம் வாங்கித் தருகிறேனம்மா. அதை எப்போதும் இடுப்பில் சொருகிக்கொள். அதன் உட்புறமாய் ஒரு கூர்மையான சிறுகத்தியை வைக்கும் மாதிரியில் செய்யச் சொல்லி, கத்தியை வைத்துவிடுகி றேன். சக்தியை மீறுகிற சமயம் வந்தால் – வராது என்று ஒரு நம்பிக்கை. இருந்தாலும் அப்படி ஒரு சந்தர்ப்பம் வந்தால் தயங்காமல் கத்தியைப் பயன் படுத்தி விடு.

"அப்புறம். . . துப்பாக்கி சுடத் தெரியமா?"

"கொஞ்சம். என்.சி.சி.யில் பயிற்சி கொடுத்தார்கள்."

"குட். ஒரு சிறு துப்பாக்கியும் வாங்கித் தருகிறேன் சுடவும் கற்றுத் தருகிறேன். எப்போதும் கைப்பையில் கூடவே வைத்துக் கொள்.... என்னம்மா, அப்படிப் பார்க்கிறாய்? கத்தி, துப்பாக்கி என்றால் பயமாக இருக்கிறதா? எல்லாம் சும்மா ஒரு பாதுகாப்புக்குத்தான். . மற்றபடி. . . எனக்கு இன்னமும் நம்பிக்கை இருக்கிறது, மகளே. தனா நிச்சயம் திருந்தி விடுவான் என்று முழுமையாக நம்புகிறேன். அப்படி ஒருநாள் அவன் திருந்தி வரும் போது அவனை வெறுக்காமல் ஏற்றுக் கொள்வாயா, அம்மா?" என்று கேட்டார் பெரியவர்.

மனம் திருந்தி வருந்துகிறவர்களை மன்னிப்பது மனிதத்தன்மை, இப்படிக் கேட்கிறாரே என்று எண்ணியவாறே அவரை ஏறிட்டுப்பார்த்தாள் அபிராமி.

ஆனால் அந்தப் பார்வையை மாறாகப் புரிந்து, "உன் அனுபவம் வேறுமாதிரி சொன்னாலும் அவன் கொடியவன் என்று இல்லையம்மா. திருந்தமாட்டான் என்று கை கழுவுற அளவு மோசமில்லை", என்றார் அவர்.

ஏதோ நினைவு வர "ஆமாம் மாமா" என்றாள் மரும கள்.

"ஓர் ஆண்டு காலம் திட்டமிட்டு செய்த வேலை எல்லாம் வீணாகிற நேரத்தில் கூட உங்களிடம் அவர் மரியாதைக் குறைவாக நடந்து அவரது எண்ணத்தை நிறைவேற்ற வில்லை. எங்கள் பக்கத்து வீட்டில், படிக்க சொல்லித் திட்டியதற்காக ஒரு பையன் தன் நண்பர் களோடு சேர்ந்து வந்து பெற்ற தகப்பனாரை அடித்துப் போட்டு விட்டான். ஐந்து இளைஞர்கள் சேர்ந்திருந்த போதும் தன் திட்டத்தைச் சீர்குலைத்த உங்களிடம் அவர் பலத்தைக் காட்டவில்லையே," என்றாள்.

"ஆமாமம்மா. அதுதான் விஷயம். ஆனால் இவ்வ ளவு கூத்து நடத்திவிட்டானே என்று உனக்கு அருவறுப் பாகி விட்டதோ என்று கவலையில் கேட்டேன், மகளே," என்றார் அவர்.

மனதால் 'வந்த மறுமகள்' என்று அவர் கூறியது நினைவு வர அபிராமியின் கண்கள் பனித்தன. கவலைப் படாதீர்கள், மாமா" என்றாள் அவள் இதமாக.

என்னவோ தன்னுடைய குற்றம்போல அவளைக் கண்டதும் "சாரிம்மா" என்று புவனேசுவரி மன்னிப்புக் கேட்டபோது முதலில் அபிராமியால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. என்னமாதிரித் துன்பத்திலிருந்து காப் பாற்றியிருகிறாள் என்பது தெரியாமல் மருமகளின் மகிழ்ச்சியைக் கெடுத்து விட்டது போல எண்ணி மன் னிப்புக் கேட்கிறாளே!

"நீங்கள் செய்தது நல்லதாகிப்போயிற்று" என்று சொல்ல வாயெடுத்துவிட்ட பிறகே மாமனாரின் எச்ச ரிக்கை நினைவு வர " நீங்கள் செய்தது, நல்லதற்காகத் தான் இருக்கும் என்று எனக்குத் தெரியும், அத்தை" என்று மாற்றிக் கூறி சமாளித்தாள்.

"நல்ல வேளை! நீ புரிந்து கொண்டாயம்மா" என்று கூறி, மருமகளின் கன்னத்தை வருடியவளின் பார்வை மகனைத் தேடி ஏமாந்தது. "தனா எங்கேம்மா?"

ஒன்றும் சொல்லமாட்டாமல் அவள் கலங்குகையில் சிவநாதன் உதவிக்கு வந்தார். " அவனைத் தெரியாதா, புவனி? நினைத்ததை நடத்திப் பழக்கப்பட்டவன், கொஞ்சம் கோபம் வந்து விட்டது. விவரமாகச் சொன்ன பிறகு, சரி, என் நண்பர்களோடாவது பத்து நாள் இங்கே சுற்றி விட்டு வருகிறேன். என்றான் சரிதானென்று அவர்களுக்குத் தகவல் கொடுத்துவிட்டு வருகிறேன்." என்றார் அவர்.

ஆனால் நடந்தது வேறு. விமான நிலையத்திலிருந்து நேராக அவருக்கு பழக்கப்பட்ட நகைக் கடைக்குப் போய் அவர் சொன்னமாதிரி அமைப்பில் சாவி வளையத்துக்கு 'ஆர்டர்' கொடுத்தார்.

மிகச் சிறிய துப்பாக்கியும், அதற்கு லைசன்சும் வாங்க ஏற்பாடு செய்தார்.

அதன் பிறகுதான் வீடு திரும்பி வந்தனர்.

அவளுக்கென்று ஒரு துப்பாக்கி, அதுவும் கணவனுக்கு எதிராக அவளது பாதுகாப்புக்காக என்று எண்ணி மனதுள் வருந்தினாள் அபிராமி.

ஆனால், "இதெல்லாம் வெறும் வருமுன் காப்பான் நடவடிக்கைதான் அபிம்மா. இதில் எதையும் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுத்தான் தீரும் என்பதற்காக எதையும் செய்யவில்லை. வெறும் முன்னச்சரிக்கை வேலை அவ்வளவுதான். அதற்குள்ளாகவே அவன் தன் முட்டாள் தனத்தை உணர்ந்து நல்லபடி ஆகி விடுவான் என்றுதான் எனக்கு உறுதியாகத் தோன்றுகிறது என்று மருமகளின் மனதைப் படித்தவர் போல சிவநாதர் கூறவும் ஒருவாறு நிமிர்ந்து அமர்ந்தாள் அவள்.

அபிராமிக்கு வீட்டில் பொய் சொல்லிப் பழக்கம் இல்லை. தப்பே செய்து விட்டால்கூட உண்மையை ஒத்துக் கொண்டு விட்டால் மன்னித்து விடும் பெற்றோர், பொய் சொன்னது தெரிந்தால் பிரம்பைக் கையில் எடுத்து விடுவார்கள்.

அப்படி வளர்ந்து விட்டு இப்போது முழுக்க முழுக்க மாமியாரிடம் பொய்யில் வாழ வேண்டிய கட்டாயம் அவளுள் கவலையை உண்டாக்கியது.

எடுத்த எடுப்பிலேயே எண்ணியதைச் சொல்லத் தொடங்கிப் பின் சமாளிக்கும்படி ஆகிவிட்டது. இன்னும் இப்படி எத்தனையோ! என்னேரமுமா மாமனார் துணை வரமுடியும்?

சிவநாதன் சொன்னதுபோலவே அபிராமிக்கு அவளுடைய மாமியாரை மிகவும் பிடித்துப் போயிற்று. பெற்ற தாயாரைப் பிரிந்திருக்கும் உணர்வே இல்லாமல் போயிற்று.

திருமணதினத்திலிருந்தே – குறிப்பாக சொல்வ தென்றால், அன்றைய வரவேற்பு விழாவில் துளிர் விடத் தொடங்கிய அன்பு இப்போது கப்பும் கிளையுமாக வேரும் விழுதுமாக ஒரு பெரிய ஆலமரம் போல் அவள் மனதில் முழுமையாக பரவிப் போயிற்று.

காலையில் எழுந்து குளித்துவிட்டு வந்து மாமியா ரோடு தோட்டத்தில் பூஜைக்குப் பூப்பறிக்கத் தொடங்கு வதில் இருந்து, இரவு தூங்குமுன் கட்டாயம் பால்குடிக்க வேண்டும் என்று அன்பாகக் கூறி அருந்த வைக்கும் வரை பெரும் பான்மை நேரம் அருகிலேயே இருந்த மாமியாரை மிகவும் நேசிக்கத் தொடங்கினாள் அபிராமி.

இயல்பாகவே ரசனை உணர்ச்சி உடையவள் அபிராமி. அவர்களது ஒரு மனையளவு வீட்டில் கூட கிடைத்த செடிகொடிகளை வைத்து பராமரிப்பவள்

இங்கே பரந்து விரிந்த தோட்டம் அவளை மிகவும் கவர்ந்தது. அதைவிடவும் இளங்காலையில் பூவிதழ் விரிவதையும், பனித்துளிகள் அந்த மலர் இதழ்களின் மேல் வைரத் துளிகளாகப் பளபளப்பதையும், இளந்தளிர்கள் காற்றில் கிலு கிலுப்பதையும், தேன்சிட்டு மது அருந்துவதையும், சுட்டிக்காட்டித் தான் ரசித்ததோடு மருமகளுக்கும் அதில் மகிழக் கற்றுக் கொடுத்த மாமியார் அவளை அதிகமாகக் கவர்ந்தாள்.

காலையில் எழுந்து குளியல் வரை முடித்துக் கொண்டு அபிராமி அறையை விட்டு வெளியே வரும் போது விரிந்த கூந்தலின் அடிமுனையில் ஒரு சிறு முடிச்சும் கையில் பூக்கூடையுமாகப் புவனேசுவரி வந்து சேர்ந்து கொள்ளுவாள்.

இருவருமாகக் குறைந்தது ஓர் அரைமணி நேரமாவது "இந்த அடுக்கு செம்பருத்தியைப் பாரேன்", "இந்தக் கொண்டைக் குருவிக் கூட்டில் குஞ்சு பொரித்து விட்டது பாருங்கள்" என்று அவரவர் கண்ணில் பட்ட இன்பங்களை அடுத்தவரோடு பகிர்ந்து கொண்டபடி பூஜைக்குப் பூப்பறிப்பார்கள்.

கூடவே அங்கங்கே இருக்கும் பூக்குவளைகளுக்கும் சேர்த்து பூப்பறிப்பாள் அபிராமி.

திரும்பி வந்து பூஜைப் படங்களுக்கு பூ வைத்து அலங்காரம் செய்து, கற்பூரம் காட்டி வணங்கி வெளி வந்த பிறகுதான் புவனேசுவரிக்குக் காலைக் காபிகூட. அபிராமிக்கும் அதுவே வழமையாயிற்று.

'கல்ச்சுர'லில் பயின்றதுபோலப் புதுப்புது மாதிரியாகக் கிண்ணத்தில், குவளையில் அபிராமி பூ அடுக்குவதை மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டிருப்பாள் புவனேசுவரி.

காலை வேலைகளை முடித்துக் கொண்டு சிவநாதன் வந்ததும் மூவருமாகக் காலை உணவு கொள்வார்கள்.

குடும்பம், உறவினர், பணவிவகாரங்கள் பற்றி மற்ற இருவரும் பேசும்போது அபிராமி ஒதுங்கிக் கொள்வாள்.

"நீயும் குடும்பத்தில் ஒருத்தி, உனக்குத் தெரியாமல் என்று ஒன்றும் இல்லை" என்று புவனேசுவரி அழைத்தால் கூட "எல்லாமே புதிதுதானே, அத்தை? இப்போது மாமா கிளம்புகிற நேரம் எனக்கு விளக்குவதற்காகக் காலதாமதம் செய்வதை விட, அப்புறமாய் உங்களிடம் தெரிந்து கொள்கிறேன்" என்று ஒரு புன் முறுவலுடனேயே விலகிவிடுவாள்.

அவளுடைய கணவன் அவளை மனைவியாக ஏற்று, அன்பு செலுத்தியிருந்தால் இந்தப் பேச்சுகளில் அவளாகவே ஆர்வத்துடன் கலந்து கொண்டிருப்பாள், அவசியமற்றுப் பேசியிராவிடினும், இந்தக் குடும்பம், உறவு எல்லாம் தன்னுடையதும் கூட, அதனால் அறிந்து கொள்வது தன் கடமையுமாகும் என்று கவனித்திருப்பாள். ஆனால் அந்த அடிப்படை இல்லாத போது இந்த மாதிரிக் குடும்பப் பேச்சுக்களில் கலந்து கொள்வது அவளுக்குத் தவறாகப் பட்டது.

ஆனால் அவளது இந்தப் பணிவான ஒதுக்கமே ஒவ்வொரு விதத்தில் பெரியவர்களுக்கு அவளிடம் பிரியத்தை உண்டாக்குகிறது என்பதை அவள் அறியாள்.

இதுபோன்று தனித்திருக்க நேரும் நேரங்களில் அபிராமியின் நெஞ்சுக்குள் புழு அரிக்கத் தொடங்கி விடும்.

சிலதினங்களில் திரும்பிவரும் கணவன் என்ன மாதிரி வருவான்? தந்தையின் பேச்சில் மனம் திருந்தி வருவானா? ஆனல் அவன்தான் பிறர் பேச்சை ஏற்ப

தில்லை என்று அவனுடைய தந்தையே சொன்னாரே என்பது உடனேயே நினைவு வர நிராசையுற்றாள்.

அவனாக யோசித்துத் தவறை உணருமாறு செய் முருகா என்று வேண்டிக் கொண்டாள். மனிதர்களிடம் நம்பிக்கை குறைகிற போது கடைசி அப்பீல் கடவுளுக் குத்தானே!

டெலிஃபோன் ஸ்டிரைக் இன்னமும் முடிவடையாத தால் காரை எடுத்துக் கொண்டு சென்று அவளுடைய பெற்றோரிடம் அவள் வந்து விட்டதைத் தெரிவித்து விட்டு வருமாறு அபிராமிக்கு யோசனை கூறினாள் புவனேசுவரி. கூடவே ஒரு வாட்டத்துடன், ஆனால் பத்து நாள் தேனிலவு என்று சென்ற பெண்ணை மறுநாளே இப்படித்தனியே அழைத்து வந்ததை எப்படி எடுத்து கொள்வார்களோ? என்று வருந்தினாள்.

அதுபொறுக்காமல், "சொல்லித்தான் ஆகவேண் டும் என்று என்ன, அத்தை?" என்று கேட்டாள் அபிராமி.

ஒருகணம் மலர்ந்த முகம் உடனே கூம்ப "பின்னே எப்படியம்மா? தனஞ்சயன் வராமல் நீமட்டும் வந்தது தெரியும் போது எப்படியும் என்னவோ ஏதோ என்று அவர்களுக்குக் கலக்கம்தானே," என்றாள் வாட்டம் குறையாமலே புவனேசுவரி.

அபிராமிக்கும் உள்ளூர அது பெரும் கவலைதான். நாள் நட்சத்திரத்தில் அதிக நம்பிக்கை இல்லாத பெற்றோர் இந்த ஒரு நம்பிக்கைக்காக மாமியாரை மட்ட மாக நினைப்பதில் அவளுக்கு விருப்பம் இல்லை. கூடவே கணவனைப் புற்றிக் கேட்கையில் என்ன சொல்வது? எப்படியும் கேட்பார்கள். பதிலாக, நடந்த உண்மையை கூறுவது அறவே முடியாத காரியம்.

மணமான பிறகு தான் பொய் புகல்வது சற்று வழக் கப் பட்டுவிட்டதே! இப்போதும் அதுதான் வழி.

வேகமாக யோசித்து, " நான் வந்து விட்டதைக் கூட இப்போதே சொல்வானேன், அத்தை? உங்கள் மகன்

வந்து விட்ட பிறகு பொதுவாய், வந்ததாக மட்டும் சொல்லிவிடலாம். அப்பாவோ, அம்மாவோ எதையும் துளைத்துக் கேட்பவர்கள் இல்லை. வேறு எதையும் சொல்லாமலே சமாளித்து விடலாம் என்றாள் ஒரு திடத்துடன்.

புவனேசுவரியின் முகம் தெளிந்தது.

அபிராமியின் முகமும் தான். இப்போதைக்கு ஒரு சங்கடமான சூழ் நிலையைத் தள்ளிப் போட்டாய் விட்டதே! யோசனை கூறியது போலத் துப்பாக்கியையும் கத்தியோடு கூடிய சாவி வளையத்தையும் சிவநாதர் கொணர்ந்து கொடுத்தார். அவர் கேட்பாரே என்ற பயத்தில் சாவிவளையத்தை அபிராமி இடுப்பில் சொருகிக் கொண்டபோது துப்பாக்கி அலமாரியில் உறங்கியது.

ஆனால் நாலுநாட்களாகப் புவனேசுவரியின் அருகாமையில் ஓரளவு மறந்து இருந்த வேதனையை இந்த சாவிக் கொத்து கண்ணில் படும் போதெல்லாம் நினைவுறுத்த அவள் உள்ளூர வாடினாள்.

கணவனைப் பிரிந்து இருப்பது காரணமாக இருக்கலாம் என்று எண்ணி அவளை உற்சாகப் படுத்த பல வகையிலும் முயற்சித்தாள் புவனேசுவரி.

தினம் ஒரு நகையை அணிவித்துப் பார்த்து மகிழ்ந்தாள்.

முடிந்த அளவு மருமகள் கூடவே இருந்தாள்.

கூடவே இருக்கும் போது பேச்சு இல்லாதிருக்குமா? புவனேசுவரியின் பேச்சு, ஒன்று அவளுடைய கணவரைப் பற்றியதாக இருக்கும் அல்லது அவளுடைய அருமை மகனைப் பற்றியதாக இருக்கும்.

பிள்ளைக்காக ஏங்கியதையும் பெற்றதையும் கூறினாள், "எப்போதுமே எனக்குக் கொஞ்சம் மோசமான உடம்புதான் அபிம்மா. ஓடினால் இரைக்கும். அப்போது பெரிதாக நினைக்கவில்லை. ஆனால் திரும

ணமான பிறகு ஒரு நாள் உன் மாமாவின் அக்கா குழந் தைகளோடு தோட்டத்தில் விளையாடியபோது கிட்டத் தட்ட மூச்சே விடமுடியாத மாதிரி ஆகிவிட்டது. உன் மாமா பயந்து போய் டாக்டரை வரவழைத்தார். பிறகு எல்லா சோதனையும் செய்தார்கள். இதயத்தின் அறைக ளில் ஒன்றில் பழுதாம். இப்போதானால் இதயத்தையே மாற்றி விடுகிறார்கள்... அப்போது அவ்வளவு முன்னே றவில்லையா? குழந்தை பிறக்கக்கூடாது. அபாயம் என்று விட்டார்கள். எப்படி இருக்கும் பார். மாமியார் மாமனாருக்கு ஆத்திரம் தான். மூன்று பெண்களுக்கு நடுவில் இவர் ஒரே பிள்ளை ஆயிற்றே. ஆனால் நான் வேண்டுமென்று செய்யாத பிழைக்காக என்னைக் குற்றம் சொல்லவும் மனமில்லை. கடைசியாகப் பிள் ளைக்காக இன்னொரு திருமணம்."

"அத்தை" என்று அதிர்ந்து போய்க் கூவினாள் அபிராமி.

அவள் கையைப்பற்றி வருடி மேலே சொன்னாள் மாமியார். "ஆமாம். . கேட்டார்கள் ஆனால் உன் மாமா ஒரேயடியாக மறுத்துவிட்டார். அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாக மறைமுகமாகச் சொல்லிக் காட்டத் தொடங்கினார்கள். முக்கியமாக நாத்தனார்கள்தான். என் மாமியார் எப்போதும் எனக்காகக் கொஞ்சம் பரிந் துதான் பேசுவார்கள். பாவம் அவளுக்கு மட்டும் பிள்ளை ஆசை இராதா, வாழவந்த பெண்மனதை நோகடிக்காதீர்கள் என்பார்கள். ஒரு நாள், உன் மாமாவு டையதாத்தாவின் திதி என்று எல்லோரும் வந்திருந்தார் கள் தற்செயலாக என் அப்பாவும் வந்திருந்தார்.

"உனமாமா அலுவல் என்று அந்தப்பக்கம் சென்ற தும் மூன்று பேருமாகரொம்பவே பேசி விட்டார்கள். கொஞ்சம்சொல்லிப்பார்த்துவிட்டு மாமியார் கண்ணீரு டன் உள்ளே போய் விட்டார்கள். மாமா தானாக ஒன்றும்சொல்லவில்லை. என்றாலும் மகள்களைக் கண் டிக்கவுமில்லை. கடைசியாக என் அப்பாவிடம் உங்கள் பெண்ணை இங்கே கொண்டு வந்த பாவம் இந்த வீடு வம்சமற்றுப் போகிறது என்றார்கள்.

"மூன்று நாத்தனாருக்குமே சகோதரனுக்கும் குழந்தை பிறக்கவேண்டும் என்கிற இயற்கையான விருப்பத்தோடு, அவரவர் புகுந்த வீட்டுப்பெண் ஒருத்தியை இங்கே கொண்டுவந்து விட்டால் இன்னமும் உரிமையோடு இருக்கலாம் என்றும் ஆசை. என் நாத்தனார்தான், என் மைத்துனர் மகள்தான் என்று அது வேறு ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்வார்கள்.

"என் அப்பாவுக்குச் சும்மாவே மிகுந்த மனவேதனை. நான் அவருக்கு ஒரே பெண்ணல்லவா? இப்போது மிகவும் குன்றிப்போனார். கூனிக்குறுகி, ஒரு வார்த்தை பேசாமல் அவர் சென்ற விதம் இருக்கிறதே... அப்ப. .ப்பா, ஜன்மத்தில் மறக்காது. அதற்குக் காரணம் இந்த உதவாக்கரை உடம்புதானே என்று.."

"அதை அழித்துவிட தூக்கமாத்திரைகளை அள்ளி விழுங்கிவிட்டீர்களாக்கும்" என்றாள் அபிராமி வருத்தமும் கோபமுமாக.

ஆனால், ஆச்சரியமாகப் பார்த்து, "அதெப்படி உனக்குத் தெரியும்?" என்று புவனேசுவரி கேட்கவும் திணறிப் போனாள்.

ஒரு முக்கியமான காரணத்துக்காக அவளுடைய மாமனார் அவளிடம் வெளியிட்ட விஷயம் அது. அவர் சொன்னார் என்று கூறினால் எதற்காக எப்போது எப்படிச் சொன்னார் என்று விவரிக்க நேரும். அது கூடவே கூடாது என்று மாமனார் எச்சரித்திருக்கும் ரகசியம்.

எனவே கேலிபோலச் சிரித்து, "பின்னே, என்ன அத்தை? தூக்கு, கிணறு, இதையெல்லாம் விட இலகு வழி தூக்கமாத்திரைதானே." என்றாள் கிண்டல் குரலில்.

லேசாக அசடுவழிந்துவிட்டு, "ஆமாம் எவ்வளவு சாப்பிட்டால் சாவு வரும் என்று தெரியாது. ஆனால் அந்த மாத்திரை மூன்று தின்றாலே ஆபத்து என்று என்

மாமியாரிடம் டாக்டர் எச்சரித்து வைத்திருந்தது. அது எல்லாம் தேடிப் பார்த்ததில் இருபது கிடைத்தது. அத்தனையும் விழுங்கி விட்டேன்" என்று உரைத்துச் சற்று நேரம் பழைய நினைவில் ஆழ்ந்தாள் புவனேசுவரி.

தானாகவே தொடர்ந்தாள் "உன் மாமா கூடவே இருந்து காப்பாற்றினார். அத்தனை தூக்க மயக்கத்திலும் காதுக்குள், "வந்துவிடு, திரும்பி வந்துவிடு இல்லாவிட்டால் நானும் உன்னோடு அங்கே வந்துவிடுவேன்", என்று அவர் குரல் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டே இருந்தது, அபிராமி. டாக்டர் கூட உங்களுக்குப் பதில் அவர்தான் போராடினார் என்றார்.."

விழிகளில் துளிர்த்த நீரைச் சுண்டிவிட்டு. "அப்புறமும் சும்மா இருக்கவில்லை. ஸ்டேட்சில் இதயத்துக்கு ஏதோ சிகிச்சை செய்கிறார்கள் என்று அங்கே கூட்டிப் போனார். அறுவை சிகிச்சை நடந்தது. ஆனால் முழுமையாகச் சீர் செய்ய முடியவில்லை. பிள்ளை பெறலாம். ஆனால் உண்டானதிலிருந்து டாக்டரின் பார்வையிலேயே இருக்கவேண்டும் என்று என்னென்னவோ விதிமுறை சொன்னார்கள். அத்தனையும் அனுசரித்துத் தான் தனஞ்சயன் பிறந்தான்" என்றாள் ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன்.

"அதே விதிமுறைகளைக் கடைப்பிடித்து இன்னும் இரண்டு மூன்று பெற்றுப் போட்டிருக்கலாமே" என்று குறுஞ் சிரிப்புடன் கேட்டாள் அபிராமி. தம்பி தங்கை குறைந்தபட்சம் ஒருதங்கை இருந்திருந்தால் தனஞ்சயனிடம் இந்த மாதிரி வக்கிரம் வந்திராது என்று அவளுக்கு தோன்றியது.

"எங்கேம்மா?" என்று உதட்டை பிதுக்கினாள் புவனேசுவரி. " இவ்வளவு பார்த்தும் தனா பிறக்கும் போது கொஞ்சம் அபாய நிலை என்கிற அளவு போய்விட்டுத் தான் பிழைத்தேன். உன் மாமா சொல்லாமல் கொள்ளாமல் போய் ஆபரேஷன் பண்ணிக் கொண்டு வந்து விட்டார். தனா ஒருவனாகவே நின்று போனான்."

இன்னும் சில பிள்ளைகள் பெறமுடியாமல் போயிற்றே என்ற வருத்தத்தை மீறிக் கொண்டு கணவன் தன் மீது கொண்டிருந்த தீவிர அன்பைப் பற்றிய பெருமை மாமியாரின் முகத்தில் பளிச்சிட்டதைக் கண்டாள் அபிராமி.

இன்னமும் அந்த அன்பு சற்றும் குறையவில்லை!

இந்த மாதிரி அன்பாக கணவன் கிடைக்க எத்தனை பிறவிகளில் என்னென்ன புண்ணியம் செய்தார்களோ!

ஆனால் அபிராமி மட்டும் எந்தப் பிறவியிலும் அந்த மாதிரி ஒரு சிறு புண்ணியம் கூடச் செயயாமல் ஏன் இருந்தாள்?

நெஞ்சைப் பிளந்து வெளியேறிய நெடுமூச்சைச் சமாளிக்கும் முயற்சியாக, "உங்கள் அப்பாவுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்திருக்கும்?" என்றாள்.

மீண்டும் புவனேசுவரியின் முகம் மிகுந்த மகிழ்ச்சியோடு விகசித்தது. "கொஞ்சநஞ்சமில்லை, வைரச்சங்கிலியில் புலிநகம் கோர்த்து பேரனுக்கு அணிவித்தார். ஒரே மகனின் முதல் பிள்ளையல்லவா? இவன் பிறந்ததிலிருந்து முப்பதாம் நாள் தொட்டில் போடும் வரை ஏழைகளுக்கு இடைவிடாத அன்னதானம் செய்தார். பிறகும் இம், மென்றால் பேரனைப்பார்க்க ஓடிவந்துவிடுவார்" என்று சிரித்தாள்.

கூடச சேர்ந்து சிரிக்கும் போதே அவளுடைய பெற்றோருக்கு அவள்மூலம் ஒரு பேரக் குழந்தையைப் பார்க்கும் வாய்ப்பு கிட்டத்தட்ட இல்லவே இல்லை என்றநினைவில் அபிராமியின் மனம் வாடியது. இப்படியே வேதனை பட்டுக் கொண்டேதான் வாழ்நாள் முழுவதும் இனி அவள் வாழ வேண்டுமா?

"ஆனால் மகிழ்ச்சி இல்லாத ஒன்றும் கூட நடந்து போயிற்று" என்று புவனேசுவரி தன் கதையைத் தொடர்ந்தாள்.

சிரமப்பட்டு மாமியாரின் பேச்சிற்குக் கவனத்தைக் கொணர்ந்து, "அது, என்ன, அத்தை? என்று விசாரித்தாள் மருமகள்.

"புகுந்த வீட்டு உறவில் விரிசல் கண்டுவிட்டது." என்றாள் புவனேசுவரி."அன்றைய மாத்திரை சமாசாரத்துக்குப் பிறகு உன் மாமா அடிமுதல் அலசியிருக்கிறார். வராதே என்று வார்த்தைகளால் சொல்லாத போதும் அவருடைய சகோதரிகளிடம் அதன் பிறகு பழைய மாதிரி ஒட்டுதலோடு அவர் பழகவில்லை. அதே சமயம் மகள்கள் பெற்றோரிடம் வந்து போவதைத் தடுக்கக் கூடாதென்று இந்த வீட்டைக் கட்டிக் கொண்டு இங்கே குடிவர ஏற்பாடு செய்து விட்டார். அத்தை, மாமா சொல்லிப் பார்த்தும் கேட்கவில்லை. உன் மாமா போதுவாக இளகி இளகிப் போகிறவர் இறுகி விட்டால் எஃகு இரும்புதான் மாமாவும் அத்தையும். மகள்களுக்காக எவ்வளவோ வாதாடிப் பார்த்தார்கள். இவர் பதில் சொன்னால்தானே. அத்தை மகனைப் பற்றி என்னிடம் வருத்தப்படுவார்கள். ஆனால் குற்றம் அவர்களிடம் என்றதால் இருவருக்குமே பலமாகப் பேசவும் முடியவில்லை. அப்புறம் பேரனைப் பார்க்க என்று அவர்கள்தான் இங்கே வந்து போய்க் கொண்டு இருந்தார்கள். ஆனால் உன் புருஷனுக்கு அத்தைமார் உறவு மெல்ல மெல்ல விட்டுப் போயிற்று" என்று முடித்தாள் பெரியவள்.

மகனுடைய இளம்பருவத்துக் கதையைத் தொடங்கி விட்டால் புவனேசுவரிக்கு நிறுத்தவே வராது. எப்படி அறுபத்தைந்து நாட்களில் குப்புறவிழுந்து, அடுத்த மாதம் நீந்தி, நாலாம் மாதம் உட்கார்ந்து, ஐந்தாம் மாதம் தவழ்ந்து, ஏழாம் மாதம் பிடித்துக் கொண்டு நின்று, ஒன்பதாம் மாதம் பிடிக்காமல் அடியெடுத்து வைத்து பத்தாம் மாதம் ஓடத் தொடங்கினான் என்பதைப் பெருமையோடு விவரித்தாள்.

"ஆனால் ஒன்று அபி. அவன் மட்டும். கீழே விழுந்தான் என்றுவை. பிள்ளைக்கு அடிப்பட்டுவிட்டதோ

என்று பக்கத்தில் போய் விடக் கூடாது. விரட்டி அடிப்பான். தொப்பென்று விழுகிறபோது நம் முகத்தில் சிரிப்பும் தோன்றிவிடக்கூடாது. என்னவோ தன்னை ஏளனம் செய்தாற்போல ஆத்திரம் வந்துவிடும். கையில் அகப்பட்டதை வீசி உடைத்து எறிவான்."

ஆக அன்றிலிருந்தே இதே புத்திதானாக்கும் என்று எண்ணிக் கொண்டாள் அபிராமி.

"அவனுக்கு உடம்பிலும் கூச்சம் அதிகம். சாதாரணப் பிள்ளைகளுக்குச் சற்று அதிகமாகவே உண்டு. மூன்று வயதிலிருந்தே ஜட்டி போடாமல் குளிக்கவே வரமாட்டான். அப்போதும் கைகால் தேய்த்து விட்டு நான் வெளியே போய்விட வேண்டும். அவனேதான் குளிப்பான். இப்போது கூட, அவன் அப்பா வெறும் ஷார்ட்ஸ் அணிந்து கொண்டு டென்னிஸ் விளையாடுவார். இவன் டீஷர்ட்ஸ் இல்லாமல் வரமாட்டான். . ." என்று சொல்லிக் கொண்டே போனவள், கண்ணில் குறுஞ் சிரிப்புடன், "உன்னிடம் எப்படிப் பழகப் போகிறானோ?" என்று நகைத்தாள்.

உள்ளம் அழுத போதும் வெட்கப்படுவது போலப் பாவனையுடன் தலையைக் குனிந்து கொண்டாள் அபிராமி.

"டெலிஃபோன் ஸ்டிரைக் முடிந்து விட்டது, தொடர்பு வந்து விட்டது. அய்யா கூப்பிடுகிறார்," என்று பணியாள் வந்து அழைக்கவே புவனேசுவரி எழுந்து உள்ளே சென்றாள்.

அபிராமியின் மனம் சற்றுமுன் புவனேசுவரி பேசிய விஷயத்தை அசை போட்டது. பெற்றதாயிடம் கூட அவ்வளவு கூச்சமா? அந்தச் சிறுவயதிலேயே அப்படி என்றால் இப்போது இரண்டு கையிலும் காயம் பட்டபோது எப்படி இருந்திருக்கும்? குளிப்பது, உடைமாற்றுவது, இன்னும் இயற்கைக் கடன்கள். . . எல்லாம் சேர்ந்துதான் இந்த அளவுக்கு பழிவெறி கொள்ளத் தூண்டிவிட்டனவோ?

ஆனால் அவள் நிலையில் இருந்து அவன் ஏன் ஒரு தரம் கூட எண்ணிப் பார்க்கவில்லை? ஒரே ஒருதடவை நினைத்துப் பார்த்திருந்தால் கூட இந்தப் பழிவெறி முனை முறிந்து போயிருக்குமே!

தனஞ்சயனைப் பற்றிய பேச்சில் அபிராமியின் மனம் மேலும் மேலும் நொந்த போதும் அவனைப் பற்றி நன்கு அறிந்து கொண்டால் இந்தச் சிக்கலில் இருந்து மீள ஒருவழி கிடைக்கக்கூடும் என்று அவளுக்கு ஒரு நப்பாசையும் இருக்கவே, புவனேசுவரியிடம் அவளுடைய மகனைப் பற்றி மேலும் துருவினாள்.

புவனேசுவரியைப் பொறுத்த வரையில் மகனைப் பற்றிப் பேச வேறு உந்துதல் அவசியமே கிடையாது. அவள் சொல்வதைக் கேட்க ஒரு காதுதான் வேண்டும். இப்போது அந்தக் காது மருமகளிடம் இருக்கவே ஆர்வத்தோடு நிறையவே சொன்னாள்.

"அவனுக்கு ரோஷம் அதிகம் அபி, விளையாட்டில், ஓட்டத்தில் ஆர்வம் அதிகம். கண்மண் தெரியாமல் ஓடி விளையாடிக் கீழே விழுந்து காயம் பட்டுக் கொள்பவன். ஆனால் விழுந்து விட்டேன் அம்மா. . என்று வந்து நிற்கவே மாட்டான். நாமாகக் காயத்தைப் பார்த்து என்ன ஏது என்றாலும் ஆத்திரப்படுவான். அவன் விழுந்தது நமக்குத் தெரிந்து விட்டதாம். அவ்வளவு ரோஷம். தானாகவே டாக்டரிடம் போய் மருந்து போட்டுக் கொள்வான்.

"எந்நாளும் ஒருவர் வெல்லமுடியுமா? தோற்றுப் போனால் தாங்கிக் கொள்ளமாட்டான். ஒரேயடியாய் வெறி கொண்ட மாதிரி மீண்டும் வெல்லும் வரை ஓய மாட்டான். அம்மா மாதிரி ரோஷம் என்பார் உன் மாமா, அப்பா மாதிரிப் பிடிவாதம் என்பேன் நான். மற்றபடி அவ்வளவு பாசம் உள்ளவர் ஒரு தப்புக்காக கூடப் பிறந்தவர்களை அப்படியே ஒதுக்கி விட்டு இருக்க முடியுமா? அதனால் நான் அவர் மாதிரி என்பேன். ஒரு தோல்வி தானே, போகிறது விடு என்றாலும் கேட்க மாட்டான்

தோற்க தோற்க இன்னமும் வெறி அதிகமாகி விடும். ஜெயிக்கும் வரை வீடே நரகமாகி விடும். தன் உடம்பையும் கெடுத்துக் கொள்வான். இரண்டு மூன்று ஆண்டுகள் பார்த்துவிட்டு ஸ்போர்ட்ஸ் சமயம் பார்த்து அவனை எங்காவது வெளியூர், வெளிநாடு என்று அனுப்பி ஸ்போர்ட்சில் கலந்து கொள்ளவிடாமல் நிறுத்தினோம். தங்கம், இதையெல்லாம் உன்னிடம் நான் ஏன் சொல்லுகிறேன் தெரியுமா? தனா எவ்வளவோ நல்ல பையன் தான் என்றாலும் இந்தமாதிரிச் சின்னச் சின்னக் குறைகளும் அவனுக்கு உண்டுதான். இதையெல்லாம் தெரிந்து கொண்டு ஏற்ப நடந்து கொண்டாயானால் உன் வாழ்வு சிறு உரசல் கூட இல்லாமல் இனிய நீரோட்டமாய் இருக்குமல்லவா? அதற்காகத்தான் என்று புவனேசுவரி காரணம் கூறியபோது அபிராமிக்கு 'ஓ' வென்று அலறலாம்போல வந்தது.

இதெல்லாம் சின்னச் சின்னக் குறைகளா?

இருக்கலாம். ஒரு தாய் மனதிற்கு ஒன்றுமில்லை என்று ஒதுக்கத் தகுந்தவைகளாகவே படலாம். மற்றவர்களுக்கும் அப்படி ஒன்றும் பெரிதாகத் தோன்றாதிருக்கலாம்.

ஆனால் அனுபவித்துக் கொண்டிருந்த அவளுக்கு நெஞ்சில் தீயே எரிந்தது.

தோற்க தோற்க வெறி அதிகமாகுமா? கடவுளே!

முதல் தடவை குற்றாலத்தில் தோற்றதில் உண்டான வெறி இயற்கையான கூச்சத்தினால் அந்த ஆறுமாதங்களில் வளர்ந்து, இப்போது பெரிய திட்டம் போட்டு வெற்றி பெறும் தருவாயில் மீண்டும் தோற்றதால் எவ்வளவு பெரிதாய் பிரம்மராட்சசனாய் உருவெடுத்திருக்கும்!

வெல்லும் வரை ஓயமாட்டான் என்றால் என்ன அர்த்தம்?

அவள் அவமானப் படபோவது உறுதி என்றா?

அப்படி அவலப்பட்டு அதன்பின் அழிவதை விட இப்போதே நல்லபடியாகச் செத்துவிடுவது மேல் அல்லவா?

# 11

சே வலப்படுவதை விட சாவுமேல் என்று முடிவு செய்த அபிராமி சாவதற்கான வழியைக் கூடக் கிட்டதட்ட முடிவு செய்துவிட்டாள்.

மாமியார் விழுங்கிய தூக்க மாத்திரைதான். ஒரு பாட்டில் முழுவதும் விழுங்கி விட்டால் இந்தப் பயமும் துன்பமும் தீர்ந்துவிடுமல்லவா?

ஆனால் உடலோடு உயிர் ஒட்டியிருக்கும் போது கடைசி வினாடி வரை நம்பிக்கை விடாது என்பார்கள். உயிராசையின் மகத்துவம்!

தூக்கமாத்திரை எப்படி வாங்குவது, யாரும் அறியாமல் எப்போது, எப்படி உட்கொள்வது என்று திட்டமிடும் போதே அன்று ஊட்டியில் கடைசி வினாடியில் மாமனாரால் காப்பாற்றப் பட்டதும் கடவுள் அவள் பங்கில் இருப்பதாக அவர் சொன்னதும் கூட நினைவு வந்தன.

மெய்யாகவே கடவுள் துணை இல்லாதிருந்தால் அந்த பயங்கரமான நிலைமையிலிருந்து மீண்டிருக்கமுடியுமா?

ஒருவேளை கடவுள் இன்னமும் அவள் பக்கம் இருந்து அவள் கணவனைத் திருத்தி விடக் கூடாதா என்ன?

அத்தோடு தப்பு செய்தது அவனாக இருக்க, அவள் ஏன் தற்கொலை செய்து உயிரை விடவேண்டும்?

வெற்றி பெறும் வெறி அவனுக்கு இருக்கலாம். ஆனால் அவனோடு போராடித் தப்புகிற சக்தி அவ

ளுக்கு ஏன் இருக்கக் கூடாது? இருந்தாகவேண்டும். இருக் கிறது.

மனதின் போராட்டம் அவள் முகத்தில் பிரதிபலித் துவிட்டது போலும். . . "என்னம்மா ஒருமாதிரி இருக்கி றாய்" என்று கேட்டாள் புவனேசுவரி.

இவளுக்கு என்ன பதில் சொல்வது?

மருமகளும் மகிழ்ச்சியோடு வாழவேண்டும் என்று விரும்பும் இந்த அன்புருவம் உண்மை நிலையை அறிந் தால் என்ன ஆகும்?

அவசரமாக, முன்னே நிகழ்ந்த பேச்சுகளை நினை வுக்கு கொணர்ந்து, "வேறு ஒன்றும் இல்லை, அத்தை. சின்ன வயதில் உங்கள் பிள்ளையோடு படாதபாடுபட் டீர்கள் போலத் தெரிகிறதே, என்று நினைத்தேன்" என்று எப்படியோ சமாளித்தாள்.

சில வினாடிகள் பழைய நிகழ்ச்சிகளில் ஆழ்ந்து விட்டு, மெல்ல முறுவலித்தாள் புவனேசுவரி. "இப் போது நினைத்துப் பார்த்தால் சிரிப்புதான் வருகிறது ஆனால் அப்போது சரியாக உண்ணாமல் உறங்காமல் 'கூண்டுப்புலி' நடை போட்டபடி அவனைப் பார்க்கை யில் மிகவும் வேதனையாகத்தான் இருக்கும். இந்தப் பிள்ளை தன்னையே ரணமாக்கிக் கொள்கிறானே என்று வருந்துவோம். அப்புறம் வளர வளர புதியபடிப்பு, புதிய நண்பர்கள் என்று ஏற்படவும் எல்லாம் சரியாகிப் போயிற்று. அதிலும் இந்த ஓர் ஆண்டாக தனா தங்கக் கம்பிதான்" என்றாள் பெருமிதத்துடன்.

தங்கமாவது கம்பியாவது? சொல்லப்போனால், தொட்டால் ஷாக் அடித்து உயிரையே பலி கொண்டு விடக் கூடிய அளவு மின்சாரம் பாய்ந்து கொண்டிருக் கும் செப்புக் கம்பி அவன்.

நெஞ்சைப் பிளந்து கொண்டு வெளியேற முயன்ற பெருமூச்சை அடக்கி, "இந்த நாலு நண்பர்களும் அவ ருக்கு எப்படிக் கிடைத்தார்கள் அத்தை? ஐந்து பேரும்

இணைபிரியாத நண்பர்கள் என்றீர்களே" என்று பேச்சை மாற்றினாள் அபிராமி.

"நானா? எப்போது சொன்னேன்?" என்று புவனேசுவரி யோசிக்கவும் திணறிப்போனாள் மருமகள்.

மாமியார் அப்படி சொல்லவில்லயே! அபிராமியுடைய கணவன் அல்லவோ அதைச் சொன்னான் அந்தப் பொல்லாத இரவில்.

"அ. .அது. . . .வந்து, வரவேற்பின்போது செ. செல்லப்பேர். . விவிஸ்கி அது இது என்றெல்லாம் ஒருவரை ஒருவர் கூப்பிடுவா. . .ர்கள் என்றீர்களே, அத்தை? அ அதனால் ரொம்...ப சி.சினேகம் என்று நினைத்தேன்." என்று உளறிக் கொட்டிக் கிளறி மூடினாள் ஒரு வழியாக.

"ஓ! அப்படி யூகித்தாயா, செல்லம்? கெட்டிக்காரி." என்று மருமகளின் முகவாயைத் தொட்டு முத்தமிட்டு மெச்சிக் கொண்டாள் புவனேசுவரி பிறகு சொன்னாள்.

"அப்போது தனாவுக்குப் பதிமூன்று வயது. இந்த நாலு பேரையும் பார்த்ததும் அவனுக்குப் பிரியம் உண்டாகிவிட்டது. முதலில் ப்ரீதம்தான். சூடு பட்டகாயத்தோடு நொண்டி நொண்டிப் போய் கொண்டிருந்தான். நாங்கள் ஒரு சினிமாவிற்குப் போய்விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தோம். அழுது கொண்டே நடக்க முடியாமல் ஏதோ ஒரு சுமையை வேறு தூக்கியபடி நடந்து கொண்டிருந்த அந்தப் பையனை பார்த்த போது எனக்கே வேதனையாகத்தான் இருந்தது. ஆனால் மருந்து போட்டு சாப்பிட ஏதாவது கொடுத்து அனுப்பாமல், தன்னோடேயே சேர்ந்து வளரச் செய்யப் போவதாக சட்டெனத் தனா சொன்னபோது அவன் அப்பாவுக்கு அவ்வளவாக விருப்பம் இல்லைதான். ஆனாலும் மற்றவர் முன்னால் மகன் வாக்கு பொய்க்கும்படி செய்யக் கூடாது என்று பேசாதிருந்து விட்டார்.

"அடுத்து சுதிரை அழைத்து வந்தான். நம்மிலு கேடு நாட்டிலே கோடி. எத்தனைபேரை நாம் தாங்குவது. சும்மா கொடுத்தால் சோம்பேறிக் கூட்டம் பெருகும்' என்று மகனிடம் சொல்லிப் பார்த்தார். ஆனால் அவன் பிடிவாதமாய் இருந்தான். பணத்தின் அருமை தெரிய வில்லை என்று கூடச் சொன்னார்.

"மேலே ஒரு மாதம் செல்லுமுன் ரகுராமனையும் விசுவத்தையும் தனா அழைத்து வரவும் அவருக்குக் கோபம் வந்து விட்டது. கஷ்டப்படாமல் வளர்ந்ததால் காசுக்கு மதிப்புக் கொடுக்கத் தெரியவில்லை, தெரிய வைக்கிறேன் என்று ஒரு வேலை செய்தார். இந்த நாலு பேருக்கும் ஆகும் செலவை தனா அவனது பாக்கெட்மணியிலிருந்துதான் செய்து கொள்ளவேண்டும் என்று சொல்லிவிட்டார் "பணமா பெரிது" என்று மகன் ஆத்திரப்பட்டபோது, கட்டாயம் பெரிதுதான் அந்தப்பணம் கஷ்டப்படாமல் கையில் தாராளமாகப் புழங்கியதால் தானே கணக்குப் பார்க்கும் எண்ணம் கூட வரவில்லை? இனிக் கணக்கு பார்க்கப் படித்துக் கொள்" என்று சொல்லிவிட்டுபோய்விட்டார்.

தன் வீட்டு மாதம் ஐம்பது ரூபாய் பாக்கெட்மணி நினைவில் "அதெப்படி சமாளிக்கமுடியும்?" என்றாள் அபிராமி.

"ரொம்பவும் கஷ்டம்தான். ஐநூறு ரூபாயில், பாவம், என்னதான் செய்யமுடியும்? ஆனாலும் அதற்காக அவன் யாரையும் விட்டு விடவில்லை. துணிமணிகள் இவனுக்குச் சின்னதாகிப் போனவைகளை முன்பு ஆசிரமத்துக்குக் கொடுப்போம். அதை இந்தப் பையன்களுக்குக் கொடுத்தான். பள்ளிச் சம்பளம் இப்போதைவிட மிகவும் குறைவுதான். ஆனால் சுதீருக்கும் ப்ரீதத்துக்கும் மருத்துவச் செலவுதான் அதிகம் ஆயிற்று. அதில் இவன் சேர்த்து வெத்திருந்ததெல்லாம் காலி. எனக்குப் பாவமாயிருக்கும். ஆனால் இவர் சொன்ன பிறகு மீறி நான் பணம் கொடுக்கமுடியுமா? என்னால் ஆனது என்

சாப்பாடு மட்டும் போட்டுவிடுவேன். அதற்கே அந்தப் பையன்கள் !அம்மா அம்மா! என்று உயிரை விடுவார்கள்.

"செலவுக்குச் சிரமப்பட்டாலும் மேலே பணத்துக்குத் தன்னிடம் வந்து நிற்கவில்லை என்று தனா அப்பாவுக்கு மிகவும் சந்தோஷம். அதனால் அவனது கைச் செலவுப் பணத்தை உயர்த்தினார்."

"எல்லாம் அப்படியே ஒரு சீராய் நன்றாகிப் போயிருக்கும். என் அப்பா தனா பேரில் எழுதி வைத்த பணம் அவன் கைக்கு நேராகப் போய்ச் சேர்ந்தது. அதுதான்" என்று இருந்து விட்டு நிறுத்தினாள் புவனேசுவரி.

"அதனால் என்ன அத்தை, ஆயிற்று?" என்று விசாரித்தாள் அபிராமி.

மருமகளை ஒருதரம் ஆழ்ந்து நோக்கிவிட்டு, ஒரு முடிவுக்கு வந்தவள்போல மீண்டும் தொடங்கினாள் புவனேசுவரி. "உன்னிடம் சொல்வதில் என்ன, அபிம்மா? மருமகன் பேரனிடம் கஞ்சத்தனம் காட்டினது போல என் அப்பாவுக்கு ஓர் எண்ணம். சொத்து வருமானத்தை எல்லாம் நேராகப் பேரனிடமே கொடுக்கவேண்டும் என்று எழுதி வைத்து விட்டார். இவர்கள் படித்து முடிக்கிற சமயம். நிறையப் பணம் கைக்கு வரவும் கொஞ்சம் தலைக்கனம் வந்து விட்டது. முன்னெல்லாம் இருபத்தைந்து வயதுக்கு மேல் சொத்து ஒருவர் கைக்கு வரும்படி உயில் எழுதி வைத்ததாகப் படிக்கும் போது நான் எரிச்சல் பட்டிருக்கிறேன், அபி. ஆனால் பண விஷயத்தில் ஒரு நிதானம் வரக் குறைந்தது அத்தனை வயது தேவை என்றுதான் அப்படிச் செய்தார்கள் போல.

"தனாவுக்குச் சின்னவயதில் கைநிறையப் பணம் வந்ததும் கொஞ்சம் தடுமாறிவிட்டான். அவன்கூடவே மற்ற நாலுபேரையும் அழைத்துக் கொண்டு ஸ்டேட்ஸ் போனது எனக்கு பெரிதாகத் தோன்றவில்லை. ஆனால் அங்கிருந்து திரும்பிவரும் போது குடி கிடி என்று வந்ததுதான் மனதுக்கு வருத்தமாக இருந்தது. செட் சேர்ந்து கொண்டு குடிப்பது, ஊர் சுற்றுவது.

"உன் மாமா கோபப்பட்டபோது அவரிடம் பணம் கேட்காத வரையில் இதைப் பற்றி பேச அவருக்கு உரிமை இல்லை என்று கூறிவிட்டான். முன்னே பணம் கொடுக்காமல் கஷ்டப்படவிட்டதற்குப் பழி வாங்குகிற மாதிரி அத்தனை வருஷம் கழித்து அப்படிப் பேசிவிட்டான்."

அப்போதும் அதே பழி வாங்குகிற புத்தி இருந்த தாக்கும் என்று எண்ணிக் கொண்டாள் அபிராமி.

ஒரு பெருமூச்சு விட்டு விட்டு மீண்டும் தொடங்கினாள் மாமியார். "உன் மாமாவுக்கு மிகவும் வருத்தம் தான். ஆனால் மேலே பேச்வில்லை. ஏதாவது சொல்லப்போய் வீட்டைவிட்டு வெளியேறுகிறேன் என்று விட்டானானால் என்ன செய்வது என்கிற கவலை. அவன் கைக்கு வரும் பணத்தை நாம் கட்டுப்படுத்த வழியில்லை. பையனுக்குப் புத்தி வர வேண்டும் என்று கடவுளைத்தான் வேண்டிக்கொண்டோம்."

"மாருதியை எடுத்து கொண்டு சுற்றோ சுற்று என்று சுற்றுவார்கள். வெள்ளிக்கிழமை சாயங்காலம் கிளம்புகிறவர்களைத் திங்களன்றுதான் காண முடியும். ஆனால் பார் தங்கம், இதெல்லாம் தொடங்கிய மாதிரியே பட்டென்று ஒருநாள் நின்றும் போயிற்று" என்று குதூகலக் குரலில் விளக்கினாள் புவனேசுவரி.

"ஒரு தரம் கன்யாகுமரி, குற்றாலம், ஏற்காடு எல்லாம் பார்த்து வருகிறோம் என்று போனவர்கள்தான். ஏற்காட்டிலிருந்து இறங்கும் போது விபத்து நடந்ததாம். கைபோயிற்றே என்று கவலைப்பட்டதற்கு என்மகன் புடம் போட்ட தங்கமாய்த் திரும்பக் கிடைத்து விட்டான்." என்றாள் மகிழ்ச்சியோடு.

இல்லையில்லை. முன்னிலும் கேடாகிவிட்டான் என்று நினைத்ததைச் சொல்லாமல் விழுங்கினாள் அபிராமி. விபத்து ஏற்காட்டில் நடந்ததுமா? குற்றாலம் என்ற பெயரில் கூட சந்தேகம் வந்து விடக் கூடாது என்று மாற்றிச் சொல்லியிருக்கிறான். அன்றைக்கே

பழி வாங்கும் எண்ணம் தோன்றிவிட்டது. ஓர் ஆண்டு காலம் உறுதி ஏற்றிவிட்டு எளிதல் விட்டுவிடுவானா? நம்பிக்கை இல்லை அவளுக்கு.

அன்றுமாலை பூஜையறையில் புவனேசுவரி சுலோகம் சொல்லத் தொடங்கிய போது மாடியிலிருந்து சிவநாதன் அபிராமியை அழைத்தார். "குடிப்பதற்கு கொஞ்சம் ஐஸ் வாட்டர் கொண்டுவாம்மா" என்று உரக்க பணித்தார்.

தண்ணீரை எடுத்துச் சென்று கொடுத்து விட்டு அங்கேயே நின்றாள் அபிராமி, "என்ன விஷயம், மாமா?" என்று மெல்லிய குரலில் வினவினாள்.

பார்வையாலேயே மருமகளை மெச்சிவிட்டு அவரும் தணிந்த குரலிலேயே பேசினார், "தனா ஊட்டி யிலிருந்து கிளம்பிவிட்டதாக சேதி வந்தது. கோவையி லிருந்து ரயிலில் வருகிறானாம். கோவை மானேஜரு தகவல் கொடுத்தார். அதனால் நாளை அவனை இங்கே எதிர் பார்க்கலாம் என்று நினைக்கிறேன்"

எப்படியும் ஒரு நாள் விரைவில் வருவான் என்பது தெரிந்த விஷயம்தான். ஆனால் அந்தநாள் நாளை என் கிறபோது அவளுக்கு நெஞ்சு படபடத்து.

"ஊஹூம். தைரியமாய் இருக்கவேண்டும்" எனறார் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த சிவநாதன். "இது ஊட்டி பங்களா இல்லை. இங்கே நீ தனியாக சகாய மற்று கொண்டு இருக்கவும் இல்லை. உன் மாமா நான் இருக்கிறேன். தன் உயிர் போல் உன்னை நினைக்கிற உன் அத்தை இருக்கிறாள். நாங்கள் அவசியம் இல்லா மல் தற்காத்துக் கொள்ள உன்னிடமே ஆயுதங்கள் இருக் கின்றன. ஏன் பயப்படவேண்டும்?" என்று அவர் கேட்டபோது அபிராமிக்கும் அதானே, ஏன் பயப்பட வேண்டும் என்றே தோன்றியது.

நிமிர்ந்து மாமனாரைப் பார்த்து லேசாக முறுவல் செய்தாள்.

"குட்" என்றார் அவர். "பாரம்மா, பயப்படத் தேவையில்லைதான். ஆனால் முன்னெச்சரிக்கையை விட்டு விடக் கூடாது. அவனிடம் எச்சரித்திருக்கிறேன். அதனால் சாதாரணமாகப் பழகுவான் என்று நினைக்கிறேன். நீயும் அப்படியே நடந்து கொள். உன் அத்தைக்குச் சந்தேகம் வரக்கூடாது என்பது முக்கியம். கவனம். சுவாமி விஷயம் உன் அத்தையிடம் சொல்லியிருக்கிறேன் என்பதால் மற்றபடி இப்போதைக்குக் கவலைப் பட ஒன்றுமில்லை." என்று கூறி மருமகளை அனுப்பி வைத்தார் அவர்.

தனஞ்சயன் வரக்கூடும் என்பது மாறி வருகிறான் என்று உறுதிப்படுமாறு அவனே கோவையிலிருந்து மறுநாள் ஸ்டேஷனுக்குக் கார் அனுப்பும்படி தகவல் கொடுத்தான்.

புவனேசுவரிக்கு மிகுந்த மகிழ்ச்சி.

எப்போதும் புவனேசுவரியின் முகம் மலர்ந்தாற் போலதான் இருக்கும் என்றாலும் மகன் வருகிறான் என்றதும் அந்த முகத்தில் தெரிந்த பூரிப்பு அபிராமியை அயரவைத்தது. இவ்வளவு பிரியமா?

அல்லது பிள்ளை என்றால் எல்லாத் தாய்மாருக்குமே இப்படித்தான் இருக்குமா?

எப்படியோ, ஆனால் புவனேசுவரிக்கு ஒன்றும் தெரியக் கூடாது என்று மாமனார் அழுத்திச் சொன்ன காரணம் மேலும் தெளிவாகப் புரிந்தது அபிராமிக்கு.

மகனுக்குப் பிரியமான உணவு வகைகளைக் செய்யச் சொன்னாள், புவனேசுவரி. ஏற்கனவே சுத்தமாயிருந்த வீட்டை மீண்டும் தட்டித் துடைத்து சுத்தம் செய்யச் சொன்னாள். பூக்குவளைகளுக்கெல்லாம் திரும்பவும் "பிராசோ" ஏறிற்று.

கடைசியாக மகனுடைய அறையைச் சீர் செய்கையில் தான் மாமியார் மனதில் நிறைந்திருந்தது குதூகலம்

மட்டும் இல்லை, கொஞ்சம் கவலையும் கூடத்தான் என்று அபிராமி உணர்ந்தாள்.

மருமகள் ஒருபுறம் உதவி செய்ய, தன்கையாலேயே படங்கள், டிரஸ்சிங் டேபிள், மேசை எல்லாம் தட்டித் துடைத்தபடி புவனேசுவரி தன் பயத்தை வெளியிட்டாள். "அன்றைக்கே ஆத்திரம் என்றார். இப்போது எப்படி எடுத்துக் கொள்ளப் போகிறானோ என்று கவலையாக இருக்கிறதம்மா" என்றாள்.

கைவேலையை நிறுத்தி விட்டு, மாமியாரை நிமிர்ந்து பார்த்த அபிராமிக்குக் கவலையின் காரணம் புரிந்து விட, பேசாமல் தலையணைக்கு புதிய உறையைத் தொடர்ந்து போடலானாள்.

"ஒரு நாள், ஒரு வாரம் என்றாலும் பரவாயில்லை. ஒரேயடியாய் சிற்றம்பல சுவாமி திரும்பும் வரை நல்ல நாளே இல்லை என்று விட்டாராமே. அப்படி என்ன அதிசயமான நேரத்தில் இரண்டு பேரும் பிறந்தார்களோ, தெரியவில்லை. சுவாமி வெளிநாடு போனால் திரும்பிவர ஆறு மாதமாவது ஆகும்... பையனிடம் எப்படிச் சொல்வது? உன் மாமா இலகுவாகக் கவலைப் படாதே, நானே பக்குவமாய்க் கூறிவிடுகிறேன் என்கிறார். எனக்குத்தான் உள்ளுக்குள் உதைக்கிறது. அவன் ஒத்துக் கொள்ளாவிட்டால்?" என்று மருமகளிடம் கேட்டாள் புவனேசுவரி.

பெண்ணாகப் பிறப்பதின் ஒரு பெரிய லாபம் இந்த மாதிரிப் பேச்சுக்களுக்குப் பதில் சொல்லித்தான் தீர வேண்டும் என்பதில்லை. சும்மா தலையைக் குனிந்து கொண்டாலே போதும். பாவம், வெட்கம் , பதவிசான பெண் என்று பாராட்டுவதோடு விட்டுவிடுவார்கள்.

புவனேசுவரியும் உள்ளூர மருமகளை மெச்சிக் கொண்டார். வீட்டில் இருந்த மூவரும் ஒவ்வொரு விதமான அலைப்புடன் காத்திருக்க, அவர்கள் மூவருக்கும் நிம்மதி அளிக்கும் வண்ணம் தனஞ்சயன் சாதாரணமாகவே நடந்து கொண்டான்.

அம்மாவிடம் ஊட்டிக் காய்கறிகளைக் கொடுத்தான். மனைவியிடம் முறுவலோடு 'ஹலோ' சொன்னான். தந்தையிடம் பிசினஸ் பேசினான். வந்த தினமே பெற்றவரோடு அலுவலகத்துக்கும் கிளம்பிவிட்டான்.

புவனேசுவரி வெளிப்படையாகவும் அபிராமி மனதுக்குள்ளாகவும் கவலைப் பட்டது அவசியமற்றது என்பது போல ஒவ்வொரு நாளும் நல்லபடியாகவே கழிந்தது.

பொதுவாக அந்த வீட்டில் காலை உணவு சேர்ந்து அருந்துவது வழக்கமாக இருந்தது.

ஆண்கள் பொதுவாக மதிய உணவுக்கு வீட்டுக்கு வருவதில்லை. ஏதாவது தொழில் ரீதியான 'லஞ்ச்' இல்லை என்றால் வீட்டிலிருந்து உணவு போகும்.

மாலையில் நேராகவோ, அல்லது ஏதாவது 'டின்னர்' போக வேண்டியிருந்தால் அதன் பின்னரோ வீடு திரும்புவார்கள். மாலையிலேயே திரும்பிவிட்டால் இரவு உணவும் சேர்ந்து நடக்கும்.

உணவின் இடையே சிவநாதன் வெளியே நடந்த எதாவது சுவாரசியமான நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறுவார். அதைப் பற்றி விமரிசனம் நடக்கும். வீட்டில் நடந்ததைப் பெண்கள் கூறுவார்கள். அதையும் சிவநாதர் ஏதாவது கிண்டல் செய்து சிரிப்பார்.

இப்போது தனஞ்சயன் தந்தையைப் போலவே பேச்சில் கலந்து கொண்டான். தாயின் காலைச் சிரித்தபடியே வாருவது அவனுக்குப் பிடித்தமான பொழுது போக்கு. சிரித்தபடியே புவனேசுவரி கையை ஓங்கும் போது, " அய்யோ, உங்கள் பட்டுக்கைகள் நொந்து விடும். பதிலாக இந்தக் கரண்டியால் இரண்டு வையுங்கள்" என்று முதுகைக் காட்டுவான்.

"பார்த்துக் கொண்டே இரு. அபிராமியைக் கொண்டு உன் சிண்டைப் பிடித்து உலுக்கச் சொல்லுகி

றேன்" என்ற தாயார் சிரித்தபடியே மிரட்ட, "முடியாதே அந்த மாதிரி ஆபத்தை எண்ணித்தானே முன் ஜாக்கிரதையாக தலைமுடியைக் கட்டையாக வெட்டி வைத்திருக்கிறேன்" என்று நகைப்பான் அவன்.

அவன் சிரிப்பில் எப்படியோ எல்லோரும் கலந்து கொள்ளும்படி ஆகிவிடும்.

"என்னம்மா, உன் சினேகிதர்களைக் கண்ணிலேயே காணோம்" என்ற புவனேசுவரி விசாரித்தபோது " எனக்காக நிறைய லீவு எடுத்து விட்டார்கள் இல்லையாம்மா, இப்போது லீவு நாளிலும் வேலை செய்து ஈடு கட்டுகிறார்கள் விரைவில் வருவார்கள்" என்றான் மகன்.

அதன்படியே வந்தார்கள். எப்போதாவது ஒவ்வொருவராக வந்து பண்பு தவறாமல் நடந்து கொண்டு விட்டுப் போனார்கள்.

சஞ்சலப்படும்படி எதுவும் நிகழவில்லை.

சிவநாதனின் முகத்தில் திருப்தி நிலவலாயிற்று.

மற்றவர் காதில் விழாதபடி, "நடக்கிற விதம் நன்றாய்த்தான் அம்மா, இருக்கிறது. ஒருவேளை இநதப் பத்து நாளில் நல்ல புத்தியும் வந்திருக்கலாம். அந்தப் பையன்களும் இவன் சொல்படி ஆடுகிறவர்களே தவிர கெட்டவர்கள் இல்லை. அவர்கள் கூட இவனுக்குப் புத்தி கூறியிருக்கலாம். பார்ப்போம். ஆனால் ஒன்று முழுமையாக நம்பிவிடாதே. எச்சரிக்கையுடனேயே இரு. நம்பிக்கையோடும் இரு." என்றார் ஒரு நாள்.

மகளும் மருமகனும் திரும்பி வந்து விட்டது தெரிந்து, சுதர்சனம் தம்பதியினர் அவர்கள் வீட்டில் விருந்துக்கு அழைத்தார்கள்.

தன் சிறுவீட்டில் இவ்வளவு பெரியவர்களை எப்படி ? என்று உள்ளூரக் கூச்சம்தான் அவர்களுக்கு. ஆனால் அபிராமியுடைய புகுந்த வீட்டினர் இயல்பாகப் பழகவும் எல்லோருக்கும் மகிழ்ச்சியாயிற்று.

தனஞ்சயனும் கூட, சரவணனிடம் கலகலப்பாய் பழகினான். "ஃபர்ஸ்ட் டே கவர்" சேர்ப்பவன் சரவணன். தன் ஆல்பத்தை அத்தானிடம் காட்டி "நன்றாயிருக்கிறது. நிறையவே சேர்த்திருக்கிறாயே!" என்ற பாராட்டைப் பெற்று மனம் குளிர்ந்தான். " இன்னமும் நிறையச் சேர்க்கலாம், அத்தான். சில சமயம் ரொம்ப நேரம் க்யூவில் நின்றால்தான் கிடைக்கும். லீவு போட்டால் அப்பாவிற்குப் பிடிக்காது" என்றான் குறையோடு.

"இனிமேல் எனக்கு ஃபோன் பண்ணு. நான் ஆள் விட்டு வாங்கித் தருகிறேன்." என்று தனஞ்சயன் கூறவும் தம்பியின் முகம் மலர்ந்த விதத்தில் அபிராமிக்கு மனம் குளிர்ந்தது.

விருந்து முடிந்து கிளம்புகையில்,"பெண்ணும் மாப்பிள்ளையும் தங்கி வரட்டுமே" என்று சுதர்சனம் கேட்ட போது "இது அவ்வளவு நல்ல மாதம் இல்லை. அத்தோடு திருமணமாகி இரண்டாம் மாதமாக – இரட்டைப்படை மாதமாகவும் இருக்கிறது. வேண்டாம் என்ன, இதே மெட்ராஸ்தானே. மெல்லப்பார்த்துக் கொள்ளலாம்" என்று தட்டிக் கழித்து விட்டார் சிவநாதன்.

"அத்தான், பை. ." என்று பின்னோடு வந்த தம்பியையும், அவன் கையைக் குலுக்கி விடை பெற்ற கணவனையும் பார்க்கையில் தங்கியிருக்கலாமோ என்று கூட அபிராமிக்குத் தோன்றியது.

அவன் நடந்து கொள்வதைப் பார்த்தால் திருந்தி விட்டான் என்று தானே தோன்றுகிறது!

இது ஆசை கொண்ட மனம் கணவனுக்குப் பூசும் வண்ணமோ என்று எண்ணிப் பார்க்கக் கூட அவளுக்கு விருப்பம் இல்லை.

மறுநாள் இரண்டொருதரம் அவளைப் பார்த்துப் புன்னகை செய்தான் தனஞ்சயன்.

அதற்கு அடுத்தநாள் தந்தை கிளம்பும் முன்னதாகவே அலுவலகம் சென்று விட்டான்.

சுமார் பதினோரு மணி அளவில் ஒரு சமையல் புத்தகத்தில் படித்த மாதிரி புதிதாக ஒரு பெங்காலி முறையில் மீன் பக்குவம் செய்வது பற்றிச் சமையல் காரனிடம் மாமியாரும் மருமகளுமாக விளக்கிக் கொண்டு இருந்தபோது மீண்டும் வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

"அம்மா, என்னோடு காலேஜில் படித்தானே, மணிவண்ணன் என்று ஒருத்தன். நினைவிருக்கிறதா?" என்று தொடங்கினான்.

"யாரப்பா? கோடு மாதிரி மீசை வைத்திருப்பானே கொஞ்சம் அசட்டு முகம்.. அவனா?"

"அசடா? அவனா? தொழிலில் கில்லாடியாக்கும். சிங்கப்பூருக்கும் ஹாங்காங்கிற்கும் வாரம் ஒரு தரம் பறந்து கொண்டிருக்கிறான், தெரியுமா?"

"ஒகோ! அப்படியா? ஆனால் திடீரென்று அவனுக்கு என்ன வந்தது? அவன் பேச்சை ஏன் எடுத்தாய்?"

"அவன் நேற்று சென்னை வந்திருக்கிறான். இன்று இரவே மீண்டும் சிங்கப்பூர் போகிறான். அவனால் திருமணத்துக்கு வர முடியாமல் போயிற்று என்று வருத்தம் தெரிவித்தான். 'தாஜில்' மனைவியோடு தங்கி இருக்கிறானாம். 'உன் மனைவியைக் கூட்டிவா. நாலு பேருமாக இங்கேயே சாப்பிட்டு விட்டு நாலு பேருமாய் ஒரு சினிமா - மாட்னி ஷோவுக்குப் போகலாம்' என்று அழைத்தான். மறுப்பது நன்றாயிராது என்று சம்மதித்து விட்டேன். பகலில் தானே. அதுவும் அவன் குடும்பத்தோடு இருந்துவிட்டு, சினிமா முடிந்ததும் டானென்று ஆறு மணிக்கு உங்கள் மருமகளை உங்களிடம் கொண்டு வந்து சேர்ப்பித்து விடுகிறேன், சரிதானா? " என்று இலகுவாகப் பேசினான் தனஞ்சயன். "என்னிடம் நம்பிக்கை இருக்கிறதில்லையா?" என்று கேட்டபடி சோபாவில் அமர்ந்து கையிலிருந்த புத்தகத்தைப் பிரித்து அதில் ஆழ்ந்து போனான்.

"என்னடா, தனா, உன்னிடம் நம்பிக்கை இல்லாமலா? உன் இடத்தில் இன்னொருவன் இருந்திருந்தால் நாளாவது நட்சத்திரமாவது என்று தூக்கி எறிந்திருப்பான். . . அபி. கிளம்பம்மா. சீக்கிரம். என்ன சேலை கட்டப் போகிறாய். அன்று வாங்கி வந்தோமே, அந்தப் பச்சை நிற ஷிஃபானை உடுத்திக் கொள்ளேன். அதோடு ஜெய்ப்பூர் பச்சை பொருந்துமா, அல்லது எமரால்ட் செட் தான் எடுப்பாய் இருக்குமா? தனா, நீ என்ன சொல்லுகிறாய்?" என்று மகனிடம் அபிப்பிராயம் கேட்டாள் அன்னை.

ஆனால் புத்தகத்தில் ஆழ்ந்திருந்த தனஞ்சயனுக்கு விஷயத்தை மீண்டும் ஒருதரம் விளக்க வேண்டியிருந்தது.

"பெரிய நகைகள் எதுவும் வேண்டாம்மா. சும்மா மெல்லிசாகத் தங்கத்தில் எதையாவது போட்டு வரச் சொல்லுங்கள்" என்று சுவாரசியமற்றுப் பதிலிறுத்து விட்டு மீண்டும் புத்தகத்துள் புதைந்து போனான் தனஞ்சயன்.

"அப்படியானால் அந்த மல்லிமொக்கு மாலையைக் கழுத்தில் அணிந்து கொள் .. கையில் ..."

இவளிடம் என்ன சொல்லி மறுப்பது? ஆனால் மறுப்பது அவசியம் தானா?

விமானத்தில் பார்வைகூடப் பதியாமல் புத்தகத்தைப் புரட்டியது நினைவு வந்தது. இன்று இரண்டுதரம் கத்தி அழைத்தல்லவா அவன் கவனத்தைக் கலைக்க வேண்டியிருந்தது. ஆக, படிப்பதுபோல நடிக்கவில்லை.

அப்படியானால் மெய்யாகவே திருந்தி விட்டானா? தப்பு சரி தெரிந்து விட்டதா? அன்று தந்தை சொன்னதை ஆழ்ந்து சிந்தித்திருப்பான் – அப்புறம் திருந்தாமல் எப்படி இருக்க முடியும்? அவனும் ஒரு மனிதப் பிறவி. அதிலும் புவனேசுவரி சொல்வதைப் பார்த்தால் நல்லவனும் கூட. அப்புறம் திருந்தாமல் இருக்கமுடியுமா?

"இதோ, சேலையை மாற்றிக் கொண்டு வருகி றேன்" என்று ஒரு துள்ளலுடன் கிளம்பினாள் அபிராமி.

சுவரோடு பதித்திருந்த 'வார்ட்ரோபில்' இருந்து சேலையை வெளியில் எடுத்த போது அவள் அறையில் டெலிஃபோன் மணி கிணுகிணுத்தது எடுத்துக் கேட்டாள்.

"சின்னம்மா, நீங்கதானா? அய்யா உங்களிடம் நேரே பேச வேணுமாம். தொடர்பு கொடுக்கிறேன்" என்றார் டெலிஃபோன் கால்களைக் கவனித்துக் கொள்ளும் லிங்கம்.

தயக்கத்துடன் "ஹல்லோ .." என்றாள் மருமகள்.

அவரது தயக்கத்துக்கு நேர்மாறாக, "அபிராமி, இங்கே தனஞ்சயன் அவன் ஆஃபிசில் இல்லை. ஒரு சேல்ஸ்' விஷயமாக முக்கியமான ஒருவரைப் பார்க்கப் போவதாகச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறான். ஆனால் எனக்கு . . . அவன் அங்கே வந்தானா?" என்று ஓர் அவசரத்துடன் வினவினார் அவர்.

# 12

திருமணமாகி முதல் முறையாகத் தன் மாமனாரின் கேள்விக்குப் பதில் சொல்ல அபிராமிக்குப் பிடிக்காமல் போயிற்று. "இம்" என்றாள் அவள் சுருக்கமாக.

"என்ன விஷயமாம்?"

அவர் ஏதாவது சொல்லித் தடுத்து விடக்கூடும் என்கிற பயத்தில் அவளுக்கு விஷயத்தைச் சொல்லக் கூட மனம் இல்லை. ஆனால் அவரிடம் சொல்லாமல் கணவனோடு செல்லவும் இப்போது ஓர் அச்சம் பிறந்து விட்டது. எனவே தயங்கியபடியே விவரம் சொன்னாள்.

"நீ கிளம்பி விட்டாயா?" என்றவர், சிலவினாடி மவு னத்தின்பின் பேசியபோது குரல் மிகவும் கனிந்திருந் தது. "பாரம்மா, அபி. நல்லதே நடக்கும் என்று நம்புவோம். ஆனால் நூற்றுக்குப் பத்து சதவீதமாய்த் தீமை நடந்தால் என்ன செய்வது என்று அதற்கும் தயா ராகவே இருக்க வேண்டும். ஒன்று செய். கிளம்புவதை ஒரு முக்கால் மணி நேரம் தாமதமாக்கு. அதற்குள் நான் வந்து விடுகிறேன். அப்புறம் ஒரு சின்ன 'டெஸ்ட்'. தேறி விட்டான் என்றால் தைரியமாக அவனுடன் போ. அதுவரை ... ப்ளீஸ், வேண்டாம்மா."

மாமனார் அவளுக்காகத்தான் பார்க்கிறார் என்பது அபிராமிக்கு நன்றாகவே தெரிந்தது. ஆனாலும் மன துக்கு வேதனையாக இருந்தது. அவர் நம்பிக்கையற்றி ருப்பது அவளுடைய கணவனிடம் அல்லவா?

நாற்பத்தைந்து நிமிடங்கள் தாமதப்படுத்துவது எப்படி என்று யோசித்தபடி கீழே இறங்கிச் சென்றாள்.

"உன் சினேகிதர்களுக்கும் கல்யாணத்திற்கு . . ." என்று ஏதோ மகனிடம் சொல்லிக் கொண்டிருந்த புவ னேசுவரி, மருமகளைப் பார்த்ததும், "என்னம்மா, சேலை மாற்றவில்லை?" என்று வினவினாள்.

"அது . . . அந்தச் சேலையில் கீழே 'பால்ஸ்' சரியா கத் தைக்கவில்லை, அத்தை. வேறு எதைக் கட்டுவது என்று கேட்க வந்தேன்" என்று ஏதோ வாய்க்கு வந்த பதிலைச் சொன்னாள் அபிராமி.

"'வார்ட்ரோப்' நிறையச் சேலைகள். அதில் எதை யாவது கட்டிக் கொண்டு வருவதுதானே. இதற்குப் பெரிதாய் அம்மாவிடம் கேட்க வேண்டுமா?" என்று எரிச்சலை மறைக்க முயன்றபடி கேட்டான் தனஞ்சயன்.

அந்த முயற்சியில் தோல்வியுற்றதை உணர்ந்தவன் போல, "என்னம்மா, என் பெண்டாட்டி கட்டுகிற சேலைவரை உங்களிடம் ஆலோசனை கேட்கத் தொடங்கிவிட்டாளே. போகப் போக உங்கள் மகனிடம் பேசலாமா கூடாதா என்று கூட உங்களிடம் கேட்டுக்

கொண்டுதான் பேசுவாள்போல?" என்று வேடிக்கை பேசிச் சிரித்தான்.

புவனேசுவரி வெள்ளையாய்ச் சிரித்தபோதும், மீண்டும் சஞ்சலப்பட்டுவிட்ட அபிராமிக்கு உறுத்தியது. "வெயிலில் வந்திருக்கிறீர்களே. முதலில் குளிர்ச்சியாக ஏதாவது ஜூஸ் தருகிறேன். நீங்கள் குடித்துக் கொண்டு இருக்கும்போது துணிமாற்றுகிறேன்." இனிமையாக முறுவலித்துவிட்டு, மாமியாரிடம் திரும்பி, "அத்தை, உங் களுக்கு ஒரு தம்ளர் ஆப்பிள் ஜூஸ் கொண்டு வரட் டுமா?" என்று அவளிடமும் கேட்டுப் பேச்சை நீட்டி நேரத்தை ஓட்டினாள்.

"கொண்டுவாம்மா. இந்த வெக்கைக்குத் தொண்டை வரண்டுதான் தெரிகிறது. ஆனால்.. நேரமா கிறதோ, தனா? மதியச் சாப்பாடுதானே, ஒரு மணிக்குப் போய்ச் சேர்ந்தால் போதுமில்லையா? இன்னம்தான் நேரம் இருக்கிறதே. உனக்கும் சேர்த்து எடுத்துக் கொண்டுவாம்மா பேசிக் கொண்டே குடிக்கலாம்." என்று புவனேசுவரி கூறியபோது, பதில் ஒன்றும் சொல் லாவிட்டாலும் சோஃபாவில் கிடந்த கணவனின் கை இறுகுவதைக் கவனித்த அபிராமிக்கும் உள்ளே இறுக் கம் உண்டாயிற்று.

ஆப்பிள் சாறை ஒரு மடக்கு அருந்திவிட்டு முகத் தைச் சுளித்தாள் புவனேசுவரி. "இவன் அப்பாவுக்கு மேல் இருக்கிறாய், நீ. சர்க்கரை இல்லாமல் சப்பென்று இருக்கிறது... ம். சரி சரி. சர்க்கரை கூடாது என்று டாக்டர் உத்திரவு. ஒத்துக் கொள்கிறேன்" என்றவள் கொத்துச் சாவியை எடுத்து மருமகளிடம் கொடுத்தாள். "நகையை எடுத்துக் கொள்ளம்மா திறக்கும் விதம் நினைவிருக்கிற தல்லவா?" என்று அனுப்பினாள்.

பழைய கால இரும்புப் பெட்டி அது. இரண்டு சாவி போடவேண்டும். ஆறு நம்பர் திருப்ப வேண்டும்.

சாவியுடன் அபிராமி அடுத்த அறை திரும்பும் வரை பொறுத்திருந்த தனஞ்சயன் தணிந்த குரலில்

அழுத்தத்துடன் பேசினான்." என்னம்மா நீங்கள்? இரும்புப் பெட்டி திறக்கும் விதத்தை எல்லாம் மற்றவர்களிடம் சொல்லிக் கொண்டு இருக்கிறீர்களே" என்றான் குரலில் கண்டனத்தோடு.

"மற்றவர்களிடம் இல்லையேம்மா. மருமகளிடம் தானே. அவள் நம் குடும்பம்தானே. எனக்குப் பிறகு."

"என்ன பிறகு? அந்தப் பேச்சு பேசினால் எனக்குக் கோபம் வரும்" என்று அவசரமாகத் தடுத்தவன் தொடர்ந்தான். "மருமகள் என்பது புதிதான உறவு அம்மா. அந்தப் பதவிக்கு அவள் எந்த அளவு தகுதியானவள் என்று கொஞ்ச காலம் கவனித்துப் பார்த்த பிறகு தான் முடிவு செய்ய வேண்டும். அதற்கு முன் .."

"கொண்டு வைத்து பிறகு கோத்திரம் பார்ப்பார்களா என்பார்கள். நீ சொல்லுகிற தகுதியெல்லாம் திருமணத்துக்கு முன்பு பார்க்க வேண்டியது. பார்த்து, பிடித்து, தாலிகட்டி அழைத்துவந்த பிறகு . . . என்னடா, உன் பேச்சு எனக்குப் புரியவில்லை உளறலாக இருக்கிறது" என்றாள் தாயார்.

சற்றுத் தயங்கிவிட்டு, "அதற்கில்லை அம்மா இந்தப் . . இவளுக்கு ரகசியத்தைப் பாதுகாக்கத் தெரியுமோ என்னவோ? இவள் பாட்டில் அவள் அம்மாவிடம் வாய்விட, அந்த அம்மா இன்னும் யாரிடமாவது சொல்லி வைக்க . . . .. இரும்புப் பெட்டிக்குள் இருக்கும் நகைகளின் மதிப்பு உங்களுக்குத் தெரியுமில்லையா? ஜாக்கிறதையாக இருப்பது நல்லது என்றேன். அவ்வளவு தான்" என்று முடித்தான் மகன்.

கையில் கிடக்கும் நான்கு வளையல்கள் போதுமா, கூடுதலாக அணியவேண்டுமா என்று மாமியாரிடம் கேட்கவென்று திரும்பி வந்த அபிராமியின் காதில் இந்தப் பேச்சு முழுமையும் தெளிவாக விழுந்தது. கணவனின் குரல் தணிந்து ஆனால் அழுத்தமாக ஒலிப்பது புரிந்ததுமே அவளும் ஓசையற்று நின்று கேட்கத்

தொடங்கிவிட்டாள். ஒட்டுதான், ஆனால் கடைசிவரை கேட்டு முடித்தாள்.

ஆக இரும்புப் பெட்டியைத் திறக்கும் முறை அபிராமிக்குத் தெரிவதும், அதை அவள் கையாள்வதும் தனஞ்ஜயனுக்குப் பிடிக்கவில்லை. ஏன்?

கைப்புண்ணை அறியக் கண்ணாடி தேவையில்லை.

இங்கே காரணம் கண்டுபிடிக்கவும் பெரிய துப்பறியும் நிபுணரின் மூளை தேவையில்லை.

... அல்லது ... மெய்யாகவே அவளைப் பற்றி இன்னமும் அவன் முழுமையாக அறிந்து கொள்ளாததால் தாயிடம் நிஜமாக அவன் நினைத்ததைத் தான் சொன்னானா?

கணவனின் காதலுக்காக ஏங்கிய மனதில் ஆசை இன்னமும் அடித்துக் கொள்ள, கனத்த இதயத்துடன் மாமனாரின் வரவுக்காகக் காத்திருந்தாள் அபிராமி.

சிவநாதன் வந்து சேர, அவர் சொன்ன முக்கால் மணி நேரம் கூட ஆகவில்லை. காரை வெகுவிரைவாக ஓட்டி வந்திருப்பார் போலும்.

மாடி ஜன்னல் வழியே பார்த்திருந்தவள், கேட்டருகே காரைக் கண்டதும் வேகமாக வந்து படியிறங்கினாள். நேரத்தைப் போக்கவென்று ஒவ்வொன்றாகப் பார்த்துப் பார்த்து அலங்காரம் செய்ததாலோ என்னவோ – ரதியாகத் தான் தோன்றினாள். அதிலும் அவளுக்கு மிகவும் பொருந்துகிற சிவப்பு கலந்த பிங்க் கலர்ச் சேலை.

தாயோடு மகனும் சேர்ந்து விழியகல நோக்குவதை உணர்ந்து தரையைப் பார்த்தபடி நடந்து வந்து மாமியாரின் அருகில் நின்றாள் அபிராமி.

கன்னத்தைத் தடவி திருஷ்டி கழித்த புவனேசுவரி, "என் கண்ணே பட்டுவிடும் போல இருக்கிறது, கண்ணு" என்றாள் பெருமையோடு.

ஏதோ பிரமையை விலக்குபவன் போலத் தலையை உலுக்கிக் கொண்டவன், "நாலுமணி நேர அலங்காரத்தின் விலையல்லவா?" என்று கேலி பேசினான்." சரி சரி, இனிச் சீக்கிரம் கிளம்ப ..." என்று வாயிற்புறம் திரும்பியவன் அங்கே தந்தையைக் கண்டதும் திடுக்கிட்டான்.

எதிர்பாராத நேரத்தில் கணவனைக் காணவும், "என்ன இந்த நேரத்தில்? உடம்புக்கு ஒன்றுமில்லையே?" என்று ஆச்சரியமும் கவலையுமாகக் கேட்டாள் புவனேசுவரி.

"அப்புறம் சொல்கிறேன்" என்று மனைவியிடம் பதிலிறுத்து விட்டு மகனிடம் திரும்பினார் சிவநாதன். "நீ எங்கே இந்த நேரத்தில் இங்கே வந்தாய்?" என்று விசாரித்தார்.

அவன் பேசாமல் நிற்கவும், அதற்குள்ளாகப் புவனேசுவரி விவரம் சொன்னாள்.

"யார், மணிவண்ணனா? நான்கூட அவன் அப்பாவுக்கு ஒரு சேதி அனுப்ப வேண்டியிருக்கிறது. நம் சிங்கப்பூர் பிரிவை அவர்தானே பார்க்கிறார். கிளம்புங்கள், நானும் உங்களுடனேயே வருகிறேன். அவனிடம் விஷயத்தைச் சொல்லிவிட்டு நான் என் வேலையைப் பார்க்கப் போய்விடுகிறேன்" என்றார் சிவநாதன்.

லேசாக உதடு சுழிய, "ஒரு சேதிக்காக நீங்கள் அவ்வளவு தூரம் வருவானேன்? என்னிடம் சொன்னால் நானே அவனிடம் சொல்லி அனுப்பி விடுகிறேன். உங்களுக்கு அலைச்சல் மிச்சம்" என்ற தனஞ்சயன் குரலில் ஏளனம் லேசாகத் தொனித்தது.

"அலைச்சல் என்ன? நீ 'தாஜு'க்குத் தானே போகிறாய்? நான் கூட அங்கே ஒருவரைப் பார்ப்பதற்காகத் தான் கிளம்பினேன். மணிவண்ணனிடம் விஷயத்தைச் சொல்லிவிட்டு நான் நானூற்று இருபதாம் நம்பர் அறையை நோக்கிப் போய்விடுகிறேன்" என்றார் சிவநாதன் சற்றும் அலட்டிக் கொள்ளாமல்.

முகம் இறுக, "ஓகே. எதற்கும் டெலிஃபோன் செய்து விட்டுக் கிளம்பு என்றான் மணி. இதோ வருகிறேன்" என்று முன் அறைக்கு விரைந்தான் தனஞ்சயன்.

விரைவிலேயே திரும்பி வந்து, "அவன் மாமனார் திடீரென்று வந்துவிட்டாராம். அவரோடு போக வேண்டியிருப்பதால் விருந்தை இன்னொருதரம் வைத்துக் கொள்ளலாம் என்கிறான் என் சிநேகிதன். நான் இப்போது அலுவலகம் போகிறேன்" என்று கிளம்பினான்.

"மணி பன்னிரண்டு ஆகிவிட்டது. நீ வீட்டிலேயே சாப்பிட்டுவிட்டுப் போயேன், தனா" என்று அழைத்த தாயிடம் "பசியில்லை" என்று மறுத்து விட்டான் தனஞ்சயன். வாயில் வரை சென்றவன் நின்று, "அப்பாவுக்குச் சாப்பாடு எடுத்து வையுங்கள், அம்மா. இப்போது அவர் கூட டெலிஃபோனிலேயே நானுற்று இருபதாம் நம்பர் ஆளுடன் பேசி முடித்து விடுவார். 'தாஜு'க்குப் போக அவருக்கும் அவசியம் இராது. வீட்டிலேயே சாப்பிட்டு விட்டு நிம்மதியோடு நன்றாகத் தூங்கட்டும்" என்று நக்கலாக மொழிந்து விட்டுச் சென்று விட்டான்.

அபிராமியின் உள்ளம் வேதனையில் சுருண்டு விட அவள் மாமனாரின் பொருள் பொதிந்த பார்வைக்கு அவசியமே இருக்கவில்லை.

மணிவண்ணன், அவன் மனைவி, 'தாஜி'ல் மதிய உணவு எல்லாமே பொய். ஊட்டி மாதிரி எங்கோ ஏதோ ஏற்பாடு செய்து விட்டு அவளை ஏமாற்றி அழைத்துச் செல்லத் தனஞ்சயன் நடித்த நாடகம்! அவன் மாறவே இல்லை. மாறுவதாகவும் இல்லை.

அதில் அவள் எவ்வளவு எளிதாக ஏமாந்துவிட இருந்தாள்?

அவளது முகவாட்டத்தைக் காணவும் புவனேசுவரியின் மனம் உருகிப் போயிற்று.

"பாவம். அபி அலங்காரம் செய்து கொண்டது வீணாகிப் போயிற்று" என்று மாமியாரின் பரிவில அபிராமியின் மனம் மேலும் கசங்கியது.

"ந்ான் .. நான் போய்ச் சேலையை மாற்றி .. விட்டு வருகிறேன்" என்று சிரமப்பட்டு மொழிந்தவள் கண்ணீரை மறைக்க முயன்றபடி மாடிப் பக்கம் செல்லலானாள்.

"அபிம்மா .." என்று மருமகளின் புறமாக ஓர் எட்டு எடுத்து வைத்த மனைவியை, "புவனி உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும்" என்று தடுத்து நிறுத்தினார் சிவநாதன்.

கண்ணீர், பார்வையை மறைத்த போதும், பழக்கத்தின் பயனாகக் கால்கள் அவளது அறைக்குக் கொண்டு போய்ச் சேர்த்துவிட, படுக்கையில் குப்புறவிழுந்து ஒரு மூச்சு அழுது தீர்த்தாள் அபிராமி.

இது மூன்றாவது தோல்வி. புவனேசுவரியின் பேச்சின்படி தனஞ்சயனுக்கு வெல்லுகிற வெறி இன்னமும் அதிகமாகும். இன்னும் என்னென்ன வழிகளில் முயற்சிப்பான்?

கண் தெரியாத மையிருட்டில், எப்போது அதல பாதாளத்தில் விழுந்து விடுவோமோ என்கிற பயத்துடனேயே நடமாடிக் கொண்டு, சீச்சீ, இது என்ன வாழ்க்கை?

ஒருவேளை, ஆயிரத்தில் ஒரு வாய்ப்பாக, தனஞ்சயன் பிழையுணர்ந்து திருந்தினால் கூட இனி அவனை எப்படி நம்பமுடியும்?

ஓர் ஆணோடு கூடிவாழும் இல்லறம் தான் வாழ்வு, அது இல்லாவிட்டால் உலகமே அஸ்தமித்து விடும் என்று அபிராமி எண்ணவில்லை. தனஞ்சயனைப் பிரிந்து அவளால் வாழ முடியாது என்றும் இல்லை.

திருமண வாழ்வு தோலவி என்று பிறந்த வீட்டுக்குத் திரும்புவது அவமானமாக இருக்கலாம் . . . இருக்கலாம்

என்ன, அவளைப் பொறுத்தவரை அது அவமானம் தான். அதிலும் கெக்கலி கொட்டிச் சிரிக்கக் கூடிய உற வினர் இருக்கையில் அது தாங்க முடியாத அவமானம்தான்.

ஆனால் சகிக்க முடியாதது அல்ல. இன்று தாங்க மாட்டாதது போலத் தோன்றினாலும் கூடக் காலப் போக்கில் மெல்ல மெல்ல வலுவிழந்து மறந்து கூடப் போகக் கூடியதே. அத்தோடு குத்திக் கிளறுபவர்கள் கூட எத்தனை நாள் அதையே செய்து கொண்டு இருப்பார் கள்? அவரவர்களுக்கு வேறு வேலை இல்லையா?

எனவே பிரிந்து செல்வது இங்கிருப்பதை விடவும் பெரிய துயரம் இல்லை. சொல்லப் போனால்... அங்கே கூட அவன் துரத்தினாலும் கூட இங்கிருப்பதைவிட ஆபத்து குறைவானது தான்.

ஆனால் புவனேசுவரி?

பெற்ற தாயைக் கூட மறக்கடிக்கும் அளவு அன்பு செலுத்திப் பராமரிக்கும் இந்த மாமியாரைப் பிரிவதே துன்பம் என்பதோடு, அவளிடம் என்ன சொல்லி எப்படிச் சமாளிப்பது?

உண்மையைச் சொல்லப் போய் அவளது உயி ருக்கு ஏதேனும் ஆகிவிட்டால்?

எண்ணும்போதே உடல் சிலிர்த்த அபிராமிக்கு ஊட்டியில் மாமனாரிடம் சொன்னது நினைவு வந்தது.

மெல்லப் பிரிவுக்கு தயார் செய்துவிட்டுப் போவதா கச் சொன்னாளே! அது பற்றி இன்றுவரை அவள் ஒன்றுமே செய்யவில்லையே! ஆனால் என்னதான் செய்வது?

திருமணத்தை அடுத்து அவனோடு கழித்த அந்த முக்கால் நாளைப் பற்றிப் புவனேசுவரியிடம் ஒரு வார்த்தை உரைப்பது கூடச் சரியில்லை.

தனஞ்சயன் திரும்பி வந்த பிறகோ அவனைப் பற்றி அவனுடைய தாயிடம் குறை கூறும்படி அவன்

நடந்து கொள்ளவே இல்லை. வெளியே செல்லும்போது அவளை அழைத்து, சொல்லிக் கொண்டு போகிறான், உள்ளே வரும் போது இனிமையாகப் புன்னகை செய்கிறான். அறைக்குள் வந்தால் அவள் அருகில்தான் அமருகிறான். கடிந்ததொரு வார்த்தை . . . வார்த்தை என்ன, முகம் சுளித்து ஒரு பார்வை கூடக் கிடையாது.

இதில் எதைக் குற்றமென்று கூறுவது என்பது ஒரு புறம் இருக்க, தப்பு தேடும் எண்ணம் அபிராமிக்குமே வரவில்லையே!

கணவன் தன் பிழை உணர்ந்து நல்ல விதமாய் மாறி வந்திருப்பதாகத் தானே இன்றுவரை எண்ணி ஏமாந்து வந்திருக்கிறாள்!

மாமனார் மட்டும் சமயத்தில் குறுக்கிட்டிருக்காவிட்டால் என்ன கதியாகியிருப்பாள்!

நின்றிருந்த கண்ணீர் மீண்டும் பெருகியது அவளுக்கு.

"அபிம்மா" என்ற அழைப்புடன் கதவை லேசாகத் தட்டும் ஒலி கேட்டதும் கண்களையும் கன்னங்களையும் துடைத்துக் கொண்டு சென்று கதவைத் திறந்தாள் அபிராமி.

தாழ்ப்பாளைத் திறக்கக் கையை உயர்த்தும் போதே மனதில் ஒன்று தோன்றியது. ஒருதிடம் ஒரு தென்பு.

இந்தச் சொருகு தாழ்ப்பாள் அவளுக்காகப் பொருத்தப்பட்டது. அதை வெளிப்படையாகச் சொல்லாமல், சாவியால் திறக்கிற மாதிரி கதவில் பொறுத்துகிற பூட்டுகளை இப்போது எளிதாகத் திறந்து விடுகிறார்கள். எனவே உள்ளே இருப்பவர்கள் பாதுகாப்புக்கு இதுதான் நல்லது என்று கூறி எல்லா அறைகளுக்குமே, உட்புறமாக இந்தத் தாழ்ப்பாள்களைப் பொருத்த ஏற்பாடு செய்தார் சிவநாதன்.

இந்த மாதிரி யோசித்து செயல்படுகிற ஒரு மாமனாரின் துணை எப்போதும் இருக்கிறதே!

கதவு திறந்து அவளைப் பார்த்ததுமே, "அழுதாயா, அம்மா?" என்றார் சிவநாதன் பரிவுடன்.

உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாமல் நின்றாள் அபிராமி.

ஒரு பெருமூச்சுடன், "வருத்தப்படாதே, என்று உன்னிடம் சொல்வதற்கு எனக்குத் தகுதியில்லையம்மா. ஆனால் ஒன்று. விஷயத்தை உன் அத்தையிடம் வேறு மாதிரி சொல்லி இருக்கிறேன். அவள் இனி உன்னைத் தனஞ்சயனுடன் தனியே அனுப்ப மாட்டாள்" என்றார் அவர்.

புவனேசுவரியிடம் அவர் என்ன சொல்லியிருப்பார் என்பதை இலகுவாகவே ஊகித்தாள் அபிராமி. மனைவியோடு தனித்திருக்கத் திட்டம் போட்டிருக்கிறான் மகன். சிற்றம்பல சுவாமி சொன்னதை மறந்து விட்டாயா? மகன் வாழ்வு கெட்டுவிடப் போகிறது என்று பயமுறுத்தியிருப்பார். ஆனால் அத்தை மட்டுமா அவளைக் கிளம்ப வைக்கவில்லையே.

அவமானத்தால் முகம் கன்றத் தலை குனிந்தபடி, "என் மேலும் தப்பு இருக்கிறது மாமா, நானும் நம்பி ..." என்றவள் மேலே சொல்ல விருப்பமின்றி நிறுத்தினாள்.

"அதில் பெரிய தப்பு ஒன்றும் இல்லையம்மா" என்றார் பெரியவர் தேறுதலாக. "எல்லாப் பெண்களுக்குமே கணவனை நல்லவனாக நினைக்கத் தான் தோன்றும். தனாவும் இயல்பில் கொடியவன் இல்லை, மகளே. என்னவோ அவமானப்படுத்தப்பட்டு விட்ட ஆத்திரத்தில் பழிவாங்க வேண்டும் என்று தப்பு சரி பற்றி எண்ணிப் பாராமல் திட்டம் போட்டுவிட்டான். அவனது திட்டம் எவ்வளவு கேவலமானது, எவ்வளவு மட்டரகமானது என்பதை அவனுக்குப் புரிய வைக்க வேண்டும். அவ்வளவுதான். எல்லாம் சரியாகிவிடும். இனி அந்த முயற்சியில் இறங்குவோம்" என்று முடித்தார் சிவநாதன்.

மறுநாள் காலை உணவின் போதே அந்த முயற்சியை தொடங்கினார் அவர்.

வழக்கம்போல நால்வருமாகக் காலை உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்த நேரம் பணியாள் வந்து ஒருதரம் பரிமாறிவிட்டு, உள்ளே சென்றதும் சிவநாதன் மனைவியை அழைத்துப் பேசத் தொடங்கினார். "புவ்னி, நம் நமசிவாயத்தை நேற்று சந்தித்தேன். 'ரேஸ் கிளப்'பில் ஒரு பார்ட்டியைப் பார்க்கப் போனபோது அங்கே இவரும் வந்திருந்தார்" என்று கூறிவிட்டுத் தோசையை விண்டு வாயில் வைத்துக் கொண்டார்.

ஒரு கணம் யோசித்துவிட்டு, "நமசிவாயம் என்றால் ... இங்கே டி எஸ்பியாக இருந்துவிட்டு மகன் கூப்பிடுகிறான் என்று ஸ்டேட்சுக்குப் போனாரே, அவரா? எப்படி இருக்கிறார்? இந்தியாவுக்கு எப்போது வந்தார்? அங்கே அவர் பிள்ளை, அவன் மணந்து கொண்ட அமெரிக்கப் பெண் எல்லோரும் எப்படி இருக்கிறார்களாம்?" என்று விசாரித்தாள் புவனேசுவரி.

"ம். அவர்கள் எல்லோரும் சுகம் தானாம். ஒரு பேத்தி, அச்சு அவர் மகன் போலவே பிறந்திருக்கிறதாம்" என்று சிவநாதன் சொல்லிவந்த போது, "ஒருநிமிடம் அப்பா" என்று குறுக்கிட்டான் தனஞ்சயன்.

"அம்மா, இந்தப் பொங்கலில் நெய் நிறைய இருக்கிறது. உங்களுக்கு ஆகாது. வேண்டாம்" என்று தாயின் தட்டில் இருந்த பொங்கலை எடுத்து ஒரு மூடித் தட்டில் வைத்து விட்டு, "இனிச் சொல்லுங்கள்" என்றான்.

அவனை ஒருதரம் வெறித்துவிட்டு, சிவநாதன் மேலே பேசினார். அவருக்கு உறவுக்காரப் பெண்ணாம் ஊரார், உறவினர் மத்தியில் திருமணம் செய்து, அங்கே அமெரிக்காவுக்குக் கூட்டிப் போய் விட்டு வேலைக்காரி என்கிறானாம், ஒருத்தன். தாலி கட்டினாயே என்றால் அது இந்தியாவில். இங்கே செல்லாது. இங்கே சட்டப்படி மணந்த மனைவிக்கு வேலை செய்யத் தான் உன்னைக் கொணர்ந்தேன் என்கிறானாம். அக்கினி சாட்சியாக,

தெய்வத்தை முன்னிட்டு, பெற்றவர்கள் பெரியவர்கள் ஆசியுடன் மணந்து விட்டுக் கூசாமல் இல்லை என்கிறானே, ராஸ்கல். இவனையெல்லாம் நாற்சந்தியில் நடுவில் நிறுத்திச் சவுக்கால் அடித்துத் தோலை உரிக்க வேண்டாமா? நீஎன்ன சொல்கிறாய் தனா?" என்று சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திப்பது போல மகனிடம் நேரடியாகக் கேட்டார் சிவநாதன்.

# 13

மா மனாரின் கேள்வியைக் கேட்டுத் திகைப்புற்று நிமிர்ந்து கணவன் முகத்தைப் பார்த்த அபிராமிக்குக் கணவனிடம் பரிதாபம் உண்டாயிற்று. இந்த மாமா இவரை இப்படி மாட்டி வைத்து விட்டாரே என்று நினைத்தாள்.

ஆனால் தனஞ்சயன் தடுமாறியது ஒரு கணம் தான். உடனேயே சுதாரித்து, "இந்தக் கதைக்கும் நமச்சிவாயம் அங்கிளுக்கும் என்னப்பா சம்பந்தம்? இதை உங்களிடம் சொல்வதற்காகவா மெனக்கெட்டு அவர் ஸ்டேட்சிலிருந்து கிளம்பி சென்னையிலிருக்கும் போட் கிளப்புக்கு வந்தாராம்?" என்று கேலிக் குரலில் வினவினான்.

வலையிலிருந்து தப்பியதுமட்டுமின்றித் தந்தையையே மாட்டிவிட்டானே!

ஆனால் அவனுடைய தந்தை ஆயிற்றே! அவரும் சளைக்காமல் பதில் சொன்னார். "அப்பா, மகனே, என் அருமருந்தன்ன புத்திரா, ஒருவகையில் நீ சொல்வதும் சரிதான். இங்கே அந்தப் பரிதாபத்துக்குரிய பெண்ணினுடைய தகப்பனார், தன்னுடைய ஒன்றுவிட்ட சகோதரனான நமசிவாயத்துக்குத் தன் பெண்ணைப் பார்த்து நலம் விசாரித்துத் தகவல் தெரிவிக்குமாறு எழுதியிருந்தாராம். நம் வேதனை நம்மோடு, தாய் தந்தையை வேத

னைப்படுத்துவானேன் என்று நினைத்துக் கடிதம் எழுதாமல் இருந்திருக்கிறாள் அந்தப் பெண். இவர் இருக்கிற இடத்தை விட்டு நாலு ஸ்டேட் தாண்டிப் போய் அந்தப் பெண்ணைப் பார்த்தால் மாலை மாலையாகக் கண்ணீர் வடித்தாளாம். 'என்னவோ இந்தியாவில் உன் பெற்றோரிடம் கொண்டு விடுகிறேன்' என்று அழைத்தாராம் நம் சிவாயம். 'வேண்டாம் சித்தப்பா' என்னைப் பார்த்துப் பார்த்து வேதனைப் படுவார்கள். அத்தோடு அமெரிக்காவில் மாப்பிள்ளையா என்று வயிறெரிந்த சொந்தக்காரர்களின் நடுவில் தலையிறக்கம் வேறு. எனக்கு உதவி செய்வது என்றால் இங்கே ஒரு வேலை பார்த்துக் கொடுங்கள் என்றாளாம். புருஷன் மனது என்றைக்காவது மாறிவிடாதா என்கிற நப்பாசை. சரிதான் என்று மகன் மூலம் அவளுக்கு ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்து அந்த வீட்டிலிருந்து அவளைமீட்டு, தனியே வாழ வைத்திருக்கிறார் . அதற்கு மேல் இங்கே தன் அண்ணனிடம் விஷயத்தைத் தெரியப்படுத்த நேரில் வந்திருக்கிறார். அப்படி வந்தவரைத் தற்செயலாக 'போட்கிளப்'பில் பார்த்தேன். போதுமா விளக்கம்? இப்போது சொல், இந்த மாதிரிக் கயவர்களை என்ன செய்யலாம்?" என்று மீண்டும் மகனின் சிண்டைப்பிடித்தார் சிவநாதன்.

எத்தனை வழிகளில் திரும்பினாலும் தகப்பனார் விடப்போவது இல்லை என்பது தனஞ்சயனுக்குப் புரிந்து போயிற்று. பதிலுக்காகக் காத்திருந்த தந்தையிடம் திரும்பிய அவனது பார்வை ஒருதரம் அபிராமி மீது பட்டு விலகியது. "அப்பா, நீங்கள் சொன்னதெல்லாம் அந்தப் பெண்ணின் வாய் வார்த்தைகளே. அவளை சேர்ந்தவர்களின் வார்த்தையே. உண்மையில் நடந்தது என்னவோ, நமக்கு என்ன தெரியும்? என்றவன் கண்கள் ஸ்பூனைப் பற்றியிருந்த வலது கை மீது படிந்தது "அவர்களுக்குள் முன் விரோதம் இருந்திருக்கலாம். இந்தப் பெண்ணால் அவன் எவ்வளவு கஷ்டப்பட்டானோ? பழி வாங்குவதற்காகக்கூட"

"அதற்காக?" என்று கேட்ட புவனேசுவரியின் குரலில் கோபம் இருந்தது. அதற்காக எந்த அளவுதான் போவது என்பது இல்லையா? "அப்பா சொன்னது போல ஒரு கேஸ்கூட நடந்தது, உனக்குத் தெரியாதா, தனா? கல்யாணம் செய்து அழைத்துப்போய் சிவப்பு விளக்குப் பகுதியில் பெண்களை விற்பதாகக்கூடப் பத்திரிகையில் வந்ததே. அதேபோல மனைவி என்று நிக்காஹ் செய்து அழைத்துப் போய் அரபு நாடுகளில் அடிமைப்பெண்களாக்குவது. . . இதெல்லாம் எவ்வளவு அநியாயம்? எல்லா மதத்திலும் கடவுளை முன்னே வைத்துத்தானே திருமணம் நடக்கிறது? அதிலிருந்தே திருமணம் தெய்வீகம் என்பது தெரிய வேண்டாம்? உலகத்திலேயே புனிதமான சடங்கு திருமணம். ஓர் ஆணும் பெண்ணும் உடலாலும் உள்ளத்தாலும் இணையும் உன்னதமான சடங்கு அது. அதை நாடகமாக்கிப் பணமாக்குவதா? பழி வாங்குவதா? பஞ்சமா பாதகங்களையும் விட இது மோசமானது. அதைப்போய் என் மகன், நீ ஒத்துப் பேசுவதா? சிச்சீ, தனா?"

புவனேசுவரியின் முகம் கடுத்து அன்று வரையிலும் அபிராமி கண்டது இல்லை. கோபக் குரலைக் கேட்டதும் இல்லை.

முகத்தில் சினச் சிவப்புடன் புவனேசுவரி பொரிந்து கொட்டுவதை ஆச்சரியத்துடன் நோக்குகையில், புவனேசுவரியுடைய பிள்ளையும், புருஷனும் கூட அதே ஆச்சரியத்துடன் பார்ப்பது தெரிந்தது.

கூடவே சிவநாதனின் முகத்தில் திருப்தியையும், தனஞ்சயன் முகத்தில் சிறு சஞ்சலத்தையும் காணவும் "ஹூர்ரே" என்று கத்தவேண்டும் போல இருந்தது அவளுக்கு.

முதல் முயற்சியிலேயே வெற்றிப்படிகளில் ஏறத் தொடங்கி விட்டார்களா!

சட்டென்று திரும்பிய தனஞ்சயனின் விழிகள் மனைவியின் முக மலர்ச்சியை அவள் அவசரமாக முக

பாவனையை மாற்ற முயலுமுன் கண்டு கொண்டன. அதே வேகத்தில் தந்தையின் முகத்தையும் பார்த்தவன் உதடுகளில் ஒரு விசித்திரப் புன்னகை படர்ந்தது.

தாயிடம் திரும்பி, ஸ்பூனை தட்டில் வைத்து விட்டு, "அம்பேல்" என்று கைகளை உயர்த்தினான் அவன். "ரொம்ப சாரிம்மா. திருமணம் தெய்வீகம் என்பதை நானும் அப்படியே ஒத்துக் கொள்கிறேன். நம்முடைய அக்கினி சாட்சியாய் தாலிகட்டும் திருமணமானாலும் சரி, கிறிஸ்துவர்களின் மோதிரம் மாற்றும் மணவினை என்றாலும் சரி, முஸ்லீம்களின் வழிமுறைப்படி நடக்கும் கல்யாணமும் சரி, எல்லாம் கடவுள் சாட்சி வைத்துச் செய்தால் மதிப்புக் குரியவை, மறுக்க மாட்டாதவை, அலட்சியப் படுத்தக் கூடாதவை சரிதானா?" என்று சிரித்தான்.

"எனக்காகச் சொல்கிறாயாக்கும்?" என்றாள் புவனேசுவரி சற்றுக் குறையோடு.

"இல்லையம்மா" என்று நெஞ்சைத் தொட்டு, "இங்கே உள்ளிருந்து வருகிற வார்த்தைகள் அம்மா." என்று மகன் சீரியசாகச் சொல்லவே தாயின் முகம் பழையபடி மலர்ந்தது.

என்னவோ நெருட கணவன் முகத்தைக் கூர்ந்து ஆராய்ந்தாள் அபிராமி. முன்போல சட்டென அவன்புறம் பார்வையைத் திருப்பி, அவன் கேலியாக ஒற்றைப் புருவத்தைத் தூக்கி இறக்கவும் குழப்பத்துடன் பார்வையைத் தட்டில் பதித்தாள் அவள்.

குழப்பத்தை அவனே விரைவில் தீர்த்து விட்டான்.

அலுவலகத்துக்குக் கிளம்புகையில் அவளை அழைத்து விடை பெறும் போது தணிந்த குரலில் விளக்கினான். "மாமாவும் மருமகளும் சேர்ந்து கூட்டணி அமைத்துப் போராடுகிறீர்களாக்கும்? ஆனால் போராடுகிற வேகத்தில் அடிப்படை உண்மை ஒன்றை மறந்து விட்டீர்கள் பாவம், என்னவென்று தெரிகிறதா?" என்று கேட்டான்.

அவள் இல்லை என்று தலையசைக்கவும், "நான் உன் கழுத்தில் தாலி கட்டவே இல்லை யாரையும் சாட்சிக்கு அதுதான், அக்கினி, கடவுள்கள் என்று நான் யாரையும் சாட்சிக்கு அழைக்கவும் இல்லை. அவர்கள் முன்னிலையில் உன்னை மணக்கவும் இல்லை. நினைவு வைத்துக்கொள்" என்று கூறிக் காரை நோக்கி நடந்தான் அவன்.

தோற்று ஓய்ந்து நின்றாள் அபிராமி.

பீரோவிலிருந்து சில பத்திரங்களை எடுத்து வருமாறு மனைவியை அனுப்பி விட்டு மருமகள் அருகே வந்தார் சிவநாதன்.

"என்னம்மா நான்தான் தாலியே கட்டவில்லையே என்றானா? ஒரே முயற்சியில் வெற்றி கிட்டிடுமா? ஆனால் ஒன்றைக் கவனித்தாயா? ஏமாற்று வேலை என்றால் உன் அத்தைக்கு மிகவும் கோபம் வரும் என்பதோடு, அவளது கோபத்துக்குத் தனஞ்சயன் அடங்கிப் போவான் என்பதும் தெரிகிறது அல்லவா? அது நமக்கு சாதகம்தானே. இதிலிருந்து மேலே பார்ப்போம். எறும்பூரக் கல்தேயும் என்பார்கள். தைரியமாய் இரு." என்றார் அவர்.

அதுவும் சரிதானே என்று மெல்ல நிமிர்ந்தவள் ஒன்று தோன்ற, "அந்த மிஸ்டர் நமச்சிவாயம், அந்த விஷயம் நிஜம்தானா மாமா?" என்று வினவினாள்.

"நிஜம்தான், அபி" என்றவர் லேசாகச் சிரித்தார். "ஆனால் நடந்தது ஓர் ஆண்டுக்கு முன்பாக. சொன்னால் வருத்தப்படுவாள்" என்று முன்பு புவனேசுவரியிடம் சொல்லவில்லை. இப்போது சமயத்தில் கதை கைகொடுத்தது" என்று முறுவலித்தார்.

அபிராமியால் கூடச் சேர்ந்து சிரிக்க முடியவில்லை. "பாவம் அந்தப் பெண்" என்று வருந்தினாள்.

"அந்தக் கதை நன்றாகவே முடிந்துவிட்டதம்மா. அந்த அமெரிக்கப் பெண்ணுக்குக் கணவனின் சில இந்

யத் தனங்கள் பிடிக்கவில்லை என்று வேறு ஒருவன் வீட்டில் போய் உட்கார்ந்து கொண்டாள். விவாகரத்து என்று அதில் வேறு நிறையப் பணம் அழுத பிறகு ஒரு வழியாகப் புத்தி வந்து இவள் காலில் வந்து விழுந்தானாம். அதுதான் எப்பேர்பட்ட கழுதை என்றாலும் மன்னித்து ஏற்றுக் கொள்கிறீர்களே இப்போது பிரசவத்துக்குக் கூட அவளை பிரிந்திருக்க முடியாது" என்று மாமியாரை அங்கே வரவழைத்திருகிறானாம் என்று மாமனார் சிரிக்கவும் அவளுக்கு நிம்மதியாயிற்று.

இன்னொரு நாளும் இதே போல் பேச்சின் மூலம் தனஞ்சயனோடு போராட முயன்றாள் அபிராமி.

அன்று புவனேசுவரி மாதாந்திர "செக்கப்"புக்காக மருத்துவ மனைக்குச் செல்ல வேண்டிய நாள். மதியத்துக்கு மேலாக டாக்டர்களிடம் நேரம் ஏற்பாடு செய்து கொண்டு, தனஞ்சயனே தாயை அழைத்துச் சென்று, "செக்கப்" முடிந்ததும் வீட்டில் கொணர்ந்து விட்டான்.

மணி கிட்டத்தட்ட ஐந்தாகிவிடவே, அதற்கு மேல் வீட்டிலேயே தங்கிவிட்டான்.

மூவருமாக மாலைச் சிற்றுண்டிக்கு அமர்ந்தபோது, அபிராமிக்கு அவள் தங்கை டெலிஃபோன் செய்தாள். அவளோடு பேசிவிட்டு வந்த அபிராமியின் முகம் மலர்ந்திருந்தது.

"மாமா ஏற்பாடு செய்ததால் சிவகாமிக்கு பி. காம்., இல் இடம் கிடைத்து விட்டதாம் அத்தை. மாமாவுக்கு நன்றி சொல்லச் சொன்னாள். உங்களையும் கேட்டதாகச் சொல்லச் சொன்னாள்" என்றாள் மகிழ்ச்சியோடு.

"அவள் ஆசைப்பட்ட பாடம் கிடைத்து விட்டதா? சந்தோஷம்" என்று புன்னகை செய்து விட்டு "அபிராமி, சிவகாமி... அழகான பெயர்கள். அக்கா தங்கைக்கும் பொருத்தமாகவும் இருக்கின்றன" என்று பாராட்டினாள் புவனேசுவரி.

சிரிப்பு வந்தது அபிராமிக்கு, "சிவாவுக்கு அவள் பெயர் பிடிக்கவே பிடிக்காது, அத்தை. ஏதோ, அபிராமிக்கு பொருத்தமாக இருக்கும் என்று சாப்பாட்டுராமி என்று வைத்துவிடவில்லயே, அந்த மட்டும் சந்தோஷம் என்பாள். பெயர் நாகரீகமாக இல்லையாம். அபிநயா, அர்ச்சனா, என்று ஸ்டைலாக வைக்கக் கூடாதா, என்று பொருமுவாள்" என்றாள்.

"ஒரு வீட்டில் இரண்டு 'அபி'யா? தாங்காது தாயே" என்று பயந்த பாவனை காட்டிக் கேலிபோலக் குத்தினான் தனஞ்சயன்.

"இந்த மாதிரி அபி எத்தனை இருந்தாலும் தாங்கும்" என்று மருமகளைத் தாங்கிப் பேசிவிட்டு, "ஆனால் அர்ச்சனாதான் அவ்வளவு சரியில்லை. எல்லோரும் ஆச்சி ஆச்சி என்று கிண்டல் பண்ணத் தொடங்கிவிடுவார்கள். இப்படியெல்லாம் யோசித்துதான் இவனுக்குக் கூடத் தனஞ்சயன் என்று பெயர் வைத்தோம். இல்லாவிட்டால் இவன் அர்ச்சுனன் என்று இருந்திருப்பான் ஆச்சூ அச்சூ என்று தும்மல் போட்டுப் பரிகாசம் செய்து விடுவார்கள் என்று தான் அர்ச்சுனனின் மற்ற பெயர்களை எல்லாம் பார்த்துத் தனஞ்சயன் என்று இவனுக்குப் பெயர் வைத்தோம்" என்றாள் புவனேசுவரி.

தாயின் பேச்சுக்கு ஏற்றாற்போல, பெருமையுடன் சட்டைக் காலரைத் தூக்கி விட்டபடி அபிராமியிடம் திரும்பிய தனஞ்சயனின் பார்வையில் மின்வெட்டு தெறித்தது.

ஊட்டியின் வெட்க மற்ற பேச்சை நினைவு படுத்துகிறானாக்கும்!

இப்போது அபிராமிக்கும் விடமனமில்லை, "உங்களுக்கும் மகா பாரதம் பிடிக்குமா அத்தை?" என்று சாதாரணம் போல மாமியாரிடம் பேச்சுக் கொடுத்தாள்.

"ஆமாமம்மா. அந்த மாதிரி ஓர் இதிகாசம் உலகத்தி லேயே கிடையாது என்று நினைப்பேன்" என்றாள் புவ னேசுவரி ஒரு மலர்ச்சியுடன்.

"அதிலும் அர்ச்சுனன் பாத்திரம் ரொம்பவும் பிடிக் குமாக்கும்?" என்று மேலும் துருவினாள் அபிராமி.

முகம் விகசிக்க, "ஆமாம்" என்று ஒத்துக் கொண்டாள் மாமியார். பாரதத்தில் மட்டுமில்லை, உல கத்தில் உள்ள எந்த நூலிலும் அர்ச்சனனுக்கு இணையான பாத்திரம் கிடையாது என்பது என் முடிவு. ஆண்மைக்கு, கம்பீரத்துக்கு, அழகுக்கு, வீரத்துக்கு நட் புக்கு, பணிவுக்கு, பண்புக்கு என்று எல்லாவற்றுக்குமே இலக்கணம் வகுப்பது அர்ச்சுனனுடைய பாத்திரம் தான்" என்றாள் உறுதியோடு.

கடைக்கண்ணால் பார்க்கையில், தனஞ்சயனின் முகம் சற்றே கன்றுவது தெரியவும் அவளுக்கு உற்சாகம் உண்டாயிற்று.

"அத்தை, ராஜாஜி எழுதிய 'வியாசர்விருந்து' படித் தேன் அதன்படி பார்த்தால் அர்ச்சுனனுக்கு 'பீபத்சு' என்றும் ஒரு பெயர் உண்டாமே? என்று பதவிசாகக் கேட்டாள்.

"ஆமாமம்மா" என்றாள் புவனேசுவரி மகிழ்ச்சி யோடு அவளுடைய அருமை மருமகளுக்கும் மகாபாரதத்தில் ஈடுபாடு இருக்கிறதே! செய்யத் தகாத செயல்களைச் செய்யக் கூசுபவன் என்று அந்தப் பெய ருக்கு அர்த்தம்.

"அப்படியா அத்தை?" என்று அக்கறையோடு கேட்டுக் கொண்டாள் மருமகள்.

ஓரக்கண்ணால் கணவனை நோக்கியபடி ஒரு பெரிய மூச்சு எடுத்து கொண்டாள்.

சிங்கத்தை தன் குகையிலேயே சந்திப்பதை விட பெரியமுயற்சிதான். சுறாமீனைக் கடலில் எதிர்க்கிற மாதிரி என்று சொல்லலாமா? பிசகி விட்டால்

வேதாளம் முருங்க மரத்தை உடும்பாகப் பற்றிக் கொள்ளும். ஆனால் அதற்கு அஞ்சி சும்மா இருந்து விட மனம் இல்லாமல், "அந்தப் பெயர் மெய்யாகவே அர்ச்சுனனுக்குப் பொருத்தம்தானா, அத்தை? சுயம் வரப் போட்டியில் தனக்கென்று வென்ற திரவுபதியை ஐவருமாக... தன் சகோதரர்களுக்கும் அவன் மனைவியாக்கியது. எந்த வகையில் சரியாகும்?" என்று கேட்டுவிட்டாள். கேட்ட பிறகு உள்ளூர உதறத் தொடங்கி விட்டது.

சாப்பாட்டு மேசை மேல், தட்டை ஒட்டினாற் போலக் கிடந்த தனஞ்சயனின் கை முஷ்டியாகி இறுகுவதைக் காணவும் கலக்கம் அதிகமாயிற்று.

சும்மாவே இருந்திருக்கலாம்.

இப்போது மாமியார் பாட்டில், அவர்கள் முன்பு செய்து கொண்ட சத்தியத்தின்படி அது நியாயம்தான் என்று சொல்லிவிட்டால் அடியோடு தொலைந்தது.!

ஆனால் புவனேசுவரி அப்படிச் சொல்லவில்லை.

மாறாக், "ஆனால் எனக்கும் இந்த ஒரு விஷயத்தில் கொஞ்சம் உறுத்தல்தான்" என்று கூறி மருமகளின் நெஞ்சில் பால் வார்த்தாள்.

"ஆனால் பாரதக் கதை முழுவதிலுமாக அர்ச்சுனனின் பாத்திரத்தை ஊன்றி கவனித்துப் படித்துப் பார்த்தால் இதற்கும் ஒரு விளக்கம் தெரியும்" என்றாள் தொடர்ந்து.

"எ..என்ன விளக்கம், அத்தை?" என்றாள் அபிராமி அச்சத்துடன்.

"அவனுடைய நற்குணநலன்கள். பெரியவர்களுக்குக் கீழ்ப்படிதல் என்கிற சிறந்த பண்பு. அந்த ஐந்து சகோதரர்களில் அர்ச்சுனன் மட்டும் ஒருதரம் கூடத் தரும புத்திரரை எதிர்த்து ஒரு வார்த்தை கூடப் பேசியது இல்லை. குருகுல வாசத்திலாகட்டும், அரக்குமாளிகையிலிருந்து தப்பி மறைந்து வாழ்ந்த நாட்களிலாகட்டும், பிற்பாடு வனவாசத்திலாகட்டும், அந்தக் கதை முழுவதி

லும் அவன் தன் அண்ணன் வார்த்தைக்கோ, அன்னை சொல்லுக்கோ எதிர் கூறியதாக வியாசர் எழுதவே இல்லை. சூதாட்ட காலத்தில் கூட தம்பீ எரிதழல் கொண்டுவா. கதிரை வைத்திழந்தான். அண்ணன் கையை எரித்திடுவோம் என்று பீமன் பொங்கி சகதேவனை ஏவியபோது அவர்களையும் அடக்கி, அந்த நேரத்தில் முழுமையாகத் தரும புத்திரரின் அடிபணிந்து நின்றவன் அர்ச்சுனன்தான். பிற்பாடு வனவாசத்திலும் அப்படியே மூத்த அண்ணன் தந்தைக்குச் சமம் என்று அவரது வார்த்தையே வேதம் என்பது போல வாழ்ந்திருக்கிறான். அப்படிப்பட்டவன், அன்று திரவுபதியை வென்று அழைத்து வந்த போதும், தருமரும் குந்தியும் சொன்ன வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தே இப்படி ஓர் ஏற்பாட்டை ஏற்றிருக்கலாம். அப்படித்தான் இதை ஏற்றிருக்க வேண்டும் என்றே நான் நினைக்கிறேன். அதிலும் குந்திதேவி ஐவரும் பகிர்ந்து கொள்ளுங்கள் என்றதும் அதற்கு அப்பீலே இல்லை என்று ஆகிவிட்டது" என்று புவனேசுவரி விளக்கம் கூறிமுடிக்கவும் மாமியாரின் கால்களில் விழுந்து கும்பிடலாம்போல இருந்தது அபிராமிக்கு.

ஒரு கேலிச்சிரிப்புடன், "அப்படியானால் தனஞ்சயன். . சாரிசாரி, அந்தக்கால அர்ச்சனன் தாயார் சொல்லை தட்டியதே இல்லை. அப்படித்தானே அத்தை? ம். . . அதுபோல உங்கள் மகனும் உங்கள் சொல்லைத் தட்டவே மாட்டார்தானே, அத்தை." என்று கொஞ்சும் குரலில் விளையாட்டுப் போல வினவினாள்.

உள்மர்மம் அறியாமல் கூடச்சேர்ந்து சிரித்தபடி மகனைப் பார்த்தாள் புவனேசுவரி.

அபிராமியிடம் ஒரு தீப் பார்வையைச் செலுத்தி விட்டுத் தாயின் புறம் திரும்பியபோது, தனஞ்சயனின் முகத்திலும் கேலி நகை இலங்கியது, அம்மா, "நான் சொல்வது தப்பாயிருந்தால் திருத்துங்கள், என்ன? கலியுகம் பிறந்து விட்டது, இனிமேல் திரேதாயுக தர்மங்கள்

மாறிவிடும் என்று உணர்ந்த பிறகுதானே, அவர்களுடைய பேரனான பரீட்சித்துவுக்குப் பட்டம் கட்டிவிட்டுப் பாண்டவர்கள் சொர்க்கத்துக்குக் கிளம்பினார்கள்? அப்படித்தான் என் சிறு வயதில் பாரதக் கதை கூறும் போது நீங்கள் சொன்னதாக எனக்கு ஞாபகம். அப்படித் தானா இல்லையா? என்று சிரித்தான் மகன்.

"அப்படியேதான். அதனால்தான் இந்தக் காலத்துத் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளிடம் எந்த மாதிரிக் கட்டளையும் இடாமல் ஒதுங்கியிருந்து அவரவர் கவுரவத்தை அவரவர்களாகவே காப்பாற்றிக் கொள்ளுகிறார்கள்" என்று கூறி மகனோடு கூடச் சேர்ந்து சிரித்தபோதும் அந்தத் தாயின் கண்களில் சிறுவருத்தத்தின் சாயலைக் கண்டுகொண்ட அபிராமிக்குத் தனஞ்சயனைப் பிடித்து உதைக்க வேண்டும் போல இருந்தது.

கணவனாயிற்றே! அத்தோடு பலசாலியும் கூட இரண்டுக்கும் மேலாக கோணல் புத்தி வேறு. இவனை வாய்ப் பேச்சில் வெல்வது கூட கடினம் என்று அதற்கு மேல் பேசாமல் உணவைக் கொறித்தாள் அவள்.

ஆனால் தனஞ்சயனைத் தோற்கடிக்கும் – தோற்கடித்ததாகச் சொல்ல முடியாது. ஓரளவு மட்டம் தட்டும் வாய்ப்பு விரைவிலேயே அவளுக்குக் கிட்டியது. அதைக் கொடுத்தவள் அவளுடைய அருமை மாமியார் தான்.

ஒருநாள் காலை பேச்சில் திருமண நேரத்து அவசரம் பற்றிய பேச்சு வந்தது.

முன்தினம் தான் சென்றுவந்த ஒரு திருமணத்தில், தாலி கட்டியதும் மணவறை சுற்றும் அவசரத்தில் மாலை மாற்ற மறந்து விட்டு, ஒரு சுற்று ஆனதும் நினைவு வந்து, நின்று மாலை மாற்றியதைச் சொல்லிச் சிரித்தார் சிவநாதன். "கைபிடித்துக் கொடுத்து, அங்கவஸ்திரத்தால் கைமேல் கட்டி வேறு வைத்தார்களா? அதை அப்போது அவிழ்க்கலாமா கூடாதா என்று ஒரே தகராறு. அவிழ்த்து மாலை மாற்ற வேண்டும் என்று ஒரு சாரார்

சொல்ல, கட்டிய உடனேயே அவிழ்த்துக் கையைப் பிரிக்கக் கூடாது என்று பெண்ணின் தந்தை கத்த, ஒரே களேபரம். சற்று நேரம் பொறுத்துப் பார்த்த மாப்பிள் ளையும் பெண்ணும் அவர்கள் பாட்டில் கையை உருவி மாலை மாற்றிக் கொண்டு, மூன்று சுற்றையும் முடித்து உட்கார்ந்த பிறகு ஒன்றையும் கவனியாமல் அங்கே சண்டை நடந்து கொண்டே இருந்தது. எல்லோரும் சிரிப் பதைப் பார்த்த பிறகு ஒருவாறு விஷயம் புரிந்து அசடு வழிந்தார்கள். அப்போது அந்த முகங்களைப் பார்க்க வேண்டுமே!" என்று மீண்டும் சிரித்தார் அவர்.

அவர் விவரித்த விதத்தில் எல்லோருக்குமே சிரிப்பு வந்தது.

ஒருவாறு சிரிப்பு அலைகள் ஓய்ந்ததும், "திருணம் என்றாலே மாப்பிள்ளை பெண்ணைப் பாடாய் படுத்தி விடுக்கிறார்கள். எவ்வளவோ விவரம் அறிந்த பிள்ளை கள் கூட அந்த நேரம் திகைத்துத் தடுமாறி விடுகிறார்கள். தாலி கட்டுகிற நேரத்தைப் பாருங்களேன், மாப்பிள் ளைப் பையன் தாலியை எடுக்கும் போதே வலதுகையை முன்னால் கொண்டுபோ, இப்படித் திருப்பு அப்படி வை என்று நேராகக் கட்டுகிறோமா மாற்றிக் கட்டுகிறோமா என்று பையனைக் குழப்பி விடுவார்கள். அடுத்து, பெண்ணின் பின்னங் கழுத்தில், கண்ணால் நேராய்ப் பார்க்க முடியாமல் வெறும் கை நிதானத்தில் முடிச்சுப் போட வேண்டும். அங்கே கவனத்தை முழுதாகச் செலுத்தமுடியாமல் பொட்டுவை, பூவைவை என்று விரட்டுவது வேறு.

"உங்கள் திருமணத்தின் போது இப்படித்தான் ஆயிற்று அபி. ஒரு முடிச்சுகூடப் போடாமல் தனா கயிற்றை விட்டுவிட்டான். பின்னிருந்து பார்த்த எனக் குத் "திக்"கென்று ஆகி விட்டது. தாலி கீழே விழுமுன் சட்டென்று குனிந்து கயிற்றைப் பிடித்துக் கொண்டேன். என்னப்பனே முருகா, இந்தப் பெண் என்னைப் போல இந்தக் குடும்பத்திற்குள் அடியெடுத்து வைக்கிறவள்.

இந்தக் குடும்பத்தில் ஒருத்தியாகி விட்ட இவள் என் பிள்ளையோடு இணைந்து பிள்ளை பெற்று, பேரன் பெற்று பின்னர் என் இடத்தில் அமர்ந்து குடும்பத்தை நல்லபடி நிர்வாகம் செய்து நூறாண்டு வாழ வேண்டும் என்று வேண்டிக் கொண்டு அவசரமாய் மூன்று முடிச்சையும் பிறர் அறியாமல் போட்டு முடித்தேன். எல்லோரும் ஜடைக்கு கீழே தாலியை இழுத்து விடுவதாக எண்ணியிருப்பார்கள். என்னமோ, என் கை ராசி நன்றாக இருக்க வேண்டுமே என்ற உதறல் வேறு. சும்மாவே தனா முடிச்சிடாதது கெட்ட சகுனமோ என்று பயந்து கொண்டும் இருந்தேனா, சிற்றம்பல சுவாமி நல்லநாள் இல்லை என்று சொல்லவும் அரண்டு போனேன். ஏதோ நல்ல காலம் அடுத்த தப்பும் நேர்ந்து விடாமல் உன் மாமா காப்பாற்றினாரம்மா" என்று ஓர் ஆறுதல் பெருமூச்சு விட்டாள் புவனேசுவரி.

எந்த அளவுக்கு காப்பாற்றினார் என்பது அபிராமிக்கு அல்லவா தெரியும்!

முதல் பிசகிலிருந்து தாயார், இரண்டாவது பிழையிலிருந்து தந்தை. இனி ஒரு குற்றம் நேராது காப்பது கடவுளா? அல்லது இவர்களைக் கருவியாக கொண்டு அவளை எப்போதும் காத்து நிற்பது அந்தத் தெய்வமே தானா?

பிரமிப்புடன் யோசித்தவளுக்கு இன்னொன்று தோன்றியது. தாலியே கட்டவில்லை என்று கொக்கரித்தானே, முழுக்க முழுக்க மூன்று முடிச்சையும் இறுகக் கட்டி வைத்திருக்கிறாளே அவனைப் பெற்றதாயார். இதற்கு மதிப்பு கிடையாதா? அதற்குமேலும் புவனேசுவரி சொன்னதைத் தனஞ்சயனும் கேட்டுக் கொண்டு தானே இருக்கிறான், அவன் குடும்பத்தில் ஒருத்தியாகி விட்டவளை, அவனே இழிவுபடுத்தலாமா? இதற்கு என்ன பதில் சொல்லப்போகிறான்?

தலையைத் திருப்பிக் கணவனை நோக்கினாள் அவள்.

அவனுடைய திகைத்த முகம் உற்சாகமூட்ட லேசாகச் சிரித்தாள்.

"என்னம்மா, அபி?"

"இ.. இல்லை அத்தை, ரொம்பவும் சாமர்த்தியமாக செயல்பட்டிருக்கிறீர்களே, அந்த சந்தோஷம்தான்" என்றவளின் விழிகளில் குறும்பு எட்டிப் பார்த்தது. "அத்தை எனக்கு ஒரு சந்தேகம்" என்றாள் கொஞ்சலாக.,

"என்னடா, தங்கம்?"

"இந்த முந்திரிக் கொட்டை முந்திரிக்கொட்டை என்று சிலரை சொல்லுகிறார்களே, அது யாரை அத்தை?"

தனஞ்சயனின் பற்கள் நரநரத்த சத்தம் அருகில் இருந்த அவளுக்கு நன்றாக கேட்டது.

# 14

யாரோ தூரத்து உறவினருக்கு உதவி செய்வது பற்றிப் பேசியபடி பெரிய ஜோடி சற்று அகன்றதுமே தனஞ்சயன் அபிராமியிடம் கேட்டு விட்டான், "என்ன சிரிப்பு? ரொம்பவும் புத்திசாலித் தனமாகப் பேசி விட்டதாக நினைப்போ?" என்று.

அவனுக்கு ஆத்திரம் வந்ததில் ஆச்சரியம் இல்லை.

அப்பாவிபோல மருமகள் கேட்ட கேள்வியை மெய்யென்று கொண்டு, முந்திரிக்கொட்டைத் தனத்துக்குப் புவனேசுவரி விளக்கம் சொல்லச் சொல்லத் தனஞ்சயன் முகம் கறுப்பதை அவள் கடைக்கண்ணால் கவனித்துக் கொண்டு தானே இருந்தாள்.

அப்போதே அவளுக்கு அடக்கமாட்டாமல் சிரிப்பு பொங்கிக் கொண்டு வந்தது. ஆனால் சிரித்தால் அதன் காரணத்தை மாமியாரிடம் சொல்லமுடியாது என்பதா

லும், காரணம் இல்லாமல் சிரித்தால் கிறுக்குத் தனமாகத் தோன்றும் என்பதாலும் அரும்பாடுபட்டு அதை அடக்கிக் கொண்டாள்.

ஆனால் அருகில் இருந்து உண்டவனுக்கு அவள் அடிக்கடி வீசிய கடைக்கண் பார்வையும், அந்தக் கண்களின் பளபளப்பும் புரியாமலாபோகும்.

கோபத்தைக் காட்டமுடியாத நிலைமை வேறு.

எனவே வாய்ப்புக் கிடைத்ததும் காட்டி விட்டான்.

ஆனால் அவனைச் சீண்டி ஜெயித்ததில் உண்டான உற்சாகம் அபிராமிக்குக் குறைவதாக இல்லை. எனவே தயக்கமின்றிப் பதிலிறுத்தாள்" ஊகூம். அப்படி ஒன்றும் இல்லையே! ரொம்பவும் புத்திசாலித்தனமாக ஏதேதோ செய்வதாக எண்ணி என் கணவர் அடியோடு ஏமாந்து விட்டாரே என்று நினைத்தேனா? சிரிப்புவந்து விட்டது அவ்வளவுதான்" என்று இனிய குரலில் கூறி அழகாக முறுவலித்தாள் அவள்.

ரோஜா இதழ்கள் பிரிந்து இடையே வெண் முத்துப் பற்கள் எழிலுடன் மின்னலிட்டன.

சற்றுத்திகைத்தாற்போல நின்றான் தனஞ்சயன். ஏதோ ஆராய்கிறவன்போல, கையை நீட்டி ஒரு விரலில் அவளது பட்டான உதடுகளை மெல்ல வருடினான். "அழகாகத்தான் இருக்கிறாய். புத்திசாலித்தனமாகத்தான் பேசுகிறாய். கேலிகிண்டலை ரசிக்கவும் திருப்பிக் கொடுக்கவும் நகைச்சுவை உணர்வும் இருக்கிறது..."

மூச்சடைக்க அவள் நின்ற போது அவன் மேலும் தொடர்ந்து பேசினான் "...கூடவே அந்தத் திமிர் மட்டும் இல்லாது இருந்திருந்தால்..? ஆனால் இருந்ததே நிறைய இருந்ததே. தட்டினால் எட்டு குட்டிக்கரணம் போட்டு விழக்கூடிய இந்த மெல்லிய மேனிக்குள் இமயமலை அளவு திமிர் இருந்ததே. அதற்கு தண்டனை தராமல் எப்படி விட முடியும்?" என்று முடித்த போது அவன் குரலில் கருங்கல்லின் கடினம் இருந்தது. விரலை

விலக்கிக் கொண்டவன் மடமடவென்று வெளியே சென்று விட்டான்.

சற்றுமுன் இருந்த உற்சாகம் வடிந்து போயிற்று அபிராமிக்கு. கூடவேசற்றுக் குழம்பியும் போனாள்.

திருமணத்துக்கு முன்பாக, ஓர் இளம் பெண்ணுக்கு இயல்பான வகையில் கணவன் காதல் என்று அபிராமி யும் கற்பனைகள் செய்தது உண்டு.

ஆனால் திருமணமான பின் மறுநாள் அடைந்த பயங்கர அதிர்ச்சியில் அந்தக் கற்பனைகள் எல்லாம் ஆடிக்காற்றில் இலவம் பஞ்சாக எங்கோ பறந்து, மறைந்து போயின. அந்தக் கற்பனைகளை நினைக்க அவளுக்கு நேரமும் இல்லை, நினைக்கத் தோன்றவும் இல்லை.

சர்வசதா இந்தக் கேவலம் மாமியாருக்குத் தெரிந்து விடக்கூடாதே, பெற்றோர் அறிந்து விடக் கூடாதே, வம்பர்கள் காதுக்கு எட்டி விடக் கூடாதே என்று அதே கவனமாக இருந்ததில் அந்தக் கனவுகள் பாலை நிலத் தில் பெய்த மழை போலச் சுவடு தெரியாமல் மறைந்து போயின.

நல்ல வேளையாக அன்பே உருவாய் மாமியார் வடிவில் அவளுக்கு ஒரு புதையல் கிடைத்ததாலும் நாளின் பெரும் பகுதியை அந்த மாமியாருடனேயே கழிக்க நேர்ந்ததாலும் அவளது நொந்த மனம் சற்றே ஆறுதலுற்றது.

துன்பம் தரும் எதையும் நினைக்க இடமிராதபடி பகல் பொழுது ஓரளவு இனிமையாகவே கழிந்தது என்று கூடச் சொல்லலாம்.

அதனால் அந்தப் பயங்கர இரவை அடியோடு மறந்து விட்டாள் என்று இல்லை. அதிலும் திரும்பி வந்த பின் தனஞ்சயன் செய்த முதல் முயற்சியின் பின், அடுத்து எப்படி எப்படி முயற்சிப்பானோ என்று

நெஞ்சின் அடித்தளத்தில் ஒரு பயம் எப்போதும் நிலை கொண்டே இருந்தது.

அது பற்றிய கவலையும், அதனால் கைக் கொண்ட இருமடங்குக் கவனமுமாகப் பழைய காதல் கற்பனைக ளின் நினைவே இல்லாது போயிருந்தது.

ஆனால் இன்று தனஞ்சயன் ஒற்றை விரலால் அவளது உதடுகளை மென்மையாக அளந்த போது அவன் கைபட்ட இடமெல்லாம் லேசாக மின்சாரம் பாய்ந் தாற் போலக் குறு குறுத்தது அவளுக்கு.

அவனது ஒற்றை விரலுக்கு இவ்வளவு சக்தியா? இவன் ஒரு சாதாரணக் கணவனாக ஒட்டி உறவாடி னால் உலகமே மறந்துவிடுமோ?

ஆனால் அந்த மாதிரி ஓர் உறவு அவளுக்குக்கிட்ட வழியே இல்லையே?

அந்த வினாடியில் உலகத்திலேயே துரதிர்ஷ்டம் பிடித்த பெண்ணாகத் தன்னை உணர்ந்தாள் அபிராமி.

தனஞ்சயனிடம் எது நடிப்பு எது நிஜம் என்று கண்டு கொள்வது அபிராமிக்கு எளிதாயில்லை.

சாதாரணமாகப் பேசுவது, கேலி செய்வது, சிரிப் பது எல்லாவற்றிலுமே ஒரு நார்மல் கணவன்தான். பரிவு காட்டுவதிலும் தான்.

ஒரு நாள் பூப்பறிக்கும் போது வரிக் குயிலின் குரல் இனிமையில் ஈடுபட்டபடி பறிக்கக் கையில் முள் நீளமாய் கீறிவிட்டது. அடடா என்று மாமியார் வருந்த, ஓடிப்போய் போரோலினை எடுத்து வந்து தழும்பு விழாது என்று கூறி மென்மையாகத் தடவி விட்டான் தனஞ்சயன்.

இவனும் அந்தத் தனஞ்சயனும் ஒரே ஆள்தானா? நம்பமுடியவில்லை அவளுக்கு.

வேறுமாதிரி – கணவன் மனைவி உறவுக்கு ஏங்கு கிறமாதிரி அவன் காட்டியிருந்தால் கூட நடிப்பு என்று ஒதுக்கி விட அவளுக்குத் தோன்றியிருக்கும். ஆனால் அப்படி யின்றி, ஒரே வீட்டில் தங்கியிருக்கும் ஓரளவு இதமான உறவினனாக அவன் நடந்து கொள்ளவும் அபிராமிக்கு உறுத்தலே இல்லாது போயிற்று.

மறுபடி ஏமாந்து விடக்கூடாது என்று பிடிவாதமா கப் பழைய நினைவுகளை ஞாபகப்படுத்திக் கொள்வாள்.

திருமணத்துக்கு முன்னர்கூட இப்படித்தானே நடந்து கொண்டான். கவுரவமாக நடந்து கொள்கிறான் என்று சந்தோஷப் பட்டதுதவறு என்று பிறகுதானே தெரிந்தது! ஓடு மீன் ஓட, உறு மீன் வரும் வரை வாடியி ருக்கும் கொக்காக அன்று நல்ல சந்தர்ப்பத்துக்குக் காத்தி ருந்தது போலவே தனஞ்சயன் இன்றும் வாய்ப்புக்காகத்தான் காத்திருக்கிறான் என்று தனக்குத் தானே நினைவூட்டிக் கொள்வாள் அவள்.

அதுமெய்யே என்று உறுதிப் படுத்துவது போலப் புவனேசுவரி ஒன்று சொன்னாள், " உனக்கு ஏதாவது பரிசு கொடுக்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிற தாம் தனாவுக்கு. நகைக் கடைக்குக் கூட்டிப் போய் வரட்டுமா என்று என்னிடம் கேட்டான். ஆனால் அன்று மாதிரி ஆகிவிடக் கூடாது என்று நினைத்து மறுத்து விட் டேனம்மா. . வந்து. . உனக்கும் அவனோடு வெளியே போய்வர ஆசை இருக்கதான் செய்யும், ஆனால். . . அன்று மாமா சொன்ன பிறகு உன்னை அவனோடு தனியே அனுப்ப எனக்கு இஷ்டம் இல்லை, அபி. கொஞ்சம் பட்டிக்காட்டுதனமாகத்தான் உங்களுக்குத் தோன்றும். ஆனால் சுவாமி வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்து நாள் குறித்துத் தரும் வரை வேண்டாம்மா என்ன?" என்று கேட்கவும் அபிராமிக்கு ஒரு மாதிரி ஆகி விட்டது.

இந்த மாதிரிக் குழந்தைமனம் கொண்ட ஒருவரை மற்றவர்களோடு தானும் சேர்ந்து ஏமாற்றுவதை எண்ணி உள்ளூர வருந்தினாள். ஆனால் ஒன்று, அவள் பெற்ற மகனைப் போல அபிராமி தீமை செய்வதற்காக ஏமாற்றவில்லை. அந்தத் தாயின் நன்மைக்காகத் தான் இந்த ஒளிவு, மறைவு, பொய்யெல்லாம்.

புவனேசுவரியின் கையைப் பற்றி, "அத்தை, நீங்கள் எங்கள் நன்மைக்காகத் தான் சொல்கிறீர்கள் என்று எனக்குத் தெரியாதா? அத்தோடு எனக்கு உங்கள் மகனோடு தனியே சுற்றும் ஆசை கொஞ்சம் கூட இல்லை. நீங்களே அவரோடு போகச் சொன்னால்கூட நான் போகமாட்டேன். அதனால் கவலைப்படாதீர்கள்." என்றாள் தேறுதலாக.

பற்றியிருந்த கரத்தைத் தூக்கி மருமகளின் கையில் முத்தமிட்டாள் புவனேசுவரி.

இப்படி ஒரு தகவல் கிடைத்தபின் முன்னிலும் அதிகக் கவனத்துடன் நடந்து கொண்டாள் அபிராமி.

ஆனால் அந்தக் கவனத்தையும் மீறி தனஞ்சயனிடம் மீண்டும் மாட்டிக் கொண்டாள்.

தன் குடும்பத்திற்கென சிவநாதன் கட்டியிருந்த வீடு சென்னையின் நகர்ப்பகுதியை விட்டுப் பதினைந்து கிலோமீட்டர் தள்ளி இருந்தது. நட்பு, சுற்றம் என்று பெயர் சொல்லி, மற்றவர்கள் வந்து தங்கி ஊர் சுற்ற முடியாமைக்கு அதுவும் ஒரு காரணம்.

ஆனால் அதே காரணத்தினாலேயே அபிராமியின் குடும்பத்தினருக்கும் அவள் வீட்டிற்கு அடிக்கடி வருவது சிரமமாகிப் போயிற்று.

அன்றைய நிலைமையில் அதுவே நல்லது என்று எண்ணிய போதும், மருமகள் தன்னுடைய பெற்றோரை நினைத்தபோது சென்று கண்டுவர சிவநாதன் ஏற்பாடு செய்திருந்தார்.

அபிராமியின் உபயோகத்துக்காக ஒரு காரை டிரைவருடன் வீட்டில் நிறுத்தியிருந்தார்.

'ஷாப்பிங்' என்று நகருக்குள் செல்லும் போதெல்லாம் மருமகளை அழைத்துக் கொண்டு அவளது பிறந்த வீட்டை எட்டிப் பார்த்துவிட்டு வருவதைப் புவனேசுவரி வழக்கப்படுத்தியிருந்தாள். ஆயினும் அவ்வப்போது தனியாகவும் அனுப்பி வைப்பாள். "அம்மா வீட்டில் இஷ்டம் போல இருந்துவிட்டுவா. அவர்களுக்கும் நான் கூட இருக்கும்போது ஃப்ரியாகப் பேச வராது" என்று கூறுவாள்.

குறைந்தபட்சம் பத்து நாளைக்கு ஒரு தரமேனும் அபிராமி இப்படிச் சென்று வருவதுண்டு. வீட்டு ஆண்கள் தொழிலைப் பார்க்கப் புறப்பட்டுச் சென்ற பின் கிளம்பி, அவர்கள் திரும்பி வருமுன் வீடு வந்து விடுவாள்.

ஒரு நாள் அப்படி அவள் வந்த சமயம், எதோ 'ஸ்ட்ரைக்' என்று கல்லூரிகளுக்கு விடுமுறையாக இருக்கவே உடன் பிறந்தோர் மூவருமாகக் கும்மாளம் அடித்தபடி 'கேரம்' விளையாடிக் கொண்டிருந்தனர்.

அந்தச் சமயத்தில் தனஞ்சயன் அங்கே வந்து சேர்ந்தான்.

"வாருங்கள் அத்தான்!" "யார் மாப்பிள்ளையா! வாருங்கள் மாப்பிள்ளை .." என்ற குதூகல வரவேற்புகளின் இடையே அபிராமியின் திகைப்பை யாரும் கண்டு கொள்ளவில்லை – அதாவது தனஞ்சயனைத் தவிர மற்றவர்கள் யாரும் கண்டு கொள்ளவில்லை.

அவளுக்குச் சுதாரித்துக் கொள்ள நேரம் கொடுப்பவன்போல மற்றவர்களுடனேயே அவனும் பேசினான். "சரவணன், நேற்று ஒரு ஃபர்ஸ்ட் டே கவர் வெளியிட்டார்கள். இந்தா", "என்னம்மா காலேஜில் ஏதாவது பாடம் கீடம் நடக்கிறதா?"; "சவுக்கியமா அத்தை?" என்று மற்றவர்களிடம் அவரவருக்கு ஏற்பப் பேசினான்.

ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டு, "நீ . . நீங்கள் எங்கே இந்த நேரத்தில், இ . . இங்கே?" என்று விசாரித்தாள் அபிராமி.

"ஏதோ, தற்செயலாக இந்தப் பக்கம் வந்தேன். நீ இன்று இங்கே வரப் போவதாக அம்மா சொன்னது நினைவு வந்தது. சரி, 'லஞ்சு'க்குத் தானே போகிறோம், இங்கே அத்தை சமையல் நன்றாக இருக்குமே. இங்கேயே சாப்பிட்டு விட்டு, அபியை நாமே அழைத்துப் போய் விடலாமே என்று நினைத்து வந்தேன். டிரைவரிடம் என் காரைக் கொடுத்து அனுப்பிவிட்டேன்" என்றான் அவன் இலகுவாக.

'அத்தை சாப்பாடு சுவை'யில் உச்சி குளிர்ந்து சமையல் அறைக்கு ஓடினாள் காந்திமதி. இளையவர்கள் கலகலப்புடன் பேச, செய்வது அறியாமல் சற்று மருண்டாள் அபிராமி.

அலுவலகம் அருகிலேயே இருப்பதால் மதிய உணவுக்கு வீடுவருவது சுதர்சனம் வழக்கம். இன்றும் சற்று நேரத்தில் வந்துவிடுவார். மருமகனைக் கண்டதும் அவருக்கும் உச்சி குளிர்ந்து போகும். உபசாரம் செய்து சாப்பாடு போடுவார்கள்.

அப்புறம்?

அப்புறம் எல்லோருமாகச் சேர்ந்து சந்தோஷமாக அபிராமியை அவளுடைய கணவனோடு சேர்த்து வழியனுப்பி வைப்பார்கள்.

கணவனோடு செல்ல மறுத்தால் காரணம் சொல்ல வேண்டும். உண்மை தெரிந்தால் பாவம், வெகுவாக நொந்து போவார்கள்!

ஆனால் அதற்குப் பயந்து அவனோடு சென்றால்.. அது முன்னதைக் காட்டிலும் பயங்கரம்!

என்ன செய்வது?

சிலநிமிடங்கள் கலங்கி நின்ற அபிராமி, "அம்மாவோடு சமையலைப் பார்க்கிறேன்" என்று கூறி உள்ளே சென்றாள்.

பரபரப்போடு ஏதோ காய்கறிகளை வெட்டிக் கொண்டிருந்தாள் காந்திமதி. மாப்பிள்ளையல்லவோ சாப்பிடப் போகிறார்!

மகளைக் கண்டதும், "அபி, மாப்பிள்ளைக்கு என்ன பாயசம் பிடிக்கும்? சேமியாவா அல்லது பயற்றம் பருப்புப் பாயசம் செய்வோமா?" என்று விசாரித்தாள்.

சட்டென ஒன்று தோன்ற, "அம்மா, பாயசத்தை விட அவருக்குக் கேசரி தான் பிடிக்கும். நம்மிடம் இருக்கும் நெய் போதாது. பக்கத்துவீட்டு ஆன்ட்டியிடம் ஒரு கப் நெய் வாங்கி வருகிறேன். அப்புறம் கொடுத்து விடுங்கள்" என்று கூறி, கப்பையும் எடுத்தாள் அபிராமி.

"மதிய உணவோடா கேசரி?" என்று தாயின் திகைப்பைக் கண்டு கொள்ளாமல் பின்வழியே பக்கத்து வீட்டுக்கு ஓடினாள்.

"ஆன்ட்டீ .. ஒரு ஃபோன்" என்று அனுமதி பெற்று, சிவநாதனுக்கு டெலிஃபோன் செய்தாள்.

"சார் முக்கியமான 'மீட்டிங்'கில் இருக்கிறார். இப்போது கூப்பிட முடியாது" என்று ஒரு கறார்க் குரல் கூறவும் முதலில் கலங்கிப் போனாள் அவள். உடனேயே சுதாரித்து, "நான் அவருடைய மருமகள் பேசுகிறேன். மிகவும் முக்கியமான விஷயம். ரொம்ப ரொம்ப அவசரமும் கூட. நான் இப்படிச் சொன்னதாக முதலில் அவரிடம் போய்ச் சொல்லுங்கள். போங்கள் சீக்கிரம்" என்று குரலில் ஓர் அதிகாரத்தை வரவழைத்துக் கொண்டு விரட்டினாள்.

சில நிமிடங்களில் சிவநாதன் குரல் கேட்டது, "அபிராமி, இந்த நேரத்தில் என்னம்மா?" என்றார் அவர் சலிப்பை மறைக்க முயன்றபடி.

ஆயினும் கண்டு கொண்டு, "சாரி மாமா" என்று மன்னிப்புக் கேட்டாள் மருமகள். "ரொம்ப சா.. ரி மாமா. ஆனால்..வே..வேறு வழியில்லை..." என்றவள் அருகிலேயே அமர்ந்து பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்த வீட்டுக்காரியை ஒருதரம் பார்த்தாள்.

ஆனால் அவள் அசைந்தால் அல்லவோ?

இவளுக்குத் தெரியக் கூடாதே என்று யோசிக்கு முன், "சீக்கிரம் சொல் அபிராமி. அங்கே யூனியன் லீடர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களைக் காக்க வைக்க முடியாது" என்றார் சிவநாதன்.

முக்கியமான 'மீட்டிங்' என்றாளே செகரட்டரி!

"மாமா, நான்.. நான் இங்கே அப்பா வீட்டுக்கு வந்திருக்கிறேன் வரும்போது அத்தைக்கு ம மருந்து கொடுக்க ம மறந் . . துவிட்டேன். மதியம் முடியுமுன் கட்டாயம் கொடுத்தாக வேண்டும். உங்கள் மகனிடம் சொல்லலாம் என்றால் அ அவர் வேறு இ இங்கேயே வ வந்து விட் . . டார். இங்கேயே சாப்பிட்டுவிட்டு, சேர் . . ந் . து போ போகலாம் என்று முடி . . வு. அங்கே அ . . அத்தைக்கு . . மருந்துக்கு . . நீ . நீங்கள் ஏற்பாடு . . ." என்று வேகமாகத் தொடங்கி தடுமாற்றத்துடன் முடித்தாள் அபிராமி.

"புரிகிறது" என்றார் சிவநாதன் அமர்ந்த குரலில்.

"நான் சொல்வதை நன்றாகக் கவனி, அபிராமி. சாப்பிட்டபின் கிளம்புவதை முடிந்த அளவு தாமதப் படுத்து. இந்த யூனியன் லீடர்களை அலட்சியப்படுத்தி விட்டு நான் அங்கே உடனே வரமுடியாது. மதிய உணவின் போதுதான் பேச்சு வார்த்தை நடத்தப் போகிறோம் . . . விட்டுவிட்டு வந்தால் பெரிய தகராறு ஆகிவிடும். முடிந்த அளவு சீக்கிரம் – கொஞ்சம் நட்டப் பட்டாலும் பரவாயில்லை என்று விரைவாகவே முடித்து விட்டு வருகிறேன். ஆனால் எப்படியும் மணி இரண்டாகி விடும். கூடுதலாக ஒரு பத்து நிமிடம் எப்படியாவது தாமதப்படுத்து" என்று கூறிப் பேச்சை முடித்தார் அவர்.

ஓரளவு பாரம் இறங்கியது அபிராமிக்கு.

மறக்காமல் நெய்யைக் கேட்டு வாங்கிக் கொண்டாள். வீட்டுக்காரி நெய்யை எடுத்து வருமுன் 'டெலிஃபோன் காலு'க்காக ஐந்து ரூபாயை ஃபோனுக்கடியில் வைத்து விட்டு, நன்றி கூறிக் கிளம்பினாள்.

வீட்டில் முன்னறையில் தந்தையின் குரல் உற்சாகமாகக் கேட்டது. உலகத்தில் யாருக்கும் கிட்டாத மாப்பிள்ளை ஆயிற்றே!

கவலையை ஒதுக்கிவிட்டு வேலையில் ஈடுபட்டாள்.

"அவருக்குப் பிடித்த மாதிரி நானே செய்கிறேன்" என்று வெகு கவனமாக ஒருதரம் தீய்ந்து அடிபிடிக்க வைத்தாள்.

"அய்யய்யோ!" என்று தானே கட்டியைச் சுரண்டிக் கழுவிவிட்டு, மறுதரம் சிரத்தையோடு சரியாகச் செய்தாள்.

அதற்குள் மூன்றுதரம் சமையலறைக்குள் வந்து விரட்டி விட்டார் சுதர்சனம். மாப்பிள்ளைக்குப் பசித்திருக்குமாம்!

ஒரு வழியாகச் சாப்பிட உடகார்ந்ததும், இலையில் முதலில் விழுந்த கேசரியைச் சற்று வியப்புடன் நோக்கினான் தனஞ்சயன்.

"இன்னும் கொஞ்சம் வைக்கட்டுமா? உங்களுக்குப் பிடித்தமானது என்று இவ்வளவு நேரம் கஷ்டப்பட்டு அபியே கிளறினாள்" என்று மேலும் ஒரு கரண்டி கேசரியை வைத்தாள் காந்திமதி.

"ஓ!"

தனஞ்சயனின் பார்வை ஒருகணம் தன் மனைவியின் முகத்தில் பதிந்தது.

உடனேயே, "இன்னொரு இலை போடுங்கள். அத்தை. அபி, நீயும் உட்கார், என்னோடேயே சாப்

பிட்டு விடு. பரவாயில்லை, உட்கார், டார்லிங். நம் வீட்டில் சேர்ந்து தானே சாப்பிடுகிறோம்? இங்கே ஏன் வெட்கம்? சீக்கிரம் சாப்பிடு. உன்னை வீட்டில் விட்டு விட்டு நான் முக்கியமாய் ஒருவரைப் பார்க்கப் போக வேண்டும். வா. தாமதம் செய்யாதே" என்று மனைவியை அவசரபபடுத்தினான்.

வீட்டாரும் வற்புறுத்தலில் சேர்ந்து கொள்ளவே, வேறு வழியின்றி அவன் அருகிலேயே அபிராமியும் அமரும்படி ஆயிற்று.

"இந்தா, நீயும் கேசரி சாப்பிடு. நீயே செய்ததா யிற்றே. வெகு ருசி. இன்னும் கொஞ்சம் சாப்பிடு" என்று தன் இலையில் இருந்ததையும் அவளுக்கே வைத்து நன் றாகவே பழி வாங்கினான் தனஞ்சயன்.

என்னதான் இழுத்துப் பார்த்தும் பகல் உணவு ஒன்றே முக்காலுக்கு முடிந்து போயிற்று.

"இனிக் கிளம்பு, டார்லிங்."

"வந்து .."

"வா என்று தான் சொல்லுகிறேன். சீக்கிரமாய் வா."

"இல்லை . . எதற்காக நீங்கள் அவ்வளவு தூரம் அலைய வேண்டும்? நான் ஓர் ஆட்டோ வைத்துக் கொண்டு போய்விடுகிறே..."

அவளை முடிக்க விடவில்லை. "ஆட்டோவிலா? நீயா? சேச்சே அந்தப் பேச்சே வேண்டாம். மிஞ்சி மிஞ்சி ஓர் இருபது நிமிடப் பயணம். சீக்கிரம் கிளம்பி னாயானால் அது போதும். மற்றபடி இந்த ஆட்டோ, டாக்சி பேச்சை விடு."

மீட்டிங் முடிய இரண்டு மணி ஆகும். மேலே ஒரு பத்து ... பதினைந்து நிமிடம் ...

"பாப்பா, என்னம்மா மசமசவென்று நிற்கிறாய்? மாப்பிள்ளைக்கு லேட்டாகிறது பார்," என்று அவசரப் படுத்தினார் சுதர்சனம்.

"இ . . இதோப்பா. அம்மா . . நான் முன்பு அணிவேனே, ஒரு பச்சைக் கலர் சுடிதார் . . . அது வேண்டுமே.."

"அதற்கு இப்போது என்னம்மா அவசரம்?"

"நான் .. நான்... அதை அத்தைக்கு .. அத்தையிடம் இன்று அதை எடுத்து வந்து போட்டுக் காட்டுவதாகச் சொல்லியிருக்கிறேன். அது வேண்டும் அம்மா" என்றாள் பிடிவாதக் குரலில் மகள்.

மன்னிப்பு கோரும் பாவனையில் மருமகனைப் பார்த்தார் சுதர்சனம்.

அதற்குள் உள்ளே ஓடிச் சென்று, அந்தச் சுரிதார் செட்டுடன் ஓடி வந்தாள் சிவகாமி " இந்தாக்கா" என்ற படி.

தங்கையை உதைக்கலாம் போல வந்தது அபிரா மிக்கு. இந்தக் கடிகாரத்தின் பெரியமுள் தான் பனிரண் டைத் தாண்டுவேனோ என்று அழிச்சாட்டியம் செய்கிறதே என்று பார்த்தால் இவள் வேறு? இவளை யார் இப்படி அவசரக் குடுக்கையாக ஓடிச் சென்று எடுத் துவரச் சொன்னது?

மனதில் நினைத்த எதையும் வெளிக் காட்ட முடியா மல், கஷ்டப்பட்டுக் 'காதுவரை உதடுகளை இழுத்து சிரித்த பாவனையோடு தங்கைக்கு நன்றி சொன்னாள் அபிராமி.

"இனியேனும் கிளம்பலாமில்லையா?" என்றான் தனஞ்சயன் ஒரு கேலிச் சிரிப்புடன்.

"ம் . ." என்று பலியாடு போல வாயிலை நோக்கி நடந்தாள் அபிராமி.

அவளுக்குள் ஓர் இமாலயப் போராட்டம்.

இப்போது தனஞ்சயனோடு செல்ல முடியாது என்று மறுத்து, அதன் காரணத்தைப் பெற்றோரிடம் சொல்லி அவர்களது மகிழ்ச்சியைக் குலைத்து மனம் நோகச் செய்வதா? அத்தோடுநில்லாமல் உண்மை புவ

னைசுவரி வரை கூடச் சென்று விடலாம். தந்தை மனம் கொதித்தால் என்ன செய்வார் என்று சொல்வதற் கில்லை.

அல்லது அவர்கள் முன்னிலையில் காரில் ஏறி, சற்று தூரம் சென்றதும் எப்படியாவது காரை நிறுத்தச் செய்து கணவனிடமிருந்து தப்ப முயற்சி செய்யலாமா?

ஆனால் ஒன்று தப்புகிற முயற்சி வெற்றி பெற வில்லை என்றால் உயிரோடிருப்பது முடியாத காரியம்.

பெற்றோரின், மாமியாரின் நிம்மதிக்காக அந்த அளவு துணியலாமா?

# 15

நெஞ்சுக்குள் என்னென்னவோ உருட்டிப் புரட்ட, ஒன்றையும் வெளிக்காட்டாமல் மெதுவாக வாயிற்புறம் நடந்தாள் அபிராமி.

வீட்டுப்படி இறங்கத் தொடங்கியவள் நின்றாள். "அப்பா, என்னப்பா நீங்கள்? எனக்குத் திருநீறு பூசி விட வில்லையே. வாருங்கள். பூசி விடுங்கள்" என்று திரும்பி உள்ளே சென்றாள்.

அவளோடு உள்ளே வந்த சுதர்சனம் மகளைக் கடிந்து கொண்டார்" என்ன பாப்பா, இது? பிறந்த வீட்டை விட்டுக் கிளம்புவதற்குப் பெண்களுக்கு மனம் இராது தான் என்றாலும் அப்படி எங்கே போகிறாய்? மாப்பிள்ளை காத்திருப்பது தெரியவில்லை? அவருக்குக் கோபம் வரவிடலாமா? ஏதோ முக்கியமாய் எங்கோ போக வேண்டும் என்றால் .."

"அதொன்றும் இல்லை, அப்பா" என்று குறுக்கிட் டுச் சொன்னாள் மகள். வெட்கம் போன்ற பாவனையில் தலையைக் குனிந்து கொண்டு, "எல்லாம் மதியத் தூக்கத்

துக்குத் தான் அப்பா. பகலில் தூங்கினால் அத்தை மாமா வுக்குப் பிடிக்காதா . . . அப்பா, என்னப்பா, சும்மா பூசுகி றீர்கள்? 'சுலோகம்' சொல்லவில்லையே . . . இங்கேயே இருங்கள். அவரையும் கூப்பிடுகிறேன். அவருக்கும் பூசி விடுங்கள்" என்று கூறி, வெளியே சென்று கணவனை அழைத்தாள்.

"வாருங்கள். அப்பா உங்களுக்குப் பூசட்டும்" என்ற வளிடம், "ஷ் பாப்பா. அவர் என்ன நினைப்பாரோ" என்று தணிவான குரலில் தடுத்தார் சுதர்சனம்.

"ஒன்றும் நினைக்க மாட்டார், அப்பா" என்றாள் மகள் உரத்த குரலில்." நம்மைவிட அவர்கள் வீட்டில் பூசை, புனஸ்காரம் எல்லாம் ரொம்ப அதிகம். நாள் நட் சத்திரம் எல்லாமே ரொம்பப் பார்ப்பார்கள். செவ்வாய் வெள்ளி தவறாமல் அத்தை கோவிலுக்குப் போவார் கள். அதனால் உங்கள் மாப்பிள்ளை இதைத் தப்பாகவே எடுத்துக் கொள்ளமாட்டார். அப்படித் தானே, டார்லிங்? வாருங்கள். அப்பா, உங்கள் மருமகனுக்கும் சுலோகம் சொல்லியே திருநீறு பூசுங்கள், அப்பா" என்றாள் சத்த மாகவே.

மறுத்துச் சொல்லமாட்டாமலே தனஞ்சயனும் உள்ளே வந்து, ஷூவைக் கழற்றி விட்டுப் பூசை அறைக் குள் சென்றான்.

சுதர்சனம் சுலோகம் சொல்லி மருமகனுக்குத் திருநீறு பூசுகையில் பெண் மனமார வேண்டிக் கொண்டாள். "முருகா, என் பெற்றோரின் மனம் நோகும் படி ஆகிவிடாமல் என்னைக் காப்பாற்று. ஊட்டியில் காத்தாய்தான். ஆனால் அங்கேதான் மாமாவின் மனம் வெந்து போயிற்று. தயவு செய்து இந்தப் பெற்றோரை யேனும் நிம்மதியாக இருக்கவிடு."

நெஞ்சு தவியாய்த் தவிக்க மெல்ல மீண்டும் வெளிப்புறமாய் அடியெடுத்து வைத்தபோது முன்னறை யில் சிவநாதனின் குரல் கேட்டது. அவள் மனம் துள்ளி யது.

"ஓ! வாருங்கள் வாருங்கள் .." என்று பரபரப்புடன் வெளியே வந்தார் சுதர்சனம்.

"இந்தப் பக்கமாய் வந்து கொண்டு இருந்த போது கார் மக்கர் செய்துவிட்டது. அபிராமி இங்கே இன்று வரப்போவதாகச் சொன்ன ஞாபகம். அவளோடு வீட்டுக்குப் போய் விடலாமே என்று வந்தேன் . . . அடடே, தனமும் இருக்கிறனா? வெரிகுட். வெரிகுட். நம் முடைய கெமிகல்ஸ் விஷயமாய் உன்னிடம் முக்கிய மாய் ஒன்று சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். வா. போகும் போதே சொல்லி விடுகிறேன் ... ஊகூகூம். எதுவும் வேண்டாம் அம்மா. இப்போதுதான் சாப் பாட்டை முடித்துக் கொண்டு வந்தேன். எனக்கு எதுவும் வேண்டாம். சாப்பிட என்றே இன்னொரு தரம் வரு கிறேன். இப்போது போய்வர்வா? வாம்மா. கிளம்பு. போய்க் கொண்டே பேசலாம், என்னம்மா சிவகாமி, சர வணன், இரண்டு பேருக்கும் லீவா? காலேஜ் தொடங்கு முன்பே ஸ்ட்ரைக்கா? ஜாலி தான். வரட்டுமா?"

இலகுவாகப் பேசியபடியே காரை அணுகி ஏறத் தொடங்கியபோது அது நடந்தது.

பேசியபடியே காரின் பின் சீட்டில் சிவநாதன் ஏறி விட்டிருந்தார்.

வீலின் முன்னே தனஞ்சயன் அமர, காரைச் சுற்றி வந்து மறுபுறமாய் அபிராமி ஏறியபோது பக்கத்து வீட்டுச் சிறுமி ஓடி வந்தாள். "அக்கா, அக்கா, ஃபோன் ஒரு 'கால்' தானே போட்டீர்களாம். அதற்கு ஒரு ரூபாய் தானாம். நீங்கள் ஐந்து ரூபாய் வைத்து விட்டு வந்தீர்க ளாமே. அம்மா மீதி நாலு ரூபாயைக் கொடுத்து அனுப்பி னார்கள்" என்று கூறித் தன் பிஞ்சுக் கரத்தில் இருந்த நாலு ரூபாய்களை அபிராமியிடம் கொடுத்துவிட்டு ஓடினாள்.

திரும்பிப் பாரா விட்டாலும் தனஞ்சயனின் பார்வை தன்னைக் கூறு போடுவதை அபிராமியால் உணர முடிந்தது.

கார் கிளம்பிச் சற்று தூரம் சென்றதும், "உங்கள் காரை எங்கே நிறுத்தியிருக்கிறீர்கள் என்று சொன்னால் அங்கே கொண்டு விடுகிறேன்" என்றான் தனஞ்சயன் மொட்டையாக.

லேசாக முறுவலித்தபடி, "வலப்புறம் திரும்பும் தெருவின் மறுகோடியில்" என்ற தகப்பனின் குரலில் ஒரு மெச்சுதலும் இருந்தது.

அவரது காரின் பின்னே, சாலையின் ஓரமாகக் காரை நிறுத்தி விட்டுத் தானும் இறங்கினான் தனஞ்சயன்.

"இறங்கம்மா, அபிராமி . ." என்று அவளோடு கூடவே இறங்கி அவரது காரை நோக்கி அபிராமி பின் தொடர நடந்தார் சிவநாதன். "இனி நான் அபிராமியை அழைத்துப் போய்க் கொள்ளுவேன். 'லிப்ட்' தந்ததற்கு நன்றி மகனே."

அவரது குரலில் தலை நீட்டிய எகத்தாளம் தான் சீண்டியதோ, அல்லது ஏற்கனவே அவரிடம் பேச வேண்டும் என்று தான் அவன் இறங்கி நின்றானோ, "அப்பா, இது கடைசித் தடவை" என்றான் தனஞ்சயன் இறுகிய குரலில்.

"எது?" என்றார் அவர் அலட்டிக் கொள்ளாமல்.

"நீங்கள் இந்த விஷயத்தில் தலையிடுவது."

"ஓ! அதைச் சொன்னாயா? நான் என்னமோ, உன்னுடைய மடத்தனமான முயற்சிகளைச் சொன்னாயாக்கும் என்றல்லவா எண்ணி விட்டேன்" என்று கூறியபடி கார்க் கதவைத் திறந்தார் சிவநாதன்.

"அப்பா, திரும்பவும் சொல்லுகிறேன். இனி ஒரு தரம் என் வழியில் குறுக்கிட்டால் அதற்காக நீங்கள் மிகவும் வருத்தப்படும்படியாக இருக்கும். அதற்குமுன் நல்லபடியாகவே ஒதுங்கிக் கொள்ளுங்கள். இதைச் சொல்லத் தான் இறங்கினேன்.

அவன் விறைத்தாற்போல நின்ற நிலையையோ, அவனது அழுத்தமான குரலையோ சிவநாதன் சட்டை செய்வதாகவே காட்டிக் கொள்ளவில்லை. தன் போக்கில் பின்கதவைத் திறந்து விட்டு "ஏறிக் கொள் ளம்மா" என்றவர், மருமகள் காரில் ஏறிக் கதவைச் சாத்தி யதும், அவரும் ஏறிக் கொண்டு காரை ஓட்டிச் சென்றுவிட்டார்.

பெற்றோர் மனம் நோகாமல், எந்தவிதச் சேதமும் இல்லாமல் தப்பிய சந்தோஷம் வெகுவிரைவிலேயே மறைந்து போயிற்று அபிராமிக்கு.

இப்போது தனஞ்சயன் தகப்பனாரையே மிரட்டத் தொடங்கி விட்டானே! கடைசித் தடவை என்றானே. இனி அவளது உதவிக்கு மாமனார் வந்தாரென்றால் அவருக்கும் தொல்லை கொடுப்பான்! என்ன மாதிரித் தொல்லை? என்னென்ன செய்வான்?

சும்மாவே அவளால் அவருக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்ட நஷ்டங்கள் போதாதா?

நஷ்டம் என்றதும் ஒன்று தோன்ற, "இன்றைக்கு ரொம்ப நஷ்டமா, மாமா?" என்று வருத்தத்துடன் விசா ரித்தாள்.

"ச்சு. பெரிதாக ஒன்றுமில்லை அம்மா. அப்படி ஒன்றும் கையைக் கடித்துவிடாது. அதைவிட நீ புத்தி சாலித் தனமாக நடந்து கொண்டாயே, அது மிகவும் நிம் மதியாய் இருக்கிறது" என்றார் அவர்.

கண்ணைக் கரித்தது அவளுக்கு.

நல்ல மனிதர். நீ வீட்டுக்கு வந்த நாளிலிருந்து எவ்வ ளவு வேதனை என்று ஒரு வார்த்தை சொல்லவில்லை. ஆனால் இந்த மலையின் பின்னாலேயே எத்தனை தரம் மறைந்து கொள்வது? அதுவும் அவளுக்குப் புகலி டம் கொடுப்பதாலேயே அவருக்குத் துன்பம் வரக் கூடும் என்றால் மீண்டும் அவரிடமே போய் நிற்பது சரியல்ல.

அடுத்து வீட்டில் அபிராமி கணவனைத் தனியே கண்டபோது - தனியே என்றால் தனியறையில் அல்ல

பேச்சு அடுத்தவர் காதில் தெளிவாகக் கேளாத, ஆனால் பார்வைபடும் தூரத்தில் தனியே கண்டபோது, "இந்த மாதிரி என் பெற்றோர் வீட்டிற்கு இனி ஒருதரம் வர வேண்டாம். நான் அவர்கள் முன்னே உங்களை வெளிப்படுத்தி விடுவேன்" என்று எச்சரித்தாள்.

"என்ன, மிரட்டலா?" என்றான் அவன் ஏளனமாக.

"ஆமாம். மிரட்டல்தான். ஆனால் பொய் மிரட்டல் அல்ல. நிஜம். என் அம்மா, அப்பாவின் மன நிம்மதி எனக்கு முக்கியம் தான். ஆனால் என் மானத்தையே பலியிட்டுக் காப்பாற்றும் அளவுக்கு அது முக்கியம் அல்ல" என்றாள் அவள் துணிவோடு.

"ம்கூம்?" என்று வேடிக்கை போல ஒற்றைப் புருவத்தை உயர்த்தி, "பரவாயில்லையே! தைரியமாகத் தான் பேசுகிறாய்!" என்று வியந்தவனின் முகம் உடனே மாறிற்று. "அதற்குத்தான் உன்னிடம் என்றைக்குமே பஞ்சம் கிடையாதே! அந்தத் திமிர்தானே . . . ம், பார்க்கலாம்" என்று முடித்துவிட்டான்.

அது திமிர் இல்லை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக, "தற்காத்து, தற்கொண்டாள் பேணி ..." என்று வள்ளுவர் பெருமானே வரையறுத்து வைத்தது போலப் பெண்மையின் 'தற்காத்து'க் கொள்ளும் முயற்சிதான் என்று இவனுக்கு யார் புரிய வைப்பது?

மீண்டும் வாழ்வு சலனமற்றுச் சென்றது. வெளியே இருந்து பார்க்கையில், உள்ளே சேறு இருக்கக் கூடும் என்று எண்ணக் கூட முடியாத அளவு தெளிவான நீர்ப் பரப்பு போல.

அன்று வெகு அதிகாலையிலேயே விழித்துக் கொண்டு விட்டாள் அபிராமி. என்ன முயன்றும் மறுபடி தூக்கம் வர மறுத்துவிட பற்றாக்குறைத் தூக்கத்தினால் தலைக்குள் ஒருமாதிரி இருந்தது. சிலகாலமாக அடிக்கடி இப்படி நேர்வதால் அபிராமி, அவளாகவே இதற்கு ஒரு சிகிச்சையும் கண்டுபிடித்திருந்தாள். எழுந்து

பல் துலக்கிவிட்டு 'ஷவரு' க்கடியில் நின்று வெகுநேரம் குளித்தாள்.

குளிர் நீரின் சிலுசிலுப்பில் தலைக்குள் இருந்த வெம்மை ஒருவாறு தணியவும் குளியலை முடித்தாள்.

ஈரக் கூந்தலை ஆற்றியபடியே வெளியே வந்து பார்த்தபோது இருள் அப்போதுதான் பிரியத் தொடங்கியிருந்தது. புவனேசுவரி பூப்பறிக்கக் கிளம்புவதற்கு இன்னும் நேரம் இருந்தது. அதுவரை அறைக்குள் தனியே கிடந்து பயனற்ற குருட்டு யோசனைகளில் ஈடுபட மனமற்று, கண்ணில் பட்ட ஒரு வேலையாளிடம் புவனேசுவரி தேடினால் கூறும்படி பணித்துவிட்டு பூக்கூடையுடன் தனியாகவே தோட்டத்திற்குக் கிளம்பிவிட்டாள் அவள்.

நீண்டு அடர்ந்திருந்த கருங்கூந்தல் அவள் நடக்கையில் அசைந்தாடிய அழகும், உடலைத் தழுவியிருந்த, தங்க நிற ஷிஃபான் சேலையில் குனிந்தும் நிமிர்ந்தும் மலர் கொய்யும்போது தென்பட்ட உடல் அழகும் காண்பவர் மனதைச் சுண்டி இழுக்கக் கூடும் என்று அவள் அறியவில்லை.

ஆனால் பின்னிருந்து இருகரங்கள் அவளைச் சுற்றி வளைத்துத் தழுவவும் தூக்கி வாரிப் போட்டுக்கொண்டு அவள் திரும்ப, கையிலிருந்த பூக்கூடை நழுவி விழுந்து பறித்த மலர்கள் சுற்றிலும் சிதறின.

திருமணமான நாளிலிருந்து இதுவரையிலும் அறியாத மிக நெருக்கத்தில் கணவனைக் காணவும் அபிராமி திகைத்தாள்.

ஆனால் கணவன் என்கிற சொல்லே ஓர் அபாய அறிவிப்பு என்றாகிவிட்ட மனநிலையில், அவனது விழிகளின் பளபளப்பு மேலும் அச்சுறுத்த அவனது தழுவலில் இருந்து விடுபட்டுவிட முயன்றாள்.

ஆனால், அவளைப்போலவே உறக்கமின்றிக் கிடந்துவிட்டு, எழுந்து பால்கனியில் வந்து நின்று தோட்டத்தையும் சூரிய உதயத்தையும் வெறித்துக் கொண்டிருந்

தவனின் கனவுகளில், தோட்டத்தில் உதய தேவதை போல உலவிக் கொண்டிருந்த மனைவி படவும், புதிதாகத் தோன்றிய கணவன் உணர்வில் வந்து அணைத்தான் அவன் என்று அவள் அறியவில்லை.

அவனது தொடுகை, பார்வையைப் புரிந்து கொள்ளும் அளவு அனுபவம் இல்லாத காரணத்தால் பயத்துடன் சிறைப்பட்ட புறாபோல விடுதலைக்குப் போராடினாள்.

தானாகவே அவளை விடுவித்து விட்டு விலகி நின்று " அபி, நான் உன் கணவன்." என்றான் தனஞ்சயன் தாழ்ந்த குரலில்.

படபடத்த நெஞ்சு ஏறி இறங்க, "ஆமாம் பொல்லாத கணவன்!தெரியும்" என்று வெறுப்புடன் மொழிந்தவள் சட்டெனத் திரும்பி ஓட்டமும் நடையுமாக விரைந்தாள்.

நிறைவேறாத இச்சையின் வெறியோடு, வஞ்சத்தை மறந்து மனைவியிடம் மயங்கிய அவமானமும் அதற்காக அவன் மீதே ஆத்திரமுமாகத் தனஞ்சயனின் முகம் பயங்கரமாக மாறியது.

அந்த வாரம் சனிக்கிழமை இரவில் "ஸ்டார் டிவி"யில் க்ரைம் ஸ்டோரி ஓடிக்கொண்டு இருந்தது.

அவ்வப்போது தாயாருடன் பேசியபடியே படம் பார்த்துக் கோண்டிருந்த தனஞ்சயன் திடுமென மவுனமானான்.

சிறுகலக்கத்துடன் அவன் பார்வையைத் தொடர்ந்தாள் அபிராமி.

டி.வி. திரையில் ஒரு மனிதன், விருப்பம் இல்லாத ஒரு பெண்ணை மற்றவர் அறியாமல் மயக்க மருந்து தெளித்த துணியை முகத்தில் வைத்து அழுத்தி, அதில் அவள் மயங்கித் துவண்டதும் தோளில் தூக்கிச் சென்று கொண்டிருந்தான். என்ன என்று கேட்டவர்களிடம், மயக்கம் டாக்டரிடம் போய்க் கொண்டு இருக்கிறேன் என்று கூறிவிட்டு, அவளை அவனது இடத்துக்கே கொண்டு போய் விடுகிறான்.

ஒரு தீவிரத்துடன் டி.வி.திரையைக் கணவன் வெறிப்பதைக் காணவும் அபிராமி கதிகலங்கிப் போனாள். இப்படி ஓர் ஐடியாவை இந்த டி.வி. தனஞ்சய னுக்கு கொடுக்கவேண்டுமா?

இப்போதானால் காதெட்டும் தூரத்தில் மாமியார், மாமனார் அல்லது யாரேனும் இருக்கிறார்கள் என்கிற தைரியத்தில் சாதாரணமாகவே நடமாடிக்கொண்டு இருக்க முடிந்தது. சும்மா பிடித்து இழுத்துச் செல்லக் கண வனால் முடியாது. குரல் கொடுத்தால் போதும் என்கிற தென்பு இருந்தது.

திடுமென மூக்கில் நெடியேற்றிவிட்டால் பிறகு சத்த மாவது இன்னொன்றாவது? நெஞ்சுக்குள் குளிர் பிறந்து விட்டது அபிராமிக்கு.

சற்றுப் பொறுத்து, புவனேசுவரிக்கு இரவில் கொடுக்க வேண்டிய மாத்திரைகளை அவள் எடுத்து வைத்துக் கொண்டு இருந்த போது தனஞ்சயன் அவள் அருகில் வந்தான்.

சட்டென விலகி, ஹாலில் இருந்தவர்களின் பார்வை படும் இடத்தில் அவள் நின்று கொள்ளவும் அவன் ஏளனமாய் உதட்டைப் பிதுக்கித் தோளைக் குலுக்கினான்.

'பெரிய ஜாக்கிரதைதான்! என்று எகத்தாளமாகத் தொடங்கினான். "இதோபார், உன்னிடம் கொஞ்சம் தனியே பேசவேண்டும் என்னோடு தோட்டத்துக்கு வந் தாயானால். ." என்று சொல்லிக் கொண்டே போன அவன் பேச்சில் அவள் குறுக்கிட்டாள்" இல்லை. சாத்தி யமில்லை முடியாது" என்று கறாராக முடித்து விட்டாள்.

அவன் முகம் கறுத்தது, "உனக்குக் கொஞ்சம் பரிதா பம் காட்ட எண்ணினேன். நீ வேண்டாம் என்கிறாய் ஏய், நல்லதனமாகச் சொல்லும்போதே சொல்லுகிறபடி நடந்து கொண்டால் உனக்கு வேதனையாவது குறையும். அதனால். . ." என்றபோது அவள் மீண்டும் இடையிட் டாள்.

"இந்த மாதிரி பேச உங்களுக்கு வெட்கமாயில்லை? அன்று அத்தை சொன்னது மறந்து விட்டதா? அவர்களைப் போலவே இந்தக் குடும்பத்தில் நானும்.."

இப்போது ஆத்திரத்துடன் இடை மறித்தது தனஞ்சயன். "ஏய், அம்மா பேச்சு எடுத்தாயானால் நான் பொல்லாதவனாக இருப்பேன். உனக்கு எத்தனை தரம் சொல்வது? என் அம்மா பாசத்தின் திருவுரு. மென்மையே வடிவானவர்கள். அவர்கள் ஓர் ஆண் மகனை அடிப்பார்களா? ஏணி வைத்தால்கூட அவர்களை நீ எட்ட முடியுமா? அததற்கு ஒரு தகுதி வேண்டாமா?" என்று படபடத்தவன், ஒரு பெரிய மூச்செடுத்து, தன்னை அமைதிப் படுத்திக் கொண்டான். பிறகு, "இதோர்பார், நான் சொல்வதை இப்போதாவது நன்றாக கவனித்துக் கேட்டுக்கொள். உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது. நீ என்ன முயன்றாலும் அம்மா இடத்துக்கு வரமுடியாது. பெரிய பத்தினி வேடம் போடாமல் ஒரே ஒரு தரம் தண்டனையை அனுபவித்து விடு. அத்தோடு விட்டு விடுகிறேன். வேண்டுமானால் நிறையப் பணமும் தருகிறேன்."

அடுத்திருந்த ஹாலில் அமர்ந்திருந்த தாயார் காதில் விழக்கூடாது என்பதால் தணிந்த குரலிலேயே அவள் மீது தீயள்ளிக் கொட்டிக் கொண்டு இருந்தான் தனஞ்சயன்.

தாயாருக்காக இவ்வளவு பார்க்கிறானே, அவள் மட்டும்தான் மனுஷியா?

கேட்டுக் கொண்டு நிற்கும் இவளுக்கு நோகாதா? இவளை மட்டும் இரும்பாலா வார்த்து வைத்திருக்கிறது?

நினைவு தெரிந்த காலத்திலிருந்து வருத்தம், வேதனை என்று பெரிதாக எதையும் அபிராமி அனுபவித்தது இல்லை. அமைதியான குடும்பம், நீரோட்டம் போல வாழ்வு. வைரமும் ரூபியும் அங்கே இல்லாமல் இருக்கலாம. ஆனால் அதற்காக ஆசைப்பட்டால்தானே ஏக்கம் வரும்? அவளுடைய பெற்றோரால் வாங்கிக்

கொடுக்க முடிந்த சாதாரணத் தங்க நகைகளே அவளுக்குப் பூரிப்பைத் தந்திருந்தன.

இங்கே அவள் சாதாரணமான வருமானத்திற்கே ஷிஃபானும், கிரேப்பும் கட்டினாலும் வைரமும், எமரால்டும், ரூபியும் சஃபயருமாக நகை அணிந்தாலும் உள்ளே இருந்து அரிக்கும் வேதனையை அவை குறைப்பதில்லையே. என்னேரமும் கவலையும், பயமும் ஏக்கமும்தான்.

அதை இன்னமும் அதிகப்படுத்த வேண்டுமா?

பதிலுக்கு அவனையும் காயப்படுத்திவிடும் வேகத்துடன், "எனக்குப் பணம் தருவீர்களா? அதை நீங்கள் என்ன சார், தருவது? சட்டப்படி பார்த்தால் இன்றைக்கு உங்கள் சொத்தில் சரிபாதி சும்மாவே என்னுடையது தானே? நானாகவே எனக்கு வேண்டியதை எடுத்துக் கொள்ளமுடியும்!" என்றாள் துடுக்காக.

தனஞ்சயன் கொதிநிலையை அடைந்தான்.

# 16

தனஞ்சயனின் முகம் கன்றிக் கறுக்க, அவளது கழுத்தைப் பற்றி நெறிக்கவென்று உயர்ந்த கரங்கள் முஷ்டியாகி இறங்குவதைப் பார்த்தபடி அசையாமல் நின்றாள் அபிராமி.

அவனை மேலும் சீண்டி விட்டு விட்டோமே என்ற அச்சத்தைவிட, அவனையும் நோகடித்து விட்டதில் உண்டான திருப்தி அவளுக்கு அதிகமாகவே இருக்க அவனை நேராகப் பார்த்தபடி தைரியமாகவே நின்றாள் அவள்.

"என்ன திமிர் உன்னை. . . இந்த மாதிரிப் பேச உனக்கு எவ்வளவு ஆணவம் இருக்கவேண்டும்?" என்று

கடித்தபற்களுக்கிடையே வார்த்தைகளைத் துப்பினான் தனஞ்சயன்.

"திமிர், ஆணவம்? எல்லாம் சகவாச தோஷம்தான்" என்று அலட்சியமாகவே பதிலிறுத்தவள் அதற்கு மேல் அவனோடு பேச விருப்பம் இல்லை என்பதைக் காட்டுகிறவள் போல, மாமியாருக்காக எடுத்து மாத்திரைகளோடு விலகிச் சென்று விட்டாள்.

அத்தனை நாள் அநியாயமாக அனுபவித்த வேதனைக்குமாக ஏதோ ஓர் அளவு திருப்பிக் கொடுத்து விட்டாற் போல மனதில் ஒரு நிம்மதி உண்டாயிற்று அவளுக்கு. இரவு படுக்கப் போகும் வரையிலும் கூட அது அவளுடனேயே இருந்தது.

கடந்த சில மாதங்களில் அடிக்கடி நேர்வது போல அன்றும் அவளுக்குத் தூக்கம் வரவில்லை.

எவ்வளவோ விலக்க முயன்றும் மீறிக் கொண்டு, காலையில் தனஞ்சயன் அணைத்தது நினைவு வந்தது.

ஏன்?

பழிவாங்குவதற்கென்றே மணந்து கொண்ட வேண்டாத மனைவி. அவளைப் போய் அணைப்பானேன்?

ஒரு வேளை அப்போதே மயக்க மருந்துடன் வந்திருப்பானோ என்று தோன்றவும் விடுக்கென எழுந்து உட்கார்ந்தாள்.

அதனாலேதான் டி.வி.யில் படத்தைப் பார்த்ததும் ஒரு மாதிரி இருந்தானோ? அப்படித்தான் இருக்குமோ?

ஊகூம். இல்லை. அவன் கைகளில் எதுவும் இல்லை. காலைச் சம்பவத்தை நன்றாக நினைவு கூர்ந்தவளுக்குக் கணவன் கைகளில் எதையும் வைத்திருக்கவில்லை என்பது உறுதியாயிற்று.

பின்னே? வெகு அபூர்வமாக சத்தியமாக, மனைவி என்ற எண்ணம் அவனுக்கு வந்ததோ?

பயன் படுத்திக் கொள்ளாமல் தட்டிவிட்டது தவறோ என்று யோசிக்கும் போதே அதன் பயனின்மையை உணர்ந்து நிராசையுற்றுச் சோர்ந்தாள் அபிராமி.

இந்தத் தழுவலே அவனது இன்னொரு திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம். அதை இவள் பயன் படுத்து வது எப்படி முடியும்? அல்லது தட்டிவிட்டதற்காகவும் அவன் ஆத்திரப்பட்டிருக்கலாம்.

இந்தத் துன்பம் எதுவும் வேண்டாம் என்று வெளியேறி விடலாம் என்றால் அதற்கும் தைரியம் வ வில்லை.

புவனேசுவரியைப் பிரிவதே ஒரு துன்பம். அதையும் தாங்கிக் கொள்ளலாம் என்றாலும், புவனேசு வரியின் அருகாமை அவளுக்கு ஓர் அரணாகவும் இருந் ததே. இந்த விஷயம் எதுவும் தாயாருக்குத் தெரியலாகாது என்பதில் மகனுக்கு இருந்த அக்கறையே அவளுக்கு காப்புதானே.

இதைவிட்டு வெளியேறினால் அதை இழக்க நேரும். வாட்ச் மேன், பணியாட்கள் என்று இந்தக் காவலும் இராது. யாராவது ஆட்களை ஏவி அவளை எளிதாகத் தூக்கிச் சென்று விடலாமே என்று எண் ணும்போதே திருமணத்துக்கு முன் அதை அவன் ஏன் செய்யவில்லை என்ற கேள்வியும் தோன்றியது. ஆனால் விடையை யாரிடம் கேட்பது?

அலுப்புடன் உதட்டைப் பிதுக்கி விட்டு மேலே யோசித்தாள்.

இனி என்ன நடக்கும்?

மகனைப் பற்றிப் புவனேசுவரி மதிப்பிட்டது சரி யென்றால் தனஞ்சயன் இப்போது மதம் கொண்ட யானை போல வெறி கொண்டவனாகி இருக்கவேண் டும்.

ஏற்கனவே அவனது முயற்சிகளில் மூன்று தோல் வியுற்று விட்டன. காலையில்.. அது ஒருவிதத் தோல்வி.

இப்போதும் நன்றாக வாரிக்கட்டிக் கொண்டிருக்கிறான். தோற்கத் தோற்க. . . இப்போது தீப்பிழம்பாக இருக்க வேண்டும்.

அப்படி இருக்கிறானா இல்லையா என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தாள் அபிராமி.

இந்தத் தோல்விகளால் அவனுக்குப் பாதிப்பு ஏற்பட வில்லை என்றால் பழிவெறி அமர்ந்து வருகிறது என்று ஒருவாறு நிம்மதி பெறலாம்.

அன்றி வெறி மிகுந்திருந்தாலும் அதற்கேற்ப நடந்து சமாளிக்கலாம். சமாளித்தே ஆகவேண்டும்.

ஆனால் இதை எப்படி அறிவது? அவனோ பிறர்முன் நடிப்பதில் வல்லவனாக இருக்கிறான். அவன் அறியாமல் கண்டால்தான் உண்டு.

எப்படி?

அதிகம் யோசித்தால் ஒன்றும் நடவாது என்று மட மடவென்று நைட்டியிலிருந்து சேலைக்கு மாறினாள். கவனத்துடன் சத்தமின்றி சாவியால் கதவைப் பூட்டிக் கொண்டு தனஞ்சயனின் அறை சமீபம் சென்றாள். சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுக் குனிந்து சாவித்துவாரத் தின் வழியே உள்ளே உற்றுப் பார்த்தாள். உள்ளிருந்த இருளில் ஒன்றும் தெரியாமல் போகவே சாவித்துவாரத் தில் காதை வைத்து ஒட்டுக் கேட்டாள் அமைதிதான்.

பத்தரை மணிக்குள் அமைதியாகத் தூங்கி விட்டதா லேயே அவன் மனமும் அமைதி பெற்றுவிட்டதாகச் சொல்ல முடியாதுதான். ஆனாலும் புவனேசுவரி கூறியது நினைவுவர மீண்டும் தன் அறைக்குள் சென்று உட்புறமாய் தாளிட்டுவிட்டு அறையின் மறுபுறம் சென்றாள்.

பெரிய படுக்கை அறைகள் ஒவ்வொன்றை ஒட்டி யும் ஒரு சிறு பால்கனியும் வைத்துக் கட்டியிருந்தார் சிவ நாதன்.

ஓசையற்று தன் அறையின் பால்கனி கதவை் திறந்து எட்டிப் பார்த்தவளுக்குச் சந்தேகம் தெளிந்து விட்டது.

அவனது அறையை ஒட்டியிருந்த பால்கனியில் ஒரு கூண்டுப் புலி போலக் குறுக்கும் நெடுக்குமாய் நடை பயின்று கொண்டிருந்தான் தனஞ்சயன்.

சிறுவயதில் எல்லோரும் அறிய ஆடித்தீர்த்தான். இப்போது ஆளும் வளர்ந்து அறிவும் வளர்ந்து விட்டதல் லவா? தனக்குள்ளேயே வைத்துக் கொள்கிறானாக்கும் மற்றபடி அந்த அடிப்படை வெறி அகலவே இல்லை.

அன்றிலிருந்து அபிராமி அதிக கவனமாக இருந் தாள்.

அறையை விட்டுவெளியே வருகையில், உள்ளே சென்றதும் தாளிட்டுக் கொள்வதில், கணவன் வீட்டில் இருக்கும் நேரமெல்லாம் யார் அருகிலாவது ஒட்டிக் கொள்வதில், என்று வெகு ஜாக்கிரதையாக இருந்தாள். பெற்றோர் வீடு செல்வதைக் கூட விட்டுவிட்டாள்.

அவ்வப்போது சாவிக்கொத்தை தொட்டுப் பார்த் துக் கொண்டாள்.

அவனும் வேட்டை நாயாகத்தான் துரத்தினான்.

அவளையே சுற்றிச் சுற்றி வந்தான்.

காரணத்தைத் தவறாக ஊகித்த புவனேசுவரி கேலியும் வருத்தமுமாக நோக்க, சிவநாதன் மருமகளை ஜாக்கிரதைப் படுத்தினார். "விடியலுக்கு முந்தைய இருட்டு என்று நினைக்கிறேன் அபிராமி. எச்சரிக்கை யோடு இரு. கைப்பையயையும் கூடவே வைத்துக் கொள் ளேன்,அவசியம் நேர்ந்தால் மிரட்டவேனும் உதவும் இல்லையா?"

அத்தோடு நில்லாமல் இன்னும் சில ஏற்பாடுகளும் செய்தார்.

ஆனால் கள்வன் பெரியவனா காப்பான் பெரிய வனா?

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, அறைக்கதவைத் திறந்த அபிராமியின் நாசி எதையோ அவளுக்கு உணர்த்தியது. அவளது தனியறைக்குப் பொருந்தாத வாசனை. சிகரட் மணம் உள்வைத்த காலை வெளியே இழுத்துக் கொண்டவள் ஒரு கண்ணை அறைக்கதவில் வைத்தபடியே சுற்றினாள்.

வெகுநேரம் கழித்து, கதவைத் திறந்து கொண்டு வெளி வந்த தனஞ்சயன் மீண்டும் சாவியால் பூட்டிச் செல்வதைக் கண்டதும் அயர்ந்து போனாள்.

அவன் வெளியே இருக்கையில் உள்ளே சென்று தாளிட்டுக்கொண்டு பத்திரமாய் இருக்கலாம். அவனால் உள்ளே வரமுடியாது. ஆனால் அவள் வெளியே இருக்கையில் மறுசாவி யிட்டுத் திறந்து, உள்ளே சென்று பதுங்கிக் கொண்டால் எப்படி அறிவது? எப்போதுமா இப்படி சிகரட் குடித்து தன்னைக் காட்டிக் கொள்ளுவான்?

இதை எடுத்துக் கொண்டு மாமனாரிடம் ஓட அவளுக்கு விருப்பம் இல்லை. அவன் அவரை எச்சரித்து இருக்கிறானே அவளுக்கு உதவி புரிவதற்காக அவர் துன்பப் படும்படி ஆகிவிடக்கூடாது.

வேகமாகயோசித்தவளுக்கு பழைய துப்பறியும் கதை ஒன்றில் படித்தது நினைவு வந்தது. அவசரமாகச் செய்து பார்த்தாள்.

ஒரு மெல்லிய நூலை எடுத்து, கதவின் கீலில் ஒரு முடிச்சிட்டு, மறுமுனையைத் தாழ்ப்பாள் பொருத்துமிடத்தில் முடிந்த அளவு இறுகக் கட்டி விட்டுக் கதவைப் பூட்டினாள். மீண்டும் திறந்து, கதவை உட்புறமாக லேசாகத் திறந்து பார்த்தபோது நூல் அப்படியே இருந்தது. ஆள் புகும் அளவு தள்ளியதும் சத்தமின்றி அறுந்து போயிற்று. மிக மெல்லிய நூல், நூல் இருப்பதை அறியாதவர்கள், அது அறுபடுவதையும் கண்டு கொள்வது சாத்தியமில்லை.

அன்றிலிருந்து அறைக்குள் செல்கையில் கதவைத் லேசாகத் திறந்து பார்த்து, நூல் இருந்தால் உள்ளே செல்வாள் இல்லாவிட்டால் வெளியேறிடுவாள். அவனை மீண்டும் வெளிப்புறம் கண்ட பிறகுதான் மீண்டும் அறைக்குள் நுழைவதே.

ஒரு நாள் தோட்டத்தின் ஒரு மூலையில் அவனிடம் மாட்டிக் கொண்டாள். "இப்போது என்ன செய்யப் போகிறாயாம்?" என்று ஏளனமாகக் கேட்டான் அவன்.

"உங்கள் நண்பர்கள் யாரும் இங்கே இல்லை என்பது நினைவில் இருக்கட்டும்" ஏன்றாள் அவள் பயத்தைக் காட்டாமல்.

"அட, உன்னை அவமானப்படுத்த ஐவர் எதற்கடி? இப்போது உன் சேலையை உருவிவிட்டால் வீடுவரை எப்படிப் போவாயாம்? இடையில் எத்தனை வேலையாட்கள்? அய்யோ, பாவம். அவமானப் படுவதை அடுத்தவர் அறிய வேண்டாம் என்று பார்த்தால் ரொம்பவும் பிகு பண்ணுகிறாயே" என்றான் அவன்.

பாவம் பார்த்தானாமே!

"என்ன பார்க்கிறாய்?"

"இல்லை. . . பாவம் பார்த்ததாகச் சொன்னீர்களே, அதைப் பற்றி நினைத்தேன்..ஒன்று கேட்கலாமா!"

"என்ன?"

"இவ்வளவு தீவிரமாக இருக்கிறீர்கள், இதற்கு இவ்வளவு பெரிய திட்டங்கள் எதற்கு? என்றைக்கோ நாலு ஆட்களை விட்டுதூக்கிவரச் செய்திருக்கலாமே" என்று அன்று தோன்றிய ஐயத்தைச் சொன்னாள்.

"அப்படிச் செய்யாததின் முதல் காரணம் எனக்கு அப்படிப்பட்ட ரவுடிகளைத் தெரியாது. பழக்கப் படுத்திக் கொண்டது இல்லை. அத்தோடு உடனே தேடத் தொடங்குவார்கள். போலீசுக்குப் போவார்கள். ஒரு சிறு தடயத்தை விட்டு விட்டாலும் அடியோடு போயிற்று. என்வழியில் யாருக்கும் சந்தேகமே வராதே. சந்தேகம்

வராதபோது தடுத்து நிறுத்தவும் தோன்றாதே. நான் ஜெயிக்கிற திட்டங்கள் தீட்டுகிறவன், அபிராமி வேண்டுமானால் அப்பாவைக் கேட்டுப் பார்.

"ஆனாலும் திட்டம் பலிக்கவில்லைதான்" என்றாள் அவள் நேரான பார்வையுடன்.

"இன்னும் முடிந்து விடவில்லை. எப்படியும் கடைசியில்... என்ன?"

அவள் பார்வை விலகுவதைக் கண்டு விசாரித்தான் அவன்.

"அத்தை அங்கே மாடியில், கை காட்டினார்கள். வரச் சொன்னார்கள், போலத் தெரிகிறது" என்று சரளமாக உரைத்தபடி வீட்டை நோக்கி நகரலானாள் அவள்.

அவனுக்கு நம்பிக்கை இல்லைதான். ஆனால் ஒருவேளை மெய்யாக இருந்தால்? அவளைத் தடுக்கவில்லை அவன்.

அவன் சொன்னது போல மாமனாரிடம் சென்று விசாரித்தாள் அபிராமி. "தொழிலில் அவர் எப்படி, மாமா?"

"ரொம்பக் கெட்டிக்காரனம்மா. அவன் போட்ட திட்டங்களில் எதுவும் இதுவரை தோற்றது இல்லை. லாபமும் நன்றாகவே இருக்கும் முதலில் வெற்றியை மட்டும் நினைத்து, கோட்டை கட்டாமல் தோல்வி வரக்கூடிய வழிகளை ஆராய்ந்து அவைகளைத் தவிர்ப்பதில் அதிகக் கவனம் செலுத்துவதில் அவன் எப்படியும் வென்று விடுகிறான் என்பது என் கணிப்பு."

"ஓகோ!" என்றாள் அவள். ஆனால் எப்படியும் இப்போது அவன் தோற்றுத்தான் ஆக வேண்டும்.!

காட்டில் வசிக்கும் மான், முயல் போன்ற சாதுப் பிராணிகள் புலி, சிங்கம் போன்ற கொடிய மிருகங்களுக்கு அஞ்சி எப்போதுமே ஒரு கவனத்துடனேயே சுற்றும் என்பார்கள். அயர்ந்து உறங்குவதோ, ஓய்வெடுப்

பதோ இல்லையாம். அதனாலேயே அவைகளுக்கு அதிகப் படியாகச் சதை போடுவதும் இல்லையாம்.

அபிராமிக்கோ, என்னேரமும் எச்சரிக்கையோடு இருக்கும் படியான அவசியமும், இப்படி ஒரு நிலையா என்கிற கவலையுமாக, இயல்பாக இருந்த உடலும் மெலிந்தது.

இந்தச் சமயத்தில், மகளை ஆடிக்கு அழைக்க வந்த காந்திமதி, மகளுடைய லேசான மெலிவைக் கண்டு "ஏதேனும் விசேஷமா, கண்ணு?" என்று ஆவலாக வினவினாள்.

"விசேஷமா என்ன வி. . . ." என்று தொடங்கியவளுக்கு விஷயம் புரிந்துவிட சட்டென முகம் கன்றிப் போயிற்று. "அ..அது..அது இப்போது வேண்டாம் என்கிறாரம்மா உங்கள் மருமகன்." என்று எப்படியோ ஒரு மாதிரி சமாளித்து முடித்தாள். உடனே கல்லூரியில் அவளுடைய பழைய சினேகிதிகள் யாரும் சேர்ந்திருக்கிறார்களா. . என்று விசாரித்து பேச்சை திசை திருப்பி விட்டாள்.

கணவரிடம் நாள் கேட்டுக் கொண்டு அபிராமியை அனுப்புவதாகப் புவனேசுவரி கூறிய பதிலைப் பெற்றுக் கொண்டு கிளம்பிய காந்திமதியைக் கொண்டு விடுமாறு வீட்டுக்காரில் ஏற்றி அனுப்பிவிட்டு, "அப்பாடி" என்று பெருமூச்சு விட்டாள் புவனேசுவரி.

"என்ன அத்தை?" என்று வியப்புடன் வினவினாள் அபிராமி.

தலையசைத்து மீண்டும் ஒரு பெருமூச்சு விட்டாள் மாமியார். "நல்லவேளை சமயத்தில் உன் அம்மாவிடம் நல்லபடியாகவே சமாளித்தாய், தங்கம். இல்லாவிட்டால், பாவம் அனாவசியமாகக் கவலைப்படத் தொடங்கி இருப்பார்கள்" என்று அவள் கூறவும் விஷயம் புரிந்தது அபிராமிக்கு.

லேசாக முறுவலித்து, "கவலையா? அதற்குள்ளா கவா? கொஞ்சம் நாள் தானே, அத்தை, ஆகிறது?" என்றாள்.

"கொஞ்சநாளா? ஐந்து மாதங்கள் முடிந்து ஆறு தொடங்கியாயிற்று. எல்லாம் நல்லபடி நடந்திருந்தால் என் பேரனோ பேத்தியோ, ஒரு செல்வம் உனக்குள் உதைக்கத் தொடங்கி இருக்குமே என்று அவ்வப்போது எனக்கு எவ்வளவு ஏக்கமாக இருக்கிறது தெரியுமா" என்று மீண்டும் பெருமூச்சுவிட்டாள் புவனேசுவரி.

வயிற்றுக்குள் குழந்தை உதைப்பது என்றால் எப்படி இருக்கும்?

அபிராமி உடல் குறுகுறுத்து.

ஆனால் மனைவியே இல்லை என்கிறவனைக் கணவனாகக் கொண்டிருப்பவளுக்கு இந்த மாதிரிக் கனவு காணும் அருகதை ஏது? இழப்பின் அளவை முழுமையாக உணர்ந்து அபிராமியின் விழிகளில் நீர் சுரந்தது.

முன்னிருந்த மாமியார் அறியாதபடி இமைகளை தாழ்த்தி விழிநீரை மறைத்து அருகில் இருந்த பத்திரிகை ஒன்றை எடுத்துப் படிப்பதுபோல பாவனை செய்தாள்.

ஆனால் மாமியாரின் மாதக் கணக்கு அவளுக்கு வேறு ஒன்றை நினைவில் கொணர, மாமனாரிடம் சென்று நின்றாள். "சிற்றம்பல சுவாமி எப்போது வேண்டுமானாலும் வந்து விடக்கூடும், மாமா. பிறகு என்ன செய்வது?" என்று கவலையுடன் கேட்டாள்.

"எனக்கு அது கவனம் இருக்கிறது, அபிம்மா, சிற்றம்பலம் வழக்கமாக வந்து தங்குகிற இடத்தில் சொல்லி வைத்திருக்கிறேன். அவர் எப்போது வந்தாலும் உடனே என்னுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன். அதனால் அதுபற்றிக் கவலைப் படாதே" என்றார் பெரியவர்.

தலைகுனிந்து நின்ற அபிராமியின் முகம் கன்றிப் போயிற்று. இதென்ன பாஞ்சாலியின் கதையா பவித்திரம் என்று ஒவ்வொருவருக்காய் சொல்வதற்கு? அவரிடம் "எ . . எல்லாம் சொல்வீர்களா, மாமா" என்றாள் சிரமப்பட்டு.

"எப்படியம்மா சொல்வேன்? என் முகத்தில் நானே கரி பூசிக் கொள்வேனா? இது எனக்கும் அவமானம் தானே. அத்தோடு நீயும் என் குடும்ப விளக்கல்லவா? சும்மா, வேறுமாதிரி, ஏதோ போட்டியில் மணந்திருக்கிறான், தனிமை கிடைத்தால் போட்டி வெறியில் துன்புறுத்தி விடக்கூடும். இதுவரை உங்கள் பெயரைச் சொல்லிக் காப்பாற்றி இருக்கிறேன். அவர்களுக்குள் தகராறு தீரும் வரை இந்த நிலையே நீடிக்க நீங்களும் ஒத்துழைக்கவேண்டும் என்று சொல்லப் போகிறேன். அவர் நல்ல மனிதர் உலகாயதம் புரிந்தவர். ஒத்துக் கொள்வார்" என்று தேறுதலாக உரைத்தார் பெரியவர்.

எத்தனைபொய்! பொய்யிலேயே முக்குளிக்கும்படி ஆகிப் போயிற்றே என்று அதுவும் மனதிற்குள் வலியாகத்தான் இருந்தது அவளுக்கு, தவிர்க்க முடியாத வலி.

எனவே அதைப் பற்றி மேலே பேசாமல், "இன்னொரு வேலையை நாம் தொடங்கவே இல்லையே. மாமா" என்றாள் வேதனையோடு.

"என்னதம்மா?"

"உங்கள் மகனுக்கும் எனக்கும் ஒத்து வரவில்ல என்பது போல அத்தையிடம் மெல்லச் சொல்லிப் பிரிவுக்குத் தயார் செய்ய வேண்டும் என்று முன்பு நினைத்தோமே அது பற்றி ஒன்றுமே செய்யவில்லையே".

சற்று மவுனமாக இருந்தார் சிவநாதன் "அதையும் நான் மறந்துவிடவில்லை, அபிராமி. ஆனால். . பாரம்மா, புவனி உன்னை அவள் பெற்ற மகள் போல நேசிக்கிறாள். எனக்கும் உன்னிடம் மிகுந்த பாசம்தான். அதனால் நீ பிரிந்து செல்லாமல் இங்கேயே இருந்து விடலாமே என்று எனக்குத் தோன்றியது அதனால்..."

"ஆனால் உங்கள் மகன் என்னை வெறுக்கிறாரே" என்றாள் அபிராமி இடையிட்டு.

"இல்லையம்மா. உன் மேல் அன்பு என்று சொல்ல முடியாவிட்டாலும் வெறுப்பு என்று நிச்சயம் கிடையாது. அந்தப் பழிவெறிப் பைத்தியம் மட்டும் இல்லையென்றால்... கொஞ்சம் பொறு. அடிமேல்அடி அடித்தால் அம்மியிம் நகரும் தானே. திருமணம் பற்றி புவனியும் நானும் பேசுவது அவன் காதில் விழத்தான் செய்கிறது. குடும்பம், கவுரவம் பற்றி நான் தொடங்கிப் பேசும் பேச்சுக்களும் என்றேனும் ஒருநாள் அவனது பழிவெறித்திரையைக் கிழித்துக் கொண்டு அவன் மனதை அடையத்தான் போகிறது.

"கூடவே புவனி உன்னிடம் காட்டும் அன்பையும் பார்க்கிறான் இல்லையா? எப்படியும் ஒருநாள் மாறிவிடுவான். அதுவரை பொறுமையாய் இரம்மா. . இப்போது போலவே எச்சரிக்கையோடு இருப்போம். தவிர்க்க முடியாத சூழ்நிலை என்றால் உன்னிடம் துப்பாக்கி இருக்கிறது. துணிந்து பயன்படுத்தி விடு. அதனால் மேலே உனக்குக் கஷ்டம் வராமல் நான் பார்த்துக் கொள்கிறேன், ஆனால். . . ப்ளீஸ், இன்னும் கொஞ்ச காலம் பொறுத்திரு, மகளே" என்று கெஞ்சுதலாகக் கேட்டார் சிவநாதன்.

இதற்கு என்னபதில் சொல்வது? விழிகளை உயர்த்தி மாமனார் முகத்தைப் பார்த்தாள் அபிராமி.

"எனக்கு நம்பிக்கை இருக்கிறதம்மா. தனஞ்சயனுக்கு அவன் அம்மாவிடம் மிகுந்த அன்பு. அவளுக்காகவே அவன் மாறிவிடுவான். அதுவரை. . இப்போது வேறு ஏதாவது காரணம் காட்டியும் கூட நீ வெளியேறுவதால் என்ன லாபம்? உன் ஆபத்து தீர்ந்துவிடுமா? அனாவசியமாய் அங்கே உன் பெற்றோர் மனதையும் இங்கே புவனியையும் வேதனைப் படுத்துவது தவிர என்ன லாபம்? சொல்லு." என்று வாதாடினார் மாமனார்.

இவர் வக்கீலுக்கும் படித்திருப்பார் போலும் என்று எண்ணினாள் அபிராமி.

பழிவாங்கும் வாய்ப்பை எதிர்பார்த்து அவனும் அவனது மனம் மாறும் நாளை எதிர்பார்த்து இவளுமாக எத்தனை ஆண்டுகளோ?

பகலெல்லாம் இறுக்கமும் இரவெல்லாம் வருத்தமு மாக இதே வாழ்க்கையா என்று மனம் அலுத்தது. கவலையற்ற பசுங்கன்றாய்த் துள்ளித்திரிந்த கன்னிப் பருவத்தை எண்ணியேங்கியது.

கூடவே தாயாரின் வரவு நினைவுவர, "அம்மா ஆடிக்கு அழைக்க வந்தார்கள், மாமா. உங்களிடம் நான் கேட்டுக் கொண்டு அனுப்புவதாக அத்தை சொன்னார் கள். அங்கே போய் கொஞ்சநாள் இருந்து விட்டு வருகி றேன்" என்றாள்.

"ம். . கட்டாயம் போக வேண்டுமா, அபிராமி? அம்மா, அப்பா, தம்பி தங்கை என்று அங்கே உன் மனதுக்கு நன்றாக இலகுவாக இருக்கும்தான். ஆனால் இங்கே உள்ள பாதுகாப்பு அங்கே இராதேம்மா, அதை நினைத்துப் பார்த்தாயா?" என்று தயங்கினார் சிவநாதன்.

"அங்கே இருப்பதே நாலு அறைகள். அதனால் வீட்டில் பாதுகாப்பு இதைவிட அதிகம், மாமா. வெளியேயும் இவரோடு நான் போகமாட்டேன். அதனால் பயமில்லை." என்றாள் மருமகள்.

அபிராமி பிறந்த வீடு செல்வதில் விருப்பம் கொண்டு இருப்பதை உணர்ந்த பிறகு மேலே சிவநாதன் தடை சொல்லவில்லை.

"ஒருமாதம்! முப்பது நாட்கள் உன்னைவிட்டு இங்கே நான் திரும்பவும் தனியாகக் கிடக்க வேண்டும்" என்று புவனேசுவரி வருந்திய போது அபிராமிக்கு கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால் அதற்காகப் பயணத்தை விட அவளுக்கு மனம் இல்லை.

"ஒரே ஒருமாதம்தான், அத்தை. இடையிலும் நீங்கள் அங்கே என்னைப் பார்க்க கட்டாயம் வரவேண்டும்" என்று கூறி விடை பெற்றுச் சென்றாள்.

செல்லும்முன் தனஞ்சயனிடம், "அங்கே வந்து என்னை உங்களோடு வெளியே எங்கும் அழைக்காதீர்கள். வரமாட்டேன். வைரமும், வைடூரியமுமாய் பரிசு வாங்க என்றாலும் சரிதான். அதிகம் நெருக்கினால் விஷயத்தை அப்பாவிடம் சொல்லிவிடுவேன். அவமானப்படவேண்டாம் என்று நினைத்தால் இங்கே இருந்து விடுங்கள். குட்பை" என்று எச்சரித்துவிட்டுச் சென்றாள்.

அபிராமி வெளியே சென்றுவருவதற்காக ஒருகாரை அனுப்புகிற சாக்கில் அவளுக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று நம்பிக்கையான ஒருவனை – பெயர் மணியன் அவனைக் காருடன் அவளோடு அனுப்பி வைத்தார் சிவநாதன்.

அந்தக் கார் அக்கம்பக்கத்தில் அபிராமிக்கு மிகுந்த மதிப்பைத் தேடித்தந்தது. தம்பி தங்கைக்கு ஒரே சந்தோஷம்; பெற்றோருக்கும் தான்.

முதல் இரண்டு நாள் நன்றாகத் தூங்கியிருந்ததால் அபிராமி தம்பி தங்கையோடு பழைய மாதிரி குதூகலமாகக் காலம் போக்கினாள்.

ஒரே ஒரு வித்தியாசம். முன்பு காலம் தானாக இறக்கை கட்டிப் பறக்கும். இப்போது அதை விரட்ட வேண்டியிருந்தது.

அபிராமி எச்சரித்தாள் என்பதற்காகத் தனஞ்சயன், அவள் வீட்டுப் பக்கம் தலைகாட்டாமல் ஒதுங்கிவிடவில்லை. மாறாக அடிக்கடி வந்து சென்றான். வரும்போதெல்லாம அரிய பொருட்களை அவரவருக்குத் தகுந்த மாதிரி வாங்கி வந்து கொடுப்பதும், கலகலப்பாகப் பேசுவதுமாக வீட்டில் மற்ற எல்லோர் அன்புக்கும் உரியவன் ஆனான்.

# 17

தனஞ்சயன் அபிராமியை பார்க்க வென்று தனியாக மட்டும் வரவில்லை, தாயார் புவனேசுவரியோடும் அவ்வப்போது வந்தான்.

முதலில் இரண்டு மூன்று தடவை, அபிராமி கொடுத்த பக்கத்து வீட்டு நம்பரில் சொல்லி மருமகளை அழைத்துப் பேசினாள் புவனேசுவரி. ஆனால் அடிக்கடி அடுத்தவர் மூலம் அழைப்பதற்கு ஒருமாதிரி இருப்பதாக வும் சொல்லி, வாரம் இருமுறையேனும் மருமகளை நேரிலேயே வந்து பார்த்து விட்டுப் போனாள்.

தனஞ்சயனும் முகம் சுளிக்காமல் மனைவியைப் பார்க்க, தாயாரை அழைத்து வந்து கூடவே காத்திருந்து, திரும்பவும் வீட்டிற்குக் கொண்டுபோய்ச் சேர்த்தான்.

மாடல் காதல் கணவன் என்று உள்ளூறக் கசந்து கொண்டாள் அபிராமி.

"நீயில்லாமல் வீடு, வீடுமாதிரியே இல்லை, கண் ணம்மா. நீ எப்போது வருவாயென்று இருக்கிறது." என்று புவனேசுவரி வெளிப்படையாகக் கூறவும் காந்திமதியும் சுதர்சனமும் உச்சி குளிர்ந்து போயினர்.

வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி பட்டம் பெறுவது போல மாமியார் மெச்சுகிற மருமகளாக அவர்கள் மகள் அபிராமி நல்லபெயர் பெற்றுவிட்டாள்!

கூடவே, " ஊம். உங்களால் வாய்விட்டுச் சொல்ல முடிகிறது" என்று தனஞ்சயன் சோகமாய் கூறவும் அபி ராமியுடைய பெற்றோருக்கு சிரிப்பு வந்தது.

வாரம் ஒரு தரம் என்று சிவநாதனும் வந்து போனார்.

புகுந்த வீட்டினர் காட்டிய பாசத்தையும் வாங்கி வந்த உயர்ரகப் பழங்கள், பண்டங்களையும், பரிசுப் பொருட்களையும் பார்த்துப் பிறந்த வீட்டினர் பூரிப்ப தைக் காண்கையில் அபிராமிக்கு கசப்பாயிருக்கும்.

இதெல்லாம் வெறும் சர்க்கரைப் பூச்சு. இந்தப் பூச்சுக்கு உள்ளே இருப்பது ஆலகால விஷம் என்பது தெரியாமல் மகிழ்கிறார்களே என்று உள்ளூர வெதும்புவாள்.

தனஞ்சயன் கிட்டத்தட்ட தினசரி வந்து போனதோடு, கலகலப்பாக எல்லோருடனும் பழகவும், வீட்டு மாப்பிள்ளை என்கிற ஒதுக்கம் மாறி எல்லோருமே அவனோடு சகஜமாகப் பேசிப் பழகத் தொடங்கினர்.

அவனும் கெட்டிக்காரத்தனமாகச் சரவணனிடம் விளையாட்டுகள் பற்றி பேசினான், சிவகாமியிடம் கார்டன் செகண்ட் சேல்ஸ் பற்றித் தகவல் கொடுத்தான். மாமியார் மாமனாரிடம் அவர்களுக்குத் தகப் பேசினான், மற்றவர்களையும் சிறு ஒதுக்கம்கூட இல்லாமல் பேச வைத்தான்.

அபிராமி தனஞ்சயன் திருமணத்தின் போது ஜாதகம் பாராதது பற்றி ஒரு நாள் தனஞ்சயன் பேச்செடுத்தான்.

"எங்கள் வீட்டில்தான் எனக்காக, என் பிடிவாதத்திற்காக இவள்தான் பெண் என்று முடிவானபின் ஜாதகத்தைப் பார்த்து குட்டை குழப்பக் கூடாது என்று விட்டு விட்டார்கள். நீங்களும் என் ஜாதகத்தைக் கேட்கவில்லையே?" என்று வியந்து விசாரித்தான்.

"எனக்கு இந்தநாள், நட்சத்திரம், ஜாதகம் இதிலெல்லாம் அதிக நம்பிக்கை கிடையாது மாப்பிள்ளை. உலகத்தோடு ஒட்டவாழ் என்கிற வகையில் சிலதை அனுசரித்துப் போவேன் – இந்த ஆடி அழைப்பு, ஆவணிச் சீர், தலைதீபாவளி என்பது போல. மற்றபடி எதற்கும் ஜோசியக்காரரிடம் போய் நிற்பது இல்லை. என் சிறு வயதில் என்னுடைய தகப்பனார் சொல்லித் தந்தபடி இரண்டு வேளை விளக்கேற்றுவேன். அவர்கற்றுத்தந்த சுலோகங்கள், தேவாரம், திருவாசகம் சிலது சொல்லுவேன். அத்தோடு சரி. அதில்கூட அங்கமாலையை என் அப்பா இறந்தபின் விட்டுவிட்டேன். அந்தப

பாடலில் 'உற்றார்யாருளரோ, உயிர் கொண்டுபோம் போது குற்றாலத்துறை கூத்தலையால் நமக் குற்றார் யார் உளரோ' என்ற இடத்தை அப்பா போனபின் பாடமுடி யாமல்போயிற்று. மற்றபடி எல்லாம் என் பூசை அலமாரி தான். இரண்டுவேளை கும்பிடுவதோடு வெளியூர் எங்கேனும் போனால் – நான் போனாலும் சரி, வீட்டில் மற்றவர்கள் போனாலும் சரி – திருநீறு பூசி விடுவேன். அன்றைக்குக்கூட அப்படித்தான் நீங்கள் அழைத்த போது பூசிவிட்டேன்.. பாப்பாவேறு ஆசைப்பட்டாளே என்றுதான். வேறு எதையும் அவ்வளவாக பார்ப்பது கிடையாது. நல்லதைச் செய்கிறநாள் எல்லாமே எனக்கு நல்ல நாள்தான்."

அன்றையத் தினம் மருமகன் அவசரப் பட்ட போதும் மகளின் வேண்டுகோளின்படி, நின்று பதிகம் சொல்லி நீறு பூசியதன் விவரத்தை மாப்பிள்ளையிடம விளக்கிவிடவேண்டும் என்று அவருக்கு ஒரு வேகம். தன்னிலை விளக்கமாக முடிந்த வரையில் சொல்லிவிட் டார். ஆனால் இதன் பின் நேரடியாக ஓர் அனர்த்தம் நிகழ்வதற்கு வழிவகுத்து விட்டதை அவர் அறிய வில்லை. .ஏன், பாதிக்கப் பட இருந்த அபிராமியும் கூட அதை அறிந்து கொள்ளவில்லை.

இந்தப் பிறந்த வீட்டுச் சீ ராடலில் ஒரு விஷயம் அபி ராமிக்குக் கொஞ்சம் சங்கடமாக இருந்தது. போதுவாக, தந்தையோ, தம்பியோ வீட்டில் இல்லாத போது மகள் கள் இலகுவாக நைட்டியில் உலவுவதை காந்திமதி தடை செய்தது இல்லை. மற்றவர்கள் – அது உறவினர் என்றா லும் அவர்கள் முன்னிலையில் கூடாது என்பாள் அவ்வ ளவுதான்.

காலையில் அவசரமாகக் கிளம்பும் தந்தை, தம்பி, தங்கையை வழியனுப்பிய பிறகு ஆரஅமர நிதானமாக குளித்து விட்டு நைட்டியில் சுற்றுவாள் அபிராமி.

அவள் இங்கே வந்தபின், முதல் தடவையாகத் தனஞ்சயன் அவனைப் பார்க்க வந்த போதும்

அதேபோல நைட்டியில்தான் இருந்தாள். அதிலும் ஈரக் கூந்தலிலிருந்து சொட்டிய நீரால் நனைந்த நைட்டி அங் கங்கே உடலில் ஒட்டிக் கொண்டு வேறு இருந்தது.

அவளைப் பொறுத்த வரை அந்நியனாகவே இருந்த கணவன் எதிரில் வந்ததோடு, அவனது பார் வையிலும் மாற்றம் காணவும் கூசிப்போய் ஆடை மாற்றி விட எண்ணி உள்ளே திரும்பினாள் அபிராமி.

ஆனால் அந்த எண்ணம் இல்லாமல், மகள்கையில் சிற்றுண்டித் தட்டைக் கொடுத்து, "மாப்பிள்ளையிடம் கொடு, அபி. நான் ஜூஸ் தயாரித்துக் கொண்டு வருகி றேன்" என்று கூறவும் சற்று திணறிப் போனாள்.

கணவன் என்பவனுக்கு மனைவி நைட்டியில் இருப் பது பார்த்துப் பழக்கப்பட்ட சமாசாரம். இப்போது அவள் கூச்சப்பட்டுக் கொண்டு உடை மாற்றினால் அதுதான் வித்தியாசமாகப் படும் என்பது புரிபடவும் வேறுவழி யின்றி சிற்றுண்டித் தட்டை அவன் எதிரில் வைத்து விட்டு, சிரமப்பட்டு சாதாரணமாகப் பேச முயன்றாள்.

சிவநாதன் முன்னறிவிப்பு இன்றி வருவதில்லை. புவனேசுவரியும் வரக்கூடிய நேரம், நாள் பற்றி ஓரளவு தெரியப்படுத்தி விடுவாள் என்பதால் இருவரும் வரும் போது அவர்களது வருகைக்குத் தயாராக வீடும் அவளும் இருக்க முடிந்தது.

ஆனால் தனஞ்சயன் சொந்த வீடுபோல நினைத்த நேரத்தில் அல்லவா வந்தான்.

முதலில் ஓரிருநாட்கள் அவன் வரக்கூடும் என்று தயாராக இருந்தவளுக்கு விரைவிலேயே எரிச்சல் வந்து விட்டது. பிறந்த வீட்டில் கூட இஷ்டம்போல இருக்கமுடி யவில்லை என்றால் எப்படி என்று தன் விருப்பம்போல இருக்கத் தொடங்கி விட்டாள், ஒரோர் சமயம் தனஞ்ச யன் பார்வையில் வேறுபாடு தோன்றினால் மாமனார் வீட்டுக்குச் சரியாக ஆசைக்கணவன் வேடமாக்கும் என்று அலட்சியமாக நினைப்பாள்.

அவளைப் பொறுத்த வரையில் அவனது எண்ணம் தான் அவள் ஐயம் திரிபற அறிந்த தாயிற்றே!

தனஞ்சயனின் இந்த வருகைகள் தளர்ந்து மற்றபடி பிறந்த வீட்டுவாசம் அபிராமிக்கு நன்றாகத்தான் இருந்தது.

"அபிக்குட்டி இப்போதுதான் வந்ததுபோல இருக்கிறது. அதற்குள் ஒரு மாதம் முடியப்போகிறது" என்று வரப் போகும் பிரிவை எண்ணித் தவித்தபடியே பெற்றோர் சீர்வரிசைகளைச் சேகரிக்கத் தொடங்கினர். பெரிய இடத்து மருமகளாயிற்றே! அதற்கேற்றாற்போலச் செய்ய வேண்டாமா?

அன்று ஆடிமாதம் கடைசி நாள். அன்று காலை மாலை இருவேளையும் தனஞ்சயன் வந்தான். காலையில் வந்தபோதுதான் அபிராமிக்கு ஒரு மாதிரியாகிவிட்டது. குளிக்கும்போது, கையோடு கொண்டு போயிருந்த நைட்டி தண்ணீரில் விழுந்துவிட 'என் சிவப்பு நைட்டி எங்கே, அம்மா?' என்று கேட்டபடி, வெறும் டவலைச் சுற்றிக் கொண்டு வந்தவளுக்குத் தனஞ்சயனைக்காணவும் குப்பென வியர்த்து விட்டது. சட்டென மீண்டும் அறைக்குள் சென்று, அழுக்கென்றாலும் பரவாயில்லை என்று கழற்றிய சட்டையையும், அதற்குச் சரியாக அலமாரியில் இருந்த சேலைகளில் ஒன்றையும் – காந்திமதியுடையது – அணிந்து கொண்டு வெளியே வந்தாள்.

அன்று மாலை வந்தபோதும் தனஞ்சயன் அதிகம் பேசவில்லை. ஆனால் அவன் கிளம்பிச் சென்றபிறகு, "என்னக்கா, உன்னை அத்தான் பார்வையாலேயே லபக்கென்று விழுங்கி விடுவார்போலத் தெரிகிறதே" என்று கேலி செய்தனர்.

ஏதோ சிக்கலில் மாட்டுகிற உணர்வு அவளுக்கு. ஆனால் என்ன சிக்கல்? இருப்பது அவளுடைய பெற்றோர் வீட்டில், அவனோ ஆள் வைத்து கடத்துவது மடத்தனம் என்பவன்! ச்சு! என்று அந்த நினைவை ஒதுக்கினாள் அபிராமி.

இனி விரைவில் அபிராமி கணவன் வீடு சென்று விடுவாளே என்ற நினைவில், வழக்கமாக ஒன்பதுக்குப் படுக்கப் போகிற குடும்பம், சிலநாட்களாக இரவு பத்தரை பதினொன்று என்று அதுவரை விளையாட்டும் பேச்சுமாக நேரம் போக்கிவிட்டுலேட்டாகப் படுத்தனர்.

சிவகாமி சுரிதாரிலேயெ உறங்கிப் போனாள். பல் துலக்கி விட்டு தங்கையின் அருகில் படுத்ததுதான் அபிராமிக்குத் தெரியும்.

சரவணன் ஹாலில் தரையிலேயே அம்பேல்.

அவனை ஒருவாறு சோஃபாகம் பெட்டில் இழுத்துப் போட்டுவிட்டு, காந்திமதியும் சுதர்சனமும் விளக்கை அணைத்தார்கள்.

சற்றுநேரத்தில் அவர்களது படுக்கை அறைசன்னல் லேசாகத் தட்டப்பட்டது.

"யா. . .ர்?" என்று பயமும் திகைப்புமாக இருவரும் எழவும் "ஷ் நான்தான் மாமா. சத்தம் வேண்டாம். பிள்ளைகளை எழுப்பாதீர்கள்" என்றான் தனஞ்சயன்.

தூக்கக் கலக்கம் முழுவதும் அகலாமலே ஓடி வந்து கதவைத் திறந்தார் சுதர்சனம்"எ..என்ன மாப்பிள்ளை?"

உதட்டைக் கடித்துக் கொண்டு தரையைப் பார்த்தான் தனஞ்சயன், "ஆடிதான் முடியப் போகிறதே. இல்லாவிட்டாலும் பன்னிரண்டு மாதங்களில் ஆடிமட்டும் என்ன பாவம் செய்தது?"

சட்டெனச் சிரித்த சுதர்சனத்தை உதட்டில் கை வைத்து அடக்கினான் மருமகன்.

முகம் சிவக்க, "நான் அபியை எழுப்புகிறேன். ." என்று திரும்பினாள் காந்திமதி.

"வேண்டாம் அத்தை" என்று தணிந்த குரலில் தடுத்தான் தனஞ்சயன், " அபிக்கு என் அம்மாவிடம் பயங்கர பக்தி. அம்மா மாதிரியெ ஆடிகீடி என்று வாதம் செய்வாள். அப்புறம் நானே. . . ப்ளீஸ், நீங்கள் சிவகா

மியை மட்டும் எழுப்பி வந்து விடுங்களேன்" என்றான் எங்கோ பார்த்தபடி.

பரவாயில்லை இவர்களிடம் சகஜமாகப் பேச்சுக் கொடுத்து, இவர்களின் பழக்கங்களை எல்லாம் அறிந்து கொண்டது எவ்வளவு வசதியாகப் போயிற்று என்று தனக்குத் தானே தட்டிக் கொடுத்துக் கொண்டான் அவன்.

"இன்று பகலிலேயே மாப்பிள்ளை பார்வையைக் கவனித்தேன். நானும் சிவாவும் அறையில் படுக்கிறோம். நீங்கள் பாயைப்போட்டுக் கொண்டு இங்கே சரவணனோடு படுங்கள்" என்று வெட்கத்துடன் கணவரிடம் முணுமுணுத்துவிட்டு, உட்புறமாக அமைந்திருந்த இரண்டாவது படுக்கை அறையில் தூங்கிக் கொண்டிருந்த மகள்களில் சின்னவளை, சத்தமற்று மெல்ல உலுக்கி எழுப்பினாள் காந்திமதி.

தூக்கமயக்கத்தில் மலங்க விழித்த சின்னமகளிடம் உதட்டில் கை வைத்து எச்சரித்து விட்டு எழுப்பித் தோளில் சாய்த்தபடியே மெல்ல முன் படுக்கை அறைக்குள் அழைத்துச் சென்றாள்.

கூச்சம் போலக் காட்டிக் கொண்டு அபிராமி தூங்கிய அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டான் தனஞ்சயன்.

சிவகாமியைக் காந்திமதி உசுப்பி எழுப்பிய போது பெரியதான அந்தக் கட்டிலின் மறுபுறத்தில் படுத்திருந்த அபிராமியின் உறக்கமும் சற்றே கலைந்தது. தூக்கம் சொக்கிய விழிகளில் அன்னை தங்கையை எழுப்புவது படவும், இவள் சுரிதாரை மாற்றாமல் படுத்ததுதப்பு தானே. நைட்டிக்கு மாற்றிக் கொண்டுவந்து படுக்கச் சொல்லி எழுப்புகிறார்கள். என்று எண்ணியபடி மறுபுறம் திரும்பி படுத்து மீண்டும் தூங்கிப் போனாள்.

ஆனால் பழையபடி ஆழ்ந்ததூக்கத்தில் மூழ்குமுன் கதவின் தாழ்ப்பாள் லேசாக ஓசையெழுப்பி அவளைத்

தொல்லை செய்தது. அவள் வீட்டில் மகள்கள் கதவை உள்ளே பூட்டிக் கொண்டு படுப்பதில்லையே!

மீண்டும் மெதுவாகத் தலையைத் திருப்பி, பாதி திறந்த விழிகளால் நோக்கியவளுக்கு முதலில் ஒன்றும் புரிபடவில்லை..

அழுதுவடிந்த தெருவிளக்கின் சிறுஒளிதான். ஆனாலும் கதவை உட்புறமாய்த் தாளிட்டுவிட்டு அவளை நெருங்கிக் கொண்டு இருந்தவன் தனஞ்சயன் என்பதில் சந்தேகமே இல்லை.

ஆனால் அவன் எப்படி இந்த நேரத்தில் இங்கே வந்தான்? ஏன் வந்தான்?

என்னவோ விபரீதம்?

ஆறுமாதங்களாக எப்போதும் கூர்மையுடன் செயல்பட்டுவந்த எச்சரிக்கை உணர்வு முழுமையான விழிப்பைத் தந்துவிட, அவசரமாக எழமுயன்றாள் அபிராமி.

ஆனால் அதற்குள் அருகில் வந்து விட்ட தனஞ்சயன், அவளுக்கு இருபுறமும் கைகளை ஊன்றி அந்த முயற்சியைத் தடுத்தான், " என்னம்மா அபிராமி ...ளை - ஒரு பெண்ணை அவமானப் படுத்த ஐந்து (பே)பர் வேண்டும் என்று அவசியமா? ஒரு கணவனால் கூட அவன் மனைவியை எத்தனையோ வழிகளில் அவமானப்படுத்த முடியும். அதையும் உனக்குத் தாலி கூட கட்டாத நான் செய்யும் போது உன் அவமானம் இரு ...ங்கு ஆகாதா? எப்படி...எப்படியென்று காட்டட்டுமா."

இதற்கு மேலும் பெற்றோரின் நிம்மதியாவது இன் ...னான்றாவது?

"அப்பா. . ." என்று அலறுவதற்காக அபிராமி வாயைத் திறந்த போது அவனது ஒருகரம் அவளது வாயை அழுந்தப் பொத்தியது. கூடவே, "இன்னொன் ...றும் தெரிந்து கொள். உன் கராத்தே வேலை எதையும் ... முயற்சிக்காதே. பரிதாபகரமாய்த் தோற்றுப்போ

வாய். ஏனென்றால் இன்றைய நிலையில் கராத்தே கலையில் நான் உன்னை விடத் திறமைசாலி. என் கை முழுமையாக வசத்துக்கு வந்ததும் நான் செய்த முதல் வேலை கராத்தே பயின்றதுதான்" என்று கூறி அவளுக்கு இருந்த ஒரு சிறு நம்பிக்கை யையும் அழித்தபின் தனஞ்சயனின் மறு கை அவளது தோளை முரட்டுத் தனமாகப் பற்றியது.

சிவநாதன் சிலமாதங்களாக வெகுவாக நிம்மதி இழந்திருந்தார்.

மகனைப் பற்றிய நம்பிக்கை ஏற்கனவே அவருக்குச் சற்று விட்டுப் போயிருந்தபோதும் தனஞ்சயன் இந்த மட்டத்துக்கு இறங்குவான் என்று அவர் எண்ணவே இல்லை. சீ ! அதிலும் இந்த அளவுக்கு?

என்றைக்கு அவரது விருப்பமின்மையை லட்சியம் செய்யாமல் அந்த நாலு பையன்களையும் அவன் வளர்க்கத் தொடங்கினானோ அன்றிலிருந்தே அவருக்கு மனதில் உளைச்சல்தான்.

தருமம் செய்யும்போது வலதுகை கொடுப்பதை இடதுகை அறியலாகாது என்று பெரியவர்கள் சும்மா சொல்லவில்லை. யாருக்குத் தருமம் செய்கிறோமோ, அவர்களுக்குக் கூட தெரியாமல் அதைச் செய்ய வேண்டும் என்பதைத் தான் அப்படிச் சொன்னார்கள்.

இந்த மடையனுக்கு அது புரிந்தால்தானே?

உதவியைப் பெறுகிறவன் கை தாழ்ந்து அதை வாங்கும்போது, கொடுக்கிறவனுக்கு மற்றவனை விட நாம் மேல் என்கிற நிமிர்வு தானாக வந்து விடுமே.

தான் நன்மை செய்வதை தந்தை கெடுக்க முயன்றதாக அல்லவா அவன் எண்ணிவிட்டான்!

அவர் என்ன தருமம் செய்யாதவரா? ராமகிருஷ்ணா மடத்துக்கு எத்தனை லட்சங்கள் கொடுத்திருப்பார்! முதியோர் இல்லதுக்கும், ஸ்பாஸ்டிக் சொசைட்டிக்கும் வாரி வழங்குபவர் சிவநாதன் என்பது

ஆடிட்டர் தவிர வெளியார் வேறு யாருக்கேனும் தெரியுமா ! ஆனால் மகன் அறியாததா?

தகப்பனார் ஏன் ஆட்சேபித்தார் என்று ஒருதரமே னும் எண்ணிப் பார்த்தானா?

மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தவர்களை அந்த நரகத்திலிருந்து மீட்டு, சுகத்தில் வாழவைத்தால் அப்படி வாழவைக்கிறவன் சொன்னதெல்லாம் அவர்க ளுக்கு வேதமாகிவிடாதா? என்ன சொன்னாலும் ஆமாம் போட நாலுபேர் கூடவே இருக்கும்போது தானே கடவுள் என்கிற கர்வம் இவனுக்கு வராதிருக் குமா? அப்புறம் தன்னை யார் எதிர்த்தாலும் தாங்க முடிய வில்லை.

எப்போதும் நம்மைச் சுற்றி இருப்பவர்களில் மாறு பேசுகிறவர்களும் நாலு பேர் இருக்கவேண்டும். எதிர் சொல்கிறவர்களையும் ஊக்கப்படுத்தவேண்டும். அப போதுதான் வாழ்வில், தொழிலில் ஒருவேர் வளர முடியும். இந்தத் தனஞ்சயனுக்கோ அவர் அந்த ஊக்கம அளித்திராவிட்டால் தொழிலில் அவனுக்கு இந்த வளர்ச்சிவருமா?

இந்தப் பையன்களும் கெட்டவர்கள் இல்லைதான். இவர்களை மட்டும் தனஞ்சயன், அவரவரின் சூழ்நிலை யிலிருந்து பிரித்து, ஏதாவது இல்லத்தில் சேர்த்து விட்டு வெளியே இருந்தபடி கல்விக்கு செலவு செய்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்!

அவன்தான் சொல்பேச்சு கேட்பதாகவே இல்லையே!

அடியோடு கெடுத்தவர் புவனியுடைய தகப்பனார் தான். தூரப்பார்வை சற்றும் இல்லாத வெறும் குருட்டுப் பாசம். அந்தப் பணம் கைக்கு வந்த பிறகு தனஞ்சயனுக் குக் கொஞ்சநஞ்சம் இருந்த குளிரும் விட்டுப்போயிற்று. நூலறுந்த காற்றாடியாக அவன் அலைகையில் அவனைக் கட்டுப்படுத்தவோ அவருக்கு ஒருவழியும் இல்லாது போயிற்று.

தன்னளவில் கெட்டதோடு நில்லாமல் ஒரு நல்ல பெண்ணின் வாழ்வில் என்ன குரூரமாய் விளையாடி விட்டான்.

புவனியின் வயிற்றில் பிறந்தவனிடம் இந்தக் கொடூரமா? எவ்வளவு பெரிய பாதகம் புரிகிறோம் என்று அவன் என்றேனும் உணருவானா?

பாவம் அந்தப் பெண் அபிராமி. நல்லபெண். பொறுமைசாலி. கெட்டிக்காரி. எல்லாவற்றுக்கும் மேலாக அன்புள்ளம் கொண்டவள். இன்னொரு பெண்ணாயிருந்தால் என்றைக்கோ எல்லாவற்றையும் தூக்கி எறிந்து விட்டுக் கோர்ட்டுக்குப் போய்ச் சந்தி சிரிக்க வைத்திருப்பாள், பணமும் பிடுங்கியிருப்பாள். இவளால் பெற்றோர் நிம்மதி, மாமியார் உடல்நிலை என்று பார்த்துக் கொண்டு கரணம் தப்பினால் மரணம் மாதிரி நிலையில் அந்தரத்தில் ஊசலாடிக் கொண்டு இருக்கிறாள்.

இந்த ஒருமாதம் பெற்றோர் வீட்டில் கொஞ்சம் நிம்மதியாக இருந்திருப்பாள். இன்னமும் நாலுநாள் அந்த நிம்மதி நிலைக்கும் அதன் பிறகு...

மருமகள் பிறந்த வீடு செல்லுமுன் அவளிடம் சொன்னவற்றை எண்ணிப் பார்த்தார். அது நடக்குமா? என்றேனும் தனஞ்சயன் திருந்துவானா?

திருந்த வேண்டும். திருந்தியே ஆக வேண்டும். ஒரு நல்ல பெண் நிம்மதியோடு வாழ்வதற்காகவேனும் அவன் திருந்தித்தான் ஆக வேண்டும்.

அவனுடைய அன்னையின் உயிர் நிலைப்பதற்காக்வும் தான்.

வழக்கம் போல வீட்டின் முன்னும் பின்னுமாய்க் கவனத்துடன் பார்த்தார். இந்த ஆறு மாதங்களாகச் செய்வது போல மகனின் அறைப்பக்கம் சென்று நின்று சற்று நேரம் செவிகளில் கூர்மையுடன் கவனித்தார். அங்கும் அமைதி நிலவவும், சற்றே நிம்மதியுற்றவராகத்

தனது படுக்கை அறைக்குச் சென்று, புவனேசுவரியின் உறக்கம் கலைந்து விடாமல் மெல்லப் படுத்தார்.

அப்படி ஒன்றும் எளிதில் கலைகிற தூக்கம் அல்ல அது. சென்ற முறை உடல் நலம் கெட்ட பிறகு, இரவில் பூரண ஓய்வு வேண்டும் என்று டாக்டரின் கட்டளைப்படி தினமும் தூக்கமாத்திரை உட்கொண்டு அதனால் விளைகிற ஆழ்ந்ததுயில் அது. ஆயினும் சிவநாதன் எச்சரிக்கையுடனேயே நடந்து கொள்வார்.

அவரும் நல்ல தூக்கத்தில் ஆழ்ந்து ஒருமணி நேரம் சென்றிருக்கும், பக்கத்து அறையில் டெலிபோன் மணி கிணுகிணுத்தது. புவனேசுவரியின் தூக்கம் எளிதில் கலைந்து விடக் கூடாது என்பதற்காகப் படுக்கையறை டெலிஃபோனைக் கூட அடுத்த அறைக்கு மாற்றியிருந்தார் அவர். மிக மிக முக்கியமான - தலை போகிற மாதிரி நிலைமை என்றால் தவிர அந்த நம்பரை இரவில் யாரும் பயன்படுத்தக் கூடாது என்பது அவரது கண்டிப்பான கட்டளை.

யார் என்ன என்று யோசித்தவாறு அவசரமாக வந்து டெலிபோஃனை எடுத்தார் சிவநாதன். "யெஸ்" என்றார், எரிச்சல் மறையாமல்.

ஏனென்றால் அவருடைய அருமை மனைவி, இந்த டெலிபோஃன் மணிச் சத்தத்தில் தூக்கம் கலைந்தோ என்னவோ, படுக்கையில் புரண்டு படுத்துக் கொண்டிருந்தார்.

"அய்யா, மன்னித்துக் கொள்ளுங்கள் அய்யா" என்ற லிங்கத்தின் குரலில் மிகுந்த பணிவு இருந்தது. "இந்த நேரத்தில் அய்யாவைத் தொந்திரவு பண்ணக் கூடாது என்றால் இந்த வாச்மேன் கேட்கமாட்டேன் என்கிறான், அய்யா, நீங்கள்தான் எந்த நேரமானாலும் உடனே சொல்லச் சொன்னீர்கள் என்கிறான்."

"நான் எப். . . " என்று தொடங்கியவர், சட்டென, "அவனைப் பேசச் சொல்" என்றார் அவசரத்துடன்.

வாச்மேன் முருகனின் பேச்சை கேட்ட அவர் முகம் மாறியது "எப்போது?" என்று அழுத்தும் அவசரமாகவே கேட்டார்.

"நான் கேட்டுப் பக்கமிருந்து இங்கே வந்து சேர ஒரு அஞ்சு நிமிசம். அப்புறம் லிங்கத்தையாகிட்டே சொன்னால் முதலில் உங்களை கூப்பிட முடியா தென்று. . . அது ஒரு பத்து பதினைஞ்சு நிமிசம். எல்லாமா ஒரு கால் மணி, அரைஅவர் இருக்குமுங் கய்யா" என்று அவனுக்குத் தெரிந்த வகையில் விளக்கி னான் முருகன்.

"ஓ! " என்ற சிவநாதனின் முகத்தில் கவலை நிரம்பி யிருந்தது.

# 18

ஊட்டியிலிருந்து திரும்பி வந்த நாளிலிருந்து தன் மருமகளின் புனிதம் கெடாமல் காப்பதற்கெனச் சிவநாதன் சில ஏற்பாடுகள் செய்திருந்தார்.

அவற்றுள் ஒன்று மகனுடைய நடமாட்டங்களைப் பற்றி எப்போதும் அறிந்து கொள்வது. பெற்றமக னையே உளவு பார்ப்பது குறித்து அவருக்கே அவமான மாக இருந்த போதும், இது மகனுடைய குடும்ப கவுரவத்தைக் காப்பதற்காகத்தானே என்று தன்னையே சமாதானம் செய்து கொண்டார்.

அதன்படி அலுவலகத்திலிருந்தோ, தொழிற்சாலை யிலிருந்தோ அவன் வெளியே கிளம்பினால் உடனே அவருக்குத் தகவல் கொடுக்கும்படி அந்தந்த இடங்களில் பொறுப்பாளர்களுக்குக் கட்டளை இட்டிருந்தார். இதனால் பகல் முழுவதும் பெருமளவு மகனது நடமாட் டம் அவர் அறிந்ததாகவே இருந்தது.

அபிராமியின் பெற்றோர் வீட்டுக்கு அவன் அடிக் கடி செல்வது அவருக்குத் தெரிந்தே இருந்தது.

ஆனால் அதைப் பற்றி அவர் கவலைப்படவில்லை. அங்கே மருமகள் துணையற்று இவனிடம் மாட்டிக் கொள்ள வாய்ப்பில்லை, இனி அவளும் கணவனை நம்பி அவனோடு எங்கும் கிளம்பி விட மாட்டாள் என்பது நிச்சயம்.

அதேபோல வீட்டிலிருந்து எப்போது கிளம்பினா லும் கூடத் தன்னிடம் உடனே சொல்லிவிடும்படி காவ லாளியிடம் கூறி வைத்திருந்தார்.

இப்போது அவன் சொன்ன தகவலின்படி, தனஞ்ச யன் சுமார் பதினோருமணிக்கு மேல் காரைச் சத்த மின்றி ஒட்டிய படி வெளியே சென்றிருக்கிறான்.

எங்கே?

பொதுவாகத் தனஞ்சயனிடம், குடி, ஊர்சுற்றுதல் என்று பிழைகள் தலைதூக்கியிருந்த காலத்தில்கூட அவன் ஒருமாதிரிப் பட்ட இடங்களுக்கு சென்றது இல்லை என்பதை அவர் அறிவார்.

"எய்ட்ஸ்" பயமோ, இயற்கையிலேயே அந்தப் பிழையில் நாட்டமில்லையோ, ஏதோ நல்லதாயிற்று என்று எண்ணிக் கொள்வார்.

குற்றாலத்தில் அறிமுகமில்லாத பெண்களிடம் அவன் தவறாக நடக்க முயன்றான் என்பதில் அவருக்கு மிகவும் ஆச்சரியம்தான். ஒருவேளை அந்த நாட்டுமது வும், அங்கே கண்ட ஏதாவது காட்சி, கேட்ட ஏதாவது பேச்சு தூண்டியிருக்கலாம் என்று நினைத்தார்.

பிறகு, அவரை ஏய்ப்பதற்காக என்ற போதும் ஓர் ஆண்டுகாலம் குடியை விட்டவன், ஊட்டியிலிருந்து சென்னை திரும்பியபின் அதைத் திரும்பவும் தொடர வில்லை என்பதைத் தெரிந்து வைத்திருந்தார்.

அதில் அவருக்கு ஒரு சின்ன சந்தோஷம் கூட.

அப்படி இருக்க, இந்த இரவில் தந்தை உறங்கிவிட் டார் என்று அறிந்த பிறகு, அவர் விழித்து விடாமல்

ஜாக்கிரதையாகச் சத்தமின்றிக் காரை ஓட்டிக் கொண்டு அவன் எங்கே சென்றிருக்கக் கூடும்.

ஆடிப்பிரிவுக்கென்று அபிராமி பிறந்த வீடு சென் றிருக்கையில் இவன் அங்கே போயிருக்கமுடியுமா?

எப்படியும் மகன் அங்கே செல்லவில்லை என்ப தைத் தெளிவு படுத்திக் கொண்டாக வேண்டும் என்று உணர்ந்தார் சிவநாதன்.

ஒரு கால்மணி. அரை அவர்.. முருகா!

அவசரமாக இரவு ஆடைகளைக் களைந்து வெளியே செல்லத் தயார் செய்து கொண்டிருந்த போது புவனேசுவரி மீண்டும் புரண்டு படுத்து "எ. என்ன?" என்றாள் தூக்கக் கலக்கத்துடன்.

உடனேயே அவளருகே அமர்ந்து, "ஒன்றுமில் லையே, புவன், நீ தூங்கம்மா" என்று அவளை முதுகை வருடித்தூங்க வைத்தார்.

மனைவியின் மூச்சு சீராக வருவதை உணர்ந்ததும், ஓசையற்று அகன்று, விரைந்து சென்று தானும் ஒரு காரை எடுத்துக் கொண்டு வேகமாகக் கிளம்பினார்.

செல்லும்போதே, சுதர்சனம் தம்பதிக்குப் புவனேசு வரி அளவு சம்பிரதாயங்களில் நம்பிக்கை கிடையாது என்பது நினைவில் உறுத்தத் தொடங்கியது.

முதலில் நாலுவீடு தள்ளி, மர நிழலில் நின்ற அந்தப் பச்சை நிற மாருதியை அவர் கவனிக்கவில்லை.

மகன் இங்கு வரவில்லை என்று நிம்மதியுற்றவரா கத் திரும்பும் போது ஹெட்லைட் வெளிச்சத்தில் மாருதி கண்ணில் பட்டுவிட, அது மறைவாக நிறுத்திவைக்கப் பட்டிருந்த விதத்திலேயே அவர் மனமிடிந்துபோனார்.

மனைவி மேல் கொண்ட மோகத்தினால், பிரிந்தி ருக்க முடியாமல் அவளை நாடி வந்தவன் இல்லை மகன் என்பது அவருக்கு நிச்சயம். ஆனால் அபிராமியுடைய தந்தைக்கு அது தெரியாதே. அவரது அறியாமையால் என்ன விபரீதத்துக்கு வழி வகுத்துவிட்டாரோ.

தனஞ்சயன் முதலில் அறிவித்த தண்டனையை இங்கே நிறைவேற்ற முடியாது தான். ஆனால் அவன் மனம் இருக்கிற நிலையில் அபிராமியை என்ன பாடு படுத்துகிறனோ?

அந்தக் கால் மணி, அரைஅவரும், புவனேசுவரியை மீண்டும் உறங்க வைப்பதற்காகச் செலவிட்ட சில நிமிடங்களும் அபிராமியை என்ன கதிக்கு ஆளாக்கி விட்டனவோ என்று பதைத்துப்போனார் அவர். ஆனால் இந்த வீட்டில் விளக்கணைந்து, சத்தம் அடங்கி, எல்லோரும் நன்கு உறங்க அவகாசம் கொடுத்துத் தனஞ்சயன் காத்திருந்தது அவருக்குத் தெரியாது.

அடுத்து என்ன செய்வது என்று திட்டமிட்ட படியே அவசரமாகக் காரைவிட்டு இறங்கிச் சென்று சுதர்சனத்தின் வீட்டுக்கதவைத் தட்டினார் அவர் படபடவென்று பொறுமைற்ற விரைவைக் காட்டி.

பக்கத்து சன்னல் வழியே எட்டிப் பார்த்த சுதர்சனம் சம்பந்தியைக் கண்டதும் திகைத்துப் போனார்.

அவசரமாகக் கதவைத்திறந்து விட்டு, "என்ன சார், என்ன விஷயம்?" என்று விசாரித்தார்.

விரைந்து சுழன்ற சிவநாதனின் பார்வை அதற்குள் உள்ள நிலையைக் கண்டு கொண்டுவிட, "தனம் அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. அபிராமியைப் பார்க்க வேண்டுமென்று. . . . அவளையும் தனத்தையும் அழைத்துப்போகவே வந்தேன். . . ." என்று கூறியபடியே மூடியிருந்த அறைக்கதவை நெருங்கித் தட்டினார்.

சில கணங்கள் அங்கிருந்து சத்தமே இல்லை.

தானும் சேர்ந்து தட்டியபடி, "மாப்பிள்ளை, உங்கள் அம்மாவுக்கு உடம்பு சரியில்லையாம். உடனே வாருங்கள்." என்று அழைத்தார் சுதர்சனம்.

இதற்குப் பதில் சொல்லாமல் இருப்பதற்கில்லாமல், "இதோவருகிறேன்" என்றான் தனஞ்சயன் கரகரத்த குரலில்.

அவன் கண்களிலும் முகத்திலும் சிவந்து சீறிய ஆத்திரத்தையோ பெரியவேக மூச்சுகளால் அதை காட்டாமல் அடக்கிக் கொள்ள அவன் செய்த முயற்சியையோ கண்டுகொள்ளும் நிலையில் அபிராமி இல்லை.

அவள் மீண்டும் தப்பிவிட்டாள். புலிவாயில் அகப்பட்டும் தப்பிவிட்ட உணர்வோடு ஓடிச்சென்று கதவைத்திறந்தாள்.

தன் நெடிய உருவத்தால் சுதர்சனத்தின் பார்வையை மறைத்தபடி முன்னே நின்ற சிவநாதனின் கண்களில் சட்டென ஒரு வலி தெரிந்தது.

அவரது பார்வையைத் தொடர்ந்து அபிராமி சட்டென கையால் கிழிந்திருந்த "நைட்டி"யை இழுத்து தோளில் லேசாக ரத்தம் கசிந்து கொண்டிருந்த காயத்தை மூடியபடி அவமானமும் வேதனையுமாகப் புன்னகைத்தாள்.

இன்னும் சுதர்சனத்துக்கு வழிவிடாமலே நின்றபடி, "அபிராமி, சீக்கிரமாக உடைமாற்றிக் கொண்டு கிளம்பு, அம்மா உன் அத்தைக்கு நெஞ்சில் ஒருமாதிரி என்னமோ செய்கிறதாம். உன்னைப்பார்க்க வேண்டும் என்று ஒரே தவிப்பு. அதனால்தான் நானே காரைஎடுத்துக் கொண்டு ஓடிவந்தேன். கிளம்பும்மா "என்று ஒரு சேலையை எடுத்துக் கொண்டு அவள் குளியலறைக்குள் செல்ல அவகாசம் கொடுத்த பிறகே சிவநாதன் வழியை விட்டு நகர்ந்தார்.

ஒன்றும் பேசாமல் தந்தையின் முகத்தை வெறித்தபடி நின்றான் தனஞ்சயன். சற்றே அசடு வழிந்தபடி, "வந்து. . . மாப்பிள்ளை வந்தாரா. . . . எனக்கு இந்த மாதிரிச் சம்பிரதாயங்களில் அவ்வளவு நம்பிக்கை என்று இல்லையா..." என்று ஏதேதோ உளறிக் கொட்டினார் சுதர்சனம்.

"அதனால் என்ன?" என்றார் சிவநாதன் இலகுவாக. "எனக்கும் ஆடிக் கென்று அபிராமியை அனுப்பவே பிரியமில்லை. ஆனால் அவளுக்கும் அம்மா வீட்டு

ஆசை இருக்குமே என்றுதான் தடுக்கவில்லை. அபிராமி, சீக்கிரம் அம்மா" என்று மருமகளுக்குக் குரல் கொடுத்தார்.

அதற்குள் விஷயத்தை அறிந்து கொண்ட காந்தி மதி "அங்கே உதவிக்கு நான் வேண்டுமானால் வரட் டுமா? உடம்பு சரியில்லை என்றால் அவர்களுக்கு வேண்டியதும் பார்த்து, வீட்டையும் பார்க்க அபிராமிக்கு அவ்வளவு தெரியா..து...." என்று உதவமுன் வந்தாள்.

"அதெல்லாம் அவசியம் இல்லையம்மா. அபிராமி யைக் கண்ணால் பார்த்தாலே அவள் அத்தைக்குப் பாதி உடம்பு குணமாகிவிடும். தேவைப் பட்டால் நான் நாளைக்குச் சொல்லுகிறேன்.." என்று சிவநாதன் நல்ல படியாகவே தட்டிக் கழிக்கவும், சேலைக்குமாறி விட்டு அபிராமி அறைக்குள் வந்தாள்.

'ஸ்டைல்' மாதிரி அவள் தோளைச் சுற்றிச் சேலையால் போர்த்தி வந்ததைக் கவனித்தவருக்கு ஒரு கணம் முகம் இறுகியது.

அபிராமியின் கண்கள் கலங்கி இருந்ததையும், அவளது கைகள் லேசாக நடுங்குவதையும் கூட அவர் காணத் தவறவில்லை.

"தனா, நீ உன்காரில் வா. அபியின் கார் இங்கேயே நிற்கட்டும், சுதர்சனம், நாளைக்கு டிரைவர் வந்ததும் அனுப்புங்கள். வரட்டுமா? வருகிறாயா, அபிம்மா? " என்று பரிவுடன் மருமகளை அழைத்தார்.

சுதர்சனம் குடும்பத்திடம் விடை பெற்றுக் கொண்டு இரு கார்களும் விரைவாகவே கிளம்பின.

தெருமுனை திரும்பியதும் இருகார்களுமே சொல்லி வைத்தாற் போல அருகருகே நின்றன.

"அப்பா, " என்று ஆத்திரத்துடன் அழைத்தான் தனஞ்சயன்.

உணர்ச்சியற்ற பார்வையால் வெறித்தானே தவிர, இது வரை அவன், தகப்பனாரிடம் பேசவே இல்லை

என்பது நினைவில் படவும் பயத்துடன் அவனைத் திரும்பிப் பார்த்தாள் அபிராமி. இந்த வெறிப்புலிக்காக ஏங்க அவளால் எப்படி முடிந்தது? பார்வையை மறைத்து விழிகளில் நீர் திரையிட, மீண்டும் திரும்பி, சாலையை வெறித்தாள் அவள்.

"முதலில் நான் சொல்வதைக் கேட்டுக் கொள். உன் அம்மாவுக்கு ஒன்றும் இல்லை என்பது உனக்குப் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்." என்றார் சிவநாதன்.

"நன்றாக! " என்றான் தனஞ்சயன் எகத்தாளமாக. "என் கடைசி எச்சரிக்கையை மீறி என் விஷயத்தில் மீண்டும் தலையிட்டிருக்கிறீர்கள். இதற்கு பழிவாங்காமல் விடமாட்டேன். அம்மா விடம்...."

"அடச்சீ, நீயும் உன் பழிவாங்கலும், இடியட். நீ என்ன செய்வதானாலும் நாளை விடிந்தபின் செய். இந்த இரவில் வந்து அம்மாவை எழுப்பி அவள் ஆரோக்கியத்தைக் கெடுக்காதே." மகனின் சீறலில் இடையிட்டு வெறுப்புடன் மொழிந்தவர் மேலே நில்லாமல் மகனை அலட்சியம் செய்து காரை ஓட்டிச் சென்று விட்டார்.

சிவநாதன் குறுக்கிடும் வரை நிகழ்ந்ததை நினைத்து நினைத்து அவ்வப்போது அபிராமியின் உடல் நடுங்கியது. இல்லை இனி இந்த விஷப் பரீட்சை முடியாது; கூடாது, ஆனால் இதிலிருந்து மீளும் வழி அதுவும் காணாமல் அவள் மேலும் கலங்கினாள்.

விரைவிலேயே கார் நிற்கவும், சுய உணர்வு வந்தாற் போலச் சுற்றிலும் பார்த்த அபிராமி திகைப்புடன், "வீடு வரவில். . . இங்கே என்னமாமா?" என்று கேட்டாள்.

"இறங்கி வாம்மா" என்ற பெரியவர் அந்த வீட்டின் கேட்டில் சாய்ந்தபடியே உறங்கிக் கொண்டிருந்த காவலாளியை எழுப்பிப் பேசினார்.

வந்திருப்பவர் யார் என்று உணர்ந்து கொண்டவன் சடாரென்று நிமிர்ந்து 'சல்யூட்' அடித்துவிட்டு அவசரமாகக் கதவைத் திறந்து விட்டான்.

தூக்கக் கலக்கத்துடன் வந்த வீட்டுக்காரருக்குச் சிவ நாதனைக் கண்டதும் ஒரே ஆச்சரியம்.

அவர் பேசுமுன், சிவநாதனே பேசத் தொடங்கி விட்டார். "சாரிப்பா, இந்த நேரத்தில் வந்து தொந்திரவு செய்வதற்கு மன்னித்து விடு. . . இவள் என் மருமகள், தெரியுமில்லையா?"

"ம்ம். . . நன்றாகவே. வரவேற்புக்கு வந்திருந்தேனே. தனாப்பையன் மன்மதனிடமிருந்து ரதியை அபகரித்துக் கொண்டு வந்து விட்டானோ என்று கேட்டேனே." என்று தன் ஜோக்கை நினைவு படுத்திக் கொண்டு சிரித்துவிட்டு, "நீ நான் வந்ததையே மறந்து விட்டாயாக்கும்! பிரமாத ஃபிரண்டு! " என்றார் கிண்டலாக.

"சினேகிதன் என்று தானப்பா உன்னிடம் வந்தேன்." என்றார் சிவநாதன்.

யோசனையோடு மாமனாரைப் பார்த்தாள் அபிராமி.

". . . . நான் உன்னிடம் ஒர் உதவிக்காக வந்தேன், தேவ். அபிராமியை என் மருமகளை ஒரு குரங்கு கடித்து விட்டது. அதற்கு சிகிச்சை. . . " என்று தொடர்ந்து பேசியவர் அபிராமி விறைப்புற்று நிமிரவும் அவளிடம் திரும்பி, "குரங்குக் கடி விஷம் என்பார்களம்மா. சிகிச்சை செய்துதான் ஆகவேண்டும். டாக்டர் தேவன் என் நண்பர். அதனால் தான் உன்னை இங்கே அழைத்து வந்தேன். ஏடிஎஸ் ஊசியும் போட்டு விடு தேவ். "என்றார் அவர்.

"குரங்கா! இந்த நேரத்திலா? ! " என்று வியந்த நண்பரிடம் விளக்கம் சொல்லமாட்டாமல், "ம்" என்று தலையை மட்டும் ஆட்டினார் அவர்.

மறுக்க முடியாமல்–மறுப்பது முட்டாள்த்தனமும் தானே! சிகிச்சைக்கு உட்பட்டாள் அபிராமி.

"காயம் ஒன்றும் பலம் இல்லை, இந்த மருந்தை ஆறும் வரை போடு போதும். பொதுவாக பிளாஸ்திரி போடுவதை விட, காயத்தைக் காய விடுவதுதான்

நல்லது. உன் பிளவுஸ் உறுத்தினால் பிளாஸ்திரி போட்டுக் கொள்." என்று அபிராமியிடம் கூறி மருந் தைக் கொடுத்துவிட்டு மீண்டும் சினேகிதர் பக்கம் திரும்பி, "இது வீட்டுக் குரங்கா, காட்டுக்குரங்கா?" என்று ஒரு விசித்திரப் பார்வையுடன் வினாவினார்.

இமைகளை இறுக மூடித் திறந்து, "வீட்டுக் குரங்கு தானப்பா. இல்லா விட்டால் இந்த நேரத்தில் கடிக்க முடியுமா?" என்று கசந்த குரலில் கூறியவர் எழுந்து, "ரொம்ப நன்றிப்பா வருகிறோம்." என்று உரைத்து, நண் பரிடம் விடை பெற்றுக் கிளம்பினார்.

அபிராமி நிமிரவே இல்லை.

பேசாமலே வந்தவள் வீடு நெருங்கவும், "உங்களை யும் பழி வாங்குவேன் என்கிறாரே என்ன செய்யப் போகிறாரோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது." என்றாள் அச்சத்துடன்.

"அப்படி அவனால் என்னம்மா செய்யமுடியும்?" என்றார் மாமனார் சிரத்தையற்று.

"அம்மாவிடம்... என்று எதோ தொடங்கினாரே..."

"உன் அத்தையிடம் அவனால் என்ன சொல்ல முடியும்? அவனது பழிவாங்கு படலத்தைச் சொல்லமுடி யுமா! அதன் மூலகாரணத்தைத்தான் சொல்லமுடியுமா? எல்லாவற்றிலும் குற்றவாளியே அவன் தானே வேறு என்ன? இன்று விஷயம் கூட, ஆடிமாதமும் அதுவுமாய் நீ ஏன் போனாய் என்று கேட்டால் அப்போதும் அவனால் பதில் சொல்ல முடியாது. வேறுமாதிரிப் பேசினால், அவன் பொய் சொல்லும் போது அதற்குச் சரியாக நம்மால் பேசமுடியாதா? கவலையை விடு." என்றார் பெரியவர்.

ஆனால் திடீரென்று எப்படி வந்தேன் என்று கேட்டால் என்ன சொல்வது?

"அதை நான் பார்த்துக் கொள்கிறேன்." என்று முடித்துவிட்டார் சிவநாதன்.

அவருக்கு அச்சமே இல்லையோ அல்லது இருந்தும் வெளிக்காட்ட வில்லையோ. அபிராமிக்குக் குலை நடுங் கியது. ஏற்கனவே பட்டுக் கொண்டு இருப்பவள் ஆயிற்றே!

காலையில் அபிராமியைக் கண்ட சந்தோஷத்தில் அதுவே போதும் போலப் புவனேசுவரி எதையும் கேட் கவில்லை. ஆனால் காலை எழுந்து வரும் போதே மாமனார் ஏதேனும் அவளிடம் சொல்லியிருக்க வேண்டும் என்று சந்தேகப்பட்டாள் அபிராமி.

அதுதான் நடந்ததும்.

தனஞ்சயன் அடிக்கடி போய் நின்றதோடு அன்று இரவில் அத்து மீறிச் சென்றான் என்றும், அதனால் தான் பின்னோடேயே சென்று அவன் தாயருக்கு உடம்பு கொஞ்சம் சரியில்லை என்று பொய் சொல்லி மருமகளைக் கையோடு இரவில் அழைத்து வந்துவிட்ட தாகவும் அவர் சொல்லிவிட, அதில் ஐயப்பட அவரு டைய மனைவிக்குத் தோன்றவில்லை.

மருமகள் வந்த மகிழ்ச்சி வேறு.

"சிற்றம்பலம் சுவாமி சீக்கிரம் வந்துவிட்டால் நன் றாயிருக்கும்" என்று மட்டும் கூறிவிட்டு மருமகளை நாடிச் சென்றாள்.

எல்லாம் சுமூகமாகவே, அன்றாடம் போல மேலுக்கு நன்றாகவே கழிந்திருக்கும், தனஞ்சயன் மட்டும் தன் நண்பர்களோடு வந்து நின்றிராவிட்டால்.

வந்ததும் வராதுமாக வேலையாட்கள் இல்லை என்பதை மட்டும் நிச்சயம் செய்து கொண்டு, "அம்மா, உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்... உங்கள் கணவ ரைப் பற்றி." என்று தொடங்கியிராவிட்டால்.

# 19

பொதுவாக அந்தவீட்டு வேலையாட்கள் ஹாலில் நிற்பது இல்லை. வீட்டு மனிதர்கள் இருக்கும் இடத்தில் நின்று மற்றவர்கள் வாய் பார்ப்பது சிவநாதனுக்குப் பிடிக்காது என்பதால் சுத்தம் செய்வது போன்ற வேலைகளை வேகமாக முடித்துக் கொண்டு பணியாட்கள் பின்புறம் சென்று விடுவார்கள். எடுபிடி, வாட்ச் மேன் போன்றவர்கள் முன்புறம் இருப்பார்கள்.

அன்றும் அவ்விதமே வீடுபெருக்கித் துடைத்தவர்கள் பின்புறம் சென்றுவிட, பூஜையை முடித்துவிட்டு புவனேசுவரியும் அபிராமியும் பூக்கிண்ணங்களில் மலர்களையும் இலைகளையும் பாஸ்காக அடுக்கிக் கொண்டு இருந்தார்கள்.

ஒரு சோபாவில் அமர்ந்து, அரசாங்கம் புதிதாக அறிவித்திருந்த ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கையை உன்னிப்பாக படித்துக் கொண்டிருந்தார் சிவநாதன்.

வாசலில் கார் வந்து நிற்பதையும், தனஞ்சயன் நண்பர்களோடு அதிலிருந்து இறங்குவதையும் அபிராமி தான் முதலில் கவனித்தாள்.

அச்சத்தை மறைக்க முயன்றபடி, சிவநாதனை நோக்கிய போது அவரும் கீழ்க்கண்ணால் வாசலைக் கவனிப்பது புரிந்தது.

காலடிச் சத்தம் கேட்டுத் திரும்பிய புவனேசுவரி முகம்மலர்ந்தாள். "தனா... அடடே, எல்லோரும் சேர்ந்து வந்தீர்களா? வாருங்கள் வாருங்கள். உங்களை இப்படிச் சேர்ந்துப் பார்த்து எத்தனை காலம் ஆகிறது. ஆமாம், ஏண்டாம்மா முகம் மூன்றாம் பேஸ்து அடித்த மாதிரி இருக்கிறது? பசியா? வாருங்கள், முதலில் சாப்பிடலாம்." என்று அன்பும் பரிவுமாக அழைத்தாள்.

மெய்யாகவே தனஞ்சயனுடைய நண்பர்களின் முகங்கள் ஒருமாதிரித்தான் இருந்தன. அழுது வடியும் இருபத்தைந்து 'வாட்' பல்பு மாதிரி.

தனஞ்சயன் முகத்தில் மட்டும் கோபம் இருந்தது. வாயைத்திறந்ததும் அவன் பேச்சிலும் அந்தக் கோபம் வெளிப்பட்டது. "அதெல்லாம் இருக்கட்டும், அம்மா." என்றான் ஓர் இறுக்கத்துடன். "முதலில் நான் உங்களிடம் ஒன்று சொல்லியாக வேண்டும்.... உங்கள் கணவரைப் பற்றி." என்றான் அதே குரலிலேயே.

"அப்படிங்களா? உங்கள் கணவரா? ஏன், அப்பாவைப்பற்றி என்று சொல்லக் கூடாதாக்கும்." மகனின் கோபத்தை விளையாட்டாகவே எடுத்துச் சிரித்தாள் புவனேசுவரி.

"சொல்லும் படியாக அவர் நடந்து கொள்ளவில்லை." என்று மகன் அதே குரலில் சுருக்கமாகப் பதில் உரைக்கவும் சற்றே திகைத்து எதிரில் நின்றவர் முகங்களையும் மாறி மாறிப் பார்த்தாள் தாயார். "ம். . . என்னடா, சொல்கிறாய்?" என்றாள் சிறு கவலையுடன்.

"அதொன்றும் இல்லை புவனி. நேற்று இரவு அபிராமியை அழைத்து வந்ததைப் பற்றிச் சொல்கிறான். அவ்வளவுதான். நீ பாட்டில் என்னமோ எதோ என்று பயந்து மனதை அலட்டி உடம்பையும் கெடுத்துக் கொள்ளாதே" என்று கூறி மகனை ஒரு பார்வை பார்த்தார் சிவநாதன்.

ஆனால் அந்தப் பார்வையில் இருந்த எச்சரிக்கையை மகன் சட்டை செய்வதாக இல்லையே. அவனைப் பொறுத்த வரையில் அவனது கடைசி எச்சரிக்கையையும் மீறி விட்டதால் அதன் விளைவுகளை அவர் அனுபவித்தே ஆக வேண்டும். அவரது உயிர்நிலை அவருடைய மனைவி. அங்கே கலகமூட்டி அவரைத் துடிக்க வைக்க வேண்டும்.

"இல்லையம்மா" என்றான் அவன் ஆத்திரத்துடன் அபிராமியை நான் மணந்தபிறகு. . . என் கல்யாணத்

துக்குப் பிறகு அப்பா மிகவும் மாறி விட்டார். அவளோடு நான் பேசினால் கூட குறுக்கே நின்றுதடுக்கிறார்."

"என்னடா செய்வது?" என்று பெருமூச்சு விட்டாள் தாயார். அவருக்கு மட்டும் உங்களைப் பிரித்துவைப்பதில் ஆசையா? நீங்கள் இருவரும் நல்லபடியாக இருப்பதற்கு நாளே இல்லையே." என்றாள் வருத்தத்துடன்.

"அதெல்லாம் கிடையாது அம்மா. உங்களுக்கு விஷயம் புரியவே இல்லை...இந்த வயதில் அப்பாவுக்கு புத்திபிசகி விட்டது. அதனால்தான்..."

அவன் சொல்லவருகிற அடாத பழி புரிந்துவிட "என்ன பேசுகிறீர்கள் என்று யோசித்துப் பேசுங்கள், ஜாக்கிரதை" என்று அவன் பேச்சில் குறுக்கிட்டு அவனைத் தடுக்க முயன்றாள் அபிராமி.

ஆனால் இன்னும் மகன் சொன்னதன் உள்ளர்த்தம் புரியாமல். "அப்பாவைத் தப்பாகப் பேசாதே, தனா. நிஜமாகவே நல்ல நாள் எதுவும் உங்களுக்குப் பொருத்தமானதாக இல்லவே இல்லையடா. சிற்றம்பல சுவாமியே உன் அப்பாவிடம் சொன்னாரடா." என்று மகனுக்கு விளக்க முயன்றாள் அன்னை.

"அப்படி அவர் சொன்னதே பொய் என்கிறேன்." என்றான் தனஞ்சயன் விடாமல். "நீங்கள் வேண்டுமானால் அந்தச் சிற்றம்பலம் திரும்பிவந்ததும் அவரிடம் நேரே கேட்டுப்பாருங்கள். அப்போது உங்களுக்கு உண்மை புரியும் இ..வர்...இவர் தனது தப்பு எண்ணம் நிறைவேறுவதற்காகச் சிற்றம்பலம் பெயரைப் பயன்படுத்தி எங்களைப் பிரித்து வைத்து எல்லோரையும் ஏமாற்றுகிறார்..."

"தனா, நீ ரொம்பவும் வரம்பு மீறிப் பேசுகிறாய். நிறுத்திக் கொள்." என்று அதட்டினார் சிவநாதன்.

சீற்றத்துடன் அவர்பக்கம் திரும்பினான் தனஞ்சயன். "நிறுத்துவதா? இப்போதா? நான் இன்னும் முகவு

வரையையே முடிக்கவில்லையே உங்களை அவ்வளவு எளிதில் விட்டுவிடுவேன் என்றா நினைத்தீர்கள்." என்றான் சினத்துடன்.

"சீ ச்சி, தனா, என்னடா இது? அப்பாவிடம் இப்படி நேருக்கு நேரே எதிர்த்துப் பேசுவதா? நன்றாகவே இல்லை. உனக்குத் தெரியாதா, உன் அப்பா அப்படி யெல்லாம் பொய் சொல்லமாட்டார் என்று. நான் சொல் லித்தான் ஊட்டியிருந்து அபிராமியை அழைத்து வந்தார். பிறகும் நான் கேட்டுத்தான் சிற்றம்பல சுவாமி யிடம் "நாள்" கேட்கப் போய் வந்தார்." என்று மகனுக்கு முன்னார் நடந்ததை விவரித்தாள் புவனேசுவரி.

"அது உங்களுக்காக இல்லை. இதோ இவளுக்காக."

"ச்சு. தனா நீ சொல்வது எனக்கு ஒன்றும் புரிய வில்லை... நீ என்னதான் சொல்கிறாய்?" என்று நேரடி யாகக் கேட்டாள் புவனேசுவரி.

தனஞ்சயன் பதிலளிக்கும் முன் குறுக்கிட்டார் சிவ நாதன். "உன் பையன் அந்தப் பழக்கத்தை விட்டுவிட்ட தாக நினைத்து சந்தோஷப்பட்டது தப்பு, புவனி. இவன் திரும்பவும் எதையாவது போட்டுக் கொண்டு வந்து வாயில் வந்ததை உளறுகிறான்.

"அவ்வளவுதான். நீ இந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டு நில்லாமல் உள்ளேபோ. போய்ச் சமையல் காரனிடம் சிற்றுண்டி என்ன ஆயிற்று என்றுகேள். நாங்கள் அலுவலகம் கிளம்ப வேண்டாமா?!..." என்று மனைவியை உள்ளே அனுப்ப முயன்றார் சிவநாதன்.

வேகமாகத் தாயின் முன்னே வந்து நின்றான் தனஞ்சயன். "அம்மா, திரும்பவும் பொய் பேசி உங்க ளைத் திசை திருப்ப முயற்சிக்கிறார் அப்பா.

"இதோ, ஊதுகிறேன் பாருங்கள் எந்த வாடையா வது வருகிறதா? இப்படித்தான், இவர் சொல்கிற எல்லாம் பொய். அந்தச் சிற்றம்பலம் சொன்னதாக இவர் சொன் னதும் கூடப் பொய்தான். சொல்லுவதை எல்லாம் நம்பு

கிறீர்கள் என்பதால் அப்பா உங்களுக்கு நன்றாகவே நாமம் போடுகிறார்.

"அப்படி ஒன்றும் உன் அப்பா என்னிடம் பொய் சொல்லமாட்டார்." என்று மகனிடம் மறுத்துப் பேசினாள் புவனேசுவரி.

மாமனாரின் முகம் கல்லாகிவிட்டிருந்ததைக் காண அபிராமிக்கு வேதனையாக இருந்தது. அவளைக் காப் பாற்றுவதற்காகப் பொய் சொன்னார். இப்போது கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய கதையாய் இதிலிருந்து எப்படி மீள்வது?

"பொய் சொல்லுவார். நன்றாகவே சொல்லுகிறார். சொல்லிச் சொல்லி உங்களை ஏமாற்றிக் கொண்டே இருக்கிறார்." என்று மீண்டும் வலியுறுத்திச் சொன்னான் தனஞ்சயன்.

"இல்லையடா. . . " என்று புவனேவசுவரி மீண்டும் மறுக்கத் தொடங்கியபோது வெளியே இருந்து குரல் கொடுத்து விட்டு லிங்கம் உள்ளே வந்தார்.

சிவநாதனை நோக்கி, "வெளிநாட்டிலிருந்து வந்த தும் முதல்வேலையாக உங்களுடன தொடர்பு கொள் ளும்படி சிற்றம்பலம் சுவாமி வீட்டில் தகவல் கொடுத்திருந்தீர்களாம். சுவாமி 'லைனில்' இருக்கிறார். உங்கள் அறைக்குத் தொடர்பு கொடுக்கட்டுமா, அய்யா?" என்று பணிவுடன் கேட்டார்.

வயதைப் பாரமல் லிங்கத்தை ஓங்கி அறையலாம் போல வந்தது சிவநாதனுக்கு. இப்போது என்ன செய்வது? அறைக்குச் சென்று எடுத்தாலும் பிறகு பேசு வதாகச் சொன்னாலும் தனஞ்சயன் கூற்றை மெய்ப்பிப் தாகவே ஆகும்.

ஆனால் அவர் சொல்லவேண்டியதை இத்தனை பேர் எதிரில் சொல்லவும் முடியாதே.

மாமனார் வகையாக மாட்டிக் கொண்டுவிட்டதை உணர்ந்து அபிராமி முகமும் வெளிறிப் போயிற்று.

வெற்றி சிரிப்பு சிரித்தவன் தனஞ்சயன்தான்.

"அது. . . " என்று சிவநாதன் தயங்கவும் அவரை வெறித்துப் பார்த்துவிட்டு, "இங்கேயே கொடுங்கள், லிங்கம்." என்று அனுப்பினாள் புவனேசுவரி. "சுவாமியோடு நான் பேசப்போகிறேன்." என்று அறிவித்துவிட்டு ரிசீவரை எடுத்தாள்.

நண்பர்கள் நால்வரின் பொறுப்பை ஏற்றதிலிருந்தே அவ்வப்போது அப்பாவுக்கும் பிள்ளைக்கும் நடுவில் லேசான உரசல் இருந்து வந்தது புவனேசுவரி அறிந்ததே.

ஆனால் நேரடியாக எதுவும் கிடையார. முகத்துக்கு நேரே மறுத்துவிட்டால் அவமானம் என்று தந்தையும் சொல்வதில்லை. அதேபோல நேருக்கு நேர் கட்டளையிட்டுவிட்டால் மீறுவது நன்றாயிராதே என்று மகனும் நேரே தந்தையிடம் பேசுவதில்லை எல்லாம் அவள் மூலம் தான்.

எனவே மகனின் இன்றைய நேரடி மோதல் புவனேசுவரிக்கு அதிர்ச்சிதான். மனைவி, ஆசை அவனும் மனிதன் தானே, அப்பாதான் தடையென்று எண்ணிவிட்டான் என்று எண்ணித்தான் விளக்கமுயன்றுகொண்டிருந்தாள்.

ஆனால் சிவநாதன் அந்தப் பேச்சையே அடக்க முயன்றது அவளுக்குக் கொஞ்சம் சந்தேகத்தை அளித்தது.

அப்போதும் சிற்றம்பலசுவாமி விஷயமாக அவர் பொய் சொல்லியிருக்கக்கூடும் என்று அவள் நம்பவில்லை.

ஆனால் இந்த டெலிஃபோன் வந்ததும்.... மனதைத் தெளிவு படுத்திக் கொள்ள வேண்டும் என்றே சிற்றம்பல சுவாமியுடன் அவள் பேச நினைத்தது. ஆனால் இப்படி ஓர் இடி வந்திறங்கக்கூடும் என்று அவள் நிச்சயமாய் எதிர்பார்க்கவில்லை.

டெலிஃபோனில் புவனேசுவரியின் குரலைக் கேட்டதுமே "என்னம்மா, பேரனா பேத்தியா?" என்று குதூகலமான குழந்தைச் சிரிப்புடன் கேட்டார் அந்தப் பெரியவர்.

நெஞ்சுக்குள் ஏதோ பிசைய மலங்க விழித்தபடி, எ...என்ன சுவாமி?" என்றாள் புவனேசுவரி.

"உங்கள் மருமகளுக்கு சமயம் எப்படி இருக்கிறதோ என்று இரண்டு முகூர்த்தங்கள் சொல்லிவிட்டுப் போனேனே அம்மா.

"நான் போய் ஆறுமாதம் முடிந்துவிட்டதே. ஒரு மாதம் விட்டு உண்டாகியிருந்தாலும் இப்போது மருமகளுக்கு ஐந்தாம் மாதம் ஆகியிருக்கும். 'ஸ்கேனில்' ஆணா பெண்ணா என்று பாராமலா இருந்திருப்பீர்கள்?" என்று குரலில் நகை இலங்க அவர் மேலும் மேலும் பேசப் பேசப் புவனேசுவரியின் நெஞ்சு தவியாய்த் தவிக்கத் தொடங்கிவிட்டது.

"இ. . . இன்னும் அந்தப் பா. . . பாக்கியம் இல்லை, சுவாமி."என்று தழதழத்த குரலில் கூறிவிட்டு, "அதனால் என்ன? கவலையே படாதீர்கள். உங்கள் மகனுக்கும் மருமகளுக்கும் புத்திர பாக்கியம் நன்றாக இருக்கிறது. சிறுவயதுதானே...

"அப்புறம் அய்யாவை கேட்டதாகச் சொல்லுங்கள் ஏதோ முக்கியமாய் பேசவேண்டும் என்றாராம். வந்ததும் நினைவு படுத்திப் பேசச் சொல்லுங்கள். வைக்கட்டுமா" என்று பேச்சை முடித்ததை அரைகுறையாகக் கேட்டபடி ரிசீவரை வைத்தாள் புவனேசுவரி.

இமைகளை உயர்த்துவது கூடச் சட்டெனச் சிரமமாகிப் போயிற்று அவளுக்கு. மெல்லப் பார்வையை உயர்த்திக் கணவனை நோக்கி, "ஏன்" என்று ஒரு வார்த்தை கேட்டாள்.

தனஞ்சயனுக்குப் புரிந்துவிட்டது. விழிகள் பளபளக்க, "பொய் தானே, அம்மா? அப்பா சொன்னது அவ்

வளவும் பொய்தானே. நிச்சயமாய் உங்களுக்கும் புரிந்து விட்டதில்லையா? நான் சொன்னபோது மறுத்தீர்களே, இப்போது நீங்களே பாருங்கள்." என்றான் எக்காளத்து டன்.

"சும்மா இரு, தனஞ்சயா. உன் அப்பா எதாவது செய்தால் அதற்குச் சரியான காரணம் ஏதாவது இருக் கும் சொல்லுங்கள். ஏன் இந்த... இந்.. த மாதிரிப் பொய் அதுவும் இத்தனை மாதங்கள் சொன்னீர்கள்?" என்று அவரை நேராகப் பார்த்து வினவினாள் மனைவி.

தொழில ரீதியில் எத்தனையோ சவால்களை ஏற்றும் கலங்காமல் எதிர் கொண்டு சமாளித்தவர் சிவ நாதன். ஆனால் இப்போது என்ன செய்வது என்று அறி யாமல் நிலை குலைந்து போனார்.

கணவன் மீது நம்பிக்கை கொண்டு மகனோடு வாதாடியவள், தவறு தெரிந்தபின்னும் குற்றவாளி என்று கழிக்காமல் காரணம் தான் கேட்கிறாள்.

காரணமும் இருந்தது மிகவும் பலமான காரணம்! ஆனால் அதை அவளது பலவீனமான இருதயம் தாங்குமா?

மனைவியின் உடல் நிலையை நினைத்து சிவநா தன் தயங்க, மகன் இன்னும் மேலே போனான். "என் னம்மா காரணம்? அதுதான் சொன்னேனே அவருக்குத் தப்பு எண்ணம். அபிராமி மீது" என்றான் கூசாமல்.

"சீ ச்சீ. வாயைக் கழுவடா முட்டாள்." என்றாள் புவ னேசுவரி கோபமாக.

திரும்பவும் தனஞ்சயன் எதோ கூற வாயெடுக்கவும் "மேலே பேசாதே, தனா. உன் அப்பாவோடு முப்பத் தைந்து ஆண்டுகள் பழகியவள் நான். அவர் அப்படிப் பட்டவர் அல்ல. இதற்கு வே... வேறு காரணம் இருக்கும். அப்படித்தானே? இ.. இவன் சொல்வது போல இல்லை தானே?" என்று மீண்டும் கணவரிடமே தவிப்புடன் கேட்டாள் புவனேசுவரி.

"இல்லையம்மா."

"பின்னே, சொல்லுங்கள். அது என்ன காரணம் என்றாலும் சொல்லிவிடுங்கள். முருகா! இவன் சொன்னதை என்னால் தாங்க முடியவில்லையே!" என்று மனைவி அரற்றவும் சிவநாதன் ஒரு முடிவுக்கு வந்தார்.

அப்போதும் மகனைச் சிலகணங்கள் வெறித்துப் பார்த்தார். "ஒன்றும் இல்லையம்மா: காரணம் எனக்குத் தெரியும். அது நீங்கள் அறிய வேண்டிய விஷயமல்ல. சும்மா எங்களுக்குள் ஒரு போட்டி. . . பந்தயம்" என்று ஏதேனும் சொல்லி நிலைமையைச் சமாளித்து விடமாட்டானா என்று ஓர் ஆதங்கம்.

ஆனால் அவனோ அசட்டையாக முகத்தைத் திருப்பிக் கொண்டான். தந்தை என்ன சொன்னாலும், அவர் உண்மையே சொன்னாலும் அவனுக்காக எதையும் செய்யும் நண்பர்களின் உதவியோடு அதையும் பொய்யாக்கி விடலாம் என்கிற நம்பிக்கை அவனுக்கு.

இதனால் மகனின் கடைசி எச்சரிக்கையை அலட்சியம் செய்ததற்கான தண்டனை அவருக்கு கிடைக்கும். அத்தோடு ஒழிகிறவர் தானாக மருமகளுக்கு அளிக்கிற பாதுகாப்பை நிறுத்திக் கொள்வார். ஆனால்...

ஒரு பெருமூச்சுடன் மீண்டும் மனைவியின் பக்கம் திரும்பினார் சிவநாதன்.

"முதலில் நீ சற்று வசதியாய் உட்கார்ந்து கொள்ளம்மா."

அவர் சொல்லை மறுக்கக் கூடாது என்பதற்காக மட்டும் போல சோஃபாவில் ஓரமாய் உட்கார்ந்து, "ப்ளீஸ், சீக்கிரம்" என்றாள் மனைவி.

புவனேசுவரி பொறுமையிழப்பது சிவநாதனுக்குப் புரிந்தது.

வேறு வழியின்றிச் சொல்லத் தொடங்கினார்.

"புவனி, இதை எங்கிருந்து எப்படிச் சொல்லுவது என்றே எனக்குப் புரியவில்லை. அன்று நான் ஊட்டிக்கு. . . ஊகும்." என்றவர் உட்கார்ந்திருந்த மனைவி அண்ணாந்து தன்னைப் பார்க்க வேண்டியிருப்பதை உணர்ந்து ஒரு மோடாவில் அமர்ந்து மேலே தொடங்கினார்.

"இல்லை புவனி உனக்கு முதலில் இருந்து சொன்னால்தான் விளங்கும். நம் பையன் முதன்முதலாக ஏதோ திருமணத்தில் அபிராமியை பார்த்ததாகச் சொன்னானே, அது தவறு. அதற்கும் முன்னாலேயே, அவன் திருமணத்துக்குக் கிட்டத்தட்ட ஓர் ஆண்டு முன்னதாகவே இருவரும் குற்றாலத்தில் சந்திக்க நேர்ந்திருக்கிறது. . . அங்கே ஏதோ தகராறில் தனஞ்சயனுக்குக் கையில் இந்த அடிபட்டிருக்கிறது..."

"இல்லையே. . ஏதோ விபத்தில். . சுதிரைக் காப்பாற்றப் போய் அல்லவா பட்டது?" என்றாள் புவனேசுவரி.

"அப்படிப் பொய் சொல்லி நம்மை நம்பவைத்தார்கள். அது தான் முதல் பொய். அதிலிருந்து சங்கிலித் தொடராக எத்தனை பொய்களை வீட்டுக்குளேயே எல்லோரும் சொல்லும்படி ஆயிற்று! "சே! " என்று தலையசைத்தார் சிவநாதன்.

"உனக்குத் தனத்தைத் தெரியும். தோல்வியை அவனால் ஏற்கமுடியாது. அதிலும் ஒரு பெண்ணிடம் தோற்பதை அவனால் எப்படி சகிக்கமுடியும்? "அதனால்..." பேச்சை நிறுத்தி மகனைப் பார்த்தார்.

எதோ கட்டுக் கதை கேட்பவன் போன்ற பாவனையில், மார்பின் குறுக்கே கைகளைக் கட்டி நிமிர்வோடு நின்று கொண்டிருந்தான் அவன்.

யோசனையோடு மனைவியிடம் திரும்பினார் அவர். "தனாவை இந்தச் சிறுபெண் எப்படி வீழ்த்தினாள் என்று ஆச்சரியமாய் இருக்கிறதா, புவனி? உன் மகனுக்குக் குடிமயக்கம். அபிராமியோ கராத்தே கற்றவள்."

மற்றதை ஒதுக்கி, மருமகளை ஆர்வத்துடன் நோக்கினாள் புவனேசுவரி. புன்னகை செய்து, " என்னென்னமோ 'பெல்ட் என்பார்களே. நீ எதுவரை அபிம்மா?" என்று விசாரித்தாள்.

"சும்மா 'டெமான்ஸ்ட்ரேஷன்' வகுப்புவரைதான் அத்தை ஆனால்..." என்ற மருமகள் உதட்டைக் கடித்துக் கொண்டு மவுனமானாள்.

மகனை ஒருதரம் அண்ணாந்து பார்த்து விட்டு மீண்டும் கணவரிடம் திரும்பினாள் புவனேசுவரி. "அப்புறம்?"

"திரும்பி அடிக்க முடியாத நிலையில் நிறுத்தி அவளை வீழ்த்த வேண்டும் என்று முடிவு எடுத்தான்.

என்னென்னவோ கதை சொல்லித் திருமணம் செய்து கொண்டான்.. அன்று.. அன்று நான் விமானம் வாடகைக்கு எடுத்துக் கொண்டு ஊட்டிக்குப் போனேன் இல்லையா? அங்கே .." என்று கூறி நிறுத்திவிட்டு மீண்டும் மகனைக் கெஞ்சுவது போலப் பார்த்தார் சிவநாதன்.

ஒழுக்கத்தைப் பெரிதாக எண்ணாத பட்டாம்பூச்சிப் பெண்களுக்குக் கூடத் தனஞ்சயன் அபிராமிக்கு விதித்த தண்டனை ஒப்ப முடியாத ஒன்று. 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமான்' பாணியில் கற்பு, கணவன், 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்று ஒரளவு பழைய சம்பிரதாயங்களில் ஊறிப் போயிருந்த புவனேசுவரியால் இதை எப்படித் தாங்க முடியும்?

எப்படியாவது விஷயத்தைத் திசை திருப்பி மழுப்பலாம் என்றால், துணை புரிய மறுத்து மகன் திமிராய் நிற்கிறானே.

சொல்லாமல் விடுவது என்றாலும் அவன் அக்கிரமமாயக் காட்டிய அநியாயமான பழியை விலக்க முடியாது ...

புவனேசுவரியும் விடப் போவதாக இல்லை என்பது அவளது நேரான பார்வையிலும் நிமிர்ந்து அமர்ந்திருந்த முறையிலும் நன்றாகவே தெரிந்தது.

கடவுள் மேல் பாரத்தைப் போட்டு மீண்டும் தொடர்ந்தார்.

"நான் ஊட்டிக்குப் போனபோது இரவாகிவிட்டது. அங்கே தனஞ்சயனின் படுக்கை அறையில் அவன் கையில் துப்பாக்கியோடு அபிராமியின் எதிரே நின்று கொண்டிருந்தான். அவனுடைய நண்பர்களும் நின்று கொண்டு இருந்தார்கள். தனா அபிராமியிடம், குற்றா லத்தில் அவனை அவள் அவமானப்படுத்தியதற்காகப் பழி வாங்கவே அவளை மணந்து இங்கே தனியாகக் கொணர்ந்ததாகவும் மற்றபடி அவளை அவன் மனைவி யாக நினைக்கவில்லை என்றும் அவர்கள் ஐந்து பேருமாக அப்போது அவளை . . . அவமானப்படுத்தப் போவதாகவும் சொல்லிக் கொண்டிருந்தான் ..."

மடமடவென்று சொல்லித் தீர்த்துவிட்டார் அவர்.

கேட்டுக் கொண்டிருந்த புவனேசுவரியின் முகம் ரத்தப் பசையே அற்றுப் போனது போல வெளுத்தது. "போதும்!" என்று கூறியபடி எழுந்தவள் மகனின் பக்கம் திரும்பினாள். இமை தட்டமால் வெறித்துப் பார்த்தாள். தாங்க முடியாத அருவருப்பும் வேதனையும் முகத்தில் பிரதிபலிக்க, அடிவயிற்றிலிருந்து குமட்டிக் கொண்டு வர, வாந்தி எடுப்பவள் போல் இருதரம் வெற்றுக் காற்றை வெளியேற்றியவள், நெஞ்சைப் பிடித்துக் கொண்டு அப்படியே கீழே விழுந்து விட்டாள்.

"அய்யோ! இவள் தாங்கமாட்டாள் என்று தானேடா இவ்வளவு கஷ்டப்பட்டு மூடி மறைத்தேன். பாவி, பெற்ற தாயைக் கொன்றுவிட்டாயே!" என்று பத றியபடி மனைவியிடம் ஓடிவந்து அவளது நெஞ்சில் கைவைத்து துடிப்பை உணரமுயன்றார் சிவநாதன்.

# 20

தந்தை பேசப் பேச அவர் சொல்வது ஒவ்வொன்றையும் எப்படிப் பொய்ப்பிக்கலாம் என்று திட்டமிட்ட படியே கேட்டுக் கொண்டு இருந்தான் தனஞ்சயன்.

இடையிடையே அவர் தயங்கித் தவித்தபோது உள்ளூரக் கொஞ்சம் பரிதாபமாகத் தான் உணர்ந்தான். தந்தை ஆயிற்றே.

ஆனால் இந்தத் தனஞ்சயன் பாதையில் தடை செய்தால் இதுதான் கதி என்று மனதை உறுதிப்படுத்திக் கொண்டு அந்தத் தயக்கங்களையும் கூட எப்படிப் பயன் படுத்தலாம் என்று ஆலோசிக்கலானான் அவன்.

கடைசியில் அவர் மடமடவென்று முடித்துவிடவும். இனிமேல் தாயார் தன்னிடம் விசாரணையைத் தொடங்குவாள் என்று அதற்குத் தயாரானான்.

கணவன் பேச்சில் அவநம்பிக்கை இருந்தால் அல்லவா அடுத்தவரிடம் விசாரிக்க? பேச்சே இல்லாமல் வெறித்த அன்னையின் பார்வையைத் தாங்குவது அவனுக்குக் கொஞ்சம் கடினமாகத் தான் இருந்தது. அந்தப் பார்வையில் இருந்த ஒன்று – நிராசை அவனுள் லேசான அச்சத்தைக் கிளப்பிக் கொண்டு இருக்கையிலேயே, அருவறுத்த குமட்டலோடு தாயார் விழுந்துவிடவும் பதட்டத்துடன் தாயிடம் ஒடிவந்தான். இரண்டு எட்டுதான்.

அவசரமாக அதற்குள் ஒரு பூச்சாடியில் இருந்த பூக்களை எடுத்து எறிந்துவிட்டு அதிலிருந்து தண்ணீரை மாமியாரின் முகத்தில் தெளித்தாள் அபிராமி.

மனைவியிடம் இதயத் துடிப்பு இருக்கிறதா இல்லையா என்பதை உணர முடியாது போகவே, அவள் மார்பில் கை வைத்து, கையின் மேல் கணக்குடன் லேசாகக் குத்தத் தொடங்கினார் சிவநாதன்.

மண்டியிட்டு தாயின் கையைப் பற்றி நாடித் துடிப்பைக் கவனித்து விட்டு, "துடிப்பு இருக்கிறதப்பா" என்றான் தனஞ்சயன்.

வெறுப்புடன் நோக்கி, "ஏன் இருக்கிறது என்று தோன்றுகிறதோ?" என்று வார்த்தைகளால் அவனைக் காயப்படுத்தினார் அவர்.

தொண்டையில் அடைத்ததை விழுங்கிவிட்டு, "காரை ஸ்டார்ட் பண்ணு, ப்ரீதம் . . நான் அம்மாவைத் தூக்கி வருகிறேன். நர்சிங் ஹோமுக்குக் கொண்டு போகலாம்" என்று கூறித் தாயாரைத் தூக்குவதற்காகக் குனிந்தான்.

அபிராமி தெளித்த நீரினாலோ கன்னத்தைத் தட்டி சிவநாதன் அழைத்த அழைப்பினாலோ மெல்லக் கண் திறந்தாள் புவனேசுவரி.

"அத்தை!" என்று அழைத்த மருமகளின் முகத்தைப் பார்த்ததும் அவளது கண்கள் கலங்கின.

"அம்மாவைக் காருக்குத் தூக்கிச் செல்ல வேண்டும். விலகு அபிராமி" என்ற மகனின் குரல் கேட்டதும் அவள் முகம் வேதனையில் கசங்கியது.

பிரயாசையுடன் கணவர் பக்கமாகத் தலையைத் திருப்பி, "நா . . ன் இங்கே . . . வீட்டில் தான் இருப்பேன் . ." என்று எழும்பாத குரலில் முணுமுணுத்துவிட்டு அயர்வுடன் மீண்டும் கண்களை மூடிக் கொண்டாள்.

மேலே என்ன செய்வது என்று கேட்பது போலத் தன் முகத்தைப் பார்த்த மகனிடம், "அவள் சொன்னது காதில் விழுந்ததில்லையா? போய் டாக்டரை இங்கே வரச் சொல்" என்றார் வரண்ட குரலில் சிவநாதன்.

குடும்ப டாக்டருக்கு டெலிஃபோன் செய்தபோது, அவர் காரை மனைவி எடுத்துக் கொண்டு எங்கோ சென்றிருப்பதாகக் கூறவும், அவரை அழைத்து வருவதற்காக தனஞ்சயனுடைய நண்பர்கள் மாருதியில் பறந்தார்கள்.

அலுங்காமல் நலுங்காமல் புவனேசுவரியைத் தூக்கிச் சென்று, கீழ்த்தளத்து விருந்தினர் அறை ஒன்றில் படுக்க வைத்தான் தனஞ்சயன்.

ஒருவருக்கொருவர் தாழ்ந்த குரலில் பேசுவதும் கவலையுடன் புவனேசுவரியின் அருகில் அமருவதுமாயிருந்த தந்தையுடனோ மனைவியுடனோ கலந்து கொள்ள முடியாமல் வெளியே வந்து வைத்தியரின் வருகைக்காகத் தன்னந் தனியனாய்க் காத்திருக்கலானான் அவன்.

இது பழைய மாதிரி மாரடைப்பு அல்ல என்றார் பரிசோதனையை முடித்த டாக்டர்.

"சிறு அதிர்ச்சி. கொஞ்சம் பல வீனமானவர்கள் என்பதால் மயக்கம் போட்டுவிட்டது. ஆனால் அலட்சியமாக இருந்துவிடக் கூடாது. நடமாட விடாதீர்கள். படுக்கையிலேயே இருக்கட்டும். மேற்கொண்டு எந்த அதிர்ச்சியும் மனதைத் தாக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். அவர்களுக்கு மன அமைதி தான் முக்கியம். அது கெட்டால் . . . ஆபத்துதான். பழைய மாதிரியும் போய் விடலாம். ஜாக்கிரதை" என்று ஒரு மிரட்டலோடு விடை பெற்றுச் சென்றார் டாக்டர்.

தூக்கமா மயக்கமா என்று சொல்ல முடியாதபடி கண்மூடிக் கிடந்தாள் புவனேசுவரி.

அவ்வப்போது வந்து எட்டிப் பார்த்தபடி, அன்று எல்லோருமே வீட்டிலேயே தங்கி விட்டனர்.

சிவநாதன், தனஞ்சயன், அவனுடைய நண்பர்கள் எல்லோரும்தான்.

இப்போதைக்கு உயிருக்கு ஆபத்து என்று இல்லாவிட்டாலும் புவனேசுவரி கண்மூடிக் கிடக்கையில் யாருக்கும் உணவு செல்லவில்லை.

அவ்வப்போது சிவநாதனை வற்புறுத்தி ஹார்லிக்ஸ், பால் என்று ஏதாவது உட்கொள்ள வைத்தாள் அபிராமி.

தனஞ்சயனும், அவன் நண்பர்களும் கூட எதுவும் சாப்பிடவில்லை. அபிராமிக்குத் தெரியும் தான். ஆனால் யார் சென்று அழைப்பது? ஆயினும் அவ்வப் போது தனஞ்சயனின் அறைக்குக் காபி, காம்ப்ளான் என்று செல்வதைக் கண்டாள். அவனாகவே சமையல் காரனிடம் சொல்லியிருப்பான் என்று எண்ணிக் கொண்டாள்.

மதியமாகியும் புவனேசுவரி விழிக்கவில்லை எனவும் பயந்து போய் டாக்டருக்கு டெலிஃபோன் செய்து கேட்டார்கள். "பரவாயில்லை. தூங்கித் தானாக விழிக்கட்டும். விழித்ததும் ஹார்லிக்ஸ் கொடுங்கள்" என்று கூறி வைத்துவிட்டார் அவர்.

மோடாவில் அமர்ந்து மனைவியைப் பார்த்துக் கொண்டு இருந்த மாமனாரைப் பார்க்கையில் அபிரா மிக்குப் பாவமாயிருந்தது. சிலமணி நேரங்களில் பத்து வயது மூத்து விட்டாரே!

அறைக்கு வெளியே நின்று அழைத்தாள்.

"என்னம்மா?" என்று வந்தவரிடம், "மாமா நீங்கள் நேற்று இரவு ஒரு மணிக்குத் தான் தூங்கப் போனீர்கள். இப்போது போய்ப்படுத்துக் கொஞ்சநேரம் தூங்குங்கள்" என்றாள்.

"ச்சு. வேண்டாம்மா" என்று மோடாவுக்கே திரும் பிச் செல்லத் தொடங்கினார் சிவநாதன்.

"மாமா" என்று ஓர் அழுத்தத்துடன் அழைத்து அவரை நிறுத்தினாள் அபிராமி. "அத்தை உடம்பு சரி யில்லாமல் படுத்திருப்பது போதாதா? நீங்களும் எதையா வது இழுத்துக் கொள்ள வேண்டுமா? ப்ளீஸ்மாமா. தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள்" என்று மன்றாடி னாள்.

இரக்கத்துடன் மருமகளைப் பார்த்தார் அவர். "நீ கூடத் தான் நேற்று லேட்டாகத் தூங்கப் போனாய் ..." என்றவர் எதையோ நினைத்தவராய், "சும்மா இருந்தா

ளுக்கு உடம்பு சரியில்லை என்று சொன்னேன. என் நாக்கில் என்ன இருந்ததோ, மெய்யாகவே படுத்துவிட்டாளே!" என்று கலங்கினார்.

அந்தப் பொய் அவளுக்காகச் சொல்லப்பட்டது என்பதை எண்ணிக் கலங்கினாள் அபிராமி. சமாளித்துக் கொண்டு, "எங்கள் அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்றால் அப்பா ஆத்திரப்படுவார். நீங்களானால் அழுகிறீர்கள். போங்கள். போய்க் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொண்டீர்களானால் தான் உங்களுக்குத் தென்பு வரும். சொன்னால் கேளுங்கள் மாமா. நான் அத்தை அருகிலேயே இருந்து பார்த்துக் கொள்கிறேன் . . . அதில் எனக்கு ஒரு சிரமமும் இல்லை பரீட்சை சமயம் எத்தனையோ நாள் இரவு ஒரு மணிக்கு மேல் தூங்கி இருக்கிறேன். எனக்கு ஒன்றும் செய்யாது . . . அதுவும் நாலரை மணிக்கு டாக்டர் அனுப்புகிற நர்ஸ் வந்து விடுவார்கள். அதுவரை பார்த்துக் கொள்ள என்னால் முடியும். கவலைப்படாமல் போய்ப் படுத்துத் தூங்குங்கள்" என்று வற்புறுத்தி அனுப்பி வைத்துவிட்டு மீண்டும் மாமியாரின் அருகில் இருந்த மோடாவில் அமர்ந்தாள்.

மாமியாரின் சோர்ந்த முகத்தைப் பார்க்கும்போது அவளுக்கு ஏதேதோ தோன்றியது.

ஆறுமாதங்களுக்கு முன் யாரென்றே தெரியாது; இப்போது இந்த புவனேசுவரிக்கு ஒன்று என்றால் எவ்வளவு வேதனையாக இருக்கிறது. மாமியாருக்கும் தான் அபிராமியிடம் எவ்வளவு அன்பு! புவனேசுவரி நகைகளும் பட்டுச் சேலைகளும் கொடுத்தது பற்றி அவள் அவ்வளவு பெரிதாக நினைக்கவில்லை. பணம் இல்லாதவர்கள் பூ வாங்குகிறார்கள்; பணம் இருப்பவர்கள் நகை தருகிறார்கள். அடிப்படை ஒன்றுதான்.

ஆனால் அவ்வளவு கலங்கியிருந்த நேரத்திலும் அபிராமிக்குக் கராத்தே தெரியும் என்றதும் மகிழ்ந்தாளே; மருமகளிடம் எவ்வளவு அன்பு இருந்தால் அது இயலும்?

கையில் பொட்டென்று ஒரு துளி நீர் விழுந்து தெறிக்கவே யோசனையோடு கன்னத்தைத் தொட்டுப் பார்த்தாள். அவளது கண்ணீர்தான்!

அவசரமாகத் துடைத்துக் கொண்டு நிமிர்கையில் அறைவாயிலில் நிழலாடியது.

[illegible]யன்தான். ஒரு கணம் நின்று பார்த்து விட்டுத் திரும்பிச் சென்றான்.

அவனது பரந்த முதுகையும், அது பார்வைக்கு மறைந்த பின் அவன் சென்ற வழியையும் வெறித்தபடி சற்று நேரம் உட்கார்ந்திருந்தாள் அபிராமி.

ஒரு பெருமூச்சுடன் கட்டிலுக்குப் பார்வையைத் திருப்பியவள் திடுக்கிட்டுப் போனாள்.

புவனேசுவரி கண்விழித்து மருமகளின் முகத்தையே பார்த்தபடி அசையாமல் படுத்திருந்தாள்!

"அத்தை! நீங்கள் எப்போது ... என்னைக் கூப்பிடக் கூடாது? நான் போய் மாமாவிடம் .." என்று பரபரப்புடன் எழுந்தவளை, "வேண்டாம்", என்ற பலவீனமான குரல் தடுத்து நிறுத்தியது.

"ஏன் அத்தை? மாமா இவ்வளவு நேரம் இங்கேயே தான் இருந்தார்கள். நான்தான் கொஞ்சம் 'ரெஸ்ட்' எடுங்கள் என்று அனுப்பி வைத்தேன். நீங்கள் விழித்ததும் சொல்லவில்லை என்றால் வருத்தப்படுவார். . . என்ன அத்தை? எங்கேனும் வலிக்கிறதா?" என்று, மாமியாரின் கண்கள் கலங்குவதைக் கண்டு கவலையுடன் கேட்டாள் மருமகள்.

இல்லை என்பது போலத் தலையசைத்துவிட்டுச் சற்று நேரம் அபிராமியையே பார்த்தாள் புவனேசுவரி. பிறகு, உதடுகள் நடுங்க, "அது . . அது நிஜமில்லை தானேம்மா? பொ . . பொய் தானேடா?" என்று கேட்டு முடிக்குமுன் அவளது விழிகளில் நீர் வடியத் தொடங்கி விட்டது.

புரை தீர்ந்த நன்மை பயக்கும் போது பொய்யுட மெய் தானே. வலுக்கட்டாயமாக வரவழைத்த புன்னகை யோடு, "எல் .. லாம் ஒரு வே .. வேடிக்கை அத்தை. ஒரு .. ஜோக். அது தெரியாமல் மாமா . . மாமா கொஞ்சம் தப்பாக நினைத்துவிட்டார்கள் ..."

"இதில் தப்பாக எப்படி நினைக்கமுடியும் ..?" என்று நம்பாமல் கேட்டாள் புவனேசுவரி.

மாமியாருக்கு இப்போது மன அமைதி முக்கியம். அது கெடாமல் பார்த்துக் கொள்வது தான் மிக மிக முக் கியம் . . . இப்போது சமாளித்து விட்டால் பிறகு உடம்பு தேறிய பிறகு பார்த்துக் கொள்ளலாம் ..

"அது ... அது .. எப்படிச் சொல்வது அத்தை? இந்தக் கல்லூரிகளில் புது மாணவர்களைக் கலாட்டா செய் வார்களே . . . அது தான் அத்தை 'ராகிங்'. அது போலத் தான் அன்று ஊட்டியில் உங்கள் பிள்ளைகள் ஐந்து பேரும் சேர்ந்து கொண்டு என்னைக் கலாட்டா செய் தார்கள். புது மாணவர்கள் மாதிரி நான் புதுப் பெண்ணாம். முதலில் நா . . நானும் பயந்து தான் போனேன், அத்தை. மாமா வேறு அந்த நேரம் பார்த்து வந்து சேர்ந்தார்களா? ' என் பயத்தைப் பார்த்து ஒரேயடி யாக அதை எல்லாம் உண்மை என்றே நினைத்து விட் டார்கள். அப்படி நினைத்து என்னென்னமோ செய்து விட்டார்கள் .. எனக்கு நிஜம் தெரிந்து விட்டது அத்தை. மாமாவுக்குத் தான் . . அவர்களுக்கு இன்னமும் நம் பிக்கை வரவே இல்லை அத்தை" என்று முறுவல் செய்தாள் அவள்.

ஆனால் புவனேசுவரி சுலபத்தில் தெளிவதாக இல்லை. "ஆனால் . . . ஆனால் தனா உன் மாமாவை . . ." முடிக்கமாட்டால் மீண்டும் கண்ணீர் வழிந்தது.

"அச்சச்சோ! என்ன அத்தை இது, சிறு பிள்ளை போல?" என்று கண்டித்தபடியே மாமியாரின் கண்களை மென்மையாகத் துடைத்து விட்டாள் அபிராமி.

அந்த ... [illegible] சத்துக்குள் அவசரமாக யோசித்து முடித்து, "உங்களுக்கு உங்கள் பிள்ளையைத் தெரியுமில்லையா, அத்தை? கோபம் வந்து விட்டால் யார் என்ன [illegible] கிடையாது. அவருக்கு மாமா மேல் ஓரே . . [illegible] என்னைத் தகப்பனார் நம்பிவில்லையே என்று [illegible] ஆத்திரம். அ . அதனால் . . வந்து . . . வந்து . . . [illegible] குற்றம் சாட்டினால் ஒருவருக்கு எப்படி இருக்கும் [illegible] மாமாவை உணர வைப்பதற்காக இ . இப்படி [illegible] பே . பேசிவிட்டார், அத்தை" என்று ஒருவாறு [illegible] முடித்து, அதுவரை அடைத்திருந்த மூச்சை [illegible] ஓசையற்று வெளியேற்றினாள். அப் . . . பாடி! [illegible] விதமாய்க் கோவையாய்க் கூறியாயிற்று!

திடுமெனப் புவனேசுவரிக்கு இன்னொரு சந்தேகம். "ஆனாலும் இப்படிக் கீழ்த்தரமாக இவ்வளவு அசிங்கமாகவா குற்றம் சொல்வது? எ : எனக்கு ஒரு மாதிரித் தெரிகிறதே! ... நம்பக் கூட் முடியவில்லையே! தனா அப்படிப்பட்ட பிள்ளை இல்லையே, கண்ணம்மா" என்று ஐயம் காட்டி முடிக்குமுன் அபிராமி மீண்டும் சுதாரித்து விட்டாள்.

ஒரு கேலிச் சிரிப்போடு, "எல்லா அம்மாக்களுக்கும் அவரவர் பிள்ளைகள் மட்டும் 'அப்படிப்பட்ட பிள்ளை இல்லை' தான்" என்று அலுத்துக் கொண்டாள். தொடர்ந்து, "அத்தை காலம் மாறுகிற வேகம் பெற்றவர்களுக்கு மட்டும் புரிவதே இல்லை. ஒரு தொளதொளா 'பான்ட்' தைத்துக் கொண்டான் என்று அப்பா சரவணனை எப்படித் திட்டினார் தெரியுமா? . . ஒரு கல்லூரி வாசலில் ஒரு நாள் வந்து நின்று பாருங்கள் அத்தை. சினிமா கெட்டது. அய்யய் . . யோ! என்னவெல்லாம் பேசுவார்கள் தெரியுமா? காற்றிலேயே முத்தம் கொடுப்பது, ஐ லவ் யூ சொல்வது . . . ஊகூம், அதையெல்லாம் உங்கள் முன் என்னால் சொல்லக் கூட முடியாது. அத்தை" என்று கூறி வெட்கம் போல முகத்தை இரு கைகளாலும் மறைத்துக் கொண்டு மானசீகமாய் அவளது கல்லூரி பிரின்சிபாலிடம் மன்னிப்புக்

கேட்டுக் கொண்டாள். 'அந்த மாதிரியெல்லாம் நம் கல்லூரியில் நான் பார்த்தது இல்லை மேடம். என் அத்தை உயிருக்காகச் சொன்னேன், மேடம். சாரி மேடம்.'

இத்தனை பொய்யும் நடிப்பும் பயனற்றுப் போய் விடும் போல, "அபிராமி, நீ.. நீ சொல்வது நிஜம் தானே? என்னைப் பார்த்துச் சொல்லு . ." பலவீனமான குரலிலும் உறுதியைக் காட்டிக் கேட்டாள் புவனேசுவரி.

சிரமமாக இருந்தபோதும் மனதை அடக்கி, "நிஜம்" என்றாள் அபிராமி.

"என்னைத் தூக்கிவிடு."

மாமியாரின் தோளைப் பற்றி முதுகின் கீழ்க் கை கொடுத்துத் தூக்கி உட்கார வைத்தாள் அபிராமி.

ஆனால் புவனேசுவரி கட்டிலில் இருந்து இறங்க முயற்சிக்கவும் மருமகள் மிரண்டு போனாள். "அத்தை, வேண்டாம் அத்தை. நீங்கள் படுக்கையில் தான் இருக்க வேண்டும் என்று டாக்டர் சொல்லியிருக்கிறார்" என்று பதட்டத்துடன் மாமியாரைத் தடுக்க முயற்சித்தாள்.

"பெரிய டாக்டர்!" என்று அடுத்த காலையும் கீழே வைத்தாள் புவனேசுவரி.

"அத்தை, ப்ளீஸ். நான் போய் மாமாவை அழைத்து வருகிறேன். அதன் பிறகு வேண்டுமானால் . . ." என்று திகிலுடன் அபிராமி கெஞ்சும்போதே புவனேசுவரி கையை ஊன்றிக் கட்டிலில் இருந்து இறங்கத் தொடங்கி விட்டாள்.

"அத்தை . . ப்ளீஸ் வேண்டாம் . ." என்று தாங்கிய மருமகளிடம், "வா அபி, நான் உன் தோள் மீது சாய்ந்து கொண்டு நடக்கிறேன். அதை விட்டு மாமாவைக் கூப்பிடுகிறேன் என்று போனாயானால் நானாகவே நடந்து போய்விடுவேன் . . ." என்று மிரட்டினாள் பெரியவள்.

தனஞ்சயன் பிடிவாதத்தில் யாருடைய வாரிசு என்று அப்போது புரிந்தது அபிராமிக்கு.

புவனேசுவரி தானாக நடப்பதற்குத் தாங்கிச் செல்வது மேல் என்று அவளது பாரத்தை முடிந்த அளவு தன் மேல் தாங்கியபடி நடத்திச் சென்று ஹாலில் அருகில் கிடந்த சோஃபாவில் உட்கார வைத்தாள்.

அந்த அளவு சிரமம் கூடத் தாங்காமல் சற்று மூச்சு வாங்கியது புவனேசுவரிக்கு. களைப்புடன் சோஃபா வில் சாய்ந்து கொண்டு, "நீ போய் தனத்தை . . ." என்று தொடங்கியபோது, பின்புறமிருந்து, ஒரு ட்ரேயில் ஐந்து கோப்பைகளில் ஏதோ பானத்துடன் வேலையாள் ஒருவன் வந்தான்.

ஐந்து கோப்பைகள்!

வேலையாளைக் கை ஜாடையாலேயே அழைத்து, ட்ரேயை டீபாய் மேல் வைத்து விட்டுப் போகச் சொன்னாள்.

ட்ரேயை வைத்துவிட்டு நிமிர்ந்த வேலையாள் மாடியைப் பார்த்து, ஒரு கணம் தயங்கி நின்று விட்டு, மீண்டும் எசமானி செல்லும்படி கைகாட்டவும் பின்னே சென்று மறைந்தான்.

"நீ சொல்வதுதான் உண்மை என்றால் இந்த ட்ரேயை எடுத்துக் கொண்டுபோய் தனத்திடம் கொடுத்துவிட்டு, அவர்கள் குடித்ததும் வாங்கிக் கொண்டுவா" என்று புவனேசுவரி சிரமப்பட்டுச் சொல்லுமுன்பாகவே விஷயத்தை ஊகித்து விட்டாள் அபிராமி.

ஆனால் அதற்குமேல் என்ன நடக்கக் கூடும்?

நோயுற்ற தாயார் கீழே காத்திருக்கும் போது பெரிதாக எதுவும் நடந்து விடும் என்று அவளுக்குத் தோன்றவில்லை. ஆனால் அதை மட்டும் நம்பித் தனஞ்சயனின் அறைக்குள் செல்ல அவளுக்கு அச்சமாக இருந்தது. மதம் கொண்ட யானையும் கோபம் கொண்ட தனஞ்சயனும் ஒன்றல்லவா?

மனதைக் காட்டமல் மறைத்து கஷ்டப்பட்டு லேசாக முறுவலித்தாள். "உங்களைத் தனியே விட்டுவிட்டு எங்

கேயும் போகக் கூடாது என்று மாமாவின் உத்திரவு, அத்தை. அதனால் அலெக்சையே ..."

சோர்வை மீறிய உறுதியோடு தலையசைத்தாள் புவனேசுவரி. "தனியே இருந்தால் நான் செத்துவிடமாட்டேன், அபிராமி. ஆனால் அவர் சொன்னது மட்டும் நிஜமாக இருந்தால் அவனைப் பெற்றதற்கும், அவனோடு மற்ற நால்வருக்கும் சோறு போட்டு வளர்த்ததற்கும் இனி நான் உயிரோடு இருப்பது நியாயம் இல்லை." என்று முடிக்குமுன் மூச்சிரைத்தது அவளுக்கு.

"நான் . . ." என்று மீண்டும் தயக்கத்துடன் தொடங்கிய மாமியாரின் கண்களில் நிராசை படருவதையும், உடல் சோர்வதையும் கண்டு சட்டெனக் குனிந்து காஃபித் தட்டைத் தூக்கிக் கொண்டாள்.

மீண்டும் புவனேசுவரியைப் பார்த்தாள்.

சோர்ந்த அவளது கண்கள் பிடிவாதத்தையே காட்டவும், மாடிப்படியை நோக்கி நடந்தாள்.

உள்ளே சென்று தட்டை வைத்துவிட்டு வருமுன் அவன் சீண்டுவானோ? எல்லோருமாகச் சேர்ந்து இருக்கிறார்களே, முன்பே என்ன செய்தாலும் வெளியில் சொல்வாயா? என்றானே. இப்போதும் அதே துணிவுடன் எங்கேனும் தொட்டுவிட்டால்?

நெஞ்சு நடுங்கியது அவளுக்கு. பஸ்சில் போவது போல நினைத்துக் கொள்ள எண்ணும் போதே, இடி மாடுகளுக்குப் பயந்து காலையில் கூட்டமில்லாத பஸ் பார்த்துப் போவது நினைவு வந்து தொலைத்தது.

மெல்லத் திரும்பிப் பார்த்தாள்.

புவனேசுவரியின் பார்வையில் ஐயம் படரவும், நேரே பார்த்தபடி படி ஏறலானாள்.

எத் . . த்தனை படிகள்! வெறும் காஃபி ட்ரேதானே. இது ஏன் இந்தக் கனம் கனக்கிறது?

கால் இடறினாற்போலப் படிகளில் விழுந்து விட்டால் அதற்குமேல் போக வேண்டியிராதே.

ஆனால் விழுவதைப் பார்த்து மாமியார் பதறி எழுந்து நடக்கமுயன்றால் ஆபத்து ஆயிற்றே!

இன்றும் ஐந்துபடி. நாலுபடி. மூன்று . . இரண்டு . . ஒன்று.

இடப்புறம் திரும்பி நாலு எட்டு நடந்தால் தனஞ்சயனின் அறை....

தளத்தில் பதித்திருந்த பார்வையில் ஒரு ஜோடிக் கால்கள் படரவும் நின்றாள்.

"அடடா, அம்மாவைத் தனியெ விட்டுவிட்டாவது எங்களுக்காக இதை நீங்களே எடுத்து வரவேண்டுமா, சிஸ்டர்?"

சிஸ்டர்!

பிரமித்த பார்வைக்கு விழிகளால் சேதி சொன்னபடியே, "அதை இப்படித் தந்துவிட்டு முதலில் அம்மாவிடம் போங்கள், சிஸ்டர். ட்ரேயிலிருந்து காஃபிக் கப்பை எடுத்துக் குடிக்க எங்களால் முடியும். அதை எடுத்துத் தர நீங்கள் வரத் தேவையில்லை. தயவு செய்து முதலில் அம்மாவிடம் செல்லுங்கள்" என்று உரக்கக் கூறி காஃபி ட்ரேயை அவள் கையிலிருந்து வாங்கிக் கொண்டு தனஞ்சயனின் அறைக்குள் சென்றான் விஸ்கி, ஊகூம், விசுவநாதன்!

தொடர்ந்து, "சாரி பிரதர். அவர்கள் எங்களுக்கும் ... எங்களுக்கும் தாயார் தான். அம்மா மனம் நோவதை எங்களால் தாங்கிக் கொள்ள முடியாது" என்று கீழே கேளாதபடி தணிந்த குரலில் அவன் கூறுவதைக் கேட்டபடி திரும்பி நடந்தாள் அபிராமி.

ஏதோ பெரும் சுழலில் இருந்து விடுபட்டுவிட்ட உணர்வு அவளுக்கு உண்டாயிற்று.

# 21

விசுவநாதனின் பேச்சு, அவள் உத்தேசித்த படியே புவனேசுவரியின் காதுகளில் தெளிவாக விழுந்திருந்தது அவள் முகத்தைப் பார்த்ததுமே அபிராமிக்குத் தெரிந்து போயிற்று.

"நிம்மதி தானா?" என்று சிரித்து விட்டு, மருமகள் கொணர்ந்த ஹார்லிக்சைக் குடித்துவிட்டு, சோஃபாவி லேயே வசதியாகச் சாய்ந்து கொண்டாள்.

சற்றுப் பொறுத்துத் தாயாரைப் பார்க்க வந்த தனஞ் சயன் மீண்டும் அவளை அலுங்காமல் நலுங்காமல் தூக்கிச் சென்று படுக்கையில் விட்டான்.

தூக்கிச் செல்லும்போது, மகனின் தலைமுடியை அலைந்து, "என்னதான் உன் கோபம் நியாயம் என்றா லும் இனி அப்பாவிடம் இப்படிப் பேசக் கூடாது. சரியா?" என்று செல்லமாகத் தாய் கேட்கவும் அபிரா மியை ஒரு தரம் பார்த்துவிட்டுத் தலையை மட்டும் அசைத்தான் அவன்.

கரைத்தாற்போல அபிராமி எடுத்து வந்த மோர்ச் சாதத்தில் கொஞ்சம் உட்கொண்டு விட்டு, டாக்டர் அனுப்பியிருந்த மாத்திரைகளையும் விழுங்கிவிட்டு மீண்டும் உறக்கத்தில் ஆழ்ந்தாள் புவனேசுவரி.

தனஞ்சயனின் உத்தரவின் பேரில் கொண்டு வரப் பட்டு கட்டிலின் அருகே போடப்பட்டிருந்த சோஃபா வில் அமர்ந்து மாமியாரைக் கவனித்துக் கொண்டிருந்த அபிராமி பலத்த யோசனையில் ஆழ்ந்தாள்.

சுழலிலிருந்து விடுபட்டு விட்டாள்தான்.

புவனேசுவரிக்கு உடம்பு பரவாயில்லை என்று தெரிந்ததும் நாலு நண்பர்களும் விடை பெற்றுக் கொண்டு அவரவர் இடம் நாடிச் சென்று விட்டார்கள். 'சிஸ்டர்' என்று அழைத்து அவளிடமும் விடை பெற்றார் கள். இனி இது மாறுவதற்கில்லை.

ஆனால் இந்தச் சுழலை உருவாக்கிய காட்டாற்று வெள்ளம் சற்றும் வேகம் குறையாமல் அதே போலத் தான் ஓடிக் கொண்டு இருக்கிறது.

அவளை அடித்துச் சுருட்டிக் கொண்டு போய் அழித்து விடத் துடித்துக் கொண்டும் இருக்கிறது.

இதிலிருந்து தப்புவதற்கு இருந்த ஒரு வழியையும் மாமியாரின் நிம்மதியையும் உயிரையும் காப்பதற்காக என்று அபிராமியே மூடிவிட்டாள்.

கணவன் நல்லவன் என்று மாமியாரிடம் உறுதிப் படுத்தியாயிற்று. அதேசமயம், முன்போலச் சிற்றம்பல சுவாமியின் பின்னேயும் மறைந்து கொள்ள முடியாது.

கிடடத்தட்ட ஆப்பு அசைத்த குரங்கு தான். இப்படி அப்படி அசைய முடியாதநிலை.

மிஞ்சி மிஞ்சி ஒரு மணி நேரம் தூங்கியிருப்பார் சிவநாதன். அதற்குள் விழித்து மனைவியிடம் ஓடி வந்து விட்டார்.

அப்போது புவனேசுவரி உறங்கிக் கொண்டிருந் தாள்.

அபிராமிக்கு அவரிடம் நடந்ததை முழுமையாகச் சொல்லும் தைரியம் வரவில்லை. நண்பர்கள் நால்வரும், புவனேசுவரி விழித்திருந்த போது, அவளிடம் சொல்லிக் கொண்டு போய்விட்டதாக மட்டும் உரைத் தாள்.

"கழுதைகள்! போனதே நல்லது" என்றார் சிவநா தன் வெறுப்புடன்.

அது பொறுக்காமல், "இல்லை மாமா. அவர்கள் உங்கள் பிள்ளையிடம் இனி இந்தத் தவறு வேண்டாம் என்று புத்தி சொன்னார்கள்" என்றாள் மெதுவாக.

"ஓ! ஆச்சரியம் தான். அவர்களுடைய தர்மதாதா காட்ஃபாதர் - அவனுக்கே புத்தி சொல்லும் அளவு தைரியம் வந்துவிட்டதா? நல்லது. மிகவும் நல்லது" என்றார் அவர் திருப்தியோடு.

மாலையில் ஒரு நர்சை அழைத்துக் கொண்டு டாக்டர் வந்தார். புவனேசுவரியின் உடல்நிலை திருப்தி கரமாக இருப்பதாகக் கூறினார். மருந்துகளை ஒழுங்கா கக் கொடுக்கும் படியும், கொழுப்பு, இனிப்பு குறைந்ததாக விருப்பமான உணவு உண்ணலாம் என்றும், ஆனால் ஓய்விலேயே குறைந்தது ஒரு வாரமே னும் இருக்க வேண்டும் என்றும் கூறிச் சென்றார்.

டாக்டரை அனுப்பிவிட்டு வந்த கணவரிடம், "நமக்கு ரொம்ப வயதாகி விட்டது போல இந்த இளசுகள் விஷயம் ஒன்றும் தெரியவில்லை. நீங்களும் கவலைப்ப டாதீர்கள். எல்லாம் உப்புப் பெறாத விஷயம். . . அபியி டம். . . கேளுங். . கள். ." என்று கூறியபடியே மீண்டும் கண்ணயர்ந்து விட்டாள் புவனேசுவரி.

என்ன? என்று புருவ அசைவால் கேட்டவரிடம் தலையசைத்து அழகாக முறுவலித்ததோடு நிறுத்திக் கொண்டாள் அபிராமி.

அவரும் மேலே எதுவும் கேட்கவில்லை. என்னவோ கதை சொல்லி மாமியாரின் மனதைச் சாந்தப் படுத்தியிருப்பாள் மருமகள் என்று ஊகித்து அத்தோடு விட்டுவிட்டார்.

புவனேசுவரிக்கு அபாயம் இல்லை என்பதாலும், பார்த்துக் கொள்ள நர்ஸ் உடன் இருந்ததோடு கூடவே அபிராமியும் அதே அறையில் படுத்துக் கொள்ளவும் சிவநாதன் நிம்மதியோடு தன் அறைக்கு உறங்கச் சென்றார்.

"டியூட்டியில் இருக்கும் போது படுக்கக் கூடாது; காலையில் மாற்று நர்ஸ் வரும்வரை அதிகபட்சம் உட் கார்ந்துதான் இருப்பேன்" என்று கூறி, கட்டில் அருகே கிடந்த சோபாவில் சாய்ந்து கோழித்தூக்கம் போட்டார் நர்ஸ்.

தனக்காகக் கொண்டுவந்து போடப்பட்டிருந்த படுக் கையில் படுத்த அபிராமிக்கு உறக்கம் வரவில்லை. ஒரே யோசனை.

சத்தமின்றி வந்து, தாயாரை எட்டிப் பார்த்துவிட்டுத் தனஞ்சயன் சென்றதைப் பார்த்தபடி அசைவின்றிப் படுத்திருந்தாள் அவள். எதிர் காலத்தை எண்ணி அவளுக்கு மிகவும் கலக்கமாக இருந்தது.

கவனத்தோடு இருந்து அவ்வப்போது வருவதை எதிர் கொண்டு சமாளிக்கலாம் என்று இனி இருக்கமுடியாது.

இன்றே இந்தப்பிடிவாதம் பிடித்தவள் புவனேசுவரி, நாளை மேலும் உடல் ஆரோக்கியம் பெற்று வருகையில் அவளை ஏமாற்றுவது முடிகிற காரியம் அல்ல.

இந்த நாலு நண்பர்கள் புத்தி பெற்று, புத்தி கூறிச் சென்றுவிட்டதால் மட்டும் தனஞ்சயன் அடங்கி விடுவானா?

அவனுக்கு அபிராமியை அவமானப்படுத்துவது நான் குறிக்கோள். அதற்காக வேறு நாலு பேரை அழைத்துவரமாட்டான் என்று என்ன நிச்சயம்? அவனது கோணல் புத்தியும் கோபவெறியும் கட்டாயமாக அதைத்தான் செய்யும்.

அதைத் தடுப்பது தான் மிகவும் முக்கியம். மாமியார், மாமனாரின் மனம் புண்பட்டு விடாமல் அதைச் செய்ய வேண்டும். பெற்றவர்களின் நினைவும் சேர்ந்து அவளை உந்தியது.

படுக்கையில் எழுந்து அமர்ந்து பார்த்தாள்.

விடிவிளக்கின் ஒளியில் புவனேசுவரி அயர்ந்து துயில்வது தெரிந்தது. பக்கத்திலேயே நர்ஸ். எதற்கும் இருக்கட்டும் என்று தலையணையை ஒட்டி மணிவேறு.

இங்கே அவள் இன்று அவசியமில்லை.

முந்தைய இரவின் நினைவு காலைப் பின்னுக்கு இழுத்த போதும் ஓர் உறுதியோடு நடந்து மாடிப்படி ஏறிப் போனாள் அபிராமி

தனஞ்சயனின் அறைக்கதவை லேசாக ஒருமுறை தட்டிவிட்டு, பதிலுக்குக் காத்திராமலே கதவை திறந்து கொண்டு உள்ளே சென்று கதவைச் சாத்தினாள்.

தனஞ்சயனும் தூங்கிக் கொண்டு இருக்கவில்லை. படுக்கக்கூட இல்லை.

படுக்கையில் அமர்ந்து, முடிந்து கொண்டிருந்த சிகரட்டிலிருந்து அடுத்ததைப் பற்ற வைத்துக் கொண்டிருந்தவன் கதவுதிறக்கவும் நிமிர்ந்து பார்த்தான்.

அபிராமியைக் காணவும் பதறிப்போய், "அம்மா" என்று எழுந்தவன், அவள் தலையசைக்கவும் ஒரு பெரு மூச்சுடன் அமைதியானான். சிறு யோசனையுடன் இமைகள் லேசாக இறங்க, "என்ன?" என்று வினாவினான்.

"உ.. உங்களிடம் ஒன்று பேச வேண்டும்." என்றாள் அவள்.

கையிலிருந்த சிகரட்டுகளை அருகிலிருந்த சிறு மேஜையில் இருந்த 'ஆஷ் டிரே' யில் போட்டுவிட்டு ஓரமாய் ஒதுங்கி அமர்ந்து கையைக் காட்டி, "உட்கார்" என்றான் அவன்.

அவன் காட்டிய இடத்தில் அபிராமி உட்கார்ந்ததும், "என்ன விஷயம்? சொல்லு" என்றான்.

கவனத்துடன் உணர்ச்சிகளைத் துடைத்த குரல். இதை எப்படி எடுத்துக் கொள்வது என்று ஒருகணம் தயங்கினாள் அபிராமி. ஆனால் தயங்கிக் கொண்டு இருப்பதற்காக அவள் இங்கே வரவில்லையே.

மூச்சைப் பிடித்துக் கொண்டு, "அத்தை மிகவும் கலங்குகிறார்கள். அதனால் . . அதனால் அத்தை முன்னால், மாமா முன்னால் . . . மற்றவர்கள் முன்னிலையில் நீங்கள் என்னிடம் நல்லபடியாக நடந்து கொள்ளுங்கள் . . அப்புறம் . . வந்து . தனியாக நீங்கள் என்னிடம் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். ம . .

மற்றமாதிரி தயவு செய்து வேண்டாம் . ." என்று ஒருவாறு சொல்லி முடித்து விட்டாள்.

சில கணங்கள் பேசாமல் தலைகுனிந்து அமர்ந்திருந்தான் தனஞ்சயன். பிறகு நிமிர்ந்து, " நேற்று காயம் பட்டதா?" என்றான் கம்மிய குரலில்.

அவள் பேசாமல் இருக்கவும், "காட்டு, பார்க்கிறேன்" என்று அவளை நெருங்கி அவளது கூச்சம் கவனியாமல், துணியை விலக்கிப் பார்த்தான். வேகமாக வெளிமூச்சுடன், " காட்!" என்று அதிர்ந்தான். காயத்தை மிருதுவாக வருடியபடி, "மருந்து போட்டாயா?" என்று வினவினான்.

அபிராமி திக்குமுக்காடிப் போனாள்.

அவள் கொஞ்சம் ஒரு மாதிரிப் பெண். சும்மா எருமை மாட்டின் மேல் மழை பெய்ததுபோல ஒன்றும் உணராமல் இடித்துத் தள்ளிக் கொண்டு செல்ல அவளால் முடியாது. படிக்கும் போதுகூட, கூட்டமாகி விட்டால் உரசுவார்களே என்று பயந்து அரைமணி முன்னதாகக் கிளம்பிச் சென்று, மகளிர் பஸ்சுக்காகக் காத்து நின்று திரும்பி வருவாள்.

ஆண் கரம் பட்டிராத உடல் அது.

முந்தைய இரவில் அவனது முரட்டுத் தனத்தால் பயம் ஒன்று தான் தெரிந்தது. தனஞ்சயன்தான் கணவன் என்கிற வார்த்தைக்கே அவளைஅலற வைத்திருந்தானே!

இன்றும் அந்த வேதனைகளையே எதிர்பார்த்து, அதைப் பல்லைக் கடித்து சகிப்பது என்ற முடிவுடன் வந்திருந்தவளை இந்த இதமான வருடல் என்னவோ செய்தது.

திருமணத்திற்கு முன் அவள் கண்ட கனவுகளைத் தட்டி எழுப்பி உயிர்த்தெழச் செய்தது. உடல் சிலிர்க்க உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாமல் இருந்தாள் அபிராமி.

"ஏதாவது மருந்து போட்டாயா?" என்று காயத்தையே பார்த்தபடி திரும்பவும் கேட்டவன், அபிராமியிடமிருந்து பதில் வராது போகவும் சற்றே திரும்பியிருந்த அவள் முகத்தைப் பார்த்தான்.

கண்களில் வியப்பு பரவ, நம்பமாட்டாதவன் போல, அபிராமியின் முகத்தைத் திருப்பி, "நீ .. நீ மெய்யாகவே என்னை மன்னித்து விட்டாயா, அபிராமி?" என்று ஆச்சரியமாகக் கேட்டான் தனஞ்சயன்.

கன்னங்கள் செம்மையுற லேசாக முறுவலித்தாள் அபிராமி.

ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன், "அபி!" என்று ஆவலாக அவள் முகத்தை நிமிர்த்தினான்.

ஆனால் உடனே அவளைவிட்டு விலகி எழுந்து நின்றான்.

திகைப்பும் சிறு பயமுமாகக் கணவனை அண்ணாந்து பார்த்தாள் அபிராமி.

அவளது பார்வையில் இருந்த கேள்விக்குப் பதிலாக, "என்னளவில் நான் உன்னைத் திருமணம் புரியவே இல்லையே" என்று வருத்தமாக உரைத்தான் அவன்.

இதற்கு என்ன பதில் சொல்வது? அந்த 'இந்திரன் சந்திரன்' கதையெல்லாம் இப்போது அவனைத் துன்புறுத்துவது நன்றாகவே தெரிந்தது. அந்தப் பேச்சுகளுக்கும் செயல்களுக்கும் என்ன சமாதானம் சொல்ல முடியும்?

எப்படியும் அவன் வேதனைப்படுவது தாங்காமல், "மறந்துவிடுங்கள்" என்று தேறுதலாக ஏதோ பேசத் தொடங்கினாள் அவள்.

அபிராமியின் உதட்டில் ஒரு விரலை வைத்து அவளது பேச்சை நிறுத்தினான் தனஞ்சயன்.

அவளது கையைப் பற்றி எழுப்பி, "என்னுடன் வா" என்று அவளை எழுப்பி அழைத்துச் சென்றான்.

கணவன் அழைத்துச் சென்ற இடம் பூசையறையாக இருக்கவும் ஆச்சரியப்பட்டாள் அபிராமி.

அந்த அறையில் இதுவரை அவனை அவள் பார்த்தது இல்லை!

பூசையறை விளக்கை ஏற்றிவிட்டு, "அதைக் கழற்றிக் கொடு" என்று அவன் மாங்கல்யத்தைக் காட்டவும் திகைத்துப் பின்னடைந்தாள் அவள்.

"பரவாயில்லை, அபிராமி. அதை நான் கட்டவில்லை பார். சும்மா கழற்றிக் கொடு" என்று அவன் கையை நீட்டவும் அதற்கு மேல் மறுக்க மாட்டாமல் அதைக் கழற்றிக் கணவன் கையில் கொடுத்தாள்.

பெரிய முருகன் படம் ஒன்று உண்டு அங்கே. வள்ளி தெய்வானையுடன் வேலும் மயிலுமாய் ஒராறு முகமும் ஈராறு கரங்களுமாக ஷண்முகநாதன் படம்.

அதன் பாதத்தில் மாங்கல்யத்தை வைத்துவிட்டுச் சற்று நேரம் கண்மூடிக் கைகூப்பி நின்றான் தனஞ்சயன்.

மூடிய இமைகளின் வழியே இரு சொட்டு நீர் வழிவதைக் கண்டு அதிசயித்துப் போனாள் அபிராமி. தானும் முருகனைப் பார்த்து, "இனியேனும் நடப்பவை நல்லவையாக இருக்கட்டும், தெய்வமே" என்று வேண்டினாள்.

வழிந்த கண்ணீரைப் பற்றிய கவனமே இல்லாமல் ஷண்முகன் பாதத்திலிருந்த தாலியை எடுத்து அபிராமியின் கழுத்தில் அணிவித்தான் தனஞ்சயன். திருநீறை எடுத்துத் தனக்குப் பூசிக் கொண்டு அவளது நெற்றியில் குங்குமம் இட்டான். முருகன் காலடியில் கிடந்த குண்டு மல்லிகை மலர் ஒன்றை எடுத்து அவள் கூந்தலில் வைத்துவிட்டு, "வா" என்று தன் அறைக்கு அழைத்துச் சென்றான்.

கட்டிலில் அமரவைத்து, "அங்கே ஷண்முக நாதரிடம் என்ன சொன்னேன் தெரியுமா? 'இந்த வினாடியிலி

ருந்து இவள் என் மனைவி. இவள் கண்களில் இருந்து ஒரு சொட்டு நீர் வராமல் என் உயிருள்ளவரை காப்பாற்றுவேன்' என்று சத்தியம் செய்தேன், அபி. நீ என்னை நம்புகிறாயில்லையா?" என்று திடுமெனத் தோன்றிய ஒரு கலக்கத்துடன் கேட்டான் தனஞ்சயன்.

புன்னகையோடு அவன் கைகளைப் பற்றி இதழ் பதித்தாள் அவன் மனைவி.

திருமணமாகி ஆறுமாதங்களுக்குப் பிறகு, தனஞ்சயனும் அபிராமியும் ஊர் உலகத்துக் கணவன் மனைவி போலக் கலந்து பேசி மகிழ்ந்தார்கள்.

அவன் தன்னைப் பற்றி மனைவியிடம் சற்று அதிகமாக விளக்கினான். "எனக்குச் சிறுவயதிலிருந்தே உடல் கூச்சம் அதிகம், அபி. அத்தோடு இதோ பாா, மார்பில் வேல் மாதிரி ஒரு வெள்ளை மச்சம் இருக்கிறது பார், இதைக் காட்டி ஒரு தாத்தா ஏதோ சொன்னார். அது வேறு சேர்ந்து கொண்டதா? என் குறைந்த பட்ச ஆடை னியன், ஷார்ட்ஸ் தான். அதில்லாமல் என்னை யாரும் ார்த்ததே கிடையாது.

"அந்த . . . அப்போது என் கை சிதைந்ததே . . இரண்டு கைகளிலுமே பலமான காயங்கள். அதன்பின் குளிக்க, உடைமாற்ற, . . . பாத்ரூம் சமாசாரம் . . என்று எல்லாவற்றுக்குமே அடுத்தவர் உதவியை நாடும்படி ஆயிற்றா, ஒவ்வொரு தடவைக்கும் இதற்குப் பழி இதற்குப் பழி என்று பழி வெறியை மேலே மேலே வளர்த்துக் கொண்டே போய்விட்டேன்.

"எத்தனை எத்தனை வழிகளை யோசித்துக் கடைசியாக இதைத் தேர்ந்தெடுத்தேன். தெரியுமா? ஒரு முத்தத்தைக் கூட மறுக்கிற ஒருத்தியை இந்த அவமானம் தான் உயிருள்ள வரை தீயாய் எரிக்கும் என்று . . . அவ்வளவு கொதிப்பு, ஆத்திரம் எனக்கு . . . .

"ஆனால் அன்று நீ குற்றாலத்தில் நடந்து கொண்ட முறையில் தப்பே இல்லை என்று இப்போது புரிகிறது. ஓர் ஒழுக்கமான பெண் வேறு எப்படி நடக்க முடியும்

புரிந்து கொள்ளும் புத்தியோ விருப்பமோ அப்போது கொஞ்சமும் இல்லாமல் போயிற்று.

"கொஞ்சம் யோசித்திருந்தால் புரிந்திருக்கும், அபிராமி. உனக்குரிய தண்டனையை நிர்ணயித்ததுமே அதை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளையும் கடைப் பிடிக்கத் தொடங்கி விட்டேனில்லையா? முதலில் அப்பாவை ஏமாற்ற நல்லவனாய் நடிக்கத் தொடங்கினேன். வீட்டுக்குள்ளேயே பொய் பித்தலாட்டம் என்று தொடங்குகிற ஒன்று எப்படி சரியானதாக இருக்க முடியும்? அதை யோசிக்கிற அளவு அன்று புத்தி இல்லை, அபி. அதைத் தான் பழி மண்ணாங்கட்டி என்று மழுங்கடித்து வைத்திருந்தேனே .."

அவன் மிகவும் வருந்துவதை உணர்ந்து, அவன் தோளை வருடி, "விட்டுவிடுங்களேன். அதையெல்லாம் நினைப்பானேன். அடியோடு மறந்துவிட்டு நிம்மதியாக இருங்கள்" என்று அவனைத் தேற்ற முயன்றாள் அபிராமி.

"ஊகூம்" என்றான் அந்தப் பிடிவாதக்காரன். "என்னைப் பற்றி நீ நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். அபிராமி. உன்னோடு சேர்ந்து நானும் இன்னொருதரம் என் மட்டித்தனத்துக்கு அடி கொடுத்தாக வேண்டும். இனி ஒருதரம் பிழை புரியும் எண்ணம் கூட வரக் கூடாது இல்லையா?" என்று மீண்டும் தொடர்ந்தான்.

"உன்னைப் பழி வாங்க அன்று நான் பொய்யைத் தொடங்க, என்னிடமிருந்து தப்ப நீயும், உன்னைக் காப்பாற்ற அப்பாவுமாக சங்கிலித் தொடராக எத்தனை பொய்கள்! நான் தொடங்கிய இந்தப் பொய்மைச் சங்கிலி இன்றோடு அறுபடட்டும்...

"கொஞ்ச நாட்களாக இன்னொரு மாறுதல் அபி. அன்று நீ தோட்டத்தில் நின்றாய், பார் காலை மலரின் பொலிவும் தூய்மையுமாக நீ நிற்பதை சன்னல்வழியே பார்த்ததும் உடனே உன்னை முத்தமிட வேண்டும் போலத் திடீரென ஒரு வேகம் வந்தது. ஆசைகளை அவ்

வளவாய் அடக்கிப் பழக்கமில்லையா, இடம் பொருள் ஒன்றும் கவனியாமல் வந்து விட்டேன். நீ திமிறி விலகிக் கொண்டதும் என்னமாய் வந்தது தெரியுமா?

"என்னை மயக்க முயற்சிக்கிறாய். சீண்டி விட்டு வேண்டுமென்றே வதைக்கிறாய் என்று நினைத்தேன்."

"நானா?! அய்யோ, நீங்கள் பார்த்ததே எனக்குத் தெரியாது" என்றாள் அபிராமி.

"தெரிந்திருந்தால் அங்கே நின்றிருக்கவும் மாட்டாய் தான். ஆனால் அது அன்று தெரியவில்லையே! உன் வீட்டில் 'நைட்டி'யில் நின்ற போதும் அப்படியேதான் நினைத்தேன் ..."

"அது . . உங்களுக்காக மாற்றினால் அம்மா சந்தேகப்படக் கூடும் என்று ..."

"உண்மைதான். ஆனால் அன்று வேறு மாதிரி நினைத்து அதற்கும் ஒரு தனி தண்டனை கொடுக்க எண்ணினேன். ஆனால் தண்டனை என்கிற பெயரில் என் மோகத்தைத் தீர்த்துக் கொள்ளத் துடித்தேன் என்பதை அப்போது உணரவில்லை இந்த இடியட்."

"கணவனாக உணரத் தொடங்கியிருக்கிறீர்கள். அதை ஏன் குறைவாகப் பேசுகிறீர்கள்?" என்று அவனைச் சமாதானப்படுத்த முயன்றாள் அபிராமி.

"கணவனாக அல்ல. வேட்கை கொண்ட மிருகமாக. ஒரு கணவன் இந்த மாதிரி மனைவியைக் கேவலப் படுத்த முனைவானா? நான் செய்ய முயன்றது எவ்வளவு கொடூரம் என்பதை அம்மாவுக்கு ஓர் 'அட்டாக்' வந்து மண்டையில் அடித்துச் சொன்ன பிறகு தானே இந்த முட்டாளுக்குப் புரிகிறது. என்னமாய் அருவருத்துப் போனார்கள்! அவர்கள் என் முகத்திலேயே வாந்தி எடுத்தது போல இருந்தது ..."

பிடிவாதமாய்த் தன் நெஞ்சைக் கீறிக் கிளறி ரணமாக்கித் துடிப்பவனை எப்படித் தடுப்பது?

அவனது 'அம்மா அன்பைப் பயன்படுத்தி, "உங்கள் அம்மா ஒன்று சொன்னார்களே!" என்று தொடங்கினாள். " உங்களுக்குக் கூச்சம் அதிகம் என்று நீங்கள் சொல்லுமுன்பே எனக்குத் தெரியும். அத்தை முன்பே என்னிடம் சொல்லிவிட்டார்கள். மூன்று வயதிலிருந்தே நீங்கள் தானே குளிப்பீர்களாம்? அப்போது யாராவது குளியலறைக்குள் வந்துவிட்டால் ஒரே ஆர்ப்பாட்டம் பண்ணுவீர்களாமே. அத்தைகூடக் கைகால் மட்டும் தானே தேய்த்து விடலாமாம்!"

"இம்.." என்று சற்றுப் பெருமையுடனேயே தனஞ்சயன் ஒத்துக் கொண்டான். "என்னவோ, அப்போதிருந்தே என் உடம்பை அடுத்தவர் பார்ப்பது, தொடுவது என்றால் எனக்குப் பிடிப்பதே இல்லை.."

உள்ளூரச் சிரிப்பு வந்தது அபிராமிக்கு.

மனைவியின் மவுனச் சிரிப்பை உணர்ந்து, காரணம் புரிந்து, கூடவே தானும் சிரித்து, அவளை இறுக அணைத்து, "நீ தனி" என்றான் அவளுடைய கணவன்.

"உயிரான நண்பர்கள் கூடவா, வேறு? தெரிந்தால் வருத்தப்படப் போகிறார்கள்" என்றாள் அவள்.

"தெரிந்தால் தானே. தெரியப்படுத்த வேண்டிய அவசியம் இல்லாதத்தால் அப்படியே விட்டுவிடுவோம். ஆனால் விஷயம் அப்படித் தான். நீ மட்டும் தான். இந்த ஆரடி ஓர் அங்குலமும் உனக்கு மட்டும்தான், ஏகபோக உரிமை" என்று கூறி மனைவியை முத்தமிட்டான் தனஞ்சயன்.

எங்கிருந்தோ குயில் கூவியது.

ஐந்து முறை.

திடுக்கிட்டாற் போலக் கையைத் திருப்பி மணியைப் பார்த்தான் தனஞ்சயன். "மெய்யாகவே மணி ஐந்து அபி" என்று எழுந்து உட்கார்ந்தான். "அபி, அப்பா ஐந்தரை மணிக்கு விழிப்பார். அம்மா உடம்பு

சரியில்லாமல், கீழே இப்படிப் படுக்கிறபோது, எழுந்ததும் நேரே அம்மாவிடம் தான் போய் நிற்பார். அப்புறம் தான் குளியல் எல்லாம். இப்போது உன்னை அங்கே காணவில்லை என்றால் . . . அப்புறம் பூகம்பம் தான். நீ அங்கே போய்ப்படுத்துக் கொள்கிறாயா?"

புன்முறுவலோடு மெல்லத் தலையசைத்து மறுத்தாள் அபிராமி. மென் குரலில் அவள் கேட்ட பொருட்களை அவள் அறையிலிருந்து எடுத்து வந்து கொடுத்தான் தனஞ்சயன்.

எவ்வளவோ அவசரமாகக் குளித்து உடை மாற்றி வந்த போதும் திலகமிடும் போதே சிவநாதன் வேகமாக மாடிப்படி ஏறும் சத்தம் கேட்டுவிட்டது.

ஆனால் கதவைத் தட்டுவதற்காக அவர் கையைத் தூக்குமுன் திறந்து வெளியே வந்து விட்டாள் அபிராமி.

வேகமாகப் பரவி வந்த விடியலின் வெளிச்சத்தில் மருமகளின் முகத்தில் இருந்த சிவப்பையும் உதடுகளில் இருந்த புன்னகையையும் கண்டு திகைத்த சிவநாதனின் பார்வை மருமகளின் பின்னே நின்ற மகனிடம் பாய்ந்தது.

தொய்வின்றித் தகப்பனாரின் பார்வையைத் தாங்கி நின்றான் தனஞ்சயன்.

அதற்குள் பெரியவரின் கால்களில் விழுந்து அபிராமி பணியவும், சட்டென முன் வந்து தானும் மனைவியைப் பின்பற்றினான்.

இருவர் தலையிலும் கைவைத்து ஆசி கூறி எழுப்பி விட்டு, "நேற்றும் நல்ல நாள்தான்" என்ற சிவநாதனின் விழிகளில் நீரும் உதடுகளில் புன்னகையும் ஒருங்கே அரும்பின.

# நாள் நல்ல நாள்



ரமணிசந்திரன்